


M. சின்னையா செட்டியார்

முன்னுரை.

ஒரு தேசம் சீர்பெற்று நாகரிகமடைந்து பெருமைபெற வேண்டுமானால் அத்தேயத்தின் தனித்தனிச் சமூகமும் சீர்திருத்த மடையவேண்டும். சமூக சீர்திருத்தமே தேசத்தின் சீர்திருத்தமாகும். மக்கள் பல சமூகங்களாகப் பிரிந்துகிடக்கும் துர்ப்பாக்கியமுள்ள நம் தேயத்தில் சமூக சீர்திருத்தமே முதலிற் செய்ய வேண்டிய காரியமாக இருக்கிறது. சமூக சீர்திருத்தமென்பது ஒரு சாமான்யமான காரியமல்ல. மணலைக் கயிறாகத் திரிக்கலாம்—மாங்காயைத் தேங்காயாக்கி விடலாம். சமூக சீர்திருத்தம் அவற்றினும் கடினமான காரியமாகும். முன்னாற் சென்றாற் கடிக்கும். பின்னாற் சென்றால் உதைக்கும். அனுபவித்தவர்களுக்கு அது எவ்வளவு கடினமான காரியமென்பது விளங்கும். ஆயினும் என்ன செய்வது? செய்துதானாக வேண்டும். ஒரு சமூகத்திலுள்ள குறைபாடுகளை உள்ளவாறுணர்ந்து எடுத்துக்கூறும் விதமாகக்கூறி எப்படி மாற்றியெப்படிச் செய்யலா மென்பதையும் அனுபவத்தில் ஒத்துவரக்கூடிய மாதிரியில் சிந்தித்துத் தெளிந்து பயன்படுமுறையிற் பொருள்படக் கூறுதல் வேண்டும். அதுவும் அந்தந்த சமூகத்துக்கு அந்தந்த சமூக மக்களே சொல்லுதல் வேண்டும். அதுதான் மதிப்பிற்குரியதும் பயன் பெறுவதுமாகும்.

இச்சிறு நூலில் எமது தனவணிக மக்களைக் குறித்துக் கூறியிருக்கும் பல சீர்திருத்த விஷயங்களும் இந்திய இளைஞர் யாவரும் கவனிக்கத் தக்கவைகளும் அனுட்டிக்க வேண்டியவைகளுமாகு மென்பதிற் சந்தேகமில்லை. இளைஞர் உலகத்துக்குப் பயன்படவேண்டு மென்றே மிக மிக கவனமாகவும் அனாவசியமான வர்ணனைகள், கற்பனைகள், சொற்களைக்கூடக் கலவாமல் (நூலாசிரியர் என்னும்) பெயருக்காக புகழுக்காக பெருமைக்காக இல்லாமல் ஹிருதய சுத்தமாக இளைஞர்

சமூகம் நன்மையடைய வேண்டுமென்னும் பெருநோக்கத்தோடு இந்நூல் இயற்றினேன் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

இருபத்தைந்து முப்பது வருஷங்கட்கு முன் எனது இளம்பிராயத்தில் சமூக சீர்திருத்த விஷயமாக நான் கூட்டங்களிற் பேசியவற்றையும் பத்திரிகைகளில் எழுதியவற்றையும் திரட்டி "வியாசங்களும் உபந்நியாசங்களும்" என்னும் ஒரு புத்தகமாக்கி காலஞ்சென்ற நீதிபதி ஸர் சுப்பிரமணியய்யரவர்கள் முதலிய பெரியார்களின் மதிப்புரைகளோடு வெளியிட்டபோது கனவு காண்பதுபோல் நான் எதிர்பார்த்த பல சீர்திருத்தங்களும் ஒருவாறு கைகூடி விட்டன வென்றே சொல்லவேண்டும். பிறகு ஐந்து வருஷங்கட்கு முன் "மாதர் மறுமணம்" என்னும் சிறு நூலொன்று எழுதி வெளியிட்டேன். அதற்கும் சமூக மக்களின் ஆதரவும் அநுட்டித்தலும் விசேட நாட்கள் குறைந்தும் கைகூடி வருகின்றன. ஆகவே என் மனப்போக்கில் எனக்குள்ள நம்பிக்கை உறுதிப்பட்டு இப்போது இளைஞர் உலகத்துக்குச் சில ஆலோசனைகளையும் சொல்லத் தூண்டுதலாயிற்று.

ஆஸ்யச் சுவையில்லாத கதைகளும், கட்டுரைகளும் தித்திப்பில்லாத பக்ஷணங்களை யொக்குமாதலால் நகைச் சுவையை நன்கமைத்து எளிய நடையில் பல கதைகளுடன் இந்நூலைச் செய்திருக்கிறேன். ஆயினும் காரியத்தை மறந்து அப்படிச் செய்யவில்லை யென்பதை வாசகர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இளைஞர்கள் இந்நூலை எதிர்காலத்தில் ஒரு நல்ல தஸ்தவேஜாகக் கருதுவார்க ளென்பது எனது நம்பிக்கை.

மகிபாலன்பட்டி,
30—9—38.

M. சின்னையா செட்டியார்.

அட்டவணை.

இளைஞர்கட்கு ஆலோசனை.

1. கடவுள் நம்பிக்கையும் வழிபடும் முறையும்

மனித சமூகத்துக்குக் கடவுள் நம்பிக்கை அவசியம் வேண்டும். கடவுள் நம்பிக்கை யில்லாவிட்டால் மனித சமூகம் கொஞ்சமும் அஞ்சாமற் கூசாமற் பாப காரியங்களையும் அக்கிரமமான செயல்களையும் செய்து அன்பு அபிமானம் ஆதரவு முதலிய இயற்கையான நல்ல குணங்களெல்லாம் மறைந்து மிருகப் பிராயமாகி ஒருவரை யொருவர் துன்புறுத்தி, ஒருவரை யொருவர் வஞ்சித்து, ஒருவரை யொருவர் கொன்று தின்று நாசமடைந்துவிடக் கூடும். இராஜதண்டனைக் கஞ்சித்தான் மேற்கூறிய அக்கிரமங்கள் நடவாதிருக்கின்றன வென்றும், கடவுளுக்குப் பயந்தல்லவென்றும் சிலர் வாதிக்கக்கூடுமாயினும், அது முற்றிலும் சரியல்ல. கெட்ட காரியங்களைச் செய்தால், கெட்ட எண்ணங்களை நினைத்தால், கடவுள் ஒருவரிருக்கிறார், அவர் தண்டிப்பாரென்ற அச்சங் காரணமாகவே பல அக்கிரமங்கள் தடைப்படுகின்றன வென்பதைப் பிரத்தியக்ஷத்தில் ஒவ்வொரு நாளும் காண்கின்றோம். அதற்குப் பல உதாரணங்களை யெடுத்துக் கூறலாமாயினும், கடவுள் நம்பிக்கையின் பெரும்பயனைப் பிரதிதினமும் அனுபவிக்கிறோ மென்று இங்கு சுருங்கக் கூறுவதே போதும்.

இனி கடவுள்யார்? அவர் எங்கிருக்கிறார்? அவரது ஊர் பேர் குலம் கோத்திரம் நிறம் குணம் உயரம்

பருமன் தொழில் வியாபாரம் முதலிய காரியங்க ளென்ன வென்று தொடர்ச்சியாகப் பல கேள்விகளைப் போட்டு நூற்பிரமாணங்களையும் அனுமானப் பிரமாணங்களையும் நம்பாமல் பிரத்தியக்ஷப் பிரமாணத்தாற் கண்டறிந்தாலன்றி நம்ப முடியாது என்று கருதினால் அதற்கு ஒரே சமாதானம் தானுண்டு. அதாவது:— நமது தாய் தந்தையர்தான் நம்மைப் பெற்றவர்க ளென்று நாம் நேரிற் கண்டறிந்ததில்லை யாயினும், நம்மினும் முதியோர் கூறுவதையும் ஏனைய அனுமானப் பிரமாணங்களாலும் நாம் நம்புவது போல், ஜாதிபேதங்களை யும் மதபேதங்களையும் பிரமாதப்படுத்தித் தாறுமாறாகப் பிதற்றிக்கிடக்கும் குப்பைகளை (நூல்களை) த்தள்ளி விட்டு மெய்நூல்கள் கூறுவதாலும், உலகம் இயங்குந் தன்மையிலிருந்து அனுமானப்பிரமாணத்தாலும், கர்த் தாவின்றிக் காரியமில்லையாதலாலும் ஏதோ ஒரு பரம சக்தி யிருப்பதாக நாம் நம்பித்தானாக வேண்டும். அந்த சக்திதான் கடவுள். ஆகவே கடவுள் உண்டா இல்லையா வென்னும் ஆராய்ச்சியே அவசியமில்லை. இருப்பதாக நம்பி அச்சத்தோடு நல்லகாரியங்களைச் செய்வதே சிறந்த முறையாகும்.

அத்தகைய ஒப்பற்ற ஒரு தனிப்பொருளை மனித சமூகத்துக்கு அவரவரிஷ்டம்போல் வழிபடுவதற்கும் பிரார்த்திப்பதற்கும் பூரண சுதந்தரமும் உரிமையும் உண்டெனினும் அதில் ஏமாற்றமும் பித்தலாட்டமும் உதவாது. கடவுளின் பெயரால் ஏமாற்றமும் பித்த லாட்டமும் மூட நம்பிக்கையும் வீண் காரியங்களில் வீண் செலவும் ஏற்படுவதைத்தான் நாம் முக்கியமாக ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டும்.

கடவுளைப்பற்றி ஒவ்வொரு தேசத்திலும் ஒவ் வொருவிதமாகக் கதை கூறுகிறார்கள். ஒவ்வொரு தேயத்திலும் ஒவ்வொரு விதமாகக் கொண்டாடி ஒவ்வொரு விதமாக வழிபடுகிறார்கள். ஒவ்வொரு பாஷையிலும் ஒவ்வொரு விதமான பெயர் கூறுகிறார் கள். ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் தங்கள் நடை யுடை பாவனைகளை யனுசரித்து உருவகப்படுத்திக் கொண்டு வணங்குகிறார்கள். ஆயினும் கடவுள் ஒரு வர் உண்டென்னும் கொள்கையில் வேறுபாடில்லை.

ஹிந்துக்களிற் பெரும்பாலோர் கடவுள் என்னும் பொருள்பற்றி உண்மையுணராமல் தாறுமாறான எண் ணங்களையும் கொள்கைகளையும் விபரீதமான பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு அதியாகச் சென்று உன்சாமி என்சாமி யென்றும், பெரியது சிறியது என் றும் அனேகம் சாமிகளாகக் கற்பித்துக்கொண்டு பல விதமான கதைகளைக் கூறி வம்புபேசி வாதிட்டு நான் சிரசிற் பிறந்தவன், நீ காலிற் பிறந்தவன், நான் தீண்டலாம், நீ தீண்டக்கூடாது, நான் கடவுளுக்கு நெருங்கின பங்காளி, நீ அன்னியன், நான் உள்ளே செல்லலாம், நீ வெளியே நிற்கவேண்டும் என்று இன் னும் எத்தனையோ விதமாக பேதங்கூறி இருட்டறையி லிருந்து குருட்டு வழக்குப் பேசுவது தான் நமக்கு வருத்தமாக இருக்கிறது. அந்த அக்கப்போரும் முட் டாள்தனமும் நீங்கிவிட்டால் கடவுள் நம்பிக்கையில் ஒருவருக்கும் ஆக்ஷேபமிருக்கக் காரணமே யில்லை.

கடவுள் என்பது ஒரு ஒப்புயர்வற்ற தனிப் பொருள். சர்வ ஜீவர்கட்கும் பொதுவான ஒரு பரம சக்தி. அது நாமமுடையது மன்று. ரூபமுடையது

மன்று. நாம ரூபமற்ற சச்சிதானந்தப் பரம்பொருள். அதன் எல்லையை அளந்தறியவும் பேசவும் நம்மால் முடியாது! எழுதிக் காட்டவும் கூட முடியாது!!

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி மயானத்தான் வார்சடையா னென்னினல்லான், ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன் ஓரூரனல்லன் ஒருவமனில்லி, அப்படியு மவ்வுருவு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே".

மனித சமூகத்தால் அந்தப் பரம்பொருளுக்கு ஆவது ஒன்றுமில்லை. ஆனால் மனித சமூகம் சுயநலங் கருதி அறியாமையைப் போக்கி சுத்தமான கடவுள் நம்பிக்கையையும் விவேகமான வழிபடும் முறையையும் மேற்கொண்டு அதை ஒழுங்குபடுத்தி அபிவிருத்தி செய்துகொண்டால் பெரிய அனுகூலமாக இருக்கும். அதுதான் கடவுள் நம்பிக்கையின் பெரும்பயனுமாகும்.

வழிபடும் முறை.

மனித சமூகம் கடவுள் நம்பிக்கையை யிழந்து விடாமலிருப்பதற்காகவே நமது முன்னோர்கள் ஆலயங்களையும் விக்கிரக ஆராதனையையும் ஏற்பாடு செய்திருக்கிறார்களென்று கொள்வதில் தவறொன்றுமில்லை. ஆனால் அந்த ஏற்பாடு "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது" போல் விபரீதமாக மாறிவிட்டதுதான் குற்றம். அதன் தத்துவத்தை உள்ளவாறுணராமற் பல வேறுபாடுகளும், கற்பனைகளும், அறியாமையும், வீண் செலவுகளும் பெருகிவிட்டன. ஒரு சாரார்

பெரிய பெரிய கோயில்கள்தான் கடவுளுக்குப் பிரிய மானவை யென்று நினைத்துக் கொண்டார்கள். ஒரு சாரார் நல்ல ஆபரணங்கள்தான் கடவுளுக்குப் பிரிய மானவை யென்று நினைத்துக்கொண்டார்கள். ஒரு சாரார் ஆடம்பரங்கள்தான் கடவுளுக்குப் பிரியமான வையென்று நினைத்துக்கொண்டார்கள். ஒரு சாரார் தாங்கள்தான் கடவுளுக்குப் பிரியமான மனிதர்க ளென்று நினைத்துக்கொண்டார்கள். ஆனால் அவர் களுள் தங்கள் மனப்பரிசுத்தத்தைச் சிந்தித்தவர்கள் அதிகமாக இல்லை. இந்த எண்ணங்களால் எத்தனை கோடி ரூபாய்கள் கோயிற் கட்டுவதற்கென்றும், கும்பாபிஷேகம் செய்வதற்கென்றும், திருவாபரணஞ் செய்வதற்கென்றும், நிர்வாகஞ் செய்வதற்கென்றும், செலவாகிவிட்டன! இன்னும் செலவாகிக்கொண்டிருக் கின்றன!

மனித சமூகத்துக்கு வேண்டிய எல்லாப் பொருள் களும் எல்லா நலன்களுந் தருவதற்குப் பூரண சக்தி யுள்ள கடவுள் என்று நம்பும்போது அந்தக் கடவு ளுக்குக் குடியிருக்க வீடும் அணிந்துகொள்ள நகை களும் உண்ண உணவும் படுக்க இடமும் தாங்கள் கொடுத்தாலன்றி இல்லையென்று மயங்கிக் கிடக்கும் மக்களுக்காக நாம் பெரிதும் வருந்தவேண்டும். உல கத்திற்காணும் எல்லா ஜீவர்களையும் ஆக்கவும் காக்க வும் சர்வ வல்லமையுள்ள கடவுள் என்று நம்பும்போது அந்தக் கடவுட் சிலையை (விக்கிரகத்தை) ஒரு வகுப் பார்தான் தீண்டலாம், மற்றவர் தீண்டக்கூடாதென் றும், ஒரு சில வகுப்பார்தான் ஆலயத்துள் நுழைய லாம் மற்றவர்கள் நுழையக்கூடா தென்றெல்லாம்

மயங்கிக் கூறும் மக்களுக்காக நாம் பெரிதும் வருந்த வேண்டும். இந்த மயக்கத்தினால் மனித சமூகத்தின் அபிவிருத்திக்கும் அறிவு விருத்திக்கும் உபயோகமாகக் கூடிய பெரும் பொருள் வீணாகச் செலவு செய்யப்படுகின்றது!

நாமரூபமற்ற பரம்பொருளுக்கு நாமரூபங் கற்பித்து கல்லினாலும் செம்பினாலும் சிலைகளாக்கி வர்ணங்கினாலும் அவற்றைப் பகிரங்கமான இடங்களில் வைத்து சர்வ ஜனங்களும் சதாகாலமும் கண்டு கண்டு வாழ்த்தி வணங்கி மனமாசு நீங்கி பயனடைவதற் கில்லாமற் பெரிய பெரிய கட்டிடங்களின் நடுவே இருளடர்ந்த இடங்களிற் பூட்டிவைத்து கையிற் காசில்லாத நிலைமையிற் காணமுடியாதபடி சுங்கச் சாவடிகளமைத்து சில பேய்களை அங்கு காவல் வைத்துப் பொது ஜனங்கட்கு இடையூறு செய்வதற்குப் பெரிதும் வருந்த வேண்டும். ஆகவே இக்தக் குற்றங்களெல்லாம் பரிகரிக்கப்பட்டு கடவுள் பெயரால் ஏற்படும் வீண் செலவுகளும் ஆடம்பரங்களும் அக்கிரமங்களும் ஒழிக்கப்பட்டு சர்வ ஜனங்கட்கும் உபயோகமான முறையிற் கடவுள் வழிபாடு அமைக்கப் பெறவேண்டும் என்பது என்னபிப்பிராயம்.

அதாவது:— ஒவ்வொரு ஊரிலும் ஆலயங்கட்குள்ளிருக்கும் கடவுட் சிலையை வெளியிற் கொண்டு வந்து பகிரங்கமான இடங்களில் அழகான தோட்டங்களமைத்து, அதன் நடுவில் நாற்புறமும் வெளியாகவும் மேற்பாகம் மட்டும் மூடுதலாகவும் சிறிய சிறிய பீடங்களமைத்து, அதன் மேல் இஷ்டமான விக்கிரகத்தை ஸ்தாபித்து அதைச்சுற்றிலும் கடவுள் நம்பிக்கை, அதன்

பயன், மெய்யறம், ஒழுக்கம், வாய்மை, சத்தியம், சமத்துவம் முதலிய தர்ம வாக்கியங்களைச் செதுக்கியாதொரு கட்டளையும் தீர்வையுமில்லாமல் அவரவர் கையினால் அவரவரிஷ்டப்படி அபிஷேகஞ் செய்து அவரவர் விரும்பும் பொருளை அவரவர்களே வைத்து ஆராதித்து வணங்கிப் பிரார்த்தித்துச் செல்லும்படியாக இருக்க வேண்டும். இப்படி ஆலயங்கள் ஒரு ஊருக்கு எத்தனை வேண்டுமாயினும் ஸ்தாபித்துக் கொள்ளலாம். அத்தகைய ஒவ்வொரு ஆலயங்களிலும் இரண்டொரு வேலையாட்களிருந்து குப்பை கூளங்களைப்போக்கி சுத்தஞ்செய்து கொண்டிருந்தாற்போதும். ஆலய சம்பந்தமாக வேறு செலவுகள் பொது ஜனங்கட்கு ஏற்படக் கூடாது. இவைதான் உண்மையான கடவுள் நம்பிக்கைக்கும் நேரான வழிபாட்டிற்கும் சிறந்த முறையென்பது என் கொள்கை.

2. கோயில் கட்டுதலும் கும்பாபிஷேகமும்

துரதிர்ஷ்டவசமாக நம்மவரைப் பிடித்திருக்கும் பைத்தியங்களில் இதுவும் ஒன்று. கோயிலானாலும் கும்பாபிஷேகமானாலும் அதற்கும் ஒரு அளவுண்டு. அளவில்லாமற் செய்யப்படுகிற காரியம் எதுவாயினும் அது பைத்தியம் பிடித்த செய்கையேயாகும்.

ஒரு ஊரின் அளவுக்கும் அந்த ஊரில் வசிக்கும் ஜனத்தொகையின் அளவுக்கும் தக்கபடி கோயிலிருப்பதுதான் பொருந்துமே யன்றி ஆயிரம் ஜனங்கள்

வசிக்கும் ஊரில் ஐந்து லட்சம் செலவிட்டுக் கோயில் கட்டிவைப்பது பொருந்துமா? ஐயாயிரம் பத்தாயிரம் செலவிட்டுக் கட்டினுற் போதாதா? அந்தக்கோயிலில் ஈஸ்வரன் குடிகொள்ள மாட்டாரா? ஜனங்கள் கூடித் துதிப்பதற்கே ஆலயமன்றி எங்குமுள்ள ஈசனுக்கல்ல வென்பதை அறிவுடையோர் ஒப்புக்கொள்ளுவர். ஆலயங்கட்டு முன் அவசியத்தின் அளவைத் தெரிந்து கொண்டு தான் ஆரம்பிக்கவேண்டும். முன் பின் யோசிக்காமல் கண்களை மூடிக்கொண்டு ஆரம்பித்துவிட்டு, அரைகுறையாக வைத்துவிட்டு ஆரம்பித்தவர் போய் விட, அவர் மகனும் மகனுக்குப் பிறகு பேரனும் ஒரு சமயம் பேரனுக்கு மகன் காலத்திற் கூட கட்டி முடியாமற் கஷ்டப்படுகிறது. ஆரம்பித்தவர் அந்த சமயம் அவருக்குள்ள மனவலுவாலோ பண வலுவாலோ ஆரம்பித்துவிடுகிறுர். பிறகு, தாத்தா எடுத்த காரியத்தைத் தம்பி முடிப்பதற்கு யாசகம் வாங்கவேண்டியதாகி விடுவதுமுண்டு. இவ்வளவு சங்கடமான காரியம் தேவைக்கு அதிகமாகக் காண்பதால் உபயோகமாகவில்லை என்பதுதான் வருந்தத்தக்கது. கோயிலில்லாத இடங்களில் குடி ஜனங்களின் அளவுக்குத் தக்கபடியாகவும் சீக்கிரம் முடியத்தக்கதாகவும் கட்டி வைத்தால் அது கொண்டாடற் பாலதாகும். அப்படியொரு ஆழ்ந்த யோசனையோடும் மதாபிமானத்தோடும் நம்மவர் ஆலயங்கட்டும் வேலையிற் பிரவேசிக்கிறுர்களென்று உபசாரமாகக் கூறலாமேயன்றி உண்மையாகக் கூறமுடியாது. தென்னுட்டிற் கோயிற்கட்டும் பெருமை நமது சமூகத்துக்கு ஒருபுறமிருந்தாலும் கோயிற்கட்டி நம்மவரின் செல்வ நிலையையும் நாண

யங்களையும் குட்டிச்சுவராக்கி ஐப்பீ கொடுக்கும் பெருமையும் ஒருபுறம் சற்றுப் பெரிதாகவே வளருகிறது.

கோவில்தான் தாத்தா ஆரம்பித்து விட்டார். எடுத்த காரியத்தை முடிக்க வேண்டியதாயிற்று. கும்பாபிஷேகத்தை அடக்கமாகச் செய்தாலென்ன? போட்டி போட்டு ஒருவருக்கொருவர் அதிகப்படியாகச் செய்து கொண்டே போனால் அதன் முடிவுதான் என்ன? ஆயிரரூபாயிற் செய்யத்தக்க காரியத்தை ஐம்பதாயிரம் அறுபதாயிரம் செலவிட்டுச் செய்தால் அது விவேகமா அல்லது பைத்தியமா? அப்படித்தான் லட்சியமில்லாமற் செய்துவிட நமது சமூகம் என்ன தாங்க முடியாத செல்வப் பெருக்கை யடைந்திருக்கிறது? விளக்கு வைத்துக் கணக்குப்பார்த்தால் கடன் ஏடுகள் தான் அதிகமாக இருக்கும். இந்தக் குருட்டு வேலைகளைப் பெருமைக்குச் செய்கிறவர்களின் கடைகள் வருஷம் ஒன்றுக்கு பத்து எட்டு சாய்ந்த வண்ணமாகவே இருக்கின்றன. அதையொட்டிப் பலருக்கும் கஷ்டமுண்டாகிறது. இந்தப் பெருமைதான் இப்போது நமக்குக் கிடைக்கும் பெருமையாக இருக்கிறது.

கும்பாபிஷேகமும் ஒரு டம்பமே; சாந்திக் கல்யாணம் முதலிய டம்பங்களைப் போல இதுவும் ஒன்றேயன்றி வேறல்ல. நல்ல சித்தவிர்த்தியுள்ளவர்கட்கு இந்த டம்பத்தில் விருப்பமிருக்க மார்க்கமில்லை. மோட்டார் வசதியுள்ள இந்த நாளில் நகரவிருந்து நம் நாட்டில் அவசியமில்லை. ஒருவாறு வேண்டுமென்றாலும் அடக்கமாகச் செய்து விடலாம். பத்தாயிரம் பேருக்கு சாமான் சேகரித்து, ஐயாயிரம் பேருக்கு சமையல் செய்து, ஆயிரம் இரண்டாயிரம் பேர் புளி யேப்பத்

தோடு சாப்பிட்டு மிச்சமிருப்பது அழுகிக் கெட்டு எடுத்தெறிவது என்னவேலை? இதோடு பெண்கள் விருந்து, நாட்டார் விருந்து, பிராம்மணர் விருந்துகள், உத்தியோகஸ்தர் விருந்து, மடத்தார்கட்கு விருந்துகள் அதற்கு வெவ்வேறு இடவசதி, தண்ணீர்வசதி, படுக்கைவசதி, காற்றுவசதி—இத்தனை யேற்பாடுகளும் ஒரு சிறிதும் குறைவின்றி நடைபெற்று நல்ல பேர் வரவேண்டும். இதற்குட் கலகங்கள் அடிதடிகள்; விபூதிச் சண்டை பட்டுச் சாத்துச் சண்டை முதலிய பைத்தியகாரச் சண்டைகள் வந்து பேரைக் கெடுத்துவிடாமலிருக்க வேண்டும்; மழை பெய்யாமலிருக்க வேண்டும். களவு திருட்டு நடவாமலிருக்க வேண்டும். கும்பாபிஷேகஞ் செய்து தப்பித்துக் கொள்ளுவதற்கு ரிசர்வ் போலீஸ் பந்தோபஸ்து வேறு வேண்டும். என்ன அழகு! என்ன பெருமை! இதை ஆத்மார்த்தமான செயலென்று யாராவது சொல்ல முடியுமா? வகை தெரியாமற் செய்யப்படும் டம்பச் செயலென்று சொல்வதிற் குற்றமென்ன?

போனது போகட்டும்; இனியாவது நமது சமூகம் இந்தக் காரியத்தில் மனம்போனபடி டம்பத்தையே பிரதானமாகக் கருதிப் பணத்தைப் பாழாக்காமல் ஜாக்கிரதையாக அளவறிந்து தேவையறிந்து பயன்படு முறையிற் செய்தல் வேண்டும். இந்த கும்பாபிஷேகங்களால் ஜனங்கள் படுங்கஷ்டங்களைப் பின்னுமொரு முறை வர்ணிப்போம்.

3. கும்பாபிஷேகத்தின் கஷ்ட நஷ்டங்கள்

இவ்வருஷம் நம் நாட்டில் எங்கு நோக்கினும் கும்பாபிஷேகமாகவே இருக்கின்றது. அதனால் அடையும்

கஷ்ட நஷ்டங்களை நம்மினத்தார் சிறிதேனும் உணர்ந்த தாய்த் தோற்றவில்லை. நடுநிலைமையுடைய ஒருவன் காய்தலுவத்தலின்றி நம் நாட்டு நிலைமையையும் கும்பாபிஷேகங்களால் வரும் நன்மை தீமைகளையும் ஆராய்ந்து பார்ப்பானேயாயின் நிச்சயமாகவும் மனங்கருகுவான் என்பது உறுதியாகும். இதனை நம் ஜாதியார் இனியேனும் உணர்ந்திருக்கவேண்டுமென்பது எனது பெருகிய அவாவாகையினால் ஈண்டு நான் கும்பாபிஷேகத்தால் விளையும் தொல்லைகளை சிறிது விளக்க விரும்புகிறேன்.

கும்பாபிஷேக மென்பதற்கு கும்பத்திற்கு அபிஷேகம் செய்தல் என்பது பொருள். கும்பாபிஷேகம் கோவில் கட்டி முடிந்தவுடன் நடைபெறுகின்றது. கும்பத்திற்கு அபிஷேகம் செய்வது என்று மாத்திரம் இதற்குப் பொருளிருந்தால் யாதொரு பிரயாசையுமின்றி ஆயிரம் கும்பாபிஷேகம் நடத்திவிடலாம். நமக்கும் யாதொரு ஆக்ஷேபமுமில்லை. ஆனால் இப்பொழுது அதற்கு மாறாக கட்டிய கோயிலையும் வெட்டிய குளத்தையும் அதையொட்டிய அலங்காரங்களையும் பிறருக்குக் காட்டி அவர்களின் நன்மதிப்பையும் புகழுரைகளையும் ஈட்டிக்கொள்வதற்காகவே கும்பாபிஷேகம் மட்டில்லாத் தடபுடலாகச் செய்யப்படுகிறது. ஆத்மார்த்தமாக அதன் தத்துவங்கருதிக் கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்யப்படுமானால் இந்த அர்த்தமில்லாத தடபுடலுக்கும வீணான செலவுகட்கும் இடமிராது. அந்தக்கோயிலின் சக்தியும் தானே பிரகாசிக்கக்கூடும். ஆனால் இப்போது நடப்பவை அப்படியல்ல. டம்பமென்னும் பித்துப் பிடித்துப் பெருமைக்காகத் தேவை இல்லாத இடங்களிலெல்லாம் தேவையில்லாத மாதிரி

யாகக் கோயிற்கட்டிப் போட்டி போட்டுக்கொண்டுக் கும்பாபிஷேகஞ் செய்யப்படுகிறது.

கும்பாபிஷேகப் பத்திரிகையைப் பார்க்கும்போதே அது எத்தனை ரூபாய்ச் செலவில் செய்யப்படப்போவ தென்பதை ஒருவாறு நிச்சயித்துவிடலாம். சிங்கிள் சைஸ் டபிள் சைஸ் என்று இரண்டு தரமான பத்திரிகையுண்டு. சிங்கிள் சைஸ் ஆனால் பத்தாயிரம் அல்லது நாலு இரண்டு அதிகமாகும். டபிள் சைஸ் ஆனால் 35000 முதல் 60000 வரையிலும் கொள்ளக்கூடியது. அதுதான் பெரிய கும்பாபிஷேகம். அதிற்றான் ஜனங்கள் அடிபட்டு மிதிபட்டு கார்களால் நசுக்கப்பட்டு சீக்கிரம் மோக்ஷமடைவது. கும்பாபிஷேகப் பத்திரிகைகளைத் தபால் வழியாக அனுப்பிவிட்டால் போதாதென்று கருதி ஊர் ஊராக எடுத்துக்கொண்டு சென்று கல்யாணம், புதுமை, சாந்தி முதலியன சொல்வது போல் சொல்லி வருவது ஒரு சம்பிரதாயமாகவிருக்கிறது. அதோடு அவசியம் வர வேண்டுமென்று சொல்லி வருவது ஒரு ரசமான விஷயம். ஏனெனின் விருந்துக் கொட்டகையில் மறியல் செய்யவேண்டிய அவசியம் இருப்பதால், இதை ரசமான அழைப்பாகுமென்று வேடிக்கையாகக் கூறவிரும்புகிறேன்.

அழைப்புக் கிடைத்ததும், சரீரத்தையும், வாழ்க்கையையும் மான அவமானத்தையும் ஒரு பொருட்டாக மதிக்காமல் பக்தியில் ஈடுபட்டு மோக்ஷாபேக்ஷகர்களாய் நமது பெண்மக்கள் கும்பாபிஷேக தரிசனத்துக்காகக் கூட்டங் கூட்டமாய்க் கிளம்பிவிடுகின்றனர். அவர்கள் கும்பாபிஷேக தரிசனத்தில் எங்காவது நசுக்குண்டு மோக்ஷமடைந்துவிட்டால் அவர்கள்

பெற்ற குழந்தைகளைப் பாதுகாத்து வளர்ப்பது கஷ்டமாகிவிடும். ஆதலால் ஜனக்கும்பலில் அவர்கள் மோசக்ஷமடைந்து விடாமல் தடுத்தற் பொருட்டு அவர்களைப் பின்பற்றி புருஷர்களும் கிளம்பிவிடுகிருர்கள். அதோடு ஷோக்கிகளும் கலந்து கொள்கின்றனர். உடனே மோட்டார் கார்களும் அதன் டிரைவர்களும் கிளம்பிவிடுகின்றனர். இந்தப் பெரிய கூட்டம் கிளம்பிவிடவே அக்கம் பக்கத்திலுள்ள குடியானவர்களும் தங்கள் பிள்ளை குட்டிகளுடன் மருக்கொழுந்து வேப்பெண்ணை சகிதமாகக் கிளம்பிவிடுகின்றனர். ஆகவே கும்பாபிஷேகம் நடக்கு மிடங்களில் பக்தர்களின் கூட்டம் ஏராளமாகவும் தாராளமாகவும் கூடிவிடுகிறது.

இந்த மாபெரும் கூட்டத்திற்கு உண்ண உணவும் உட்கார இடமும் குடிக்கத் தண்ணீரும் நுளத்துக் கிருக்க இடமும் முக்கியமான காரியங்களன்ரே! கும்பாபிஷேகஞ் செய்கிறவர்கள் முதல் மூன்று காரியங்களுக்கும் ஒருவாருக இடஞ்செய்து கொடுத்தாலும் நான்காவது காரியத்தைப்பற்றிச்சிந்திப்பதேயில்லை. ஆனல் கூட்டமும் அதற்காக அஞ்சிவிடுவதில்லை. கும்பாபிஷேக நாள் சிறந்த நாளாதலால் அன்று மனுஷ்ய தர்மத்தை இழந்து மிருக சுபாவத்தை மேற்கொண்டு விடுவது சாஸ்திர விரோத மில்லையென்று தெரிந்து கொண்டிருக்கிருர்கள் போலும்! ஆதலால் ஆண் பெண் என்ற வித்தியாசமில்லாமலும், கோயிற் குளமென்ற பாகுபாடு இல்லாமலும், கிழக்கு மேற்கு என்ற திசைஞானங் கூட இல்லாமலும் கண்ட கண்ட இடத்தில் நின்ற நின்றபடி மல ஜலங்கழித்துக் கும்பாபிஷேகத்துக்கு முதல் நாளிரவே, கால் வைக்க இடமில்லா

மற் செய்து, மறுநாள் எல்லாம் அந்தமயமாக்கி, அதன் மேல் நடந்து, அதன் மேல் உண்டு, அதன் மேற் படுத்து, அதன் மேல் இருந்து ஸ்வாமி புறப்பாடுகளையும் தரிசித்துக் கொள்ளுகின்றனர். நமக்கு உணர்ச்சியும் சுய மரியாதையும் இருக்குமானல் இந்த ஒரு ஆபாசத்தையும் பெண் மக்களடையும் அவமானத்தையும் உத்தேசித்தே கும்பாபிஷேகத்தை ஆடம்பரமில்லாமற் செய்துவிடலாம். இதையன்றி வேறு காரணமொன்றும் வேண்டியதில்லை. நமக்கு உணர்ச்சியுமில்லை; சுய மரியாதையுமில்லை. எல்லாம் சூன்யமாக விருக்கின்றன. விசிறிமடித் துப்பட்டாவும் சில்க் சட்டையும் வைர நகைகளும் மானத்தைக் காப்பாற்றுவனவாகா. ஒரு பெண்ணின் மானத்துக்காகத் தலைகொடுத்த பெருமையைக் காப்பாற்றுகிற முறை இதுதானு? இந்த அர்த்தமில்லாமற் செய்யப்படும் பெருஞ் செலவின் ஒரு சிறுபாகத்தை இந்த மானங்காக்குங் காரியத்துக்காகச் செலவிட்டால் அது எவ்வளவு உபயோகமாக இருக்கும்? இம்மட்டோ! "ஒருசந்திப் பானையை நாய் அறியாது" என்பது ஒரு பழமொழி. உத்தம பெண்களாயினும் கூட்டத்தில் நெருக்கித் தள்ளப்படுவதால் விலக்கிடமில்லாதபோது அவர்கள் மேல் விழாமல் நல்லவர்கள் ஒதுங்கிக்கொண்டாலும் புல்லர்கள் உழுந்தடித்த தடிபோல் வேணுமென்றே அப்படியே நின்று பெண்களின் மேல் கூசாமல் விழுந்தும் தள்ளியும் மிதித்தும் வருத்துகின்றனர். இதைவிட அவமானமான காரியத்தை எங்குபோய்த் தேடுகிறது? கும்பாபிஷேகம் செய்கிறவர்கள் இதைக் கவனித்து ஒரு ஏற்பாடும் செய்ய நினைப்பதேயில்லை. அவர்களுக்கு இவையெல்

லாம் பெரிய காரியங்களாகப்படுவதுமில்லை. பெருங் கூட்டத்துக்கு எப்படி வகை செய்ய முடியுமென்று சிலர் நினைக்கலாம். மைசூர் தசராப் பண்டிகைக்குப் போய் வந்தவர்கட்கு அந்த மாபெருங் கூட்டத்தில் பெண்கள் எவ்வளவு கௌரவமாக நடத்தப்படுகின்றனர் என்பது தெரிந்திருக்குமாதலால் இது செய்யத் தக்க காரியமென்றே நினைப்பார்கள். இந்தக் காரியங்களை எப்படிச் செய்யலாமென்பதை இவ்வியாசத்தின் கீழ்வரும் விஷயங்களால் கூறுகிறேன்.

கும்பாபிஷேகத்தில் விருந்துகள்தான் முக்கியமானவை. அவற்றுள்ளும் நகர விருந்துதான் பிரதானமானது. அந்த நாளில் குப்பைமேட்டில் ஆத்திக்கட்டையைப்போட்டு அதை விறகாக வெட்டும்படி செய்து அப்படி வெட்டிய மாப்பிளைக்குத்தான் சீக்கிரம் பெண் கொடுக்க இசைவார்களாம். அதுபோல கதவு நிலைகளைப் பிடுங்கிக்கொண்டு விசாரணைக்காரர்களை நெட்டித்தள்ளி எதிர்ப்பட்டவர்களை மிதித்து ஒரு போர் வீரன்போல் முன் செல்லும் விருந்தினர்க்கே முதற்பந்திச் சாப்பாடு கிடைக்கும். நகரவிருந்து வெகு ஜாக்கிரதையாகச் செய்யப்படவேண்டிய ஒரு காரியம். அதில் ஒரு சிறு குறை யிருந்துவிட்டாலும் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தவருக்கு நற்சாக்ஷிப் பத்திரம் கிடைக்காது. கோயிற் கட்டியதிலும் குளம் வெட்டியதிலும் பிரயோஜனமில்லை. ஆகவே பக்தர்கள் போஜனப்பிரியர்கள் என்பதுதான் புலப்படுகிறது. விருந்தினர் எப்படி வரவேற்கப்பட்டு எப்படி உபசரிக்கப்படுகின்றனரென்பது ஒரு நல்ல தமாஷாகும். கும்பாபிஷேகப் பத்திரிகையைக் கொடுத்து அவசியம் வரவேண்டு

மென்று அழைக்கப்பட்ட விருந்தினர் அதிகாலையிற் கும்பாபிஷேகமாகிவிட்டாலும் உடனே நகரவிருந்துக் கொட்டகையை நாடிவிடுவர். ஒருவரையொருவர் முந்திக்கொண்டு அதிவேகமாக வருவதைக்கண்டு விசாரணைக்காரர் திடமான ஆட்களை வாயிலில் நிறுத்தி மறியல் செய்ய ஆரம்பிப்பர். விருந்தினர் அந்த வாயிலை விட்டு அசையாமல் நின்று சத்தியாக்கிரகம் செய்வர். சமயம் வாய்த்தால் கதவு நிலைகளையும் பிடுங்கிக்கொண்டு விசாரணைக்காரர்களையும் ஒரே தள்ளாகத் தள்ளிவிட்டு அகப்பட்ட அசக்தர்களை மிதித்து சில சமயம் உயிர்ச் சேதங்கூடச் செய்துவிட்டு உட்போந்து அந்த அருமையான விருந்தை உண்டு மகிழ்வர். அன்னவெறி கொண்டவர்களைப்போல் அங்கு சத்தியாக்கிரகம்செய்துநிற்கும் விருந்தினர் ஒவ்வொருவரும் பலருக்கு அன்னமிடத் தக்க பிரபுக்களாகவிருந்தும் கும்பாபிஷேக விசேடத்தால் அந்த இடத்தில் சோற்றுக்கு வேறுவகை யின்றி ஆண்டி பரதேசிகளைப்போல் வாயிலிற் காத்துக் கொண்டு நிற்பது ஒரு பெரிய பரிதாபமான காட்சியாகவே யிருக்கிறது. அந்த இடத்தில் சுயமரியாதை ரொக்க விலைக்கு விற்றுமுதலாகிறது. ஒரு சிலர் மரியாதையாகப் பொறுத்திருந்தாலும் அவர்கள் ஏற்கனவே உண்ணாவிரதமிருந்து பழக்கப்பட்டவர்களாக இருந்தாலன்றி அவர்கள் பொறுமை பயன்படாது. ஏனெனின் அந்திநேரம் வரையிற் பந்தி நடக்கும்; பந்திக்குப் பந்தி குஸ்தி நடக்கும். ஆதலால் அவர்களும் பொறுமையை யிழந்து விடவேண்டும்; அல்லது உண்ணாவிரதமிருக்கவேண்டும். ஆகவே நகர விருந்தில் மரியாதையாக விருந்து முறையில் உண்பதென்பது முடி

யாத காரியம். இந்த விருந்து விஷயத்தில் யாரைக் குறை கூறுவதென்பது ஒரு சிக்கலான விஷயமாக இருக்கிறது. ஏன்? கும்பாபிஷேகம் செய்கிறவர்கள் நகரத்தாரிடம் நற்சாக்ஷிப் பத்திரம் பெறும்பொருட்டு எல்லாக் கொட்டகைகளைப் பார்க்கிலும் நகர விருந்துக் கொட்டகையைக் கூடியவரை பெரிதாகப் போட்டும், ஏராளமான உணவுப் பொருள்களைச் சேகரித்தும் பாத்திர பண்டங்களைத் தயாரித்தும், நல்ல சமையல்காரர்களைத் திட்டஞ்செய்து சுவையாகச் சமைத்தும் நூற்றுக்கணக்கான ஆட்களைக்கொண்டு பரிமாறியும் நகரத்தார் விசாரணையிலும் நடத்துகின்றனர். எல்லோரும் திருப்தியடைய வேண்டுமென்பதுதான் அவர்களுடைய முக்கியமான கோரிக்கை; சந்தேகமேயில்லை. இனி விருந்தினரும் ஆகாரத்தைக் கொள்ளையடித்துக் கொண்டுபோக வரவில்லை. தங்கள் வயிற்றுக்கு உண்ணத்தான் இவ்வளவு கஷ்டங்களையும் உண்டாக்கி தாங்களும் கஷ்டப்பட்டு மரியாதையையும் கெடுக்கிறார்கள். இதை யெப்படி மாற்றுவதென்பதையும் பின்னுற் கூறுகிறேன்.

கும்பாபிஷேகங்களுக்கு வரும் பக்தர்களிற் சிலர், கத்தரிக்கோல் சகிதமாக வருகிறார்கள். எந்த இடத்தில் அதிகமான நெருக்கமிருக்கிறதோ அந்த இடத்தில் அவர்கள் வேலை ஆரம்பிக்கப்படும். பிள்ளைகளுக்கு நகைபோடுவது ஒரு அபாயமான காரியமென்பதை ஜனங்கள் உணரப்போவதில்லை. பிள்ளைகளின் காப்புகள், சங்கிலிகள், மோதிரங்கள் தாராளமாகத் திருடப்படும். அதோடு ஏமாந்த ஆசாமிகளின் மடியிலிருக்கும் பணத்தையும் சில தூங்குமூஞ்சிகள் கழுத்திலி

ருக்கும் நகைகளையும் கத்தரிக்கோலர் கவர்ந்துவிடுவர். கும்பாபிஷேகத்தில் எங்கு பார்த்தாலும் இந்தக் குழப்பந்தான் காணப்படும்.

கும்பாபிஷேகத்துக்கு ஐம்பதாயிரம் ரூபாய் செலவு ஆனால் பார்க்க வருகிற ஜனங்களின் செலவு லக்ஷ ரூபாயாகிறது. டபிள் சயிஸ் கும்பாபிஷேகங்களில் குறைந்த பக்ஷம் இருபதாயிரம் ஜனங்கட்குக் குறையாது கூடியிருப்பர். ஆள் ஒன்றுக்கு சராசரி ஐந்து ரூபாய் செலவானாலும் ஜனங்களின் பணம் ஒரு லக்ஷ ரூபாயாகிறது. இதில் பெரும்பாகம் பெட்ரோல் வழியாகவும், கேட்டுகளின் வழியாகவும் மேல்நாடு போய்ச் சேருகிறது. ஒருபாகம் அழுகிக் கெட்டு குப்பைக்குப் போய்ச் சேருகிறது. எஞ்சியது வாணப் புகையாகவும் சோடா, கலர், சர்பத்து, மாங்காய், தேங்காய் இவைகளிற் போகிறது. எப்படியோ சிலர் நிமிஷ நேரத்தில் ஒன்றரை லக்ஷ ரூபாய் முட்டாள்த் தனமாகச் செலவு செய்து விடுகிறார்கள்.

அனேகமாகக் கும்பாபிஷேகங்களில் விபூதிச் சண்டை பட்டுச்சாத்துகிற சண்டைகள் அல்லது தகராறு ஏற்படாமலிராது. பரம்பரைப் பாத்தியம், நடுப்பாதியில் வந்த பாத்தியம், திடீரென்று வந்த பாத்தியம் என்று பலவிதமான பாத்தியா பாத்தியங்களை மேற்கொண்டு தகராறு வந்துவிடும். உடனே ஸ்தலத்தில் அதிகாரிகளிருந்து ஜாக்கிரதையாக கவனித்து விபூதியையும் தேங்காய் மூடிகளையும் பொதுக்கட்டி ஒழுங்கு செய்யாவிட்டால் தடிக்கம்புகள் கிளம்பிவிடும்; தடிக்கம்புகள் கிளம்பிவிட்டால் ஜனங்கள் பீதியடைந்து திக்குத் திசை தெரியாமல் ஓடி ஒருவரை யொருவர்தேடி சந்து

பொந்துகளிற் பதுங்கி திக்குமுக்காடி ஒரே குழப்ப மாகிவிடும். மோட்டார்கார்களும் வாய்விட்டலறி ஓட வழிதேடும். வழியுமிராது; பாதையுமிராது. இந்தச் சம யத்திற்றான் கத்தரிக்கோலர்கள் தொழிலைச் சுறுசுறுப் பாக நடத்துவர். கும்பாபிஷேகத்தில் இதுவும் ஒரு அலங் காரமன்றோ!

இரவிற் சுவாமிகளை யெழுந்தருளச் செய்வதற்குச் செய்யும் அலங்காரத்துக்கு ஏராளமான வயிர நகைகள் இரவல் வாங்கி அணியப்படுகின்றன. அவை விளக் கொளியில் மினுமினுத்துக் கொண்டிருக்கின்றனவென் பதிற் சந்தேகமில்லை. ஆயினும் அவை ஈசனுக்குப் பிரிய மான பொருள்கள் தானாவென்பதுதான் ஆராயப்பட வேண்டும். சிவனடியாரான அப்பர் சுவாமிகள் தமது பணிவிடையில் இரத்தினக் கற்களையும் பருக்கைக்கற் கள் ஓடுகளுடன் ஒப்ப நோக்கி எடுத்தெறிந்தாரென்று அப்பெரியாரின் சரித்திரம் கூறுகிறது. ஈசனுக்கு விருப்பமான பொருள்களானால் அந்த இரத்தினக் கற் களைக் கோத்து ஒரு மாலையாக்கி ஈசனுக்கு அப்பெரி யார் அணிந்து காணமாட்டாரா? ஈசன் விரும்புவது அன்றலர்ந்த மலர்மாலைகளேயன்றி பேதை மக்களாகிய நம்மை மயக்கும் வயிரக் கற்களன்றென்பது சத்திய மாகும். வைதீக முறையாகப் பார்த்தாலும் "மெய் வீசும் நாற்றமெல்லாம் மிக்க மஞ்சளால் மறைக்கும் பெண்கள்" காதிலும் கழுத்திலும் அணிந்து அவர்களு டைய அழுக்குப்படிந்த நகைகளைப் பரிசுத்தமான தெய்வ முகூர்த்தங்கட்குச் சூடிப்பார்ப்பது தர்மமாகுமா? இதுதான் சமய மரியாதையா? அசப்பாவிதமான இந்த வேலை லௌகீக முறையில் எவ்வளவு யோக்கியப்

பொறுப்புடையதென்பதும் கவனிக்கவேண்டும். மனிதர்கட்கே நகைப் பைத்தியமிருக்கக் கூடாதென்று வாதிக்கப்படும் இந்தக் காலத்தில் முகூர்த்தங்கட்கு அணிந்து பார்ப்பது எவ்வளவு பெரிய பைத்தியமாகும்?

4. கோயிலுக்கும் கும்பாபிஷேகத்துக்கும் நேரான வழி

கோயில் கட்டுதலைப் பற்றியும் கும்பாபிஷேகச் சிறப்பைப்பற்றியும் முன் இருமுறை குமரனிற் கூறினேன். மூன்றாவது முறையாக அவற்றிற்குரிய நேரான வழிகளையும் இதிற் கூறுகிறேன்.

கோயில் கட்டுதலில் இரண்டுவித முண்டு. வஞ்சகம், சூது தெரியாத சிலர் கையிற் பணமுள்ள போது நவீனமானதும் உபயோகமானதுமான தர்மங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலும் தெரிந்து கொண்டாலும் அதில் நம்பிக்கை வைக்காமலும் கோயிற் கட்டி கும்பாபிஷேகம் செய்வது தான் சிறந்த தர்மமென்று நம்பி தங்கள் சொந்தப் பொருளைச் செலவிட்டுக் கட்டுகிறார்கள். இத்தகையோருடைய அந்தரங்க சுத்தியை நாம் குறை கூறுவதற் கில்லையாயினும் தேவையில்லாத இடத்தில் தேவையில்லாத மாதிரியாக தேவை யில்லாத அளவு செலவிட்டுக் கட்டுகிறார்களென்பது தான் குறை. தர்மிஷ்டர்களான அவர்கள் பணப்பூர்வமாகச் செய்யும் செலவைச் சற்று ஆராய்ந்து யோசித்துப் பார்த்து

கோயிற் கட்டுதலைப் போல் வேறு உபயோகமான காரியங்கட்குச் செலவிட்டால் அவர்கள் எதிர்பார்க்கும் கீர்த்திக்கு அதிகமாகவே அவர்கள் பாராட்டப் படுவார்கள். இதுதான் அவர்களுக்கு நான் எடுத்துக் கூற வேண்டிய விஷயமாக விருக்கிறது.

இன்னொரு சாரார் கோயில் கட்டுகிறார்கள். அவர்கள் பழைய பட்டாதார்கள். அதாவது பரம்பரைப் பெரிய மனிதர்கள். அவர்கள் கோயிற் கட்டுதலெனும் ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு சம்பாத்தியம் செய்யும் வஞ்சக நெஞ்ச முள்ளவர்கள். பாடல் பெற்ற ஸ்தலமென்று எங்காவது ஒரு கோயிலை யெடுத்துக்கொண்டு அதைப் புதுப்பிக்கப் பல லட்ச ரூபாய் மதிப்பிட்டு ஊர் ஊராகவும் தூர தேசங்கட்கும் சென்று கௌரவ யாசகம் செய்வர். அவர்களுடைய செல்வாக்கை முழுதும் அதற்குபயோகித்து ஆதரவும் சிபார்சும் பெற்று ஒன்று மறியாத ஜனங்களிடமிருந்துபெரும் பொருள் சேகரிப்பர். அப்படிச் சேகரித்த பொருளைக்கொண்டு எங்காவது கடைதிறப்பர். அல்லது திறந்த கடைக்கு அனுப்புவர். அல்லது தங்கள் பணமுடையைத் தீர்த்துக் கொள்ளுவர். எப்படியாவது அந்தப் பணம் அவர்களுக்கு நல்ல உதவி செய்யும். நாதியற்றதும் கேட்பாரற்றதுமான அந்தப் பணத்தின் வட்டிக்குக் கிட்டி போட்டு வாய்க்கு மண்ணோட்டுத் தேய்த்துத் தேய்த்து வரவு வைக்கப்படும். இது இப்படியாகக் குறிப்பிட்ட கோயில் ஒரு புறம் பிரிக்கப்பட்டு ஒரு புறம் சில கற்களைக் கொட்டி ஒரு புறம் சில தச்சர்களிருந்து அடித்துக்கொண்டிருப்பர். இந்தச் செலவுக்கு அந்த நாதியற்ற பெரும் பணத்தின் தேய்ந்த வட்டித் தொகையில்

ஒரு சிறு பாகம் வந்துகொண்டிருக்கும். இப்படிப் பல வருஷங்கள் வேலை நடக்கும். இதற்கிடையில் அவர்கள் செய்யவேண்டிய தொழில்கள் வியாபாரங்கள் எல்லாம் செய்யப்படும். தடை முடைகளுக்கெல்லாம் அவர்கள் பாட்டன் பூட்டன் பாடுபட்டுப் பஞ்சு நூற்ற பொருள் போல் உபயோகிக்கப்படும். செய்தொழில் இலாபம் வந்து மனமுமிருந்தால் குறிப்பிட்ட கோயில் ஒருவாறு கட்டி முடிக்கப்படும். இல்லாவிட்டால் மஹாதேவா தான். இதுதான் பழய பட்டாதார்கள் கோயிற் கட்டுகிற விதம்.

இவ்விரண்டு விதமாகவும் கட்டப்படுகிற கோயில்களின் உபயோகத்தைப்பற்றி ஆராய்வோம். கோயிலென்பது கடவுளுக்குக் கட்டும் வீடு அல்லது அரண்மனை யென்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவனிறைவனென்றெழுதிக் காட்டொண்ணாத பரம்பொருளுக்கு வீடும் அரண்மனையும் கட்டமுடியுமா? அல்லது ஒரு இடமும் தலமும் குறிப்பிடத்தான் முடியுமா. அந்தப் பரம்பொருள் ஒருவனல்லன் ஒருவனல்லன் ஒருவமையில்லானென்று பெரியோர் கூறுகிறார்கள். அப்படியானால் கோயில்கள் கடவுளுக்குக் கட்டி வைக்கும் அரண்மனைகளல்ல. கடவுளைப் பலரும் கூடி வழிபடுவதற்குரிய ஒரு பொது ஸ்தலமேயாகும். அப்படியாகும்போது அந்த ஊருக்கும் அதில் வசிக்கும் ஜனத்தொகைக்கும் தக்கபடி இருப்பது தான் பொருந்துமன்றி கானில் மழை பெய்வது போல் சொற்ப ஜனங்கள் இருக்கும் குக்கிராமங்களில் பெரும் பொருள் செலவிட்டுப் பெரிய பெரிய கோயில்களாகக் கட்டி மூடி வைப்பதிற் பயனென்ன? சின்னக் கோயில்களாக

இருந்தால் சிவபெருமானும் சின்னவராகி விடுவாரா? ஒரு போதும் ஆகமாட்டார். ஆதலாற் பெரிய பெரிய கோயிற் கட்டும் வேலையை நமது சமூகம் இனிச் சற்று நிறுத்திக்கொண்டு கட்டிய கோயிலிற் பக்தியுணர்வோடு ஈசனை வழிபடத்தக்க அறிவு விருத்திக்கும் ஜீவித்திருக்கத்தக்க தொழில் விருத்திக்கும் அகால மரணம் சம்பவிக்காத வைத்திய விருத்திக்கும் தங்கள் பொருளைச் செலவிட்டுக் கீர்த்தியும் மனச் சாந்தியும் அடைய வேண்டுமென்று விரும்புகிறேன். ஆங்காங்கு ஏராளமான கோயில்களிருக்கும் போது பின்னும் பின்னும் அதே காரியத்தைச் செய்து கொண்டிருப்பது கொண்டாடற் பாலதன்று. அதில் உபயோகமுமில்லை யென்று அழுத்தமாகக் கூறுகிறேன்.

இனிக் கும்பாபிஷேகத்திற் குற்ற நேரான வழிகளைப்பற்றி ஆராய்வோம். கட்டிய கோவில் பெரிதாக இருந்தாலும் கும்பாபிஷேகத்தை ஆடம்பர மின்றியும் அடக்கமாகவும் சிக்கனமாகவும் செய்வது தான் சிறந்த வழி. செங்கல்லினாலும் கல்லினாலும் திருப்பணி செய்வதற்குச் சாத்திரங்கள் பலன் கூறுகிறதன்றி தடபுடலாகவும் ஆடம்பரமாகவும் கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென்றாவது, அப்படிச் செய்யப்படும் கும்பாபிஷேகத்திற்கு விசேட பலனாவது சாத்திரங் கூறவில்லை. ஆயினும் "சினமடங்கக் கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும், மனம் அடங்கக் கல்லார்க்கு" ஒரு வழி கூறத் தானே வேண்டும்.

முதலாவது கும்பாபிஷேகப் பத்திரிகையில் "ஸ்ரீமத் அகண்டாகார நித்திய வியாபக சத்திய ஞானானந்த தத்துவாதீத அஷ்டமங்கள திவ்யகுணப் பொருளாகிய

ஈசன்" என்று கூறிவிட்டு அவர் வசிக்குமிடம் இந்து மஹா சமுத்திரத்துக்கு வடக்கு இமயவரைக்குத் தெற்கு அராபிக் கடலுக்குக் கிழக்கு வங்காள விரிகுடாவிற்கு மேற்கு என்று அர்த்தமில்லாத பெரு நான்கெல்லை யொன்று கட்டி, அதன் மேல் பொருத்தமில்லாத சிறு நான்கெல்லையொன்று கட்டி அதற்குள் தலத்தைச் சுட்டித் தீர்த்த விசேடம் மூர்த்தி விசேடங்களைத் தேடிக் கூறிப் பத்திரிகையினிடத்தை நிரப்பி அச்சிட்டு எடுத்துக்கொண்டு ஊர் ஊராகச் சென்று அவசியம் வரவேண்டும் என்று சொல்லிவருகிற கர்நாடக வழக்கத்தை அறவே நிறுத்திவிட வேண்டும். கும்பாபிஷேக தினத்தையும் நேரத்தையும் அந்த ஊருக்குச் செல்லும் இரயில் மோட்டார் பாதைகளையும் குறிப்பிட்டு வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரித்து விடுவதே போதுமானது. அதுபோதா தென்று கருதினால் கார்டு சைசில் விவரத்தை யச்சிட்டு வேண்டியவர்கட்குத் தபால் மார்க்கமாக அனுப்புவிக்கலாம். இதனால் ஸ்தலத்திற்காவது கும்பாபிஷேகத்திற்காவது கும்பாபிஷேகம் செய்கிறவர்களுக்காவது பெருமை குறைந்து விடாது.

(2) கும்பாபிஷேகம் செய்யுமிடம் பெரிய ஊராக விருந்து ஜனங்கள் மழைவெய்யிலுக்குக் கஷ்டப்படாமலிருக்கக் கூடுமானால், பந்தல்கள் கொட்டகைகள் அதிகமாக வேண்டியதில்லை. அப்படியின்றி குக்கிராமங்களாகவோ, அல்லது நிர் மானுஷ்யமான திட்டுத் திடல்களாகவோ, பாலைவனமாகவோ இருந்தால் வேண்டிய அளவுமட்டக் காவணங்களும் கொட்டகைகளும் வேண்டியது தான். அப்படிச் செய்வதில் இப்போது

நடந்து வருகிறமாதிரி தண்ணீர்ப்பந்தல் மிகவும் அவசியமும் உபயோகமும் ஆகும். கும்பாபிஷேகங்களில் இந்தத் தண்ணீர்ப்பந்தல் ஒன்று தான் மிகவும் பாராட்டத்தக்கதாக இருக்கிறது. அதேபோல் மலசலங் கழிப்பதற்கும் விசாலமான இரண்டு மூன்று இடங்களில் ஆண்களுக்கு வேறாகவும், பெண்களுக்கு வேறாகவும் இடம் ஒதுக்கி அந்த இடங்களில் கீற்றுக்களினால் விசாலமான மறைவுகட்டி அதனுள் தண்ணீர் வசதியும் செய்து பெண்கள் பக்கத்தில் புருஷர்களும் புருஷர்கள் பக்கத்தில் பெண்களும் போகவிடாமல் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தச் சிறந்த ஏற்பாடு கும்பாபிஷேகம் போன்ற பெருங் கூட்டங் கூடுகிற எல்லா இடங்களுக்கும் பொருந்தும். அதோடு வீதிகளில் யாதொரு ஆபாசமும் இல்லாமல் பாதுகாக்க வேண்டும். கும்பாபிஷேகம் நடக்கும்போது ஜனங்களை மண்டபத்தின் மேல் ஏறவிடுங் கெட்டவழக்கம் நிறுத்தப்பட வேண்டும். அதிலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் பெண்களையும், பிள்ளைகளையும் மேலேபோக விடுவதைக் கண்டிப்பாக நிறுத்திவிட வேண்டும். அப்படி நிறுத்திவிட்டு கோபுரங்கள் நன்றாகத் தெரியக்கூடிய ஒரு விலாசமானதும் சமீபமானதுமான இடத்தைப் பெண்களுக்காக ஒதுக்கிக் கொடுத்து கும்பாபிஷேக சமயத்தில் எல்லாப் பெண்களையும், பிள்ளைகளையும் அங்கு நிற்கச்செய்து போலீஸ் பாதுகாப்பும் செய்துகொடுக்க வேண்டும். பிறகு இரவில் சுவாமி புறப்பாடாகும் போது வடக்கு வீதியை அல்லது இடதுபக்கத்து வீதியை முழுதும் பெண்களுக்காக ஒதுக்கி அதன் இருமருங்கும் போலீஸ் பாதுகாப்புடன் விட்டுவிட்டு மற்ற மூன்று

வீதிகளில் புருஷர்களை நிற்கவிடவேண்டும். இதுதான் பெண்களைப் பெருமைப்படுத்துவதும் நாகரிகமான ஏற்பாடும் ஆகும்.

(3) இனி விருந்துகளைப்பற்றிக் கூறுமிடத்து நகர விருந்து, நாட்டார் விருந்து, மடத்தார் விருந்து, பிராமணர் விருந்து இன்னும் பலவிதமான எல்லா விருந்துகளையும் கும்பாபிஷேகக்காரர் நிறுத்திவிட்டு தாகத்திற்குத் தண்ணீரும் சந்தன தாம்பூலமும் கடலைச் சுண்டலும் தண்ணீர்ப் பந்தலில் கொடுத்து உபசரிப்பதோடு நின்றுவிடுவதுதான் சிறந்தவழியாகும். விருந்துகள் இல்லையென்று தீர்த்துவிட்டால் பக்தியில்லாத வெறுங்கூட்டங் கூடாது. பக்தியுள்ள மக்கள் விருந்தில்லையென்று வாராதிருக்க மாட்டார்கள். அப்படி அபிமானத்தோடு வரும்போது ஒருவேளை ஆகாரத்தைக் கையிற் கொண்டுவருவதும் அவர்களுக்குக் கஷ்டமாக இராது. ஆதலால் ஈசுவர பக்தியுள்ளவர்களைத் (Select) தேர்ந்தெடுப்பதற்கும் கும்பாபிஷேகம் ஒரு சந்தர்ப்பத்தை யுண்டாக்குவதாக இருக்கட்டும். மஞ்சிவிரட்டுக்கும் தெருக்கூத்துக்கும் கூடுகிற பாமரக் கூட்டம் கும்பாபிஷேகத்திற்குத் தேவையில்லை. அந்த ஆகாத கூட்டத்தைக் கூட்ட விருப்பமில்லையென்றால் கும்பாபிஷேகக்காரர் எல்லா விருந்துகளையும் நிறுத்திவிட்டால் போதும். அப்போது வீண்கூட்டமும் கத்தரிக்கோல்களும் வரமாட்டா. ஆனால் நீண்டநாளாக நடந்துவந்த ஊட்டுப்புரைக் காரியத்தைத் திடீரென்று நிறுத்தி அதனால் வரும் கெட்டபெயரை அடைய முடியுமா என்று நினைப்பவர்கள் ஒன்று செய்யலாம். கும்பாபிஷேக தினத்தன்று மத்தியானத்துக்கும் இராவி

லும் இரண்டு வேளையும் கோயிற் பிரசாதமாக ஒரு வர்க்கான்னம் அதாவது தயிர்சாதம் அல்லது சப்பாச் சாதம் அல்லது எலுமிச்சம் பழச்சாதம் மத்தியான வேளைக்குகந்த இவற்றுள் ஒன்றைச் செய்து ஒரு ஆள் திருப்தியாகச் சாப்பிடத்தக்க அளவில் அதை பட்டையாக்கி அதற்கு ஒரு சட்னி சேர்த்து இலையில் வைத்து பல இடங்களிலும் நின்று கேட்பவர்கட்குத் தாராளமாகக் கொடுத்துதவலாம். இரவிலும் அதேபோல் இரவில் உண்ணத்தக்க வர்க்கான்னம் ஒன்றைச் செய்து கொடுக்கலாம். கையில் ஆகாரங் கொண்டுவர முடியாமலோ அல்லது வசதியில்லாமலோ அல்லது விரும்புகிறவர்கட்கோ இது உதவியாக இருக்கும். ஸ்தல விசேடத்தால் பிரசாத முறையாக இதைப் பெற்று உண்பதில் குறையொன்றுமில்லை. ஒருவாறு இது முறையென்று கருதுகிறவர்கள் தங்கள் சொந்த ஆகாரத்தை உண்ணட்டும். இப்படிச் செய்வதால் கும்பாபிஷேகக்காரருக்குச் செலவும் சுருக்கமாகும். வேலையும் தேவையும் சிரமமும் குறையும். தள்ளும் முள்ளும் இராது. இப்படிச் செய்யும் வர்க்கான்னம் பத்தாயிரம் பேர்க்கு அறுநூறு ரூபாய் தான் செலவாகிறதென்று சுயம்பாக நிபுணர் கூறுகிறார். ஐம்பதாயிரம் பேர்க்குத் தயார்செய்து ஜாதிபேதம் மதபேதம் ஏழைகள் பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல் கும்பாபிஷேக தரிசனத்திற்கு வந்த எல்லோருடைய பசியையும் ஆற்றித் திருப்தி செய்வதானாலும் மூவாயிர ரூபாய்தான் செலவாகிறது. விருந்தென்பது இதைவிடச் சிறந்ததாகாது. இவ்வழியைக் கைக்கொண்டால் கும்பாபிஷேகத்தைப்பற்றிய கஷ்டநஷ்டங்கள் அநேகமாகத் தீர்ந்து

விடும். இனி முடிவுரையாக நான் கூற விரும்புவதென்னெனின் நம் தேசம் பலவகையாலும் வறுமை நிலையடைந்திருக்கிறது. நமக்கு உண்மையாகத் தருமம் செய்ய மனமிருந்தால் இன்னமும் கோயிற்கட்டிக் கும்பாபிஷேகஞ் செய்துகொண்டிருக்கப்படாது. தென் இந்தியாவில் ஏராளமான சிவாலயங்களும் விஷ்ணுவாலயங்களும் இருக்கின்றன. இன்னும் நூறு வருஷங்கட்கு அதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதிராது. காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து தேவையான காரியங்களைச் செய்தல் வேண்டும். கல்வியை அபிவிருத்தி செய்தல் வேண்டும். தொழிற்சாலைகளை யுண்டாக்கி தேசத்துக்கு வேண்டிய எல்லாப்பொருள்களையும் இங்கு உற்பத்தி செய்வதற்கு உதவி செய்யவேண்டும். தொழிலாளிகளையும் விவசாயிகளையும் பழக்கும் பள்ளிக்கூடங்கள் ஏராளமாக வேண்டும். எல்லா ஊர்களிலும் நல்ல முறையில் தர்ம வைத்தியவசதி வேண்டும். இவைதான் இப்போது நமக்கு முன்னிற்கும் தேவைகள். இவற்றுள் யார் யாருக்கு எதில் அபிமானமுண்டோ அதைச் செய்யலாம். நீர்மேற் குமிழிபோல் தோன்றி மறையும் நமது சரீரமும் வாழ்க்கையும் செல்வமும் நிலையானவையன்று. ஆதலால் வீண் டம்பமும் ஆவாரமும் ஆடம்பரமும் வேண்டாம். அவற்றில் வைத்திருக்கும் ஆசையை விட்டு விட்டு உண்மையாக நடந்துகொள்ளவேண்டும். இவைதான் காய்தல் உவத்தலின்றி நடுநிலைமையோடு எனது சமூகத்துக்கு நான் உறுதியாகக் கூறும் ஆலோசனைகளாம்.

5. சங்கமலரின் விசேடம்

இரங்கூன் தனவணிகன் பத்திரிகாலயத்திலிருந்து சமீபத்தில் வெளிவந்த சங்க மலர் என்னும் கட்டுரைப் புத்தகத்தின் விசேடத்தைப்பற்றி இங்கு சில கூற விரும்புகின்றேன்.

சுமார் இருபது வருஷங்களுக்கு முன் நம்மவருட் பத்திரிகை படிப்பவர்கள் மிகமிகச் சொற்பமாகவே யிருந்தனர். ஒரு சிலர் பணத்தைச் செலுத்திப் பத்திரிகை வருத்துவதைத் தவிர அதைப் பிரித்துப்பார்ப்பது கூட இல்லை யென்பது எனக்குத் தெரியும். அப்படியானல் பத்திரிகைகட்கு கட்டுரை யெழுதுகிறவர்கள் இருந்தார்களா? வென்று கேட்கவேண்டியதில்லை யன்றோ! அந்தப் பெருங் குறை யிப்போது நீங்கிவிட்டதென்பதை சங்கமலர் நன்ருக எடுத்துக் காட்டுகிறது. நம்மிற் பத்திரிகைக்கு எழுதக்கூடியவர்களிற் பலரும் சங்கமலரிற் கட்டுரை யெழுதியிருக்கிறார்கள். ஒவ்வொரு கட்டுரையும் தனித் தனியே வெவ்வேறு பல விஷயங்களைப் பற்றியனவாக இருப்பது ஒரு பெருமையாகும். நமது இளைஞர்கள் உலகப்போக்கிலும் பின்னும் பல இலௌகிக காரியங்களினும் அனுபவம் பெற்று வருகிறார்களென்பதற்கும் அக்கட்டுரைகள் நல்ல சான்றுகளாகின்றன. அவற்றுள்ளும் அத்திபூத்ததுபோல் திருநெல்லை என்னும் ஓர் தனவணிகப் பெண்மணியின் கட்டுரையும் நமது ஆகாயவிமான வீரர் ஆவுடையப்பனின் கட்டுரையும் இரண்டு பாரிஸ்டர்

களின் கட்டுரைகளும் சங்க மலரையும் சமூகத்தையும் மிகவும் அழகு செய்கின்றன.

தனவணிகன் ஆசிரியர் கட்டுரைகளோடு விடாது கட்டுரை யெழுதியவர்களின் உருவப்படங்களையும் சேகரித்து வெளியிட்டிருப்பது ஒரு புதிய நல்ல முறை. சங்கமலரை அலங்கரித்தவர்கட்கு நன்றி பாராட்டுவது போலும் அதனால் ஒரு கிளர்ச்சியும் ஊக்கமும் உண்டாக்குவது போலுமிருக்கிறது. கம்பை தனவைசியர் கல்வி நிலையத்தின் காரியங்களும் படங்களும் ஆனந்தமாக இருக்கின்றன. பின்னும் கடற் பிரயாணம் செய்த தனவணிகத் தம்பதிகளின் உருவப் படங்களையும் சேகரித்து சங்க மலரில் வெளியிட்டிருப்பது மிகவும் பாராட்டற்பாலது. அவர்களது சிறந்த செய்கைக்குக் கைம்மாறு போலும் அவர்களை கௌரவப் படுத்துவதுபோலும் காணப்படுகிறது.

நம்மவர் தொழிற் செய்யும் ஏனைய நாட்டுப் பல சங்கங்களினும் இரங்கூன் சங்கமே ஒப்புடையதும் சமூகத்துக்கு நல்ல ஊழியஞ் செய்து வருவதுமாக இருக்கிறது. அதனால் அதன் நிர்வாகிகளைப் பாராட்டி அவர்களின் உருவப்படங்களுடன் சங்க மலர் வெளி வந்திருப்பது மிகவும் பொருத்தமுடையதாகும். இப்படியெல்லாம் சந்தோஷத்துக்கிடமான பல கட்டுரைகளும் உருவப் படங்களும் வெளி வந்திருக்கும் சங்க மலரில் மனதுக்குத் திருப்தியைத் தராத சில காட்சிகளும் காணப்படுகின்றன.

பர்மா நாட்டில் நம்மவர் தொழிற் செய்யுமூர்களில் ஒன்று தவறாமற் கோயில்களிருக்கும்போற் காண்கிறது. கோயில்களாவது இருக்கட்டும். ஊருக்கொரு

மடமும் காணப்படுகிறது. அந்த மடங்களிற் சில பெரும் பணத்தை விழுங்கிவிட்டோமென்று சிரித்துக் கொண்டிருப்பதுபோற் காணப்படுகின்றன. அவற்றுள் ளும் மியாங்மியா பாசீன் ஈந்தட்டா மடங்கள் குலுங் கக் குலுங்கச் சிரிக்கின்றன. என்னே அநாவசியச் செலவு! இங்கு தாய் நாட்டில் தேவையில்லாத விடங் களிலெல்லாம் கட்டி வௌவாலடைந்து கிடக்கும் கோயில்களும் மடங்களும் சத்திரங்களும் போதாதா? அதற்காகச் செலவிடப்பட்ட பணங்களெல்லாம் போதாதா? கடல் கடந்து பொருளீட்டச் சென்ற அன்னிய நாட்டிலும் இந்த அநாவசியச் செலவா?

முன்பின் யோஜித்து இலகுவாகச் செய்துகொள் ளாமற் பெரும் பொருளைச் செலவிட்டு மனம் போன படி தேவையில்லாத மாதிரியாய் எக்காலத்தும் ஒரு காசும் வரும்படி செய்துகொள்ள முடியாத மாதிரியில் அன்னிய நாட்டிற் பெரிய பெரிய கட்டிடங்களைக் கட் டிப் போடுவதின் பயன் என்ன? எதிர்காலத்தில் அவை என்னவாகுமென்பதையும் யோசியுங்கள்.

கோயில்கள்தான் கும்பிடுவதற்காயிற்று. மடங் கள் எதற்கு? இங்கு தாய்நாட்டிலாவது ஏகதேசத்தில் கொஞ்சம் தேவையாயிருக்கலாம். அங்கு கோயி லுக்குப் போய் உடனே திரும்பி வருகிற அன்னிய நாட்டில் மடம் என்ன தேவை? ஒரு ஊரிற் கட்டி னால் ஊருக்கொன்று கட்டிவிட வேண்டுமென்று கட் டாயமா? ஊருக்கொரு மடம் கட்டி அந்த மடத்துக் காகப் பன்னிரண்டு மாதங்களில் ஒன்றைப் பிடித்து உற்சவம் நடத்துவதா? அந்த உற்சவத்தை முன்னிட் டுக் காவடி எடுத்தாடுவதா? இருபதாவது நூற்றாண்டி

னம் மலிந்த சமூகம் காலடி எடுத்தாலேதென்றால் அதை வெல்லவென்று கூறுவது! அதிலும் காலடி யெடுத்திடு வதின் அருமை பெருமையறியாத அன்னியர் காட்டில் காலடி யெடுத்திடுவதை வெல்லவென்று கூறுவது! எம் பெருமானே! எனது சமூகத்துக்கு இந்தப் பைத்தியம் எப்போது ஒழியுமோ!!

போனது போகட்டும். கோயில்களும் மடங்களும் கட்ட வேண்டியவை கட்டி முடித்து வையுஞ் சலித்துவிட்டார்கள். இனியதைப்பற்றிப் பேசிப் பயனென்ன! இந்தக் கஷ்டமான காலத்திலாவது வீட்டு வாடகை யில்லாமல் ஒவ்வொரு ஊரிலுள்ள கடைகளை அந்தந்தவூர் மடங்களிற் கொண்டுபோய் வைத்துக் கொண்டிருந்தாலென்ன! அந்த மடத்திலாவது பலனுண்டல்லவா! நாடுகளில் அப்படிச் செய்வதற்கு முயற்சி செய்வதோடு இனி உற்சவங்களையும் நிறுத்தி ஏற்கனவேயுள்ள மகமை எழுதுவதையும் நிறுத்தி வருவாய்க்குத் தக்கபடி செலவு கடைகளை அடக்கமாகச் செய்து கோயிற் பூஜை நடந்து வரும்படியும் ஆடம்பரங்களை யொழித்து பக்தி விஸ்வாசத்துடன் சுவாமி தரிசனம் செய்து கொண்டிருப்பதோடும் வைத்துக்கொண்டாற் போதுமன்றோ! அருவுருவாய் நிற்கும் எம்பெருமான் தெண்டாயுதபாணிக்கும் அதுதான் பிரியமான காரியமாகும்.

சங்கமலரை அழகுபெற அச்சியற்றி வெளிவரச் செய்ததற்குப் பெரும் பிரயாசை எடுத்துக்கொண்ட நமது நண்பரும் ஊக்கமுள்ள வாலிபரும் "தனவணிக"னின் ஆசிரியருமான கருப்பன் செட்டியாரவர்களை மிகவும் பாராட்டுகிறேன். ஆனால் அவருடைய உருவப்

படம் ஒன்று சங்கமலரிற் காணப்படாமலிருப்பதற்கு வருத்தப்படுகிறேன்.

இதுபோல் வருஷந்தோறும் சங்கமலர் ஒன்று வெளிவருமாயின் சமூகாபிவிருத்திக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும்.

சங்கமலரின் சிறப்பைப்பற்றி 'பர்மா நாடு' 'சுதேசமித்திரன்' 'லோகோபகாரி' 'சுதேச பரிபாலினி' 'Rangoon Mail' 'Rangoon Daily News' ஆகிய பத்திரிகைகள் பாராட்டி யெழுதியிருப்பது போற்றத்தக்கது.

---

6. சீர்திருத்தத்தின் நோக்கம்.

இரண்டாயிரம் வருஷங்கட்கு முந்திய சமூகக்கட்டுப்பாடுகள் தானாகவே அழிந்து குலைந்து சிதைந்து சிதறிச் சிந்திக்கிடக்கின்றன வென்று அறிந்துகொள்ளாத சிலர் சீர்திருத்தக்காரரைக் குறை கூறுகிறார்கள்! கல்விவளர்ச்சி, நாகரீகம், காலநிலை, விசால நோக்கம் இவைகளிற்படாமற் கூறும் குற்றம் குறைகளை சீர்திருத்தக்காரர்கள் பொருட்படுத்தமாட்டார்கள். ஜன சமூகத்தின் உணர்ச்சியையும் மனப்போக்கையும் அனுசரித்துக் கொஞ்சம்கொஞ்சமாக தங்கள் வேலையைச்செய்து சரியான நிலையிற் கொண்டுவந்து விடுவார்களென்பதிற் சந்தேகமில்லை. சீர்திருத்தக்காரரின் பெருக்கத்தையும்

மன உறுதியையும் ஆர்வத்தையும் ஒழுங்கையும் வீரத்தையும் திறமையையும் சமீபத்தில் பிள்ளையார்பட்டியிற் கண்டவர்கள் சீர்திருத்தம் வெற்றி பெறுமா வென்பதிற் சந்தேகங் கொள்ளமாட்டார்களன்றோ!

இரண்டாயிரம் வருஷங்கட்கு முன் காலநிலை, ஜனத்தொகை, சமூகவாழ்க்கை, பொருள் வருவாய், செலவு முதலியன இக்காலத்துக்கு முற்றிலும் வேறுபட்டிருந்தன வென்பதை முதலில் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். காலமாறுபாட்டினால் பழக்க வழக்கங்களுக்கு வீக்கங்கண்டு வெள்ளரிப் பழம்போல் வெடித்துக் கட்டுக்குலைந்துவிட்டது. அப்படித் தாமாகவே கெட்டுப்போன பழக்க வழக்கங்களைக் கைவிட்டுத் தப்பிப் பிழைக்க வழி தெரியாமல் நமது சமூகம் தவித்துக் கொண்டிருக்கிறது! செலவு செலவு. எட்டிலடங்காத செலவு. எழுதி முடியாத செலவு. எண்ணமுடியாத செலவு. வீண் செலவு. விருதாச் செலவு. காரியமில்லாத செலவு விஷம்போல் ஏறிவிட்டது! வருவாய் குறைந்துவிட்டது. வியாபாரமில்லை. தொழிலில்லை. விளைபொருட்கட்கு விலையில்லை. எங்கும் மந்தம். சம்பளத்துக்குப் புறப்படுகிறவர்கட்கு இடமில்லை. முதலாளிகட்குச் சம்பளம் கொடுக்கச் சக்தியில்லை. கடைகளெல்லாம் கட்டுண்டு கிடக்கின்றன. இந்த நிலைமையிலும் வீண் செலவுகளைக் குறைத்து ஆடம்பரங்களை ஒழித்து வாழ்க்கை முறையைத் திருத்தி செட்டாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கு வழிதேட வேண்டாமா?

சீராகவும் செட்டாகவும் வாழவேண்டுமென்பதுதான் சீர்திருத்தம்! இதற்குற்ற வழிகளைத்தான் நாங்கள் கூறுகிறோம். பூரண நம்பிக்கையோடு எங்களு

டைய வழிகளைப் பின்பற்றவேண்டுமென்று நமது சமூகத்தைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கல்யாணத்தில் அனுவசியமான பல செலவுகள் குறையவேண்டும். அர்த்தமில்லாத பல சடங்குகள் ஒழியவேண்டும். கல்யாணத்தில் நாட்களைக் குறைக்காமல் செலவைக் குறைக்க முடியாது. ஆறுநாட்கள் எதற்காக? ஒரேநாளில் எல்லாவேலைகளையும் முடித்துவிடுகிற சமர்த்தர்கள் பிறகு ஐந்து நாட்களை யேன் வீணுக்குகிறார்கள்! அந்த ஐந்து நாட் செலவு வீணாகத்தானே போகிறது? ஒரு கல்யாணத்துக்கு ஐம்பது புள்ளிகள் கூடினால் சமையலாட்கள், எடுபிடியாட்கள், வீடுகளிலிருக்கும் வேலையாட்கள், டிரைவர்கள், வண்டிக்காரர்கள், வாத்தியக்காரர்கள், பொட்டுக்காரர்கள், பூச்சுக்காரர்கள், தட்டுக்காரர்கள் இவர்கள் ஐம்பது புள்ளிகட்கும் மேலாகின்றனர்! இப்பெருங் கூட்டத்தையும் அனுவசியமாக ஐந்து நாட்களுக்குத் தேக்கிவைக்க வேண்டியதிருக்கிறது! ஒரு நாட் செலவு எவ்வளவாகும்? கணக்கிட்டுப் பாருங்கள். அனுவசியமாக ஏன் இப்படிப் பணம் பாழாகவேண்டும்? நாட்களைக் குறைத்துக் கொண்டாலென்ன? நாட்களைக் குறைத்து விட்டால் செலவு தானாகக் குறைந்து விடுமன்றோ?

சமீபத்தில் அமராவதிபுதூரில் பிச்சப்பா சுப்பிரமணியம் தம் மகளுக்குச் செய்த சிறந்த கல்யாணத்துக்குச் சென்ற செலவு விபரத்தைப் பாருங்கள்:—

அரிசி கடைச்சரக்கு சாமான் வகையில்	ரூ.	207
காய்கறி பழம் இலை வகையில்	,,	60
பால் தயிர் வகையில்	,,	70

கூல்டிரிங் முதலியன	ரூ.	60
அழைப்பும் கார்ச் செலவும்	,,	50
சமையற்காரர் சம்பளம்	,,	36
லேட்டுக்கு	,,	10
சில்லறையாகச் செலவு	,,	103
	ஆக	596

இதுதான் கல்யாணச் செலவு. இந்தக் கல்யாணத்துக்கு வந்திருந்த அவரது சினேகிதர்கள் ஐநூறுபேர்! மற்றபடி பங்காளிகளும் உறவினரும் நூறுபேராவர். ஆக ஆறுநூறு பேர்கட்கும் ஆன செலவு இதுதான்! நாட்களைக் குறைத்துவிட்டால் செலவு எவ்வளவு தூரம் குறைந்துவிடுகிறதென்று காணுங்கள்! சிநேகிதர்கள் அதிகமில்லாமற் சாமான்யமாகச் செய்யப்படும் கல்யாணங்களுக்கு இதிற்பாதிச் செலவுதானாகும்! அப்படியானால் எவ்வளவு சுலபமாக இருக்கும்! இந்தவழியை என் சமூகம் பின்பற்றக்கூடாது? இதில் என்ன தப்பிதம்?

இனி அர்த்தமில்லாத சடங்குகளைப் பற்றிக் கூறுகிறேன். முதலாவது மாப்பிள்ளை வீடு ஒன்று பிடித்து மாப்பிள்ளை வீட்டாரை வேறாகப் பிரித்தல் கூடாது. மாப்பிள்ளையை வரவேற்றுப் பெண் வீட்டுக்கே அழைத்து வந்துவிடவேண்டும். அதனால் அனுவசியமான பாதி வேலைகள் ஒழிந்துவிடுகின்றன. மாப்பிள்ளையை யறிந்து பெண் பேசிய பிறகு மாப்பிள்ளையறிதல் எதற்கு? சம்பந்திகளிருவரு மிருந்து நாள் நட்சத்திரம் பார்த்து முகூர்த்தம் வைத்துக் கொண்டபின் நாட்குறித்தல் எதற்கு? நிறைய நகை பூட்டியிருக்கிற பெண்ணுக்குப் பொன்னிடப் போவது எதற்கு? செய்த

களுத்துரை வாங்கிவரப் போவதும் ஒரு சடங்கா? உப்பும் எட்டோலையும் வைத்துவிட்டு ஒருவர் திரும்பிப் பாராமற் போவது நியாயமா? இதெல்லாம் என்ன சடங்கு இவற்றின் பொருள் என்ன?

காரணந்தெரியாமல் காரியமில்லாமற் போய்ப் போய் வருதல் கூடுமா? இந்த அர்த்தமில்லாத சடங்குகளெல்லாம் மாப்பிள்ளையை நேரே பெண் வீட்டுக்கு அழைத்து வந்து விடுவதால் நின்றுவிடுகின்றன வாதலின் இன்னும் விரிவாக எடுத்துக் கூறவேண்டியதில்லையென்று நினைக்கிறேன்.

மூன்று நாட் கல்யாணம்

வைதிகச் சடங்குகளையும் விடுத்து ஒரே நாளிற் கல்யாணஞ் செய்யும் நாள் ஒன்று வரும். அப்போது அதைப்பற்றிப் பேசுவோம். இப்போது சமூகமிருக்கும் நிலைமையிற் கல்யாணத்தை மூன்று நாளாக்குவதே பொருத்தமாகும். ஆதலால் அதைப்பற்றி மட்டும் சில குறிப்புகளை இங்கு எழுதுகிறேன். முகூர்த்தத்துக்கு முதல் நாள் மாப்பிள்ளை வீடு வரவேண்டும். மங்கல வாத்தியத்தோடு மாப்பிள்ளை வீட்டாரை வரவேற்று நேரே பெண்வீட்டுக்கு அழைத்து வந்துவிட வேண்டும். மறுநாட் காலையில் கோயிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்துகொண்டு வந்து திருப்பூட்டி மணையிலிருந்து அன்று முழுதும் கல்யாண காரியங்களைச் செய்து கொண்டு மாலையில் மஞ்சள் நீராடி முடித்துக் கொள்ளவேண்டும். மூன்றும் நாள் பகற் போஜனத்துக்குமேல் பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஊர்வலமாக வாத்திய கோஷத்துடன் அழைத்துக் கொள்ள வேண்டும், அன்றிரவும் மறுநாள் மத்தியானமும் வீடு

கண்டுண்ட விருந்தை முடித்துக்கொண்டு கல்யாணத் தைப் பூர்த்தி செய்துவிட வேண்டும். முதல் மூன்று நாட் செலவைப் பெண் வீட்டாரும் விடுகண்டுண்ட செலவை மாப்பிள்ளை வீட்டாரும் பொறுத்துக்கொள்ள வேண்டும். நல்ல பட்டுக்கண்டாங்கிகளை உடுத்த விரும்பு கிறவர்களுக்கு மூன்று சந்தர்ப்பங்களிருக்கின்றன! ஒன்று மாப்பிள்ளை யழைக்கும்போது. ஒன்று கோயி லுக்குப் போய்வரும்போது. இன்னுமொன்று பெண் ணழைக்கும்போது! போதுமல்லவா? இதுதான் நல்ல முறை. சமூகம் தயங்காமல் இதைப் பின்பற்றுமானால் நல்ல இலாபமும் நிரம்ப சௌகர்யமுமுண்டு. இளைஞர் கள் இதில் மிக்க ஆர்வமுள்ளவர்களாக இருக்கவேண் டும். அவர்கள் கையிற்றான் சீர்திருத்தப் பொக்கிஷத் தின் சாவியிருக்கிறது!

மற்ற சிறு விசேடங்கள்

காப்புக்கட்டுப் புதுமை, கார்த்திகை, திருவாதிரை முதலிய சிறு விசேடங்களெல்லாம் ஒரே நாளில் முடித்து விடவேண்டியதுதான். இப்படிச் செய்தால் கல்யா ணத்துக்கு விருந்துச் செலவு ரூ. 500-ம் ஏனைய சிறு விசேடங்கட்கு விருந்துச் செலவு ரூ. 100-ம் ஆகும். இது எவ்வளவு சுலபமான காரியமாகிறது! ஏன் பண மில்லை யென்று மயங்கவேண்டும்? நாட் கடத்த வேண் டும்? கடன்பட வேண்டும்? பணத்துக்காகத் தயங்கா மல் எந்த விசேடத்தையும் உரிய காலத்திற் செய்து திருப்தியடையலாமன்றோ! பெண்ணுக்குச் சீர்வரிசை கொடுத்தலையும் நகைகளைப்பற்றியும் தனியே எழுது கிறேன்.

7. சமூக சீர்திருத்தம்பற்றி எனது சாட்சியம்

நமது சமுதாய சீர்திருத்த விஷயமாக எனது அபிப்பிராயத்தைச் சந்தேகமற விளக்கும் பொருட்டு இங்கு சம்பாஷணை ரூபமாகக் கூறுகிறேன்.

கேள்வி:—தனவணிக சமூகத்தைப்பற்றி நன்கா ராய்ந்திருக்கிறீர்களா?

பதில்:—ஆம் நான் நன்கறிவேன். சுமார் முப்பது வருஷங்கட்கதிகமாக நமது சமூகத்தில் பிரபலஸ்தர்களோடும் சாமான்ய ஜனங்களோடும் நெருங்கிப் பழகி அவர்களுடைய பழக்க வழக்கங்கள், தொழின் முறை செல்வநிலை, கல்வி வளர்ச்சி, நாகரீகம், வாழ்க்கை முறை, வரவு செலவு (Budget) நிலைமை இவற்றை நன்ருகக் கவனித்து வந்திருக்கிறேன்.

கேள்வி:—சமூகத்தின் பொதுவான யோக்கியதை யென்ன?

பதில்:—தென்னிந்தியாவில் இது ஒரு மரியாதையான சமூகம். நம்பிக்கை, நாணயம், ஒழுங்கு, மரியாதை, அமைதி, அடக்கம், வாய்மை, பொறுமை முதலிய நற்குணங்களுக்கு நமது சமூகத்தில் அதிக மதிப்பும் கௌரவமுமுண்டு. பொய், புரட்டு, அசத்தியம், அயோக்கியத்தனம் முதலிய தீய காரியங்கள் அவமதிக்கப்படுகின்றன.

கேள்வி:—பழக்க வழக்கங்கள் எப்படி?

பதில்:—பழக்க வழக்கங்கள் மிக மிகக் குறைபாடுகளுள்ளவைகளே. அவை காலதேச வர்த்தமானங் கட்கேற்பப் புதுப்பிக்கப்படாமலும் திருத்தமடையாம

லும் மிகவும் பழமையான நிலைமையிற் சீர்கேடுற்றிருக்கின்றன.

கேள்வி:—தொழின் முறையென்ன? எங்கெங்கு? அவற்றின் தற்கால நிலைமையென்ன?

பதில்:—பெரும் பாகம் வட்டித் தொழில். சிறுபான்மை ஏனைய வியாபாரங்களும் தொழிற்சாலைகளுமுண்டு. சிலோன், பர்மா, மலாய்நாடுகள், அன்னம்தேயங்கள், சுமட்ராநாடுகள், இந்திய நாடுகள் இவை முக்கியமான வியாபாரஸ்தலங்கள். தற்காலம் விளைபொருள்கட்குப் போதுமான விலை யில்லாததினால் கஷ்டமும் நஷ்டமும் அதிகரித்துவருகின்றன.

கேள்வி:—கலைவளர்ச்சி, நாகரீகம் எப்படி?

பதில்:—முப்பது வருஷங்கட்கு முன்னிருந்த நிலைமைக்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் அதிக வித்தியாசமுண்டு. முப்பது வருஷங்கட்கு முன் கல்வியென்பது அரிச்சுவடியும் எண்சுவடியுமாகவே இருந்தன. அவை யிரண்டும் படித்துமுடிந்தால் பிள்ளை படித்து வந்துவிட்டானென்று சொல்லிக்கொள்வார்கள். அந்தப் பாக்கியமும் பெண்களுக்கில்லை. பெண்கள் படிப்பதே அசம்பாவிதம் என்று கருதப்பட்டது. இப்போது பெரிய பெரிய படிப்பாளிகளும் அதி மேதாவிகளும், நாவன்மை சொல்வன்மையுடைய பேரறிஞர்களும், அரசியல் ஞானமுடையவர்களும், பத்திராதிபர்களும், தமிழ் வடமொழி ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் பெரிய பெரிய வித்துவான்களும், பிரான்சு, சிங்களம், பர்மா, மலாய், அன்னம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளைத் தாராளமாகப் பேசுபவர்களும் பலரிருக்கின்றனர். பெண்கள் ஏராளமாகப் படித்துவருகின்ற

னர். ஆயிரக்கணக்கான ஜனக்கூட்டத்தின் முன் னின்று நாவன்மையோடு பேசும் பெண்களும்தோன்றி யிருக்கின்றனர். ஆகவே கல்வளர்ச்சியும் நாகரீகமும் அதிகமாகவே அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கின் றன.

கேள்வி:—வாழ்க்கை முறை யெப்படி?

பதில்:—முன்னுக்குப்பின் விரோதமானது. வரம்பும் நியதியும் நிச்சயமுமில்லாதது. அனுவசியமான ஏற்பாடுகளையும் வீணான செலவுகளையும் மேற்கொண்டிருப்பது. வாழ்க்கை இன்பங்களுக்குப் பிரதிகூலமானது. மன அமைதிக்கும் சந்தோஷத்துக்கும் விரோதமானது. அளவில்லாத பணத்தேவையுடையது. பண மிருந்தும் சுகமில்லாதது.

கேள்வி:—வரவு செலவு நிலைமை யென்ன?

பதில்:—நான் அறிந்த காலமாக வரவு செலவு நிலைமை அபாயகரமானதாகவே இருந்தது. வருவாயை நினைத்துக்கொண்டு பெருஞ் செலவினங்கள் தயாரிக்கப்பட்டன. கடன்படுவதற்குக் கொஞ்சமும் அஞ்சவில்லை. கடைகள் திறப்பதற்கும் பின் வாங்கவில்லை. பெரும்பாலும் டம்பத்துக்காகவே தான தருமங்கள் செய்யப்பட்டன. தேவையில்லாத விடங்களிலெல்லாம் கோயில்களும் சத்திரங்களும் பசு மடங்களும் பாடசாலைகளும் கட்டப்பட்டன. சிறு சிறு விசேடங்கட்கெல்லாம் பெருஞ் செலவு செய்யப்பட்டது. கல்யாணமென்பது குடி கெடுக்கும் காரியமாக அல்லது நாச வேலையாக மாறிவிட்டது. கல்யாணச் செலவினால் நஷ்டமடைந்த குடும்பங்கள் பல. அளவில்லாத பணத் தேவையை உத்தேசித்துக் கல்யாணஞ் செய்துகொள்ள

முடியாமல் கல்யாணத்தை நினைக்கவும் முடியாமல் கண் கலங்கி நிற்கும் குடும்பங்கள் பல. இப்படி வீண் செலவுகளைப் பெருக்கி அதற்கு வகை செய்ய முடியாமலும் வரவு செலவைச் சரிக்கட்டிக்கொள்ள முடியாமலும் பெருந் தொகை துண்டு விழுந்து கிடக்கிறது. பெரு வாரியான விசேடங்களும் காரியங்களும் ஸ்தம்பித்துப் போய்க் கிடக்கின்றன.

கேள்வி:—அப்படியானால் சமூகம் இனி நல்ல நிலைமைக்கு வர வழியில்லையா?

பதில்:—வழியுண்டு. வழியில்லாத காரியமே உலகத்திலில்லை. தொழில் வியாபாரம் முதலியன எப்போதும் இலாப நஷ்டங்கட்குட்பட்டவைகளே. இலாப நஷ்டங்கள் இயற்கையானவை. அடிக்கடி மாறிவரும் தன்மையுடையவை. தற்காலம் உலக நிலைமையே நன்றாக இல்லை. பண நெருக்கடியும் வியாபார மந்தமும் விலைகளின் வீழ்ச்சியும் நமது சமூகத்தை மட்டும் பாதித்திருக்கவில்லை. பெரிய பெரிய அரசாங்கங்களையும் கோடீஸ்வரர்களையுங்கூடப் பிடித்து நிற்கின்றன. ஆகவே அதற்காக சமூகமும் பயப்படவேண்டியதில்லை. கவலைப்படுவதிலும் பிரயோஜனமில்லை. உலகமே பெரு முயற்சி செய்து கொண்டிருப்பதால் சீக்கிரம் விமோசன மேற்படலாமாயினும் எதிர் காலத்தில் வட்டித் தொழில் அதிக நயந்தருவதாக இராது. வட்டித் தொழிலை மட்டும் நம்பிக்கொண்டிராமல் பற்பல வியாபாரங்களிலும் தொழிற்சாலைகளிலும் சமூகம் ஈடுபட வேண்டும். எல்லாத் துறைகளிலும் படிப்பும் அநுபவமும் இனி வேண்டும். அவை ஒருபுறமிருக்கத் தொழிலால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் சமூக வாழ்க்கையின்

அடிப்படையான காரியங்களை எந்த நிலைமையிலும் எக்காலத்தும் பாதிக்காமல் வாழ்க்கை முறையை முற்றிலும் சீர்ப்படுத்திக்கொள்ளவேண்டும். அதுதான் இப்போது முதற்காரியம்.

கேள்வி:—சீர்திருத்திக் கொள்ளவேண்டிய காரியங்களெவை?

பதில்:—வீணாகச் செய்யப்படும் எல்லாச் செலவுகளையும் ஒழித்துவிடவேண்டும். ஆடம்பரமும் டம்பச் செலவுகளும் ஒழியவேண்டும். பட்டம் பதவிகளில் வைத்திருக்கும் ஆசையைத் துறக்கவேண்டும். சாரமற்ற தருமங்களை மறந்துவிடவேண்டும். விவாக முறை முற்றிலும் புதுப்பிக்கப்படவேண்டும்.

கேள்வி:—எப்படி?

பதில்:—காப்புக்கட்டுப் புதுமை, கார்த்திகைப் புதுமை, திருவாதிரைப் புதுமை, தீர்த்தம் சாப்பிடுதல், வேவு, சாந்தி, சபிண்டி, துஷ்டி, முதலிய விசேஷங்கள் யாவும் ஒரே நாளில் முடிந்துவிடவேண்டும். அவை ஒவ்வொன்றுக்கும் ரூபாய் நூறுக்கு மேற் செலவு செய்யக்கூடாது. உறவினர்கட்கும் நண்பர்கட்கும் விருந்தளிப்பதைத்தவிர வேறுபொருள் ஒன்றும்கொடுக்கவும் வாங்கவும் கூடாது. பிறர் பாராட்டுவதற்கென்று ஆடம்பரமான காரியங்களும் டாம்பீகமான செலவுகளும் செய்யக்கூடாது. பட்டங்களும் பதவிகளும் தானாக வந்தாலன்றி அதற்காக ஒரு பைசாவும் செலவு செய்யக்கூடாது. கோயிற் கட்டுதல், கும்பாபிஷேகஞ் செய்தல், சத்திரங் கட்டுதல், பாடசாலை வைத்தல், பசுமடம் வைத்தலாதிய சாரமற்ற தருமங்களை இனிமறந்துவிடவேண்டும். கல்யாணம் சர்வ சாதாரணமாக நடை

பெறுகிறவன்றிடம் பெண் ஜாக்காக வென்று கேட்டுக்கொண்டு வாங்குவதும் கூடாதென்றும். ஆனால் ஈட்டைன் ஒருறு ரூபாய்க்கு அதிகமாகச் செலவிடும் வழக்கம் நடைபெறுகின்றது.

கேள்வி:— [illegible] அனுபவித்து [illegible] கொண்ட [illegible] காலங்களில் [illegible] பட்டத்துக்குச் [illegible] குறைத்துக்கொண்டாலும் கல்யாண காரியம் [illegible] சாதாரணமாக நடைபெறும்? பெண்ணுக்கு கொடுப்பதும் வாங்குவதும் [illegible] நாட்களிலும் ஒருறு ரூபாய்க்குச் செலவுக்கு [illegible] நடைபெறும்?

பதில்:—கல்யாண வீட்டில் பெண் ஜாக்குச் சாமான் வைத்துப் பட்டுக்கொண்டாலே [illegible] சாக்குக் கட்ட வைத்து [illegible] [illegible] தான் [illegible] கொண்டு போய் [illegible] [illegible] [illegible] காரியமாக [illegible] [illegible] [illegible] ஒருறு ரூபாயும் போதுமானது. அது போது கல்யாண காரியம் சாதாரணமாக நடக்கக்கூடும்.

கேள்வி:—இப்படி நடக்கக்கூடாமல் பெண்ணுக்குப் பணம் கொடுப்பதும் வாங்குவதும் எப்படி நிற்கும்?

பதில்:—பெண்ணுக்குப் பணம் வாங்குவதும் அடியோடு நிற்கவேண்டும். அந்த ஜாதத் திரவியத்தை

ஸ்லைப் பற்றிய உத்தமங்களால் பயனில்லை. அந்த மார்க்கெட் (Market) இல்லாமற் செய்வதற்கும். பெண்களின் விடுதலைக்காகவும் விதவைவிவாகமான துக்கமும். துயரும் நீங்குவதற்காகவும் இன்னும் பல துன்பங்கள் தொலைவ தற்காகவும் பாதி பழக்கத்தை சமூகம். ஆதரித்து ஆதரிக்கவேண்டும்.

கேள்வி:—பெண்கள் புனர் விவாஹம் செய்து கொள்வதற்கு ஏது பழக்கவழக்கங்கள் தடையாக செய லாகுமன்றோ?

பதில்:—ஆம். அந்த வழக்கம் இப்போது அநுஷ் டானத்தில் இருந்தால் அதைப்பற்றி இவ்வளவு தூரம் விவகரிக்கவும் புதிதாக பிரேரேபிக்கவும் அவசியமில் லை. முன்னொரு காலத்தில் அந்த ஏற்பாடு நல்லதாக இருந்திருக்கலாம். ஆனால் தற்கால உலகத்துக்கும் ஜன சமூகத்தின் மனப்போக்குக்கும் காலதேச வர்த்தமா னங்களுக்கும் அந்த வழக்கம் கொஞ்சமும் ஒத்ததாக இல்லை. முற்காலத்தில் பிள்ளைகளுக்கு முப்பது வயதான பின்னும். பெண்களுக்கு இருபது வயதுக்கு மேலும் கல்யாணம் செய்வார்களாம். மக்கள் நூறு வயதுக்கு மேலும் ஜீவித்திருந்து அதற்கு மேலும் சிலர் சாகாமல் கூனிக் குறுகி படுத்த படுக்கையில் வைத்துப் புதைக்கப் படுவார்களாம். அந்தக்காலத்து ஏற்பாடுகளும், வழக் கங்களும், இப்போது எப்படிப் பொருந்தும்? இப் போது பிறந்திற் பழுத்து ஏழு வயதிலும், ஏழு வயதி லும் பத்து வயதிலும் கல்யாணம் செய்வதும். அகால மரணமடைவதும் சகஜமாக இருக்கிறது. வயதுக்கு வந்து வாழுகிறவர்கள் மிகச்சொற்பமாகவேயிருக்கிறார் கள். கொள்ளை நோய்களும், போட்டாப்போட்டியும், அகால

மரணமும் சகஜமாக இருக்கின்றன. ஆகாய விமானம் வேறே வந்துவிட்டது. இந்த நிலைமையில் நூறுவயது மனிதர்களின் பழக்க வழக்கங்களை நினைத்துக்கொண்டு என்ன செய்கிறது? அப்படியானால் இப்பொழுதும் பொறுத்திருந்து ஆண்களுக்கு முப்பது வயதிலும் பெண்களுக்கு இருபது வயதிலும் விவாகம் செய்யும் வழக்கத்தை ஏன் அநுஷ்டிப்பதில்லை?

கேள்வி:—பழக்க வழக்கங்கட்கு அப்படிச் சமாதானம் செய்து கொண்டாலும் சாஸ்திர விரோதமென் பார்களே?

பதில்:—சாஸ்திரத்தைப் பற்றி நம்மவர் கவலைப் பட்டதில்லை. இனிமேலும் கவலைப்படவேண்டியதில்லை. பெண்ணுக்குப் பணம் வாங்கக்கூடுமென்று எந்த சாஸ்திரம் கூறுகிறது. மூத்த பெண்ணை இளைய மாப்பிள்ளைகட்கு கல்யாணம் செய்யும்படி எந்த சாஸ்திரம் கூறுகிறது? ஒன்றன்பின் ஒன்றாக வாழைக்கட்டை வரையில் பல பேர்களை மணந்துகொள்ளும்படி எந்த சாஸ்திரம் கூறுகிறது? விபசாரம் செய்யும்படி எந்த சாஸ்திரம் கூறுகிறது? விபூதி உருத்திராக்ஷம் அணிந்து பஞ்சாக்ஷர ஜபம் செய்துகொண்டு புலாலுண்ணும்படி எந்த சாஸ்திரம் கூறுகிறது? இவைகட்கெல்லாம் சாஸ்திரங்களைப் புரட்டிப் பார்க்காமல் உண்டு உடுத்தி உலகவின்பத்தை ஆவலோடு அநுபவிப்பதற்குரியதும் கிடைத்தற்கரியதும் அருமையானதுமான பச்சிளம் பருவத்தில் அனியாயமாக சிறுபொழுது மணையிலிருந்த தண்டத்துக்கு வாழ்விழந்து உயிரைப் பறிகொடுப்பது போல ஆடை அணிகளைப் பறிகொடுத்து விட்டு, அலக்கழிக்கப் பட்டு நிந்திக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, பரிதாபமான

நிலைமையில் முக்காடிட்டு மூலையிற் கிடக்கும் அபாக்கிய வதிகளான விதவைப் பெண்களைப் பின்னும் வாழ்க்கை நலன்களை அனுபவிக்கும்படி அனுமதிக்கும் புண்ணிய மான காரியத்துக்குத்தானு சாஸ்திரங்களைப் புரட்ட வேண்டும்? இதை ஆக்ஷேபிக்கும் பாரபக்ஷமான சாஸ் திரங்கட்கு சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து இறுகக் கட்டிவைப்பதே நல்லது.

கேள்வி:—மாதர் மறுமணத்தைச் சாமான்ய ஜனங்களும் பெருந்தனவந்தர்களும் ஒரு வழிப்பட்டு ஆதரிப்பார்களா?

பதில்:—சாமான்ய ஜனங்களைப் பார்க்கிலும் தன வந்தர்கட்குத் தான் மாதர் மறுமணம் இன்னும் அவ சியமென்று கூறுகிறேன். அகால மரணமும் விதவைத் துன்பமும் எல்லோருக்கும் பொதுவானவை யென் பதை மறந்துவிடக் கூடாது.

கேள்வி:—அப்படியானுல் விதவையான பெண்கள் எல்லோரும் மறுமணம் செய்துகொள்ள வேண்டுமா?

பதில்:—இல்லை அது நியாயமாகாது. விருப்ப முள்ளவர்கள் மட்டும் மறுமணஞ் செய்துகொள்ளட் டும். விரும்பாதவர்கள் அவர்களிஷ்டம்போல் வைதவ்ய விரதத்தை யாதொரு ஆக்ஷேபணையுமில்லாமற் காப்பாற் றிக் கொள்ளட்டும்.

8. கோவில் மாலை

நமது சமூகத்துக்கு ஒன்பது நகரக் கோவில்க ளுண்டு. அவ்வொன்பது கோவில்களின் பெயரால்

நாம் ஒன்பது பிரிவாகவும் அவற்றுள் உட்பிரிவுகளாக வும் பிரிந்து சம்பந்தம் முதலிய காரியங்களைச் செய்து வருகிறோம். மேற்படி நகரக் கோவில்களிலிருந்து கலி யாணங்களுக்கு மாலை வருவதும் மாலை வந்துதான் கல் யாணம் செய்வதும் ஒரு ஏற்பாடாக நடந்துவருகிறது. கல்யாணத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்னரே பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் அவரவர் கோயிலுக்குப்போய் இளம் புள்ளிகளைப் பதிவுசெய்து பாக்கு வைத்துவிட்டு வருகிறார்கள். அப்போது வரிப் பாக்கி யிருந்தால் அந்தப் பாக்கி தீரவேண்டும். பாக்கி தீராமல் பாக்கு வாங்கிக்கொள்ளுவதில்லை. பாக்கிப்படு கிற வரிப்பணங்களை வசூலிப்பதற்காகவும் இளம்புள்ளி களைத் தெரிந்துகொள்ளுவதற்காகவும் இந்த மாலை விஷ யத்தைக் கட்டாயமாக்கி நடந்து வருகிறது. இதில் வேறு விசேடம் ஒன்றுமில்லை.

அப்படியிருக்க சமீபத்தில் விசேட காலத்திற் செய்யும் வீண் செலவுகளையும் ஆடம்பரங்களையும் குறைக்கக் கருதி விவாக விஷயத்தில் சில திருத்தங் களைச் செய்து நாட்களைக் குறைத்து அனுவசியமான சடங்கு முறைகளையும் சட்டிபெட்டி பாக்கு வகையறாக் கொடுப்பது வாங்குவதுகளையும் சாமான் வைத்தலையும் நிறுத்தி மாப்பிள்ளை வீடு ஒன்று பிடித்து அங்கு போய்ப் போய் வராமல் மாப்பிள்ளை வீட்டார் வந்து நேரே பெண் வீட்டிலிறங்கியும் சம்பிரதாயமாகச் செய்யப் படும் வைதீகச் சடங்குகளையும் விட்டு நல்ல முறையில் ஒரு கல்யாணம் நடந்தது. ஆனால் கோவிலில் வரிப் பாக்கியில்லை. பாக்கு வைத்து மாலை வந்துதான் செய் யப்பெற்றது. அதைப் பின்பற்றி மற்றும் சில கல்யா

ணங்கள் நடக்கவிருக்கின்றன. இதற்கிடையில் சீர் திருத்தங்களில் விருப்பமில்லாத சிலர் நாட்களைக் குறைத்து வீண் செலவு, வீண் சடங்குகளைக் குறைத்துச் செய்யும் கல்யாணங்களைக் குற்றமுள்ள கல்யாணங்களாகவும், சமூகக் கட்டுப்பாட்டை மீறிச்செய்யப் பெறும் கல்யாணங்களாகவும் நினைத்து கோயிற் கூட்டம் போட்டு விசாரிக்கவும் தடை செய்யவும் வேண்டுமென்று கிளர்ச்சி செய்வதாகக் கேள்விப்படுகிறேன். இது நியாயமில்லாத முயற்சியாகுமென்பதுடன் அபஜயத்துக் கேதுவான காரியமாகுமென்று கிளர்ச்சிக் காரருக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

கல்யாணங்களுக்கு இப்போது ஆறு நாட்களாக இருப்பதைப் பன்னிரண்டு நாட்களாக்கலாம். மாப் பிள்ளை வந்திறங்க ஒரு வீடும் மற்றவர்கள் வந்திறங்க ஒரு வீடும் 250 ரூபாய வாடகை கொடுத்து இரண்டு வீடும் பிடிக்கலாம். ஏழுமுறை போய்வருவதை பதினுன்கு முறை போய்வரலாம். பெரிய கண்காட்சிச் சாலை திறந்துவைக்கலாம். பின்னும் மற்றெல்லா காரியங்களையும் இரட்டித்துச் செய்யலாம். ஆனால் பணம் வேண்டும். பணம் வைத்திருப்பவர்கள் வேறு வேலையில்லாமல் ஒரு மாதம் வரையிலும் கல்யாணம் செய்து கொண்டிருக்கட்டும். பணமில்லாதவர்களுக்கு நகரக் கோவிலில் ஒரு பண்டுவைத்து கல்யாணத்துக்கு வேண்டிய செலவைக் கொடுத்துவந்தால் நல்லதாக இருக்கும்.

சமூகக் கட்டுப்பாட்டை தலைமீது தாங்கி நிற்கும் கிளர்ச்சிக்காரர்கள் அப்படிச் செய்வார்களாவென்று கேட்கிறேன். அப்படிச் செய்ய முற்படாமற் கடைத்

தேங்காயை யெடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்ப திற் பயனென்ன?

நாங்கள் சொல்லுகிறபடி நீங்கள் செய்யுங்களென் ருல் பணம் வேண்டுமே கடன் படுவதா? கடன் பட் டால் நாளை வகை சொல்வது யார்? வாரண்டுக்குப் பிடி படுவது யார்? மானமிழந்து ஐ. பி. கொடுப்பது யார்? இதற்கெல்லாம் எந்தப் பங்காளி உடன்போகத் தயா ராக இருக்கிருர்? எப்படியாவது செலவைக் குறைத்து அவரவர் இஷ்டம் போற் செய்வதைப்பற்றிப் பொறுப் பில்லாமல் மற்றவர்கள் ஆக்ஷேபிப்பதும் குறை கூறுவ தும் எப்படி ஒழுங்காகும்?

குற்றமென்று கருதிக் கோயிற் கூட்டம் போடுகி ருர்களென்றே வைத்துக் கொள்வோம். போட்டு என்ன செய்யப் போகிருர்கள்? பெண்ணுக்குப் பணம் வாங்குவதைவிட இது பெரிய குற்றமென்று தீர் மானித்துவிடப் போகிருர்களா? ஐந்து வயதுப் பெண் ணுக்கும் ஐம்பது வயது மாப்பிள்ளைக்கும் செய்யும் கல் யாணத்தைவிட இது குற்றமென்று தீர்மானித்துவிடப் போகிருர்களா? இன்னும் சொல்லிக் காட்டமுடியாத குற்றங்களுக்கெல்லாம் இது பெரிய குற்றமென்று தீர் மானித்துவிடப் போகிருர்களா? தீர்மானித்துவிடத் தான் முடியுமா?

தீர்மானித்து விட்டதாகவே வைத்துக்கொள்ளு வோம். அதற்குமேல் என்ன செய்வது? சீர்திருத்த முறையிற் செய்யக்கூடாதென்று சொல்லலாம். அதைப் பொருட்படுத்தாமற் செய்கிறவர்கள் செய்தால் என்ன செய்வது?

கோயில் மாலை ஒன்றிருக்கிறது. வரிப் பாக்கியில் லாமல் அதைத் தடைசெய்ய ஒருவருக்கும் உரிமை

யில்லை. மேலும் பாக்கியைப் பார்த்துப் பதிவு செய்து கொள்ளவேண்டியதைத் தவிர நீங்கள் எப்படிக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறீர்களென்று கேட்டுக் கொண்டு பதிவுசெய்துகொள்ளுகிற வழக்கமில்லை. அப்படிக் கேட்டாலும் சொல்லவேண்டுமென்ற அவசியமுமில்லை. ஆகாய விமானத்திலிருந்து கல்யாணம் செய்துகொண்டாலும் அதைப்பற்றிக் கேட்க அதிகாரமில்லை.

கேட்பதாகவும் கேட்டுத் திருப்தியடையாத கல்யாணங்களுக்கு மாலைத் தடங்கல் செய்வதாயும் வைத்துக்கொள்வோம். சீர்திருத்தத்தோடு சீர்திருத்தமாக மாலையும் அவசியமில்லை யென்று கருதி விட்டுவிட்டால் என்ன செய்வது? பாக்கி சாக்கி வசூலாகும் பாத்தியமும் போய்விடுமே! அதுமட்டுமா, கோயில் மாலைக்கும் கடைசிநாள் ஆகிவிடுமே! என்று வருத்தத்தோடு கூறுகிறேன்.

சீர்திருத்தத்திற் பிரியமில்லாத அன்பர்களே!

நீங்கள் அதில் தலையிடவேண்டாம். கால நிலையை நினைத்துப் பாருங்கள், கல்யாணச் செலவினாலேயே சமூகம் சகிக்க முடியாத கஷ்டங்களை யனுபவித்துக் கொண்டிருக்கிறது. எப்படியாவது செலவைக் குறைத்துக்கல்யாண காரியங்களைச் செய்யவேண்டு மென்பது தான் எங்கள் கருத்து. இதனால் யாதொரு அபாயமும் வந்துவிடாது. ஆறுநாட் கல்யாணத்தை ஒரு நாளாக்கினாலும் அபாயம் ஒன்றுமில்லை. கடல் பொங்கிவந்து விடாது. மேலும் சீர்திருத்தக்காரர்களைக் கட்டுப்படுத்த உங்களால் முடியாது. மனத்துணிவும் அலக்ஷிய புத்தியும், வீரமுமில்லாத ஒருவன் சீர்திருத்தக்காரனாக

முடியாது. அப்படி தீர்க்க திருஷ்டியுடன் நிமிர்ந்து நிற்கும் ஒருவனை சமூகக் கட்டுப்பாடுகள் என்னசெய்ய முடியும்? வீணாகத் தலையிட்டு அபஜயமடைய வேண்டாமென்று உங்களுக்குப் பன்முறையும் எடுத்துக்கூற விரும்புகிறேன். நான் சொல்வதில் திருப்தியில்லா திருந்தால் அனுபவித்துப்பாருங்கள்.

---

9. வைத்துவிட்டுச் செய்தல்

வைத்துவிட்டுச் செய்தலென்பது நமது தர்மசாஸ்திரத்தின் பெயரால் அக்கினி சாட்சியாகக் கொண்ட மனைவியை ஏதோ ஒரு காரணம்பற்றி ஒதுக்கி வைத்துவிட்டுப் பின்னும் ஒரு பெண்ணை அந்த முறையில் மணந்துகொள்ளுதலாகும்.

ஜன்மத் தீர்ப்புப் பெற்ற இரண்டு கைதிகளைப் பிணைத்து விலங்கிடுவதுபோல் தர்ம சாஸ்திரத்தின் பெயரால் ஜாதி ஹிந்துக்களின் கல்யாணம் நடைபெறுகிறது. கல்யாண காரியத்தில் நீண்டநாட் கூடி வாழ வேண்டிய மணமகனுக்கும் மணமகளுக்கும் யாதொரு உரிமையுமில்லை. புருஷனைப்பற்றிப் பெண்ணுக்கும் பெண்ணைப்பற்றிப் புருஷனுக்கும் சரியான விபரங்கள் அறிவிக்கப்படவேண்டிய விதியுமில்லை. ஆனால் அந்தப் பெரும் பொறுப்பைப் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். பெற்றோர்கள் தங்கள் மக்களுக்குக் கல்யாண விஷயத்தில்வேண்டிய நலன்களையெல்லாம் முழுப்பொறுப்போடு கவனித்துச் செய்கின்றனர். அப்படிச்செய்

வதிற் பெரும்பாகம் நன்மையாகவேயிருக்கிறது. துரதிர்ஷ்டவசமாகச் சிறுபான்மையோர் பெருங் கஷ்டத்துக்கும் அவமானத்துக்கும் மாறாத கவலைக்கும் துக்கத்துக்குற் ஆளாகிவிடுகின்றனர்! புருஷனின் நடத்தையும் காரியங்களும் பெண்ணுக்குப் பிடிக்காமலும், பெண்ணின் நடத்தையும் காரியங்களும் புருஷனுக்குப் பிடிக்காமலும் ஒருவரை யொருவர் சந்தேகித்துத் "தவளை தண்ணீர்க்கிழுக்கக் கரட்டான் வேலிக்கிழுப்பதுபோல்" ஒருவர் போனவழி ஒருவர் போகாமல் ஒருவரோடொருவர் ஒத்துவராமற் சதா கலகமும் சண்டையும், சச்சரவும், அடியும் பிடியும், வழக்கும் பஞ்சாயமுமாகப் பெருந் துன்பமடைகின்றனர். மானம், மரியாதை, கௌரவம், பெருமைகளெல்லாம் நடுத்தெருவில் ரொக்கவிலைக்கு விற்று முதலாகின்றன. இந்த நிலையிற்றான் புருஷன் விலங்கை முறித்துக் கொண்டு வேறு மணஞ்செய்யப் பார்க்கிறான்! ஒரு புருஷனும் மனைவியும் கூடி ஒருமணப்பட்டு, பரஸ்பரம் அன்பு, அபிமானம், நம்பிக்கை முதலிய உயர்குணங்களோடு வாழ்ந்து இல்லற இன்பங்களை யனுபவிக்க வேண்டும். புருஷராயினும் சரி, பெண்களாயினும் சரி, தனித்தனியே அனுபவிக்கக் கூடிய பொருள்களும், இன்பங்களும் இவ்வுலகில் ஒன்றுமில்லை. ஒருவனுக்கு மண்ணிருந்தாலும், மனையிருந்தாலும், பொன்னிருந்தாலும், பொருளிருந்தாலும், ஆடைகளும் அணிகளும் அடுக்கடுக்காக இருந்தாலும், அவன் கோடீஸ்வரனாக இருந்தாலும் குபேரனாக இருந்தாலும் அவனுக்கு மனைவிமக்கள் வாய்க்காவிட்டால் மற்ற பொருள்களால் ஒரு பயனுமில்லை. அவன் தரித்திரர்களிலும் கடைப்

பட்ட தரித்திரனேயாகிறான். நல்ல மனைவியில்லாத அழகிய மாளிகையும், அதில் அடுக்கி வைத்திருக்கும் பண்டங்களும், பவுன் மாலைகளும், தங்கச் சங்கிலிகளும், நவரெத்தினங்களும் அவனுக்கு ஒரு சுகத்தையும் தரக்கூடியனவன்று. அவன் அவற்றைச் சுமக்கும் கடமையைச் செய்யலாமன்றி அவற்றையனுபவிக்கும் பாக்கியமில்லாதவனாகிறான். இதேபோலப் பெண்களும் தங்களுக்கு ஏற்ற கணவர்கள் வாய்க்கப்பெறாதவிடத்து அபாக்கியவதிகளாகின்றனர்.

சாபத்தீடுபோல் நமது நாட்டிற் பெரும்பாலும் நல்ல புருஷனுக்குக் கெட்ட மனைவியும், கெட்ட புருஷனுக்கு நல்ல மனைவியும், அழகானவனுக்கு விகாரமான பெண்ணும், விகாரமானவனுக்கு அழகான பெண்ணும், யோக்கியனுக்குப் போக்கிரியும், போக்கிரிக்கு யோக்கியமான பெண்ணும் இப்படித் தாறுமாறாகவே வாய்க்கின்றார்கள்.

நெல்லிற் பதர் காண்பதுபோற் பெண்களிலும் சிலர், அளவு கடந்து பகிரங்கமாக விபசார தோஷத்துக்கு அஞ்சாதவர்களாகவும் இருக்கின்றனர். சிலர் மானம், வெட்கம், மரியாதை, ஒழுங்கில்லாத பெரும் போக்கிரிகளாக இருக்கின்றனர். சில பெண்கள் திருடுகிறார்கள். சிலர் குடும்ப வாழ்க்கைக்குச் சிறிதும் யோக்கியமில்லாத மூட மக்களாக இருக்கின்றனர். சிலர் பயங்கரமான காட்சியளிக்கின்றனர். பெண்கள்தான் இப்படி யிருக்கிறார்களென்பதில்லை. புருஷ சிகாமணிகளும் இதைப்போற் பத்துப் பங்கு அதிகமான குற்றமுடையவர்களாக இருக்கின்றனர். புருஷர்களில் விபசார தோஷமில்லாதவர்கள் நூற்றுக்குப் பத்துப்

பேர்களில்லை! மேலும் மதுபானம், சூதாட்டம் முதலிய விசேட குணங்களும் புருஷர்களிடத்திற்றான் மலிந்துகிடக்கின்றன. இன்னும் பல துர்க்குணங்களும் பெண்களைப் பார்க்கிலும் புருஷர்களிடத்திற்றான் அதிகமாக இருக்கின்றன. ஆயினும் புருஷர்கள் தாங்கள் எவ்வளவு குற்றமுடையவர்களாக இருந்தாலும் தங்களை வைத்துவிட்டு வேறு புருஷனைக்கொள்ளப் பெண்களுக்கு உரிமை யில்லையென்றும், பெண்கள் சிறு குற்றஞ் செய்தாலும், குற்றமே செய்யாமல், மனதுக்குப் பிடிக்கவில்லையென்ற காரணத்துக்காகவும் அவர்களை வைத்துவிட்டு வேறு பெண்ணைத் தாங்கள் கொள்ளலாமென்றும் நம்பியிருக்கின்றனர். செய்யவும்செய்கின்றனர். இப்படிச் செய்வதில் அனுபவ பூர்வமான ஒரு இரகசியத்தை இங்கு கூற விரும்புகிறேன்.

பிள்ளையில்லையென்ற காரணத்துக்காக ஒருவன் பல பெண்களை மணந்தாலும் அவனுக்குப் பிள்ளை பிறப்பது சந்தேகந்தான். தஞ்சாவூர் அரசரை இதற்குச் சாக்ஷியாக எடுத்துக் கொள்ளலாம். முதல் மனைவி விபசாரம் செய்தாளென்ற காரணத்துக்காகப் புது மனைவியைக் கொண்டால் அவள் முந்தினவளை விட ஒருபடி தாண்டிப்பாய்கிறாள். கட்டுப்படாத போக்கிரி என்று முதல் மனைவியைத் தள்ளிவிட்டுப் புதிதாக ஒன்றைக் கொண்டுவந்தால் அது பெரும் போக்கிரியாக இருக்கிறது. அழகில்லை யென்று ஒன்றைத் தள்ளிவிட்டு வேறு ஒன்று கொண்டுவந்தால் அது நோயாளியாக இருக்கிறது. இப்படித் தொடர்ச்சியாக ஒரே குணத்திற்றான் ஒருவனுக்குப் பெரும்பாலும் மனைவி அமைகின்றாள். இதற்கென்ன காரணமோ? பூர்வஜன்மம்

பூர்வ வினையென்பவைதான் போலும்! புருஷர்கள் தாம் பெண்களிடத்துக் குற்றம் கண்டோ அல்லது மனதுக்குப் பிடிக்கவில்லை யென்ற காரணத்தாலோ விவாக விலங்கை முறித்துக்கொண்டு புது மணம் செய்கின்றனர். பெண்களுக்கு அந்த உரிமையில்லை! ஏனில்லை யென்பதற்குச் சரியான காரணமில்லை!! அவர்களுக்குப் போட்ட விலங்கு போட்டதுதான்! கொண்ட புருஷன் தள்ளிவிட்டால் அவளேன் அவன் பெயரால் பத்தியங்காக்க வேண்டு மென்பதற்கு நியாயங்காண வில்லை.

புருஷர்கள் சிலர் சகிக்கமுடியாத சங்கடத்தினாலும் அவமானத்தாலும் புது மணஞ் செய்து கொள்ளுகின்றனர். சிலர் பணத்திமிரினால் சரியான காரணமில்லாமல் அக்கிரமமாகவும் நல்ல பெண்களைத் தள்ளிவிட்டுப் புதுமணஞ் செய்து கொள்ளுகின்றனர். புது மணஞ் செய்தலும் சுலபமான காரியமல்ல. அதிற் பணச் செலவும் பலவிதமான கஷ்டங்களு முண்டு. கஷ்ட நஷ்டமடைந்து செய்துகொண்டாலும் அனுபவம் பழய அனுபவமாகத் தானிருக்கக் காண்கின்றோம்.

ஆதலால் எனது பிரியமுள்ள இளைஞர்களே! இப்படி வைத்துவிட்டுச் செய்யும் துரதிர்ஷ்டத்துக்கு நீங்கள் ஆளாகிவிடாமல் உங்களுடைய குணம் செயல் யோக்கியதைகட் கேற்ப நல்ல பெண்களைத் தேடிவைக்கப்பெற்று நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவிகளும் வேற்றுமை யில்லாமற் பரஸ்பரம் அன்பு அபிமானம் மரியாதை முதலிய உயர் குணங்களோடு கௌரவமாக வாழ்தல் வேண்டு மென்று ஆசீர்வதிக்கின்

றேன். உங்கள் வாழ்க்கையின் இடையிடையே பெண்களிடத்து இயற்கையாகவுள்ள சிறு சிறு குற்றம் குறைகளை நீங்கள் பொருட்படுத்தக் கூடாது. அற்பத்தனமாக நீங்கள் உங்கள் மனைவியரிடத்துச் சந்தேகங் கொள்ளுதலுங் கூடாது. பொறுமையினாலும் சகிப்புத் தன்மையினாலும் பல காரியங்களை நீங்கள் சரிக்கட்டிக் கொண்டுபோக வேண்டும். மனைவி மக்களிடத்துக் குற்றங்காணப் புகுவதும் கடுங்கோபம் கொள்வதும் விலக்கப்பட வேண்டும். இப்படியெல்லாம் நீங்கள் பெருந்தன்மையாகவும் புத்திசாலித்தனமாகவும் நடந்தும் பயனடையாமல் உங்களுக்கேற்காத பெண்களாக இருந்தால் அதற்காகவும் நீங்கள் வருந்த வேண்டியதில்லை. பின்னும் அந்தப் பொல்லாப்பிற் காளாவதற்கு நீங்கள் கஷ்ட நஷ்டமடைய வேண்டியதில்லை. ஒரு முறை உங்களுடைய அதிர்ஷ்டத்தைப் பரீக்ஷித்துப் பார்த்ததே போதும். அந்த ஆசையை ஒழித்து ஒத்து வராத மனைவிக்கு அவளிஷ்டம்போல் விடையளித்துவிட்டு நீங்கள் செய்யவேண்டியது காந்தர்வ மணம். காந்தர்வ மணமே அந்த நிலைமையில் உங்களுக்குத் திருப்தியளிக்கக் கூடியது. காந்தர்வ மணமே உங்களுடைய மனநோய்க்குச் சிறந்த பரிகாரமாகவுமிருக்கும்.

காந்தர்வமண மென்பதென்ன ?

உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பு முதலியவற்றால் தம்முளொப்புமை யுடையராய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவுமன்றித் தாமே யெதிர்ப்பட்டு மணந்துகொள்ளுதலாகும். சாஸ்திர சம்மதப்படி தர்ம விவாகங்களிற் சிறந்த விவாகமும் இதுவேயாம்.

10. ஸ்வீகாரம்.

இங்கு ஸ்வீகாரமென்பது பிள்ளையில்லாதவர்கள் அயலார் பிள்ளையைத் தம் பிள்ளையாகக் கொள்ளுதல் பற்றியேயாம்.

ஆதியில் ஏற்பட்ட ஸ்வீகார முறையும் உத்தேசமும் காரணமும் வேறு. இப்போதுள்ள முறையும் உத்தேசமும் காரணமும் வேறு. அது முற்றிலும் மாறுபட்டு விபரீதமான நிலைமைக்கு வந்திருக்கிறது. ஆதியில் ஒரு குடும்பத்துச் சகோதரர்களில் ஒருவருக்குப் பிள்ளையில்லாதிருந்தால் பிள்ளையையுடைய மற்றவர் சகோதர வாஞ்சையால் வேற்றுமை கருதாமல் அபிமானம்பற்றி தம் பிள்ளையை அவர் பிள்ளையாக்கி அவர்களது மக வாசை தீரப் பிள்ளைப்பருவத்திற் கொடுத்துச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கச் செய்து யார் பிள்ளையென்றால் அவர் பிள்ளையென்று தாமும்சொல்லிப் பிறரும்சொல்ல அப்பிள்ளையும் சொல்லக்கேட்டு அகமகிழ்வர். அதற்காகப் பெற்றவர்கள் யாதொரு பிரதிப் பிரயோஜனமும் அடைவதில்லை. ஏக குடும்பமாதலால் அப்படி அடைவதற்கும் விசேடமாக ஒன்றுமில்லை. இதுதான் ஸ்வீகாரம் வந்த வரலாறு. தனவந்தர் குடும்பங்களிலும் சாமான்ய குடும்பங்களிலும் மேற்கண்ட வழக்கம் சகஜமாக இருந்துவந்திருக்கிறது. அதனால் விபரீதம் ஒன்றும் ஏற்பட்டதில்லை. ஏற்படுவதற்கும் வழியில்லையன்றோ? இப்போது அந்த வழக்கம் விபரீதமானமுறையில் முட்டாள்தனமான செய்கையாக மாறியிருக்கிறது. அநேகர் "இறுகின வதியிற் காலைவிட்டு இழுக்க மாட்டாமல் ஊளையிட்ட" கதைபோல் பிள்ளையைக் கூட்டிப் பெரும்பாடு படுகின்றனர்.

பணமிருந்தாற் கட்டாயம் பிள்ளை கூட்டியாக வேண்டுமென்று தீர்மானமாகிவிட்டது. அதற்காக ஊர் ஊராக அலைந்து பிள்ளைதேடி ஒருவனைப் பிடித்துக் கொண்டு வந்து வைத்துப் பட்டாபிஷேகஞ் செய்து அதற்குமேல் வசவோ தடியடியோ உதையோபெற்றுக் கொள்ளுகிறார்கள். பிள்ளையாக வந்தவன் வந்தவிடத்தில் தாய் தந்தை சகோதரிகள் என்று வாயினாற் சொல்லிக்கொண்டாலும் உண்மையாக அந்தப் பாசமும் வாஞ்சையும் அபிமானமுமிருக்குமா? அது இயற்கைக்கு விரோதமன்றோ! அபிமானமும் வாஞ்சையுமில்லாவிட்டாலும் திடீரென்று தோன்றிய, தாயும் சகோதரிகளுமான பெண் மக்களிடத்து அன்னியனுக்குள்ள விகாரமான மனோபாவமில்லாதிருந்தாலும் போதும். அதுகூட அருமையாகத்தான் காணக்கிடக்கிறது. அநேகமாக ஸ்வீகாரப் பிள்ளைகள் விகாரமான முறையில் நடந்துகொள்ளுகிற கதைகளைத்தான் கேள்விப்படுகிறோம். பதினாறு வயதுப் பெண்ணொருத்திக்குப் புருஷன் இறந்துவிட்டாலும் உடனே அந்தத் துக்க வீட்டிலேயே முதலிற் பிள்ளை கூட்டுவதைப்பற்றித்தான் பேசப்படுகிறது. பிள்ளை யென்பவன் சிலசமயம் கொஞ்சம் முன் பின்னாக அதே வயதுடைய பிள்ளையாகவும் வந்துவிடுகிறான். அதில் பாகுபாடு ஒன்றுமில்லை. அப்படியானால் அது எவ்வளவு அனுசிதமான காரியமென்பதையும் முட்டாள்தனமான செய்கை யென்பதையும் யோஜித்துப் பாருங்கள்.

பணமிருந்தாற் பிள்ளைகூட்டுவது அவசியமென்று கருதுகிறார்களே ஏன்? கொள்ளி வைத்து மோக்ஷத்துக்கனுப்புவதற்கா? தான் பெற்ற பிள்ளை யில்லாமல்

அன்னியன் ஒருவன் கொள்ளிவைப்பதில் யார் வைத்தாலென்ன? விலை கொடுத்து வாங்கினேன் என் பிள்ளை தானென்றுசொல்லி மேலுலகத்து அதிகாரிகளை ஏமாற்றிவிட முடியுமா? கொள்ளியும் மோக்ஷமும் ஒருபுறமிருக்கட்டும். தலைவனில்லாத குடும்பத்தைப் பாதுகாக்கவே பிள்ளை கூட்டுவதாக வைத்துக்கொள்வோம். அல்லது தள்ளாத வயதிற்றங்களைப் பாதுகாக்கவே பிள்ளை கூட்டுவதாக வைத்துக்கொள்வோம். அப்படியானால் அது நல்ல நோக்கந்தான். ஆனால் பாருபாடில்லாமற் சந்தைச் சரக்குகளைப்போல் நிறத்தையும் கனத்தையும் பார்த்துக்கொண்டு வந்துவிடுவதால் அந்த நோக்கம் நிறைவேறிவிட முடியுமா? அனுபவத்தில் அந்த நோக்கத்துக்கு விரோதமாகவே இருக்கிறது. ஸ்வீகாரம் வந்த பிள்ளைகளிற் பெரும்பாலோர் பூர்வாசிரமத்திற்பட்ட வறுமைகளை யெல்லாம் மறந்து தங்களைப் பிள்ளையாகக்கொண்டு இரக்ஷித்தவர்களிடத்து நன்றிபாராட்டாது அவர்கள் வேண்டுவன செய்யாது அவர்கள் சொல்வழிநிற்காது அவர்களை மதியாது நடந்துகொள்வதோடு அவர்களைத்துன்புறுத்தவும்செய்கின்றனர். அடிக்கின்றனர். உதைக்கின்றனர். அநியாயமாகப் பணத்தையும் அழிக்கின்றனர். தன்னைப் பிள்ளையாகக் கூட்டிக்கொண்டவர்களுக்குக் கடைசி காலத்தில் உண்ணவும் உடுக்கவும் கொடாத பிள்ளைகளுமுண்டு. சுருங்கக் கூறுமிடத்து அன்னியர் பிள்ளைகளைத் துன்பத்துக்குக் கூட்டுவதன்றி சுகத்துக்குக் கூட்டுவதில்லை. ஒரு முரட்டுப் பையன் ஸ்வீகாரமாக வந்து குடியும் விபசாரமும் சூதும் காரும் கூத்தும் என்று பணத்தைப் பாழாக்காமல் தாங்களே தங்கள் கையால் பொதுஜன உபகார

மான கல்வி வைத்தியம் முதலியகாரியங்களுக்குச் செல விட்டாலென்ன? அப்படிச் செய்வதால் இந்த நிலவுல கத்திற் பெருமையும் கீர்த்தியுமடைவதோடு மேலுல கத்து அதிகாரிகள் வலியவந்து மோக்ஷத்துக் கழைத் துச் செல்வரன்றோ? தங்கள் பொருளால் நன்மைய டைந்த பிள்ளைகளெல்லாம் தம் பிள்ளைகளாவரன்றோ? ஆகவே எனது பிரியமுள்ள இளைஞர்களே!

உங்களில் யாருக்காவது பிள்ளை யில்லையானால் அதைப்பற்றி நீங்கள் கொஞ்சமும் வருந்தவேண்டாம். அதற்காக ஒரு சிறிதும் கவலைப்படவேண்டாம். அய லார் பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொள்ளக் கனவி லும் கருதவேண்டாம். வலியவந்தாலும் வேண்டாம். வருவாயோடு வந்தாலும் வேண்டாம்.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் —திருக்குறள்

பிள்ளையில்லை யென்றால் அந்தத் துன்பத்தினின்றும் நீங்கியதற்கு நீங்கள் சந்தோஷமடையுங்கள். நீங்கள் பாடுபட்டுத் தேடியபொருளை நீங்களே அனுபவியுங்கள். நீங்களே செலவு செய்யுங்கள். தடாகத்தை வெட்டுங் கள். தண்ணீர்ப் பந்தல் வையுங்கள். கல்விக் குதவுங் கள். அங்கவீனர்களை ஆதரியுங்கள். அநாதைக் குழந் தைகளை ஆதரியுங்கள். முதியோரைப் பேணுங்கள். இத்தகைய எண்ணற்ற தருமங்களில் ஒன்றை உங்க ளிஷ்டப்போற் செய்யுங்கள். அதனால் இகத்திலும் பரத் திலும் நன்மையுண்டு. அயலார் பிள்ளையால் அணுவள வும் சுகமில்லை. துன்பமே அதன் பயன்.

11. ஸ்வீகாரம் ஒழிய வேண்டும்

பெண் மக்களும் ஈமக்கடன் செய்யவேண்டும்

நம்மிற் பிள்ளையில்லாதவர்கள் ஸ்வீகாரம் செய்து கொள்ளுவது வழக்கமாக இருக்கிறது. ஸ்வீகாரம் மிகவும் அவசியமென்றும் கருதப்படுகிறது. பிள்ளையில்லாதவர்கள் பணமில்லாமலோ அல்லது அதற்குரிய சௌகரியங்களில்லாமற் போனாலன்றி கொஞ்சம் இடமிருந்தாலும் பாக்கிக் கடன் பட்டாவது பிள்ளை கூட்டி கல்யாணம் செய்து விடுவது ஒரு முக்கியமான கடமையென்று கருதப்படுகிறது. அப்படியானால் பணச் சௌகரியமுள்ளவர்களைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அவர்கள் காலந் தாழ்த்துப் பிள்ளை பிறந்தாலும் ஒன்றுடனொன்றாக வைத்துக் கொள்ளுவோமென்று முற்பகுதியிலேயே பிள்ளை கூட்டிப் பெருக்குத் தயார் செய்துகொள்ளுகிறார்கள். இப்படிக் கூட்டப்படும் பிள்ளைகளிற் சிறு பாகந்தான் அண்ணன் தம்பி பிள்ளைகளாக இருக்கும். பெரும்பாகம் அன்னியன் பெற்ற பிள்ளைகளே! அப்படி வரும் பிள்ளைகளில் அங்குமிங்கும் ஏதோ சில நல்ல பிள்ளைகளுமிருக்கிறார்கள். அதிகமாகக் கெட்ட பிள்ளைகளே காணப்படுகிறார்கள். அவர்களின் செய்கையும் கிரியமும் விபரீதமாக மாறி பிள்ளை கூட்டிக்கொண்டவர்களின் கடைசி காலம் நிர்க்கதியாகவும் துன்ப மயமாகவும் கரைந்த நெஞ்சும் கண்ணீருமாகவே முடிகின்றது. மேலும் நிலுவைச் சனியனை வட்டிக்கு வாங்கியதுபோல் ஆகாத பிள்ளைகளை விலை கொடுத்து வாங்கி அவர்கள் செய்யும் அக்கிர

மங்களுக்கும் ஆளாகி அவர்கள் கை பார்த்துப் பிழைப் பதென்றால் அதைவிட முட்டாள்தனமான காரியம் என்ன விருக்கிறது?

அனேகர் பிள்ளை கூட்டுகிறேன் என்று பெரிய ஆளைக் கூட்டுகிறார்கள். அவன் பிறந்த இடத்தில் ஒரு வழியுமில்லாமல் கஷ்டப்பட்டு திடீரென்று காசையும் பணத்தையும் காரையும் வண்டியையும் கண்டு மதி மருண்டு என்னென்னவோ செய்ய ஆரம்பித்து விடு கிறான். சூது, குடி, விபசாரம் காலிகள்நட்பு முதலிய தீய காரியங்கள் எல்லாம் அவனைப் பிடித்துக்கொள்ளு கின்றன. இந்த தடபுடலிற் பிள்ளை கூட்டிக் கொண்ட வர்களை மறந்து விடுகிறான். அவர்களுக்கு இனி யாதொரு உரிமையுமில்லை யென்று நினைக்கிறான். குடும் பச் சொத்துக்கள் பறிமுதலாகின்றன. ஏனென்று கேட்டால் அடி உதை விழுகிறது. ஐயோ போச்சே போச்சே யென்று புலம்புவதைத் தவிர வேறு செய்யக் கிடப்பதென்ன?

அன்னியன் பெற்ற பிள்ளை அவன் எப்படியும் அன்னியனேயன்றோ? அவனைத் தன் பிள்ளை யென்று சொல்லிக்கொண்டதால் அவனுக்குப் பிள்ளையின் மன மும், பாசமும் அன்பும் அபிமானமும் உண்டாமா? ஒரு போதும் உண்டாகா. உண்டாவதென்பது இயற் கைக்கு விரோதமானதன்றோ! அப்படியானால் அவ னது கண்களும், மனமும் திடீரென்று கிடைத்த தாய் தந்தை, சகோதரிகள் உறவினர் சுற்றத்தாரிடம் அவ ரவர்கட்குச் செய்யத்தக்க மரியாதையைச் செய்யுமா? உண்மையிற் செய்யமாட்டா! நாடகமாக நடிப்பானே

யன்றி அன்னியன் அன்னியனே! அன்னியன் ஒருவனது கண்களும் மனமும் என்ன செய்யுமோ அதைத்தான் இவனது கண்களும் மனமும் செய்யும். இதில் ஆச்சரிய மொன்றுமில்லை.

இவ்வளவு ஆபத்தானதும் உபயோகமற்றதும் துன்பத்துக்கிடமானதுமான காரியத்தை ஏன் செய்கிறார்கள்? தமக்கு முன் பிள்ளை கூட்டினவர்கள் பலர் படும்பாடுகளைப் பார்த்திருந்தும் அந்த அபாயமான கதைகளைக் கேட்டிருந்தும் ஏன் செய்கிறார்கள்? கொள்ளிவைக்கப்பெற்று நரகவேதனையின்றி மோக்ஷபிராப்தியடைவதென்ற ஒரு மூட நம்பிக்கையேயாகும். அந்த முட்டாள்தனமான அர்த்தமற்ற நம்பிக்கையினாலேயே பிள்ளை கூட்டுதலென்னும் பெருந் துன்பத்துக் காளாகிறார்கள். செய்த பாவங்களைக் கொள்ளிக்கட்டையாற் போக்கிவிடலாமென்பதை நம்பலாமா? அப்படியானால் புண்ணிய காரியங்களை யெல்லாம் ஏன் செய்யவேண்டும்? பாப புண்ணியத்துக்கு ஏன் அஞ்சவேண்டும்? முடிந்தவரையில் அக்கிரமங்களைச் செய்துவிட்டு ஒரு கொள்ளிக்கட்டையினால் தப்பித்துவிடலாமே! அது ஒருபோதுமில்லை; கொள்ளிக்கட்டையினால் தப்பவே முடியாது. அப்படியே தப்பிப்பதாக வைத்துக்கொள்வோம். பெற்ற மகன் செய்யாத சடங்கை அன்னியன் செய்து ஏமாற்ற முடியுமா? நான்தான் பிள்ளையென்று சொல்லிக்கொண்டு அன்னியன் ஒருவன் வைக்கும் கொள்ளியை யார் வைத்தாலென்ன? எனக்குக் கொள்ளி வைக்கும் ஒருவனுக்கு என் சொத்திலிருந்து இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று ஒரு சாச

னம் செய்துவைத்துவிட்டால் மரணம் நேர்ந்ததும் நீ, நான் என்று எத்தனை பிள்ளைகள் வருவார்கள்?

அது ஒருபுறமிருக்கட்டும். பெற்றோர்களுக்குப் பெண்மக்கள் ஏன் கொள்ளிவைக்கக்கூடாது? பெற்ற மக்கள் பெண் மக்களானாலென்ன? ஆண் மக்களானாலென்ன? அன்னியனைப் பிள்ளையென்று அவனுக்குக் கொடுக்கும் உரிமையைத் தான்பெற்ற பெண்ணுக்குங் கொடுக்கக்கூடாதா?

ஸ்வீகாரம் கூடாதென்பதற்குப் பல காரணங்களும் கதைகளும் கூறலாம். இந்தக் கட்டுரையில் முடிந்துவிடாது; சீர்திருத்தக்காரர்கள் இனி இந்த அம்சத்தையும் தங்கள் திருத்தத்திற் சேர்த்து பிரசாரஞ்செய்வார்களாக. எப்படியும் இந்த தீயவழக்கத்தை ஒழிக்க வேண்டும்.

சுருக்கமாகக் கூறுமிடத்து ஸ்வீகாரம் உபயோகமற்றது. துன்பத்திற் கிடமானது. தேவையில்லாதது. ஆண்மகவில்லாதவர்கள் பெண்மக்களால் ஈமக்கடன் செய்யப்பெறலாம். ஆணும் பெண்ணுமில்லாதவர்கள் மரணசாசனஞ் செய்துவைத்து சுகமாக வாழ்ந்துவிட்டுச் சாகலாம். ஈமக் கடனுக்கு ஏராளமான மக்கள் தாமே வருவார்கள். இதனால் தர்ம ஸ்தாபனங்கள் பெரிதும் ஆதரவு பெற்று அபிவிருத்தி யடையவும் இடமேற்படும்.

12. ஆடையணிதல்

நமது நாட்டு மக்களும் ஆடைகளுக்காக அதிகமான பணத்தைச் செலவிடுகிறார்கள். மேல்நாட்டு

உடை நடைகளில் மோகமுற்று தங்களையும் தங்கள் தேசத்தையும் விகாரப்படுத்தி சீதோஷ்ண நிலையுணராது சுமையான ஆடைகளைச் சுமக்கின்றார்கள். நமது இளைஞர்கள் சோம்பலால் எட்டுமுழ வேஷ்டியை மடித்து உடுத்தி நாகரிகத்தையும் அழகையும் குறைத்துக் கொள்ளுகிறார்கள். இன்னும் ஆடையணிவதில் திருத்தமில்லாதவர்களாகவும் இருக்கின்றனர்.

மனித சமூகம் நாகரிகமடைந்த காலமுதல் ஆடையணிதல் அவசியமென்று கருதப்பட்டது. பிறகு அவசியமென்பதுடன் அழகுக்காகவும் உடுத்த ஆரம்பித்தனர். அழகுக்காக உடுத்த ஆரம்பித்தபின் விலையுயர்ந்த துணிகளும் பல பல வர்ணங்களும் பட்டுகளும் ஜரிகை வேலைகளும் காணப்பட்டன. அத்தொழிலும் வியாபாரமும் உலகத்திற் பெரிதும் வியாபித்து முதன்மையடைந்து சிறந்தும் மலிந்தும் கிடக்கின்றன. கோடிக்கணக்கான பொருட்செலவிற்கு ஆடைகளே காரணமாயிற்று.

சுமையான ஆடைகளை முதலில் உடுத்திக்காட்டியவர்கள் மேல்நாட்டினர். மேல்நாட்டு ஆண்களும் பெண்களும் ஒன்றன்மே லொன்றாக அதிகமான ஆடைகளை உடுத்தும் தன்மையினர். பெரும் பணத்தையும் ஆடைகளுக்காகச் செலவிடும் இயல்புடையவர்கள். அதற்கு முக்கியமான ஒரு காரணம் உண்டு. அதாவது அந்த நாடு குளிர்மிகுந்த நாடு. பனி அதிகம். கனத்த ஆடைகளின்றிக் குளிர் தாங்கமுடியாது. அப்படியிருந்தும் இப்போது அவர்கள் ஆடைகளைக் குறைத்து உடுத்துகிறார்கள். அதுதான் நன்மையென்றும் சுகமென்றும் கண்டுவருகிறார்கள். ஒவ்வொருநாளும் புதிய புதிய

திருத்தங்களைச்செய்து கொள்கிறார்கள். அதிலும் பெண்கள் பெரிதும் குறைத்துவிட்டார்கள். ஒரு சாரார் ஆடைகளை அறவே நீக்கிவிட்டு நிர்வாணிகளாக வாழுகிறார்கள். அந்தக் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிவருகிறது. ஆடைகளை அகற்றிவிட்டதால், அனேகம் தேவைகளும் சிரமங்களும் தொலைந்துவிட்டதாக அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள். முதலில மேல்நாட்டினரைப் பின்பற்றிய நம்மவர் ஏறிய படியிலிருந்து இறங்கவில்லை. யாதொரு திருத்தமும் கிடையாது. அதைப் பற்றிச் சிந்தனையுமில்லை.

அன்னிய நாட்டுத் துணிகளை விலக்கி சுதேச ஆடைகளையே உடுத்தவேண்டுமென்று மகாத்மா ஆலோசனை கூறினர். சுதேச ஆடைகளிலும் முக்கியமாக கதர் உடுத்தவேண்டுமென்று கூறினர். அப்படியே கதர் உடுத்த முற்பட்டவர்களைப்பற்றி அதிகமாகக்கூறவேண்டியதில்லை. ஆனல் கதர் உடுத்தாத மக்கள் இன்னும் கோடிக்கணக்காக இருக்கின்றனர். கதர் உடுத்துவதாயின் நான்கு முழம்தான் சுலபமாக உடுத்தலாம். ஷர்ட்டு அல்லது அரைக்கைச்சட்டைதான் சுலபமாகப் போடலாம். அங்க வஸ்திரமாக ஒரு துண்டுதான் சுலபமாக அணியலாம். அதற்கு மேற்பட்டால் சுமையாகவும் சிரமமாகவும் இருக்கும். அவசியமானபோது கொஞ்சநேரம் ஒரு கோட்டும் குல்லாயும் அதிகமாகலாம். அவ்வளவுதான். ஆடை அதற்குமேற் கொள்ளாது. இந்த ஆடைகளுக்காக ஆகும் செலவும் அதிகமில்லை. நபர் ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு பன்னிரண்டு ரூபாய் அதாவது மாதம் ஒரு ரூபாயாகும். இது தான் செலவு. தினமும் தோய்த்து உடுத்தினல் சுத்த

மாகவும் சுகமாகவும் ஆரோக்கியமாகவுமிருக்கும். அன்னியநாட்டுத் துணிகளிற் புகுந்தால் ஆடைகளுக்காகச் செய்யப்படும் செலவுக்கு அளவேயில்லை. அந்த ஆடைகளின் அழகும் தற்காலத்து மதிப்புக்கும் மரியாதைக்கும் மாறுபட்டதாக இருக்கிறது. மேலும் இந்த தேசத்தின் சீதோஷ்ண நிலையறியாது பாபம்! மேல்நாட்டு உடைநடைகளில் மோகமுற்று காற்சட்டை மேற்சட்டை, டொப்பி டப்பிகளை மாட்டிக்கொண்டு தங்களையும் தங்கள் தேசத்தையும் விகாரப்படுத்திக்கொள்கின்றனர். ஒரு வெள்ளையர் நம்மைப் பார்க்கவந்தால் வேஷ்டியுடுத்தி அங்கவஸ்திரமணிந்து தலைக்குட்டை தாங்கி வருகிறாரா? இல்லை! நாம் ஒரு துரையைப்பார்க்கப் போவதானால் அல்லது ஒரு துரையின் கடைக்கண் பார்வை நம்மீது படுவதானாலும் ஏன் மேல் நாட்டு உடையுடுத்த வேண்டுமென்று கேட்கிறேன். அவர் தேயத்து உடை யுடுத்தியிருந்தால் நாம் நமது தேயத்து உடை யுடுத்துவதன்றோ சுயமரியாதை யாகும்: இதை சிந்திக்கவேண்டாமா? இந்த அனுவசியமான உடைகளுச்கு ஆகும் செலவும் அதிகமாவதைக் கவனிக்க வேண்டும். மேல்நாட்டு மாதிரியில் உடுத்துகிறவர்களுக்கு மட்டுந்தான் செலவு அதிகமாகிறதென்பதில்லை. கதர் அணியாதவர்கள் பட்டு, ஜரிகை முதலிய ஆடைகளுக்காகவும் பெருஞ்செலவு செய்கிறார்கள். அவர்கள் உடுத்துகிற மாதிரியும் சரியில்லை. டாம்பீகமாக உடுத்துகிறவர்கள் ஒரு வேஷ்டி 10, 12. ரூபாய். ஒரு பனியன், ஒரு பட்டுச்சட்டை 10, 12 ரூபாய். ஒரு பாம்புமடி அங்கவஸ்திரம் 15, 20 ரூ. இவைகளை அணிந்து அலங்கரித்துக்கொண்டால், முகம் துடைக்க வழி

யில்லை. ஆகவே ஒரு கைத்துண்டு வேண்டும். அதற்கு ஒரு ரூபாய். ஆகவே ஒரு நேரம் உடுத்துவதற்கு 30, 40 ரூபாய் செலவாகிறது! இப்படி செட்டு ஒன்றிரண்டு போதுமா? நாலு ஆறு போதுமா? இல்லை! 20, 25 செட்டுகள் பல பல வர்ணங்களிலும் கரைகளிலும் வேண்டும். இல்லாதிருந்தால் சரிப்படாது. இவைகள் தோய்த்து உடுத்த லாயக்கற்றவைகளாதலால் ஒரு முறை உடுத்தியதும் சலவை செய்தாகவேண்டும். இல்லாதிருந்தால் வீடெல்லாம் அழுக்கு மூட்டைகளாகி விடும். ஆகவே ஆள் ஒன்றுக்கு ஒரு வண்ணான் வேண்டும். இவ்வளவு பெருஞ் செலவுசெய்து உடுத்தியும் தற்காலம் நமது தேயத்தின் உணர்ச்சியில் அதற்கு ஒரு மதிப்பும் மரியாதையுமில்லை. மேலும் அறியாமையென்று கருதப்படுகிறது.

நமது நாட்டுப் பெண்கள் எப்படி உடுத்துகிறார்கள்? அதைப் பற்றி அதிகமாகக் குறை கூற இடமில்லையென்று நினைக்கிறேன். ஆறு அல்லது 8 கஜமுள்ள சேலையும் இரவிக்கையும் அணிந்துகொள்கிறார்கள். உடுத்துகிற பாங்கிரியிற் பல வேற்றுமைகளுண்டெனினும் ஆடை அவ்வளவுதான். ஆனால் விலையினால் அதிக வித்தியாசமிருக்கிறது. ஆறு எட்டுக் கஜமுள்ள நூற்சேலை ஒன்று மூன்று ரூபாய் முதல் ஐந்து ரூபாயாகலாம். அதே அளவு பட்டுச் சேலை ஒன்று 18, 20 ரூபாயாகும். ஜரிகை கலந்து விட்டாலோ ஒரு சேலை 250, 300 ரூபாய்களையும் தாண்டிவிடும். அவற்றைச் சுலபமாக உடுத்தவும் முடியாது. நெடு நேரம் உடுத்தவும் முடியாது. பார்க்கிறவர்களுக்குக் குளிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் உடுத்துகிறவர்கட்கு உபத்திரவந்

தானுண்டாகும். ஒரு முட் செடியை அணைத்துக் கொண்டது போலுமிருக்கும். வணங்காது. வேலை யொன்றும் செய்ய விடாது. அலங்கரித்த பொம்மை போல் அப்படியே இருக்கவேண்டியதுதான். ஆதலால் ஜரிகை வேலை செய்த விலை பெற்ற சேலைகள் உபயோக மில்லை. பெண்கள் சாதாரண நூற் சேலை யுடுத்துவது எல்லா வகையாலும் நல்லதாகும். தாண்டினால் ஜரிகைக் கலப்பற்ற பட்டுச் சேலை போதும். உடுத்துகிற மாதிரி யிற் கொஞ்சம் திருத்தம் செய்துகொள்ளுதல் வேண் டும். ஜரிகைச் சேலைகளுக்குப் பணங்கொடுப்பதை அறவே ஒழித்து விடுதல் வேண்டும்.

புருஷர்கள் தான் ஆடையணிவதிற் பல திருத்தங் களைச் செய்து கொள்ளவேண்டியவர்களாக இருக்கி றார்கள். முதலாவது மேல்நாட்டு உடைகளில் வைத்தி ருக்கும் மோகத்தை ஒழிக்கவேண்டும். எட்டு முழவேஷ் டியை மடித்துடுத்துவதை ஒழிக்கவேண்டும். அதை விரித்து மடித்துவைத்து குதிகால் வரையும் பரவவிட்டு உடுத்தவேண்டும். விரித்துடுத்துவதற்குச் சோம்பற் படு தல் கூடாது. நமது இளைஞர்கள் குளித்து வேஷ்டி யைக் கையிலெடுக்கவும் அப்படியே ஒரு சுற்றுச் சுற் றிக் கொண்டு உட்கார்ந்து விடுகிறார்கள். அது சரி யல்ல. நாகரீகமாக உடுத்துவதற்குக் கொஞ்ச நேரம் செலவு செய்தாலென்ன? மடித்துடுத்திப் பின்னும் ஒரு மடிப்பு மடித்து முழங்கால் வரையும் தூக்கிச் சிலர் கட்டிக்கொள்ளுகிறார்கள்!

எனது பிரியமுள்ள இளைஞர்களே! நீங்கள் நன் றாகக் கவனிக்கவேண்டும். வேஷ்டியை விரித்துடுத்து வதே இந்திய மக்களின் தர்மமென்பதை நீங்கள் உணர

வேண்டும். வடநாட்டு இந்தியப் பெருமக்களைப் பாருங்கள். மடித்துடுத்தியிருக்கக் காணமாட்டீர்கள்! ஏகதேசமாக மடித்து உடுத்தினும் அதையே வழக்கமாகக் கையாடாதீர்கள். பட்டுச் சட்டைகளை ஒழியுங்கள். கதர் சிறந்தது. அதிகமானால் மில் துணிகளோடு நில்லுங்கள். அங்கவஸ்திரமாக ஒரு துண்டு அல்லது ஜரிகைக் கலப்பில்லாத வேஷ்டி போதும். பாம்புச் சட்டை போன்ற ஜரிகைத் துப்பட்டா வேண்டாம். ஆடைகளுக்காக ஊதாரித்தனமாகச் செலவு செய்யப்படாது. ஏராளமாக ஸ்டாக் செய்து கொள்ளுதலும் வேண்டாம். ஒவ்வொரு வருஷமும் வேண்டிய அளவு வாங்கிக் கொள்வது தான் நல்லது. ஆடைகளை ஓயாமற் சலவை செய்ய விடப்படாது. கூடிய வரை தோய்த்து உடுத்துதல் வேண்டும். அதுதான் ஆரோக்கியமாக இருக்கும். நிறம் மங்கி அழுக்குத் தோய்ந்து அல்லது பழுப்பாகி விட்டால் ஒரு முறை சலவை செய்து கொள்ள வேண்டியதுதான். ஆனால் எப்பொழுதும் ஆடைகள் வெண்மையாகவும் அழுக்கில்லாமலும் சுத்தமாக இருக்கவேண்டியது அவசியம். முக்கியமாக ஆடம்பரமாக உடுத்துவதுதான் அழகு என்னும் நினைப்பையும் எண்ணத்தையும் ஆண்களும் பெண்களும் மறந்துவிட வேண்டும். இந்திய முறையிற் சாதாரண ஆடைகளைச் சுத்தமாக உடுத்துவதே சிறந்த முறையாகும். குளிர் மழை காலத்திற் கனத்த துணிகளாலும் அல்லது எக்காலத்திலும் கதர் துணிகளாலும் சட்டையிட்டுக்கொள்தல் நல்லது.

13. தெருக்கூத்து

இந்திய மக்களால் அடியோடு ஒழிக்கப்படவேண்டிய ஆபாசக் களஞ்சியங்களில் தெருக்கூத்தும் ஒன்றாகும். தெருக்கூத்துப் பெரும்பாலும் கல்வியறிவில்லாத மூடர்களாலும் தடியர்களாலும் குடியர்களாலும் நடத்தப்படுகிற ஒரு ஆபாசமான கூத்து. தெருக்கூத்தினால் நன்மை ஒன்றுமில்லாததோடு பல தீமைகளுண்டாகின்றன. அவற்றுள் முக்கியமானவை, 1. சுகாதாரக்கேடு, 2. தொத்துநோய் பரவுதல், 3. விபசாரதோஷம், 4. காலிக்கூட்டத்தின் குறும்பு, 5. தொழிலாளர்கட்கு நஷ்டம் இன்னும் பல கேடுகளுமுள.

இத்தகைய பல கேடுகளையும் உற்பத்தி செய்கின்ற தெருக்கூத்திற் சில ஜனங்கட்கு எல்லைகடந்தபிரீதியுண்டு. எவ்வளவு கஷ்டங்களை யனுபவித்தாவது மானம் மரியாதையை இழந்தாவது வருஷந்தோறும் தெருக்கூத்து வைத்து அதை ஒருவாரம் பத்துநாள் வரை இழுத்துக்கொண்டு அதே நினைவாய் அதே வேலையாய்க் கிடந்துழல்கின்றனர். இந்தப் பைத்தியங்கொண்ட மக்களில் வயது சென்ற முதியோரும் கலந்தாடுவது ஒரு வேடிக்கை! வயது. 60-70-75 ஆகியிருக்கும்!! அந்த வயோதிகர் கொஞ்சமும் ஞானமின்றி தெருக்கூத்துப் பொட்டலுக்கு எல்லோருக்கும் முன்போய் இடந்தேடி விழித்தகண் சிமிட்டாமல் இளித்த பல் மூடாமற் கண்டானந்திக்கின்றார். இன்னுஞ் சில பெரியவர்கள் சந்தனம் பூசி வாசனையணிந்து சட்டை துப்பட்டா கைத்தடி முதலிய அழகுவழிய அங்குமிங்கு மலைந்துகொண்டு

கூத்துப்பொட்டலுக்கு மானேஜ்மெண்ட் செய்கின்றனர். இப்படி நடத்தப்படுகிற கூத்தின் தன்மையைக் கேளுங்கள்.

முதலிற் சில நாய் பேய்கள் தோன்றி வாயில் வந்ததை யெல்லாம் உளறியும் ஆடியும் பாடியும் பொழுது போக்கும். பிறகு நடுநிசி 12 மணிக்கு அயன் பார்ட்டுக்கள் தோன்றும். அப்போதுதான் தரித்திரம்பிடித்த சரித்திரம் ஆரம்பிக்கின்றது. இராஜா வேஷக்காரன் தான் கொண்ட கோலத்துக்கேற்ப கம்பீரமாகவும், கண்ணியமாகவும் சரித்திரத்துக்கேற்றபடி சந்தோஷமாகவோ சஞ்சலமாகவோ நடித்துக் காட்டாமலும் பெண் வேஷக்காரன் அல்லது வேஷக்காரி தான் கொண்ட கோலத்திற்கேற்ப நாணம் மடம் அச்சம் உயர்தரப் பெண்ணின் தன்மை ஒன்றுமின்றி உழுந்தடித்த தடிபோல் நின்று வெருகுபோல் விழித்துச் சற்றும் சங்கோசமின்றி ஒரு விலைமாதைப்போல் ஆடிப் பாடி நடிப்பதும் விரும்பிப் பார்க்கத்தக்க நாடகமாகுமா? அதிற் சுவையுண்டா? சந்திரமதி வேஷக்காரன் அல்லது வேஷக்காரி பிள்ளையைத் தேடியெடுத்து மடியில் வைத்துக்கொண்டு புலம்பும்போது பின்னாலிருக்கிற ஒருவனிடம் சோடா வாங்கிக் குடிப்பதும் கொஞ்சம் பேசுவதும் உடனே முன்பக்கம் திரும்பி—மகனே மாண்டாயோ! என்று சொல்லியழுதுவிட்டு அதைப் பின்பாட்டுக்காரர் பாடும்போது வெற்றிலைபாக்கும் கொஞ்சம் புகையிலையும் வாங்கிப் போட்டுக்கொண்டு மாறியும் திரும்பி மகனே மாண்டாயோ!! என்றால் இது என்ன கூத்து! இப்படிச் சரித்திரத்தின் கருத்தும் சந்தர்ப்பமும் சமயமும் அறியாமல் நடிகர்கள் நடிப்பர்.

இராஜா வேலைக்காரன் மந்திரியை நோக்கி மந்திரி! வேட்டை மார்க்கம் செல்லவா? என்கின்றான். மந்திரி வேலைக்காரன் ராஜாவை நோக்கி மகாராஜா! வேட்டைமார்க்கம் செல்லவா ரென்று வினவ, நீயுமிந்த அப்படியே செல்லலாம் என்று மறுமொழி கூறுகிறான். என்ன அர்த்த புஷ்டியான சம்பாஷணை! வேட்டை மார்க்கமென்பதென்ன! அதை அனுசரிக்கவேண்டிய தென்ன? இன்னும் இந்த நெருக்கத்தில் ஆதாரத்தையும் அசட்டுத் தனத்தையும் எடுத்துக்கூற நான் விரும்பவில்லை. அதனுடைய பாகத்தில் சிறிது மட்டும் எடுத்துக்கூறுகிறேன்.

சுகாதாரக் கேடு

வெட்டவெளிப் பொட்டலில் விசுப விட்ட விரித்திருந்த பூமியின் கொதிப்பும் ஆகாயத்தின் உஷ்ணத்தியும் தாக்குதல் வசதிகொடாதபடியால் கொடுமையான நிச்சயம். அதோடு ஜனங்கள் நெருக்கி ஆடுமாடுகளைப் போல் அடைபட்டுக் கிடப்பதும் எத்தனையோ பேர்களின் நீ பொரி, கடலை, (சர்பத், சோடா, கலர்கள்) முதலிய தின்னீர் இலைகளை மருந்தி சுருட்டு பீடி புகைகளை விட்டுக்கொண்டிருப்பதும் மலஜலங்கள் அடக்கி வைப்பவை அசுத்தப்படுத்துவதும், சுகாதாரத்துக்கு எத்தனையும் விரோதமான காரியங்களன்றோ! பாதி ஜனங்கள் நெருக்கத்திற் கொண்டிருக்கிற நோய்களினாலும் அல்பாமையினாலும் சுகாதாரக் கேடுகளைப் பொருட்படுத்தாமல் ஒரு வாரம் பத்து நாளைக்கும் தொடர்ச்சியாக விழித்திருந்த சேர்த்த ஆனந்தத்தைக் கூத்து முடிந்தவுடன் காய்ச்சலாகவும் வயிற்றுவலியாகவும் வயிற்றோட்டமாகவும் சீக்குப்பாகவும் இன்னும் பல நோய்

களாகவும் செலவு செய்கின்றனர்! இதுதான் தெருக்கூத்து பார்த்ததின் சுகம்.

தொத்து நோய்கள்

அம்மை விஷபேதி கடுங்காய்ச்சல் முதலிய தொத்து நோய்கள் ஒரு ஊரிலிருந்து பல ஊர்கட்கும் பரவுவதற்குத் தெருக்கூத்து மிகவும் அநுகூலமானது.

மேலும் குஷ்டரோக முதலிய பயங்கரமான வியாதிகள் பரவுவதற்கும் ஒரு வகையில் அனுகூலமாகவேயிருக்கிறது. குஷ்டரோகி ஒருவன் கூத்துப் பார்க்க வருகிறான். அவன் சர்பத்துக்கடையில் அருந்துகிறான். அதே பாத்திரத்தில் பின்னும் பலரும் அருந்துகிறார்கள். பாகுபாடு விலக்குகள் இல்லை. மலஜலங்களை அவன் கழிக்குமிடத்தில் மற்றவர்களும் நடமாடுகிறார்கள். அவன் எச்சில் துப்புமிடங்களில் பலர் படுத்துறங்குகின்றனர். இப்படியே மற்ற நோயாளிகளுங் கலக்கின்றனர். இந்தக் கலப்பினால் தொத்து நோய்கள் தாராளமாகப் பரவுவதற்கிடமேற்படுகிறது.

விபசார தோஷம்

கெட்ட நடத்தையுள்ள ஆடவர்கட்கும் பெண்களுக்கும் தெருக்கூத்து மிகவும் உபயோகமாக இருக்கிறது. மேலும் ஸ்திரீ புருஷர்கட்கு மனோவிகாரத்தை உண்டாக்கி விபசாரத்திலுள்ள அச்சத்தையும் நாணத்தையும் தெருக்கூத்து போக்கிவிடுகிறது. ஆகவே தெருக்கூத்தினால் விபசார தோஷம் அதிகமாகிறது! சில பெண்கள் தெருக்கூத்தினால் சீரழிந்து போன கதைகள் பலவுண்டு. படித்த முட்டாள்களான புருஷர்கள் அத்தகைய சம்பவங்களை மனதில் வைத்துக்கொண்டு பின்னும் பின்னும் கேடுண்டாகாதபடி தெருக்கூத்துகளை நிறுத்தித் தொலைக்

காமல் மேலும் மேலும் உற்சாகமாக நடத்தி தங்கள் மனைவி மக்களையும் சகோதரிகளையும் நாடகமாடும் பெண்களைப்போல் கூத்துப்பொட்டலுக்குப் போவதற்கென்று சீவி முடித்துச் சிங்காரித்துப் பொட்டிட்டுப் பூச்சூடி விடுகின்றனர்! (அலமருகிக்கின்றனர்) அவர்கள் மனவன்மையில்லாத சாமான்ய ஜனங்களாதலால் பதருகளாகிப் பறந்து விடுகின்றனர். கேடு நேர்ந்த பின்னர் புத்திகெட்ட புருஷர்கள் இஞ்சி தின்ற குரங்குபோல் இருக்கின்றனர்! இத்தகைய கேடுகட்குக் காரணமின்னதென்றறியும் ஆற்றலும் அறிவும் அவர்கட்கில்லாததுதான் பெருங் குறை.

காலிக்கூட்டத்தின் குறும்பு

வேலையற்ற காலிகளுக்கு தெருக்கூத்து ஒரு நல்ல தமாஷ். மற்ற நேரங்களில் அவர்கள் மனித வர்க்கத்திற் சேர்க்கப்படக் கூடியவர்களன்று. தெருக்கூத்தில் அவர்கள் மிகவும் சுயேச்சையுடையவர்களாக இருப்பர். பெண்கள் மல ஜலங்கழிக்கும் இடங்களில் கூட்டமாக நின்று கொள்ளுவர். ஜயகோஷம் செய்வர். சிரிப்பர், கனைப்பர், தும்முவர், இருமுவர், எல்லாக் கேலிக்கூத்தும் செய்வர். ஏனென்று ஒருவர் கேட்டால் உனக்கென்ன போவென்பர். அதற்கு மேற் பேசினால் கைகலப்பர். முன்பின்னறியாத பெண்களிடமும் பாக்கு வெற்றிலை கேட்பர். வெற்றிலைக்குச் சுண்ணாம்பு கேட்பர். பரிகசிப்பர். பார்த்துப் பார்த்துச் சிரிப்பர். உத்தமமான பெண்களாயினும் அந்த இடத்தில் தலை குனிந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை! அந்த ஆக்கினைக்கும் அக்கிரமங்களுக்கும் உட்பட்டுத்தானாகவேண்டும்.

தெருக்கூத்து நடக்கிற ஊரில் பகல் முழுதும் மூதேவி வாசமாகத்தானிருக்கும். யார் முகத்தைப் பார்த்தாலும் முன்னாளிரவு பிரேதம் தூக்கிக்கொடுத்தவன் மூஞ்சி போலிருக்கும். ஊரில் ஒரு தொழிலும் நடக்காது. எல்லோரும் பாயும் படுக்கையுமாகவே கிடப்பர். அப்படிக் கிடப்பதால் அன்றாடம் வேலைசெய்து பிழைக்கிற ஏழை மக்களுக்குப் பெரிய நஷ்டமல்லவா? வேலையற்ற சுகஜீவிகட்கு அதனால் நஷ்டமில்லை. ஏழை மக்களுக்குத் தொடர்ச்சியாக ஒரு வாரம் பத்து நாளைக்கு வேலை கிடைக்காவிட்டால் என்ன செய்வர்?

ஆகவே தெருக்கூத்து எந்த வகையிலும் நல்லதேயல்ல. அதை விரும்புகிறவர்களும் விவேகிகளல்ல. அதற்குச் செலவு செய்யும் பணமும் வீணானதே. அதன் பயனும் கேடானதே. ஆதலால் எனது பிரியமுள்ள இளைஞர்களே! உங்கள் காலத்திலாவது தெருக்கூத்தை அடியோடு ஒழித்துவிடுங்கள்.

14. சூதாட்டத்தின் கேடு

சூதாட்டம் ஒரு கெட்ட காரியம்! தானும்கெட்டு, பிறரையும் கெடுக்கும் ஒரு மதிகெட்ட வேலை. சூதாடுகிற ஒருவன் எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தாலும், சம்பாத்தியமுடையவனாக இருந்தாலும் அவனுக்கு மதிப்புப் போய்விடுகிறது. கௌரவம் போய்விடுகிறது. மாடு மேய்க்கிறவனுக்குள்ள பெருமைகூட சில சமயம் அவனுக்கில்லாமற் போய்விடுகிறது! அறுபது வயது மனிதனாயினும் சூதாடினால் அவனை மனிதனாக மதியாமல்

சூதாடிப் பயல் என்று அலக்ஷியமாகச் சொல்லுகிறார்கள். ஏன்? அவன் செய்யும் காரியம் மதிப்புக்குரிய தல்லவாதலின். சூதாட்டத்தின் நோக்கமென்ன? ஒருவன் பொருளை ஒருவன் அபகரிக்கவேண்டுமென்னும் கொள்ளைக்கூட்டத்தின் மனோபாவத்தைக் கொண்டதாகும். சூதாட்டக்காரர்களுக்கும் கொள்ளைக்கூட்டத்தாருக்கும் மனோபாவத்தில் வித்தியாசமில்லை; ஆனால் ஒன்று மட்டும் வித்தியாசமுண்டு. அதாவது கொள்ளைக்கூட்டத்தார் அகப்பட்டுக் கொள்ளாதவரை வெற்றி பெற்றவர்களாகிறார்கள். சூதாடிகள் எக்காலத்தும் தோல்வியையே அடைகிறார்கள். அதோடு அகப்பட்டுக் கொண்டார்களானால் அதன் பெருமையைச் சொல்லவேண்டியதில்லை.

ஒன்றுக்கும் உபயோகமில்லாதவர்கள், ஒருதொழிலும் தெரியாதவர்கள், நம்பிக்கை நாணயமில்லாதவர்கள், குடியர்கள், சோம்பேறிகள் பலர் சூதாட்டமே தொழிலாக இருக்கிறார்கள். அவர்கள் எதற்கும் தயாரானவர்கள். அவர்களைப்பற்றி நாம் ஒன்றும் குற்றம் குறை கூறுவதற்கில்லை. கொஞ்சம் நல்ல நிலைமையில் கையிற் காசு பணத்துடன் செலவு நடைகளுக்கு இடமுள்ளவர்கள் தொழில் துறையுள்ளவர்கள் ஏன் சூதாடப்போகிறார்களென்பதுதான் விளங்கவில்லை.

ஆட்டம் நடத்துகிற அதிகாரிச் சூதர்கள் சிலருண்டு. அவர்களது தொழில் உலகத்தில் சிறந்தது. மிகவும் பாராட்டத்தக்கது. அவர்கள் சூதாடிகளுக்கு இடவசதி, சாப்பாட்டு வசதி, படுக்கை வசதி, குடி வசதி, தாசி வேசிகளின் வசதி அதாவது விபசாரவசதி ஆகிய எல்லாவசதிகளும் செய்து தந்து மேலும்போலீஸ்

லஞ்சமும் செய்துகொடுத்து இந்த தர்ம காரியத்தைச் செய்து முடிக்கிறவர்களாக இருக்கிறார்கள். சூதாட்ட விஷயத்தில் போலீஸ் நடவடிக்கைகள் மிகவும் விநோதமானவை. பெரிய அதிகாரிகள் வந்த சமயம் போலீஸ் போலீஸ்தான் சந்தேகமில்லை. இல்லாதபோது காப்பிக் கிளப்புத்தான். பெரிய அதிகாரிகள் வருவதுபோவது சமயம் சந்தர்ப்பம் முதலிய எல்லா உளவுகளும் சூதாடிகளுக்குப் போலீஸ் மூலமாகவே கிடைக்கின்றனவாம். அதிசயமல்லவா? அப்படியில்லாதிருந்தால் காரைக்குடி முதலிய பெரிய நகரங்களில் வருஷக்கணக்காக பெரிய ஆட்டம் நடக்கமுடியுமா? நம் நாட்டுப் போலீஸ் நிர்வாகம் நல்ல காரியங்களைப் பார்க்கினும் கெட்ட காரியங்களுக்கே அனுகூலமாக இருந்து வந்திருக்கிறது.

இனிமேலாவது காங்கிரஸ் ஆட்சியில் லஞ்சப்பேய் ஒழிந்து போலீஸ் நிர்வாகம் நாணயமாகவும், திறமையாகவும், நடைபெறவேண்டும். சூதாட்டச் சட்டம் இன்னும் கடுமையாக இருக்கவேண்டும். அதிகாரிச் சூதர்களுக்கு ஆறு மாதமாவது கடின காவல் சொல்லும்படி சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டும். வெறுஞ் சூதாடிகளுக்கு அபராதம் விதிப்பதோடு விடாமல் மூன்று மாதமாவது வெறுங்காவல் சொல்லவேண்டும். தேசத்துக்கு குடிகாரர்களைப் பார்க்கினும், சூதாடிகள் மிகவும் அபாயமானவர்கள். குடிகாரர்கள் குடியோடு நிற்பார்கள். சூதாடிகள் சூது, குடி, விபசாரம் மூன்று குற்றமும் செய்வார்கள். ஆதலால் சூதாடிகள் விஷயத்தில் கடுமையான சட்டதிட்டங்கள் அவசியம் வேண்

டும். தயை தாக்ஷண்யமில்லாமல் நீதிபதிகள் தண்டித்து சூது தொழிலையே அடக்கியாளவேண்டும்.

எனது பிரியமுள்ள இளைஞர்களே! நீங்கள் இந்தக் கெட்ட காரியமான சூதுத்தொழிலை மனதாலும் நினைக்க வேண்டாம்; கண்ணாலும் பார்க்கவேண்டாம்.

15. அடிமைப் புத்தி ஒழியவேண்டும்

இந்திய மக்களுக்கே அடிமைப் புத்தி ஒழியவில்லையென்று தேசாபிமானிகள் வருத்தப்படுகின்றனர். அதிலும் நம்மவர் சிலரின் அளவு கடந்த அடிமைப் புத்தியை யென்னென்று வருணிப்பது! பணக்காரர் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். பெரிய மனிதரென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அத்தகையார் ஒரு போலீஸ் அதிகாரியிடம் நடந்துகொள்வதையும் ஒரு கோர்ட்டில் சாக்ஷியம் கொடுப்பதையும் ஒரு வக்கீல் அல்லது ஒரு ஆபீசரிடம் சாதாரணமாகப் பேசுவதையும் பார்த்தால் வெட்கமாக இருக்கிறது. சிநேக முறையில் ஒருவர்க்கொருவர் மரியாதை செய்துகொள்ளுவதையும் நடந்து கொள்வதையும் பற்றி இங்கு நான் ஒன்றும் சொல்லவரவில்லை. அது மனித சமூகத்தின் கடமை. சுயமரியாதையை யிழந்து அடிமைப் புத்தியுடன் நடந்துகொள்வதைத்தான் குறிப்பிடுகிறேன். அது தான் வருத்தமாக இருக்கிறது. சுப்பிரமணிய பாரதிகள் கூறுகிறபடி,

“நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்

அஞ்சியஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
சிப்பாயைக் கண்டஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம் பதைப்பார்
துப்பாக்கி கொண்டொருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்
அப்பாலெவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டு பயந்தெழுந்து நிற்பார்
எப்போதும் கைகட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள்போ லேங்கிநடப்பார்
நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்

ஒரு போலீஸ் அதிகாரியிடம் ஒரு வாக்குமூலம் பதிவு செய்வதென்றால் வெகுதூரத்திலிருந்தே அங்கவஸ்திரத்தை இடுப்பிலிறுக்கிப் பதுங்கி ஒதுங்கி நடைதளர்ந்து மிரள மிரள விழித்து அவ்வதிகாரியைக் கண்டதும் அவசரத் தண்டனிட்டு எஜமான் பல்லவி பாடி பின்னும் பார்த்து முன்னும் பார்த்து பேய்விழி விழித்து நினைத்ததைச் சொல்லவும் முடியாமல் தவிக்கின்றனர். இந்த நிலைமையில் அந்த அதிகாரி ஒரு அதட்டு அதட்டிவிட்டால் மயக்கம்போட்டுவிடும். பிறகு சித்தந்தெளியச் சில நாட்கள்கூடச் செல்லும். இவ்வளவு அச்சமும் கூச்சமும் ஆபாசமும் ஏனென்று கேட்கிறேன்? போலீஸ் அதிகாரிகள் என்ன புலியா, கரடியா. அவர் ஒரு உத்தியோகஸ்தர்தானே. நம்முடைய குறைபாடுகளைச் சொல்லிக்கொள்வதற்கு என்னபயம்? வகைதெரியாமல் இவர்கள் இப்படி நடுங்குவதால் வீணாகச் சிலசமயம் பணம் போவதோடு அதிகார மனப்போக்குடைய சில உத்தியோகஸ்தர்கள் இவர்களைக் கொஞ்சமும் மதி

ரெட்டியார் நாயுடு ஐயங்கார் முதலியார் நாடார் பிள்ளையென்று மற்ற வகுப்பாரைக் கூப்பிடுவதுபோல் நம்மவரையும் செட்டியார் என்று கூப்பிட்டாலென்ன? அப்படி கூப்பிடும்படி கட்டாயப்படுத்த நமக்கு உரிமை யிருக்கிறது. ஆனால் அப்படிக் கூப்பிடாததைப்பற்றி கோபப்படுகிறவர்கள் எத்தனை பேர்? தொண்ணூறு பங்கு பாக்கியுள்ளவர்களில் பத்து பேர்கள் கோபமடைந்தும் என்ன பயன்? நாம் அப்படிக் கூப்பிடுவதிருக்கட்டும். நீங்கள் செட்டியார் என்றே தங்கள் பெயரைச் செட்டியென்று போட்டுக்கொள்ளுகிறார்கள். அண்டிபென்ட் முதலிய தலைவர்கள் கூட தங்கள் பெயரை செட்டியென்றுதான் எழுதிக்கொள்ளுகிறார்கள். அப்படியானால் அடிமைப்புத்தி ஒழியவேண்டுமேயன்றி பிறரைக் குறைகூறுவதிற் பயனென்ன?

ஒரு வக்கீலையோ பேசப்போனாலும் காரணமாகக் கூச்சமில்லாமற் பேசுகிறார்களா? இல்லையே! அவர் நம்முடைய கூலியைப் பெறுகிறவர்; நம்முடைய வழக்குச் சம்பந்தமாய்ப் பாட்டில் நம்முடைய மனிதர்? மேலும் ஒரு கூலியாள்; அவரிடத்திற்கூட ஏன் நாடகமாடவேண்டுமென்று கேட்கிறேன்?

ஒரு ஆபீசரிடம், இன்கம்டாக்ஸ் ஆபீசரென்று வைத்துக்கொள்ளுவோம். அவர் கணக்குகளில் பார்த்து வரி விதிக்கவேண்டிய ஒரு உத்தியோகஸ்தர். கணக்குகள் சரியில்லாதிருந்தாலும் தவறாக இருந்தாலும் அவர் ஒன்றும் தயாவிஷயமாகச் செய்யக்கூடியதில்லை. ஆனால் அக்கிரமமாக அவர் ஒன்றும் செய்வதற்குமில்லை. அவர் பட்டோடு முடிந்துவிடும் காரியமுமில்லை. ஆகவே அப்படியொரு ஆபீசரிடம் கௌரவமான முறையில்

சம்பாஷிக்காமல்—நடந்து கொள்ளாமல்—ஆண்டான் அடிமை முறையில் நடந்து கொள்வது என்னமதி? இது போல் மற்ற ஆபீசர்களிடமும் தாராளமாக பேசி, தாராளமாக நடந்து கொள்வதில் என்ன தடை? ஏன் அஞ்சவேண்டும்? ஏன் நாணவேண்டும்? ஏன் கூன வேண்டும்?

இந்த உலகத்தில் வியாபாரிகளுக்குத் தான் சுதந்தரமும் அதிக மதிப்புமுண்டென்பது நம்மவர்களுக்குத் தெரியாதா? நாம் சுயேச்சையான வியாபாரிகள். நமக்கு எந்தவிதமான நிர்ப்பந்தமுமில்லை. ஒரு வைசிராய்க்குக்கூட மேலதிகாரிகளுக்கு வகை சொல்ல வேண்டிய பொறுப்புண்டு. நமக்கு நாமே அதிகாரிகள். நாம் சட்ட விரோதமான காரியங்களைச் செய்யாத வரையில் நாம் அஞ்சவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. நம்முடைய காரியங்களுக்கு நாமே அரசர்கள். நாம் எந்த அதிகாரிக்கும் பயப்படவேண்டியதில்லை. அதிகாரிகள் என்பவர் உண்மையிற் பொது ஜன ஊழியர்கள். அக்கிரமஞ் செய்வோருக்குத்தான் அவர்கள் அதிகாரிகள். மற்றவர்கட்கு உதவிசெய்ய வேண்டிய ஊழியர்கள்தான். சுயேச்சையும் சுதந்தரமுமுள்ள நாம் அடிமைப் புத்தியை ஒழித்துவிட்டு மனிதத் தன்மையை யடையவேண்டுமன்றோ?

பழய மனிதர்கள் போகட்டும். எனது பிரியமுள்ள இளைஞர்களாவது இந்த வழியைப் பின்பற்றுவார்களென்று நம்புகிறேன்.

---

16. சொல்லுறுதியும் நிதானமும்.

ஏழையாயினும்சரி பணக்காரனாயினும்சரி, சொல்லுறுதியும் நிதானமும் வேண்டும். ஏழை மக்களைப் பார்க்கிலும் பணக்காரனுக்குச் சொல்லுறுதியும் நிதானமும் அவசியம் வேண்டும். சொல்லுறுதியும் நிதானமுமில்லாதவனுடைய செல்வத்துக்கு ஒரு பெருமையும் இல்லை. சொல்லுறுதியும் நிதானமுமில்லாத மனிதன் மனிதனுமல்ல!

சொல்லுறுதியும் நிதானமுமில்லாத சில தனவந்தர்கள் தாங்கள் மிகவும் தந்திரமாகவும் சமர்த்தாகவும் கெட்டிக்காரத்தனமாகவும் காலந் தள்ளுவதாக மனோராஜ்யம் செய்துகொண்டு மகிழ்வதுமுண்டு. அவர்கள் தங்களைப்பற்றிப் பிறர் என்னபேசிக் கொள்கின்றனர். எப்படி மதித்திருக்கின்றனர் என்று தெரிந்துகொள்வதில்லை. நிதானங்கெட்ட நடைப்பிணமென்று தங்களை மதிக்கிறார்களென்பதும் அவர்களுக்குத் தெரியாது. வாய்ப்பேச்சுக் காற்றுக்குச் சமானம் என்று ஒரு வேதவாக்கிருப்பதாக அந்தக்கூட்டம் அடிக்கடி சொல்லிக் கொள்வதுண்டு. ஆகவே வாய்ப்பேச்சுக்கு அவர்கள் மதிப்பு வைப்பதே யில்லை. தங்களிடத்தில் சத்தியமில்லாததினால் உலகத்திலேயே சத்தியமில்லை யென்பது இவர்களுடைய கருத்து.

நான் அறிந்த தனவந்தரொருவர் மிகவும் சத்தியங் கெட்டவர். சொல்லுறுதி யென்பது ஒரு சிறிதுமில்லாதவர். நிதானம் அவர் அடியில் மிதித்தவர் கட்குக்கூட வருவது சந்தேகந்தான். அவரிடத்து ஒரு இடையன்

வேலைக்காரனாயிருந்தான். அவன் மிகவும் சுத்தவீரன். பொய் சொல்லத் தெரியாதவன். பரம யோக்கியன். சகித்து பிள்ளைகுட்டிக்காரன். ஏதோ பொல்லாத காலத்தில் வாய்ப்பட்டு இந்தப் பண்ணையிற் புகுந்து வேலைக்காரனான். அந்நாளையே வேலைக்காரர்க்குத் சம்பளம் கொடுக்கும் வீட்டை வழக்கம் போலவே பிரபு விட்டு இல்லை. முதலில் உன்னை ஆளையாக்கிவிடுகிறேன். துளையாக்கிவிடுகிறேன். ! உன் குடியை அப்படியே என் தோளில் தூக்கி விடுகிறேன் என்று அவனை வார்த்தைகளால் அதட்டு கொண்டு எசமான் வேலையாட் களைச் சொல்லும்படி நாலு மூன்று மாதம் சென்று ஆம் நீ செய்வதெல்லாம் தவறு உனக்கு வேலை தெரிய வில்லை. ஏனோ அப்படிச் செய்துவிட்டாய். இதை இப்படிச் செய்துவிட்டாய் என்று குற்றங் குறைகளைக் கூறி கண்டித்து வந்தும் தொடர்ந்தும், அந்த ஏழை மகன் குயர சம்பளம் வேண்டாம் சம்பள விட்டாற் போதும் என்று வந்தவழி பார்த்துத் தப்பித்து ஓடி விடுவதும் வழக்கம். இந்த விஷயம் கோனானுக்கு எப்படித் தெரியும்.

பிள்ளைகுட்டிக்காரனான கோனான் ஒருநாள் வேலை தேடிக்கொண்டிருந்தான். பிரபு எப்படியோ அவனைக் கண்டுபிடித்தார். கோனானே! நீ நல்ல மனிதன். உன் தகப்பன் காலத்து நிரம்ப வேண்டியவனாக இருந்தான். நீ சாகும் வரையில் நம்மள் வீட்டிலிருக்கலாம். குடும்ப காரியங்களைப்பற்றி உனக்குக் கவலை வேண்டியதில்லை யென்றார்! இந்தக் குளிர்ந்த வார்த்தைகள் வறுமை வாய்ப்பட்டுக் கிடக்கும் கோனான் காதில் மழை பெய ததுபோலிருந்தன. மகாராஜா! சொன்னபடி கேட்கத்

தயாராக இருக்கிறேன். எசேதா உங்கள் பிள்ளைபோல் காப்பாற்றுங்கள். நானோ அப் பிள்ளையுட்டிக்காரனைக் கிளப்பிட்டேன். சாப்பாட்டுக்கு க்ஷாமம் கஷ்டமாக இருக்கிறது. பிள்ளைகளெல்லாம் சின்னவையும் சிறுவயாக இருக்கிறது. வீடு இடிபட்டு விழுந்துபோயிற்று. உழவு மாடும் செத்துப்போயிற்று. அப்படிப் பலவிதத்தாலும் கஷ்டகாலமாக இருக்கிறது எசேதா காப்பாற்றுங்கள் என்று கண்ணீர் ததும்பத் தன் நிலைமையை தெரிவித்துக் கூறினான். அடே வைத்தியக்கார வருத்தப்படாதே. உன்னுடைய நல்லகாலம் இன்று நம் கண்ணிற் பட்டு விட்டாய். உனக்கு இனிக் கவலையே வேண்டாம். கொஞ்சம் வேலையிருக்கிறது. வேலை முடிந்தவுடன் நம்முடைய பெரிய வண்டி மாடுகளிரண்டையும் அப்படியே தருகிறேன். தனவாய் வயலில் இருபதாம் நடுகை நிலத்தை நீயே பயிரிடலாம். வேறு என்ன வேண்டும்! இதற் கென் வருத்தப்படுகிறாய் என்றார் பிரபு. கோனார் கொஞ்சம் அ [illegible] னார்! நாறாறு ரூபாய் வரை கடனிருக்கிறது. கடன்காரன் வதைதைய நெருக்குகிறான். முதலில் அதைத் தீர வழி பண்ண வேண்டும். என்றான். சரி கடனையாவன் வரட்டும். கைவசமுள்ள சொத்துக்களை ஒரு சிறு எழுதிப் போட்டுவை. அடுத்த வருஷம் கடனையும் கொடுத்து நல்ல வீடும் கட்டித்தருகிறேன். வேறு என்ன வேண்டும். என்றார் பிரபு. பிள்ளைகுட்டிகள் வயிற்றுக் கஞ்சிதான் இனி வேண்டியதென்றார் கோனார்.

சரி இவ்வளவு தானே விசையம். எழுந்திரு. வா வேலையைப் பார் என்றார் பிரபு. பல நாட்களாக வேலையாட்களில்லாமல் பாழ்பட்டு கிடந்த வேலைகளை வயல்

லாம் கோனார் வெகு சிரமப்பட்டுத் துரிதமாகச் செய்து மாடுகன்றுகளையெல்லாம் நீராட்டிப் பாராட்டி அவ்விடங்களையெல்லாம் சுத்தஞ்செய்து சமையலும் செய்து வந்தார். இரண்டு ஒரு கலம் கேப்பைமட்டும் கோனாருக்கு அளந்து தரப்பட்டது. கோனார் பெரும் நினைப்பாக நினைத்து மேலே ஒன்றும் கேளாமல் அங்குமிங்குமாகக் கடன் வாங்கி வீட்டுக்கு வைத்துவிட்டு பிரபுவின் காரியங்களைக் கண்ணுங்கருத்துமாகச் செய்து வந்தார். ஒரு வருஷமாயிற்று. பொறுத்திருந்த கடன்காரன் வந்துவிட்டான். புதுக்கடன்காரரும் வந்துவிட்டனர். கோனார் பிரபுவை நோக்கினார். பிரபு ஆகாயத்தை நோக்கினார். ஒரு வழி பண்ணவேண்டுமென்றார் கோனார். உடனே விலகிக்கொள்ளும்படி சொன்னார் பிரபு. சம்பளமாவது....என்றார் கோனார். சரியாய்ப் போச்சென்றார் பிரபு. கலக்கேப்பைதானே என்றார் கோனார். களவுக்கு வகையென்னவென்றார் பிரபு. கடவுள் கூலியைக் கொடுக்கட்டுமென்று கதறினார் கோனார். பஞ்சாயத்தில் வைத்துப் பாதிச் சம்பளம் தீர்மானமாயிற்று.

இந்தமாதிரி இரக்கமற்ற அரக்கர்களான தனவந்தர்கள் இந்தக்காலத்தில் மலிந்துகிடக்கின்றனர். பொய் சொல்லவும் ஏமாற்றவும் அவர்கள் கொஞ்சமும் அஞ்சுவதேயில்லை. தேவை வந்தபோது ஒருவிதமாகப் பேசுவர். தேவையில்லாதபோது வேறுவிதமாகப் பேசுவர். நிதானமென்பது மருந்துக்குக்கூட அவர்களிடம் கிடையாது. பணம்தான் அவர்கட்குப் பிரதானம். பணத்துக்காக எவ்வளவு இழிவான காரியங்களைச் செய்யவும் பின் வாங்கமாட்டார்கள்.

தாழ்ந்த ஜாதி யொன்றிருக்குமானால் அதுவே சொல்லுறுதியும் நிதானமு மில்லாதவர்களின் ஜாதியாகும். அவர்களை நீண்டத்தகாதவர்களாகவும் இருக்கின்றனர். வறுமையின் கொடுமையினாற் சிலர் திருடுகிறார்கள். அப்படி திருடுகிறவர்களிலும் சிலர் சொல்லுறுதியும் நிதானமும் உடையவர்களாக இருக்கக் காண்கின்றோம். சில திருடர்கள் ஒரு ஊருக்கு அல்லது குறிப்பிட்ட ஒரு வீட்டுக்கு இனி வருவதில்லையென்று உறுதி கூறிவிட்டார்களானால் ஒரு நூற்றாண்டு வரையிலும் அந்தச் சொல்லைக் காப்பாற்றுகிறார்கள்! இந்தத் திருடர்களின் சத்தியமும் நிதானமுங்கூடச் சில பணக்காரருக்கு இருப்பதில்லை. முதல் நாட் பேசிய பேச்சை மறுநாள் மாற்றிப்பேசுகிற உடும்பு மக்களுமிருக்கின்றனர். (உடும்புக்கு இரண்டு நாக்குகளுண்டு) வருஷமெல்லாம் ஹரிச்சந்திர நாடகம் பார்க்கிறார்கள். ஹரிச்சந்திரன் எப்படிப் பெருமை பெற்றானென்பதை அவர்கள் உணர்வதில்லை! ஆதலால் எனது பிரியமுள்ள இளைஞர்களே!

நீங்கள் எந்த நிலைமையிலும் சொல்லுறுதியுடையவர்களாகவும் சத்தியந் தவறாதவர்களாகவும் இருக்க வேண்டும். உங்கள் வார்த்தை கேவலம் காற்றிற் பறக்கும் தூசுபோலாகாமல் கல்லிலும் செம்பிலும் அடித்த எழுத்துப் போலிருக்கவேண்டும். நீங்கள் அசைக்கத் திருப்பமுடியாத நிதானஸ்தர்களாக வாழ வேண்டும். அப்போதுதான் நீங்கள் கீர்த்திவாய்ந்த பெரிய மனிதர்களாக முடியும். பொருளீட்டுவதற்குப் பொய்யும் புரட்டும் வேண்டியதில்லை. சத்தியமும் நிதானமும் சகல பாக்கியங்களையும் தரக்கூடியவை.

பொருளீட்டுதற்கு அவை யிரண்டு நற்குணங்களுமே மூலதனமாகும். சொல்லுறுதியும் நிதானமுமில்லாதவர்களை நீங்கள் துரும்பென மதியுங்கள்.

---

17. ஜோதிடத்தின் ஆபத்து

உயர்ந்த கலைகளில் ஜோதிட சாஸ்திரமும் ஒன்றாகும். அது நுட்பமான ஒரு கணித சாஸ்திரமாகவுமிருக்கிறது. அப்படியிருந்தாலும் கடல்போல விரிந்துகிடக்கும் அந்த சாஸ்திரங்களை உள்ளபடி ஓதியுணர்ந்து, கிரகங்களின் நிலையையறிந்து அவற்றின் அதிவேகமான மாறுதல்களை யறிந்து அவற்றின் குணகுணங்களை ஆராய்ந்து அதன் நுட்பமான பலனைத் தெரிந்து ஒருமனிதன் கூறுவதும் அல்லது நடப்பதும் சாமான்யமான காரியமல்ல. மனித அறிவும் காலமுங்கூட அதற்குப் போதுமானதல்லவென்று கூறினும் மிகையாகாது. ஜோதிட சாஸ்திரத்தையறிந்து ஒருவன் பலன் கூறுவதென்றால் பல சக்கரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நின்று நிமிடத்துக்கு ஆயிரமைல் வேகத்தில் சுழன்று கொண்டிருக்கும்போது அவைகளை ஊன்றிக் கவனித்து அவற்றின் ஆரங்களை யெண்ணிக் கணக்கிட்டுக் கூறுவதுபோலாகும். சாதாரண மாட்டுவண்டிச் சக்கரம் ஒன்று சுழன்றுவரும்போதே அதன் ஆரங்களை நம்மால் எண்ணமுடியவில்லை. சில சமயம் பிரித்து அறியவுங்கூட முடியவில்லை. அப்படியிருக்க அதனினும் பலகோடி மடங்கு வேகமாகவும் நுட்பமா

தலும் சுழன்று கொண்டிருக்கும் கிரகச் சக்கரங்களை யாராய்ந்து பலன் கூறுவது சாமான்யமான காரியமென்று நாம் எப்படி நினைப்பது?

மேலும் இருநூறு கோடி மக்கள் வாழும் இந்த உலகத்தில் ஒரு நிமிடத்துக்கு எத்தனையோ குழந்தைகள் பிறக்கின்றன. ஒரே நாள் ஒரே நாழிகை ஒரே நிமிஷம் ஒரே நக்ஷத்திரம் ஒரே லக்னத்திற் பிறக்கிற பலகுழந்தைகளின் வாழ்வும் வயதும் குணமும் மனமும் செயலும் தொழிலும் அதிர்ஷ்டமும் வேறு வேறாக இருப்பதைப் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோம். அப்படியிருக்கும்போது ஸ்தூலமான ஜோதிடப்பலனை யெப்படி நம்புவது? ஜோதிடத்தைப்பற்றி மனித சமூகம் அறிய முடியாத ஒருவிதமான கணக்கும் அதற்கு சூக்குமமான பலனும் வேறாக இருக்கிறதென்று அனுமானிக்க வேண்டியதைத் தவிர வேறு நம்புவதற்கு உண்மையான வழி தெரியவில்லை. ஆகவே ஜோதிட சாஸ்திரம் உண்மையானதெனினும் ஜோதிடர்களில் பெரும்பாலோர் பொய்யர்களாகவே யிருக்கிறார்கள். ஜோதிடத்தையும் ஜோதிடர்களையும் நம்பி எத்தனையோ மக்கள் ஏமாந்து போயினர்! எத்தனையோ மக்கள் நஷ்டமடைந்தனர். எத்தனையோ மக்கள் கஷ்டமடைந்தனர்.

ஒரு தொழில் அல்லது வியாபாரம் செய்வதற்கு அனுகூலமான காலம் எது வென்பதை யறிந்து செய்வதற்கு ஜோதிடர்களை நம்பி அவர்கள் குறிப்பிட்டகாலத்திற் செய்து எதிர்பாராத விதமாகப் பெரிய நஷ்டத்தை யடைந்தவர்கள் எத்தனையோ பேர்களுண்டு! அவர்கள் மீளமுடியாமலே போயிருக்கிறார்கள். ஜோதிடப் பைத்தியம் பிடித்த என் நண்பர் ஒருவர் எடுத்த காரியங்கட்

கெல்லாம் அந்தக் காரியம் சிறிதாயினும் பெரிதாயினும் ஜாதகம் பாராமல் நாட்பாராமல் நக்ஷத்திரம் பாராமற் செய்வதேயில்லை. அவர் தன்மட்டில் ஒரு ஜோதிடராகி விட்டாரெனினும் ஜோதிடர்களிடத்தில் அதிகப் பிரியமுடையவராக இருந்தார்! ஜோதிடரென்று சொல்லிக்கொண்டு ஒருவர் வந்துவிட்டாற் போதும். அவருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து, ஆதரித்து அன்பு பாராட்டி ஜோதிட சாஸ்திரங்களைப் புரட்டிப் புரட்டி மற்ற வேலைகளை யெல்லாம் விட்டு அதே வேலையாக ஆராய்ந்து புதிய விஷயங்களையறிந்து ஆனந்திப்பார். ஜோதிட சாஸ்திரங்களில் அவருக்கிருந்த நம்பிக்கை சொல்லுந்தரமன்று! இருபத்து மூன்றாவது வயதில் அவருடைய பிதா மரணமடையும்போது போதிய பொருட் பலமும் ஏனைய சவுகரியங்களும் அவருக்கிருந்தன. ஆனால் அவருடைய ஜாதக ரீதியாக நாற்பதாவது வயதில் அவர் ஒரு கோடீஸ்வரனாகவேண்டியவராக இருந்தார். அவரது நண்பர்களான நூற்றுக்கணக்கான ஜோதிடர்களும் அந்த விஷயத்தில் அபிப்பிராயபேத முடையவர்களாக இல்லை. எனினும் எந்த வழியாக அவ்வளவு பெருந்தனம் வரப்போகிற தென்பதில் மட்டும் சில அபிப்பிராய பேதங்களிருந்தன. வயது முப்பத்தேழாகிவிட்டது. இன்னும் மூன்று வருஷங்கள் தானிருக்கின்றன. அதுவரை ஒரு பலனுமில்லாததோடு கைப்பொருள் பெரும்பாலும் செலவாகிவிட்டது. அதிலும் ஜோதிடர்களுக்கும் ஜோதிட நூல்களுக்குமே அதிகம் செலவாயிற்று. செய்த தொழில்களிலும் இலாபமில்லை. கோடிக்கணக்கான பணம் மூன்றுவருஷத்தில் வருவதென்றால் அதற்

குச் சுருக்கமான வழி வேண்டுமென்றே! பிரபல ஜோதிடரொருவர் குதிரைப் பந்தயம் அல்லது லாட்டரிதான் அதற்கு வழியென்றார். நமது நண்பர் லாட்டரியென்று காதிற்பட்டவைகட்கெல்லாம் சீட்டு வாங்கினார். அதற்குப் பெரும்பொருள் செலவாயிற்று. ஒன்றும் வரவில்லை. வருஷம் நெருங்கிவிட்டது! குதிரைப் பந்தயத்திற் புகுந்தார். எல்லாம் குட்டிச்சுவராகிவிட்டது. கைப்பொருளும் போய்விட்டது. கடனும் அதிகமாகிவிட்டது. வாரண்டுக்கும் பிடிபட்டார். ஐ. பீ. யும் தாக்கல் செய்தார். வயதும் நாற்பதாகி அதற்கு மேலும்ஆகிவிட்டது. ஆண்டிபரதேசிகளைப்போல் வயிற்றுச்சோற்றுக்கு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார். இது தான் ஜாதகத்தை நம்பியதற்குப் பலன்! ஜாதகப்பலனை நம்பி இத்தகைய ஆபத்துகட்கு ஆளான மனிதர்களின் கதைகள் பலவுண்டு. இது இப்படியிருக்கட்டும். ஒரு பிரபல ஜோதிடரின் கதையைக் கேளுங்கள். நாகப்பட்டினம் அவருடைய ஊர். சுமார் 15 வருடங்கட்கு முன் அவர் மலாய் நாட்டுக்குப் போய் ஜோதிடங் கூறிப் பொருளீட்டி வரவிரும்பி எனக்கு வேண்டிய ஒரு பெரிய மனிதரையும் அழைத்துக் கொண்டு என்னிடம் சிபார்சுக் கடிதங்கள் வாங்கிப்போக வந்திருந்தார். அந்தக் காலமும் அவ்வளவு சுபிக்ஷமானதல்ல. நான் கடிதங் கொடுக்குமுன் அவரிடம் பல சமாதானங்களைக்கூறினேன். அவர் ஒரே பிடியாக நின்றார். அப்படியானால் உங்கள் ஜாதகரீதியாக உங்களுக்கு இந்த சமயம் மலாய் நாடு போனால் பொருள் சேருமா? என்று கேட்டேன். அவர் மிகவும் சந்தோஷமடைந்து தம்முடைய ஜாதகச் சுவடியை யெடுத்து எனக்கு விரிவாக அதன்

சாரங்களைக்கூறி, அனேகம் பாட்டுக்களும் சமஸ்கிருத சுலோகங்களும் எடுத்துக்கூறி அந்தச்செய்யுள்களுக்குப் பொருள்கூறி, தன்னுடைய வாழ்நாளில் இதுதான் ஒரு நல்ல சமயமென்றும் அதுவும் கடல் யாத்திரை செய்து கிழக்கிற் சென்று ஒரு பெருந் திரவிய லாபத்தை யடையக்கூடிய காலமிதுதானென்றும் நீண்ட நேரம் பிரசங்கித்து முடித்தார். அந்த நீண்ட பிரசங்கத்தைக் கேட்ட பின்னும் எனக்கு அது ஒரு வேடிக்கையாக இருந்ததன்றி கொஞ்சமும் நம்பிக்கை வரவில்லை. ஆயினும் அவருடைய ஆசையைக் கெடுக்க மனமில்லாமல் மலாய் நாட்டிலிருந்த எனது ஆப்த நண்பர்கள் சிலருக்கு சிபார்சுக் கடிதங்களை யெழுதிக் கொடுத்தேன். பெற்றுக்கொண்டு பினாங்கு சேர்ந்து ஒரு கடிதமும் ஈப்போவிலிருந்து ஒரு கடிதமும் மலாக்காவிலிருந்து ஒரு கடிதமும் எழுதியிருந்தார். மூன்று மாதஞ் சென்று சிங்கப்பூரிலிருந்து அவரது மகன் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில்:—

அன்புள்ள ஐயா!

எனது பிதா இரண்டு மாதமாக நோயுற்று சிங்கப்பூர் ஆஸ்பத்திரியிலிருந்து எனக்குத் தந்தியடித்திருந்தார். நானும் உடனே புறப்பட்டு இங்கு வந்து சேர்ந்தேன். கூடியவரை வைத்தியஞ் செய்தும் குணமடையாமல் ஒரு வார முன் சிவலோகப் பிராப்தி யடைந்துவிட்டார். அவர்களிடத்து அன்புள்ள தங்களுக்கு இந்த துக்க சமாச்சாரத்தை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்! என்று எழுதப்பட்டிருந்தது. அதைக்கண்டு நான் ஆச்சரியமும் வருத்தமுமடைந்தேன். இவ்வளவு பெரியஜோதிஷர் தான் மரணமடை

யும் காலத்தைப் பொருளீட்டுங்காலமென்று நினைத்துக் கொண்டாரென்றால் ஜோதிடத்தின் ஆபத்தை யென்னென்று கூறுவது! ஆதலால் எனது பிரியமுள்ள இளைஞர்களே! நீங்கள் உங்கள் வாழ்நாளில் ஜோதிடத்தை நம்பி எந்தக் காரியத்தையும் செய்துவிடவேண்டாம். காலதேச வர்த்தமானங்களை நிதானித்து சமயம் சந்தர்ப்பமறிந்து பேராசையை மேற்கொள்ளாமல் அமைதியாக முயற்சி செய்தலே நல்லது. ஆனால் கிடைத்ததற்கு நீங்கள் திருப்தியடையத் தயாராக இருக்க வேண்டும். பெரிதாக ஒன்றை நினைத்து ஏமாந்தவிடத்து ஏக்கமடைந்து மனமுடைந்து வருந்தும் துன்பத்துக்கு நீங்கள் எப்பொழுதும் ஆளாகிவிடாமல் தப்பித்துக்கொள்ளவேண்டும். அதுதான் நீங்களறிந்து கொள்ளவேண்டிய நல்ல ஜோதிடம்.

18. ஜோதிடக் கூற்று

ஜோதிடத்தைப்பற்றிச் சில கூறினேன். அது பற்றி இன்னும் சில பித்தலாட்டங்களையும் சாமான்ய ஜனங்களின் சித்தந்தெளிய இதிற் கூறுகிறேன்.

எட்டிலடங்காத எழுதி முடியாத எண்ணற்ற ஜீவராசிகளையுடைய இந்த உலகத்தில் மனிதவர்க்கத்தைச் சேர்ந்த பிராணிகள் இருநூறு கோடி யாகின்றனர். அந்த இருநூறு கோடி மக்களில் ஒரு பிராணி ஜனித்த நாள் நக்ஷத்திரத்தைக் கண்டுபிடித்து அதிலிருந்து நமது கேரளத்தார் கூறுகிறபடி, "வன்னாடல் போல்

பரன்னுகிடைக்கும்" ஜோதிட நூல்களை யாராய்ந்து வருஷப்பலன் மாதப்பலன் தினப்பலன்வரையிற் கூறுவதென்றால் சாமான்யமான காரியமா! கரடிச் சடையில் ஒரு பேன் புழுவைக் கண்டெடுப்பது போலாகுமன்றோ!

அப்படிப் பலன் சொல்லுகிற ஜோதிடர்கள் கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காகவே முகஸ்துதி பேசி யேமாற்றுகிறார்கள் என்பதை இதில் விளக்கிக் காட்டுகிறேன். தரித்திரம் பிடித்த ஜோதிடப் புளுகர்கள் "மிடுக்கிலா தானை வீமனே விறல் விஜயனே வில்லுக்கிவனென்றும்—கொடுக்கிலா தானைப் பாரியே யென்று" கூறினும் அவர்களுடைய தரித்திரம் நீங்கினதில்லை. ஜாதகப் பைத்தியம் பிடித்த மக்கள் எடுத்த காரியங்களுக்கெல்லாம் ஜாதகம் பாராமல் அதிலும் ஒரு இடத்துக்கு நான்கிடத்திற் போய்ப் பாராமல் ஒன்றும் செய்வதில்லை. ஜாதகந்தான் அவர்கட்குப் பிரதானம். ஜோதிடப் புளுகர்கள் ஜாதகத்தை வாங்கிப்பார்த்து எல்லாமறிந்தவர் போல் இப்போது, சந்திரதிசை சூர்யபுத்தி நடக்கிறது. சந்திரன் சூர்யனைப் பார்க்கிறான் சூர்யன் கருவாட்டைப் பார்க்கிறான். சனி ராகுவைப் பார்க்கிறான். ராகு பூனையைப் பார்க்கிறான். கன்னி வீட்டிலிருக்கிறவன் கல்யாண வீட்டுக்கு மாறுகிறான். துலா வீட்டுக்காரன் தோசையை நோக்குகிறான். ஆதலால் அடுத்த ஆவணி மாதம் ஆறுந்தேதி முதல் உங்களுக்கு அதிர்ஷ்டம் தலைகீழாக நிற்கிறது. நீங்கள் ஒரு யானையாகப் போகிறீர்கள் என்று வாய்கொண்ட மட்டும் "பக்கம் பக்கமாக புளுகியும் எழுதியும் தள்ளுகிறான்! பாவம்! தேவைக்காரனுக்குப் புத்தி கொஞ்சம். அத்தனை

யும் உண்மையென நம்பி அகமகிழ்ந்து பத்து முப்பது நூறு இருநூறு என்று கொடுத்து ஏமாந்துபோகின்றனர்! பிள்ளையில்லாதவன் ஜாதகச் சுவடியைத் தூக்கிக்கொண்டு ஊர் ஊராக அலைகிறான். அத்தகைய ஒருவனுக்கு ஜோதிடப் புளுகர்கள் நல்ல மருந்துகொடுத்து இராமேஸ்வரம், சர்ப்பசாந்தி, நாகப் பிரதிஷ்டை, பிராமண போஜனம் அரசமரம் சுற்றல் முதலிய பாடங்களையும் கற்பித்து ஈவு இரக்கமில்லாமல் அலையவைக்கின்றனர். அலையவேண்டியவரை அலைந்து அலுத்துப் போனாலும் ஜாதக நம்பிக்கை போவதில்லை. பின்னும் ஜோதிடப் புளுகர்களை நாடி என் செய்தி யென்ன? இன்னும் நன்றாகப் பார்த்துத் திருவாய் மலர்ந்தருளல் வேண்டும்! என்று கேட்டுக்கொள்ளுகின்றனர். அவன் இரண்டாவது மனைவி அல்லது ஸ்வீகாரம் என்று கூறுகிறான். ஏதோ ஒன்று ஆகிறது. ஆனாலும் ஜாதகப் பலனுக்கும் அதற்கும் சம்பந்தமேயிராது! ஒருவனுக்கு நோய் வந்தவுடன் வைத்தியனை யழைக்குமுன் ஜோதிடன் அழைக்கப்படுகிறான். அந்தப்பாவி ஆசாமி கிடக்கிற நிலைமையைக் கவனித்துக்கொண்டு அடுத்த செவ்வாயும் புதனும் போனால் தீர்க்காயுசு என்கிறான். அல்லது வைத்தியமே வேண்டாம் நான் அடிக்கட்டையாக இருக்கிறேன் என்கிறான். அடிக்கட்டை அப்படியேயிருக்க நுனிக்கட்டை போய்விடுகிறது. அடிக்கட்டையை மயானத்துக்குக் கூப்பிட்டால் வரப்போகிறதா இல்லை! இப்படி யெல்லாம் ஜோதிடக் கூற்று நடைபெறுகிறது.

நான் அறிந்த பிரபல ஜோதிடன் ஒருவன் ஜாதகத்தைப் பார்த்தவுடன் வாய்க்கணக்காகவே கூட்டிப்

பெருக்கி மெழுகிக் கோலமிட்டு ஆயுள் பாவத்தை நிறுத்துக் கூறுகிறவன் என்று பெயர் பெற்றிருந்தான். கொஞ்சம் முதிர்ந்த வயதுடைய ஒரு மனிதனுக்கு ஏழு வருஷங்கட்கு முன் கடுமையான ஜுரம் கண்டிருந்தது. அவருடைய ஜாதகத்தை மேற்கூறிய ஆயுள் பாவத்து வல்லரான ஜோதிடப் புலியிடம் கொடுத்துப் பார்த்தார்கள். அவர் புரட்டாசி மீ 5உ வெள்ளிக் கிழமை யென்று மரணகாலத்தைக் கெடுக் கட்டிவிட்டார். உடனே பர்மாவிலிருந்த ஒரே மகனுக்குத் தந்தி யனுப்பப்பெற்றது. அவரும் தன்னுடைய முக்கியமான வேலைகளை யெல்லாம் அப்படியே போட்டுவிட்டு அவசரமாக பிதாவுக்குக் கொள்ளிவைக்கப் புறப்பட்டு புரட்டாசி மீ இரண்டாந் தேதி வந்துவிட்டார். ஆனால் பிதா அதற்கு முதல் நாளே தலைக்குத் தண்ணீர்விட்டுக் கொண்டு மகன் வரும்போது வயல் பக்கம் நடவு நட்டதைப் பார்க்கப் போயிருந்தார். ஏழு வருஷமாகியும் இன்னும் திடகாத்திரமாக ஜீவித்திருக்கிறார். என்னே ஜோசியர்! என்னே ஆயுள்பாவ நிர்ணயம்!! மற்றொரு பிரபல ஜோசியர் அனுமார் உபாசனையாம். தீர்க்க தரிசி. ஜாதகங்கட்கு அநாயாசமாகப் பலன் கூறுகிறவர். அவரிடம் சாதாரணமாக ஒரு ஜாதகக்குறிப்பைக் கொடுத்து வாங்கினாலும் அதற்கு ஐந்து ரூபாய் கூலியாம். அந்த மகான் தன் மூத்த குமாரனுக்குக் கல்யாணம் செய்து வைத்தார். கல்யாணஞ் செய்த மறு வருஷம் முதல் மருமகள் விதவையாக இருக்கிறாள். இன்றுமிருக்கிறாள். தன் மகன் ஜாதகத்தை நன்றாகப் பார்க்கவில்லையென்று சமாதானம் கூறுவாரா? தலைவிதி யென்பாரா? தலைவிதி யென்றுதான் கூறுவார்!

அநேகம் ஜோதிடர்கள் காந்தியடிகளுக்கு ஜாதகப் பலன் கூறுகிறார்கள். ஏதோ பலித்தால் காந்தி ஜோதிடராகிவிடலாம். வியாபார மார்க்குப் போட்டுக்கொள்ளலாம் என்பதுதான் நோக்கம்! அதற்கும் அதிர்ஷ்டம் வேண்டுமே! தங்களுக்கு அப்படியொரு அதிர்ஷ்டம் இருக்கிறதாவென்று முதலில் தெரிந்துகொள்ளாமலே காந்தி ஜோதிடர் ஆகிவிட ஆசைப்படுகிறார்கள்! காந்தியடிகள் சிறைவாசம் உபவாசம் இருந்த காலங்களில் எத்தனையெத்தனை ஜோதிடப் புளுகுகள் வெளிவந்தன. ஒன்றாவது பலித்ததா? அந்தப் பேர்வழிகள் கூறுவது சாபத்தீடுபோல் ஒன்றும் பலிப்பதேயில்லை. வீண் கிளர்ச்சியையும் பொது ஜனங்களுக்கு ஏமாற்றத்தையும் உண்டுபண்ணுவதைத் தவிர வேறு பலனில்லை. இந்தப் பொய்யர்களுக்கு இந்தியா கவர்ன்மெண்டில் ஜெர்மனிக்குப் புத்துயிரளித்த வீரரும் மகா மேதாவியுமான ஹிட்லரைப் போன்று ஒரு சர்வாதிகாரியிருந்து சவுக்கடி கொடுத்தால் நல்லதாக இருக்கும்.

இன்னும் சில ஜோதிடர்கள் நினைத்த காரியங்களெல்லாம் சித்தியாவதற்கு (கவசம்) தாயத்து அபிமந்திரித்துக் கட்டுவேன். இரண்டு ரூபாய் கொடுங்கள் என்று கேட்கிறார். நல்லது, அந்தத் தாயத்தை மந்திரித்து அவரே கட்டிக்கொண்டு அவரைப் பிடித்த தரித்திரத்தைப் போக்கிக்கொண்டாலென்ன? யோஜித்துப் பாருங்கள்.

நான் பெரிய ஜோதிடப் புலி. ஜோதிட சிம்மம். ஜோதிட சக்கிரவர்த்தி. என்னிடத்தில் எல்லோரும் வாருங்கள். இரண்டொரு ரூபாய் கொடுங்கள். எல்லாம் சொல்லிவிடுகிறேனென்று பறை சாற்றுகிறார்கள்.

அதை நம்பி ஆத்திரக்காரன் பணமனுப்பிக் கேட்டால் எல்லாம் உனக்குத்தான் அனுகூலமென்பார்கள். அனுகூலம் பிரதிகூலமாகவும் முடியும். பிரதிகூலமானாலும் பிறகு பேச்சுக்கிடமேது? ஜோதிடனுக்கு கிடைத்தது இலாபம். ஆகவே ஜோதிடக்கூற்று மனிதனை மனிதன் ஏமாற்றிப் பிழைக்கும் ஒரு கேவலமான தொழிலென்பதை எனது பிரியமுள்ள இளைஞர்கள் திட்டமாக அறிந்துகொள்ளவேண்டும். ஜோதிடக் கதையொன்று கூறி இதை முடிப்போம்.

பல்லாயிரம் மக்களுக்கு ஜோதிட பலன் கூறிக் கீர்த்திபெற்றிருக்கிறேன். இராஜ ராஜாக்களெல்லாம் என்னைப் புகழ்ந்திருக்கின்றார்கள். நானே ஜோதிட அரசன். எனக்கு ஒரு ரூபாய் கொடுங்கள் மூன்று கேள்விகளுக்கு விடை சொல்லுகிறேன் என்று தன்னைப் புகழ்ந்து விளம்பரம் செய்திருந்த ஒரு ஜோதிடப் புரட்டனுக்கு இறந்துபோன ஒரு மனிதனுடைய ஜாதகக் குறிப்பும் ஒரு ரூபாயும் மூன்று கேள்விகளும் அனுப்பப் பெற்றன.

கேள்விகளாவன:—

1. கோர்ட்டிலிருக்கும் கேஸ் எனக்கனுகூலமாகுமா? 2. எனக்குப் பிறக்கப்போகும் குழந்தை ஆணா பெண்ணா? 3. தை மாதம் நான் கடல் யாத்திரை செய்வேனா?

பதில்:—1. கேஸ் அனுகூலமாகும். 2. பெண் குழந்தைதான் பிறக்கும். 3. தை மாதம் பிரயாணம் தடைப்படும்.

என்ன ஆச்சரியம் பாருங்கள். ஜாதகன் இறந்து ஐந்து வருஷமாயிற்று. ஜோதிட அரசர் பலன் சொல்

லுகிறார். இவரை இராஜராஜாக்கள் புகழ்ந்திருக்கிறார்கள்! பல்லாயிரம் மக்களுக்கு ஜோதிடப் பலன் கூறியிருக்கிறார்!!

---

19. பைத்தியம்

உலகத்தில் சித்தஸ்வாதீனமில்லாதவர்களை மட்டும் பைத்தியங்களென்று சொல்லுகிறார்கள். அது உண்மை தானாயினும் இன்னும் பல பைத்தியங்களுமுண்டு. அவற்றுள் முக்கியமான சில்வகைப் பைத்தியங்களைப் பற்றி இங்கு கூறுகிறேன்.

I. பணப் பைத்தியம்

இவ்வுலக வாழ்கைக்குக் கொஞ்சம் பணம் வேண்டியதுதான். ஆனால் பணமே வழிபடும் கடவுள் என்று நினைந்து உண்ணும்போதும் தின்னும்போதும் நடக்கும்போதும் படுக்கும்போதும் உறங்கும்போதும் விழிக்கும்போதும் கனவிலும் நனவிலும் பணம்! பணம்! என்று சதா சர்வகாலமும் பணத்தையே தியானித்து ஜபம் பண்ணிக்கொண்டு பணத்தைத் தவிர உலகத்தில் வேறு காரியமே இல்லையென்று மயங்கி தயை, தாக்ஷண்யம், ஈகை, இரக்கம், பாவம், புண்ணியம் ஒன்றுமில்லாமல் பணத்துக்கு அடிமையாகி உண்ணாமல் உடுத்தாமல் கட்டிக்காத்து இலவுகாத்த கிளிபோல் ஏமாந்து சாகும் பேதை மக்களினும் பைத்தியம் வேறுண்டோ?

II. காமப் பைத்தியம்

மல உபாதை ஜல உபாதைகளைப்போல் காம உபாதையும் கழித்தற்குரிய ஒன்றெனினும், காலம், இடம்,

சமயம் சந்தர்ப்பம் ஒன்றுமில்லாமல் சதா அதே நினைவாய், அதே வேலையாய் அதே காரியமாய், அலைந்து திரிந்து அக்கிரமமாகவும் அநியாயமாகவும் இச்சித்து அடிபட்டு உதைபட்டு அவமானப்பட்டு அல்லது நோய்ப்பட்டு நொந்து உருகி, பொருளையிழந்து பூமியையிழந்து, துக்கக் குறியும் தூங்குமூஞ்சியுமாய் இன்செக்ஷனும் ஆப்ரேஷனும் (Injection and Operation) ஏராளமாய் உபயோகித்துக்கொண்டு பரம அசடுகளாய்த் திரியும் பேதை மக்களினும் பைத்தியம் வேறு உண்டோ?

III. பிள்ளைப் பைத்தியம்

கல்யாணம் செய்த அடுத்த வருஷமே பிள்ளை பிறக்கவேண்டும், இல்லையானால் இராமேஸ்வரம் நாகப் பிரதிஷ்டை, சர்ப்பசாந்தி, பிராம்மண போஜனம், பூரி, தக்ஷிணை, ஆலமரம் அரசமரம் சுற்றுதல், கோடங்கி பார்த்தல், குறி கேட்டல், பிரார்த்தனைகள், பேய் பிசாசு கட்குப் பூசை போடுதல், பணமுடிதலென்று எத்தனையோ பரிகாரங்களைச் செய்கின்றனர். காசியோடியாடினும் கறுப்பு வெள்ளையாவதில்லை யென்பதை அறியாத பேதை மக்களினும் பைத்தியம் வேறுண்டோ?

IV. ஜாதகப் பைத்தியம்

நினைத்தகாரியம் கைகூடுவதற்கு ஒரு முயற்சியும் செய்யாமல், பிரயாசைப்படாமல் ஜாதகச் சுவடிகளை ஒரு துணியிற் கட்டிக்கொண்டு, ஊர் ஊராக ஜோதிடப் புலிகளைத் தேடித்தேடி தக்ஷிணை தாம்பூலம் வைத்து சுவாமின்! எப்போது பணம் வரும்? எப்போது கல்யாணம் முடியும், எப்போது பிள்ளை பிறக்கும், எப்போது வீடுகட்டுவேன், எப்போது நோய் தீரும், எப்போது

என் மகனுக்கு நல்ல புத்தி வரும்? எப்போது தலை தூரத்துக்குப் பிரயாணம் கொடுக்கும் என்று வேண்டிய காரியங்களை யெல்லாம் ஜோதிடரிடமே பெற்றுக் கொள்பவர்போல் மன்றாடி வருந்தி பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுவர். ஆனால் அந்த ஜோதிடராத்தில் (வீட்டில்) இளம் விதவைகள் முக்காடிட்டு மூலையிலிருப்பதையும் ஜோதிடர் நித்திய தரித்திரராய் தன்னிலைமை தனக்குத் தெரியாதவராயிருப்பதையும் கவனிப்பதில்லை. இத்தகைய பேதை மக்களினும் பைத்தியம் வேறு உண்டோ?

V. சூதுப் பைத்தியம்

வேறு குறைகுற்றம் இல்லாத நல்ல மனிதர்களும் சூதில் அளவற்ற ஆவல் உடையவர்களாய் சாப்பிட்டு கையலம்பினால் உடனே சீட்டோ சொற்கேட்டானோ கையிற்பிடித்து ஆடியும் ஊர் ஊராகச் சென்று இரவு பகல், நேரங்காலம், தூக்கம், விழிப்பு, படுக்கை, ஆகாரம், நித்திரை, ஸ்நானம் ஒன்றையும் கவனிக்காமல் சலிக்காமல் வெறுக்காமல் காலமெல்லாம் ஆடி ஆடி முன்னோர் தேடிய காணி, பூமி, வீடு, வாசல் எல்லாவற்றையும் தோற்று பெண்டாட்டி பிள்ளைகளின் தாலி பூடி நகை நட்டுகளையும் தோற்று கையிலுள்ளவற்றையும் தோற்று கடன்வாங்கியும் தோற்றுக் கடைசிவரையிலும் தோற்றும் புத்திவராமல் அந்திய காலத்திலும் ஆட்டத்தில் ஜயித்துவிடலாமென்று மயங்கி மடிந்து மண்ணாகின்ற பேதை மக்களினும்—சிறந்த பைத்தியம் வேறுண்டோ?

VI. ஆகாரப் பைத்தியம்

மனிதனுக்கு ஆகாரம் வேண்டியதுதான். ஆனால் ஆகாரத்துக்காக மனிதன் வேண்டியதில்லை. பசிப்

பிணியைத் தணித்துக் கொள்வதற்குப் போதியதாகவும் கூடியவரையிற் சுருக்கமாகவும், சுத்தமாகவும் ஆகாரமருந்த வேண்டுமென் றறியாது ஆகாரத்தில் அளவற்ற ஆசைவைத்து விருந்துசோற்றுக்கும்பெருஞ்சமையலுக்கும் அடிமையாகி ஆடு, கோழி, வாத்து, முட்டை, முயல் பூனை, எலி, பெருச்சாளி, புறா, பருந்து, மீன், கருவாடு என்று ஜீவஜந்துக்களை ஒன்றும் விடாமல் கொன்று தின்று சிரித்துக் கொழுத்துப் பருத்து ஒரு வேலையும் செய்யச் செயலற்று ஓடி நடக்கவும் முடியாமல் உண்ணுவதும் உறங்குவதும், உறங்குவதும் உண்ணுவதுமாகப் பூமிக்குச் சுமையாக இருந்து அற்பாயுளில் மடிந்துபோகிற பேதை மக்களினும் வேறு பைத்தியமுண்டோ?

VII பட்டம் பதவிப் பைத்தியம்

பசையற்ற எலும்புகளைப் போன்ற பட்டங்களையும் பதவிகளையும் இச்சித்து அதற்காக ஏராளமான பொருட்செலவும் சிபார்சும் செய்து சுவர்க்க பூமியை அடைந்துவிட்டதுபோல மனோராஜ்யம் செய்துகொள்வதும், படிப்புமில்லாமல் புத்தியுமில்லாமல், பழக்க வழக்கமும் தெரியாமல் பெருஞ் செலவுசெய்து ஒரு பதவியைப் பெற்று அங்கொரு சூத்திரதாரியின் வசப்பட்டு பொம்மைபோலாடி நிற்பதும் எவ்வளவு அவமான மென்பதையும் வீண் வேலை யென்பதையும் தெரிந்து கொள்ளாத பேதை மக்களின் வேறு பைத்தியமுண்டோ? அது ஒருபுறமிருக்கட்டும். ஒன்றுக்கும் உபயோகமில்லாததும் சர்வ சாதாரணமானதுமான அந்தப் பட்டங்களையும் சிறு சிறு பதவிகளையும் பெற்றவுடன் அதற்காக ஒரு தேநீர் விருந்துவைத்து உபசாரப்பத்திரம்

படித்து மாலையைமாட்டி நிமிர்ந்துநின்று ஒருப் போட்டோ எடுத்துக்கொள்வது எவ்வளவு பெரிய பைத்தியம்?

இன்னும் பல பைத்தியங்களு முண்டெனினும் இம்மட்டில் நிறுத்திக்கொள்ளுவோம். எந்த மனிதன் தன்னைப்பற்றிப் பெரிதாக நினைத்துக் கொள்ளாமல் தன்னுடைய செல்வத்தையும் செல்வாக்கையும், சரீரத்தையும், வாழ்க்கையையும் அநித்தியமெனக் கண்டு எந்த நேரத்திலும் எந்த நிலைமையிலும் நிதானமும் உறுதியும் உடையவனும் தன்னை ஒரு சாமான்யனாகவே நினைத்து நினைத்துப் பழகி காமம், லோபம், வஞ்சனை, சூது, கள்ளம், கபடம், பொய், புரட்டு முதலிய தீவினைகளை மறந்து சத்திய சீலனாய் தயை தாக்ஷண்யமுடையவனாய், ஈகையுடையவனாய் இரக்கமுடையவனாய் ஆனால் தைரியமும் வீரமும் உடையவனாய் வாழ்கின்றானோ அல்லது வாழ முயற்சிக்கின்றானோ அவனே மனிதன். அவனே பைத்தியத்தின் பகைவனாவான்.

---

20. குலதெய்வங்கள்

கல்வியறிவில்லாத மக்களும் கல்வி கற்றும் அறிவில்லாத மக்களும் நம் நாட்டிற் குலதெய்வங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் எண்ணங்களும் கொள்கைகளும் மிக மிக விநோதமானவை. அவர்கள் கொண்டாடும் குலதெய்வங்கட்கும் அளவில்லை. கருப்பரில் ஆயிரம், காளியில் ஆயிரம், அம்மாளில் ஆயிரம், அய்யனாரில் ஆயிரம், வீரனில் ஆயிரம், சூரனில் ஆயிரம்,

இவர்களோடு இதற்குமுன் செத்தவர்களெல்லாம் குல தெய்வங்கள்தான். ஆளொன்று. தெய்வம் ஒன்று. பேர் ஒன்று பிசாசு ஒன்று. உன் சாமி என் சாமி யென்று ஒருகோடி சாமிகளுண்டு. ஆகவே இந்த மூட மக்களுக்குள்ள கடவுள் ஞானம் எவ்வளவு விநோத மாக இருக்கிறது. பாருங்கள்! கடவுள் இத்தனை பேர் இருக்கமுடியுமா? இருந்தாலும் அவர்கள் வேலை ஜோலி விவகாரம் ஜீவனோபாயம் இவைகளை விட்டு தங்களை யெப்படிக் காப்பாற்றுவார்கள் என்று ஒரு குருட்டு வழியாகவாவது யோஜித்தார்களா? இல்லை. தாங்கள் பிறக்கும்போதே தங்களுக்காக ஒருதெய்வமும் பிறந்து விடுவதாக நம்பிக் கிடப்பவர்கட்கு இந்த யுகத்தில் கடவுள் ஞானமேது!

போகட்டும். அந்தத் தெய்வங்களின் பெயரால் சிலர் சாமியாடிகள், சிலர் பூசாரிகள், சிலர் வீட்டிற் படைக்கிறவர்கள், சிலர் காட்டிற் படைக்கிறவர்கள், இப்படி பலதினுசான பேர்வழிகளுண்டு. அந்த அருமை பெருமையை வேறெங்கே காட்டுவதற்கு அவர்கட்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது? எங்கும் கிடைக்காது. ஆகவே செத்த வீடுகளிற்றான் அதன் பெருமை காட்டப்படுகிறது. செத்த வீட்டிற் சோறுண்ணும் விஷயத்தில் அவர்கள் தங்களை மிகவும் பத்திரமாகக் காப்பாற்றிக்கொள்ளுவார்கள்! செத்தவீட்டுச்சோறு அவர்கள் சாமிக்காகாது, என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டு அய்யர் வீடு தேடுகிறார்கள். அய்யர் வீடுகளில் ஒருவரும் செத்ததுமில்லை, இனிச் சாவதுமில்லை யென்பது அவர்கள் நினைப்பு. போகட்டும். அந்த அய்யர் வீடு தேடிச் சாப்பிடுகிறார்களே அந்த அழகுதா

னென்ன! சமையல் செய்கிற அல்லது பரிமாறுகிற அய்யரவர்களுக்கு யானைக்காலும் குதிரைக் கையும் ஆட்டுத்தலையும் வாதநோயும், வலிப்பு நோயும், குஷ்ட வியாதியும் குடிகொண்டிருக்கும். மேலும் அவர்களு டைய அழுக்கடைந்த வீடுகளிலும் திண்ணைகளிலும் நல்ல வீட்டில் வளர்ந்த நாய்கூடச் சோறு தின்னாது. அவர்கள் சமைக்குமிடத்தையும் சாதம், கறி, குழம்பு செய்யும் பாத்திரங்களையும் பார்த்தாலே பசி போய் விடும். அந்த அசங்கியமான சோறும் குழம்பும் குல தெய்வங்கட்குப் பிரீதியாம்! வெள்ளியும் வெண்கல மும் கண்ணைக் கவரும் பரிசுத்தமான பாத்திரங்களும் உண்ணுமிடமும் உட்காருமிடமும் சலவைக் கற்களால் செய்யப்பெற்றிருந்தாலும் எவ்வளவு மாளிகையாயி னும் அவர்கள் சாமிக்கேற்காது! என்னே பைத்தி யம்!!

பொதுவாக ஒருவர் இறந்துபோன வீட்டில் குறிப்பிட்ட சில நாட்கள் வரை யேன் சாப்பிடக்கூடா தென்பதற்கும் பிரேதங்களைத் தொட்டாலும் பார்த்தா லும் உடனே ஸ்னனம் செய்தல் வேண்டுமென்பதற் கும் சில நியாயங்களுண்டு. ஆனால் அந்த நியாயங்கள் சகல ஜனங்கட்கும் பொதுவேயன்றி இந்தக் குல தெய்வப் பேர்வழிகளுக்கு மட்டும் சிறப்பாக இல்லை. எப்படி? மனிதன் சும்மா சாவதில்லை. ஏதாவது ஒரு நோய்ப்பட்டுத்தான் சாகிறான். அந்த நோய் காசம், குன்மம், குஷ்டம், அம்மை, கால்ரா, பிளேக், விஷக் காய்ச்சல் என்று சொல்லப்படும் தொத்து நோய்களா கவுமிருக்கலாம். சாதாரண நோய்களாகவுமிருக்கலாம். அந்த நோய்களின் அருவருப்பினாலும் உயிரைவிட்ட

உடலினின்றும் அணுக்களைப் போன்ற மரணப் புழுக்கள் பிரிந்து பரந்து ஆகாரப் பொருள்களிலும் தண்ணீரிலும் உயிருள்ள சரீரங்களிலும் கலந்துவிடுகின்றனவென்றும் அது நல்லதல்லவென்றும் ஆதலால் குறிப்பிட்ட சில நாட்கள் வரை அந்த இடத்தில் உணவருந்துதல் தண்ணீர் குடித்தல் விலக்கப்பட வேண்டுமென்றும் உடனே ஸ்நானம் செய்தல் வேண்டுமென்றும் வைத்திய சாஸ்திரம் கூறுவதாலும், இறந்த வீட்டில் உணவருந்துவதை எல்லோரும் சில தினங்கள் வரை நிறுத்திவிடவேண்டியதுதான். அப்படி நிறுத்திவிட்டு வேறு ஒரு வீட்டில் சமையல் செய்து அதில் எல்லோரும் சாப்பிடுதல் நியாயமாகும். அதற்கு மேற்போவதெல்லாம் அக்கிரமமான காரியந்தான்.

குலதெய்வப் பேர்வழிகளால் செத்த வீடுகளிற் பெருந்தொந்தரவு ஏற்படுகிறது. மூன்று பிரிவாக ஆட்களும் சாமான்களும் பாத்திரங்களும் கண்காணிப்பும் வேண்டியதிருக்கின்றன. இதில் எவ்வளவு கஷ்டமும் வீணை செலவும் ஏற்படுகின்றன வென்பதைப் பலரும் அறிந்திருக்கிறார்கள். நியாயமான காரியமாக இருந்தாற் குற்றமில்லை. மூட்டாள் தனத்துக்காக இவ்வளவு சிரமமும் செலவுமுண்டாகலாமா?

வீட்டிலிருந்து இறந்தவர்கள் விஷயத்தில் குலதெய்வப் பேர்வழிகள் இப்படி அக்கிரமஞ் செய்தாலும் குற்றமில்லை. காசியிற் செத்தாலும் விடுகிறார்களா? அதற்கும் துண்டு சமையலும் அய்யர் சாப்பாடும் கேட்கிறார்களே! இது அதிசயமல்லவா? இரண்டாயிரம் மயில்களுக்கப்பால் இறந்துபோனவரின் செய்தியைப் பற்றி விசாரித்துவிட்டுப் போகவந்தால் அதற்கும்

துண்டு சமையல் வேண்டுமா? அய்யர் சோறு வேண்டுமா? என்னே அநியாயம்!

அய்யர் சாப்பாட்டை அடியோடுவிட்ட ஒரு சாமியாடியின் கதையைக் கேளுங்கள். அவர் ஒரு கடுமையான சாமியாடி. தன் வீட்டைவிட்டால் அய்யர் வீடுகளிற்றான் சாப்பிடுவார். எந்த விசேடமானாலும் வேறு யார் வீட்டிலும் சாப்பிடுவதில்லை. இவர் ஒரு சமயம் மணப்பாரையில் தங்கியபோது ஒரு அய்யர் வீடு தேடிச் சாப்பாட்டுக்குச் சொன்னாராம். இரவு ஒன்பது மணிக்கு இலைபோட்டுப் பரிமாறினதும் சுவாமியாடி சோற்றைப் பிசைந்து ஒரு வாய் அள்ளிவைக்கப் போகும்போது பரிமாறின அய்யர் திடீரென்று சாமியாடி மீது சாய்ந்தாராம். சாமியாடியும் திடுக்கிட்டு கறுப்பா, வீரா, உளியா என்று கதறி உதறியெழுந்தோடினாராம். பக்கத்து வீட்டுக்காரர்கள் ஓடோடியும் வந்து பிடித்து நிறுத்தி விசாரித்தபோது சமையல் அய்யருக்குக் காக்கை வலிப்புண்டென்றும் அதுதான் விஷயமென்றும் அறிந்து எல்லோரும் கைகொட்டிச் சிரித்தார்களாம். அதுமுதல் நமது சாமியாடி நண்பர் அய்யர் சோற்றை அடியோடு விட்டு விட்டாராம்.

இதுபோல மற்ற குலதெய்வப் பேர்வழிகள் தலையிலும் சில சோற்றுக்கடை அய்யர்கள் விழுந்தாலன்றி இந்தப் பைத்தியந் தீராது. ஆதலால்,

எனது பிரியமுள்ள இளைஞர்களே! நீங்கள் மறந்தும் சாமியாடிகளாக வேண்டாம். பூசாரியாகவேண்டாம். வீட்டிற் படைத்தாலும் காட்டிற் படைத்தாலும் உங்கள் ஞாதிகளை (ஒரு தகப்பன் பிள்ளைகள்) ஒன்று

சேரக் கண்டுண்ட விருந்தென்று நீங்கள் கொள்ள வேண்டும். அதற்காக நீங்கள் பத்தியங்காக்கவேண்டாம். கடவுளென்பது ஒரே பரம்பொருள். அது நாமரூபமற்றது. ஆனந்தமானது. விருப்பு வெறுப்பற்றது. பாரபக்ஷமற்றது. ஆதியந்தமற்றது. ஜாதி மதங்களைக் கடந்தது. இருப்பவர்கட்கும் இறந்தவர்கட்கும் ஒரேவிதமானது. அதுதான் உங்கள் குல தெய்வம். அதுதான் இந்த உலகினர்க்கெல்லாம் குல தெய்வம். அதுதான் உத்தமமான குலதெய்வம். வேறு குலதெய்வக் கதைகளெல்லாம் பொய்க் கூற்றுக்களே.

---

21. பலியிடுதல் அடியோடு ஒழியவேண்டும்

பங்குனி மாதம் வரப் போகிறது. இனித்தான் மாரியம்மன் கோயில்களிலெல்லாம் தொடர்ச்சியாக உற்சவங்கள் நடக்கும். இனித்தான் எல்லையற்ற ஆடுகளும், கோழிகளும் பலியிடப்பட்டு பொங்கல் வைத்துப் புண்ணியஞ் செய்யுங்காலம். ஆடி, ஆவணி மாதம் வரை ஆயிரக் கணக்கான பிராணிகள் வதை செய்யப் படும். பாமர மக்கள் இந்தக் கைங்கரியத்தில் அதிக ஆர்வமும் நம்பிக்கையுமுள்ளவர்கள். அவர்களிற் கொஞ்சம் பசையுள்ளவர்கள் ஆட்டுக் குட்டிகளையும், ஏழை மக்கள் கோழிக் குஞ்சுகளையும் ஒரு முட்டியும் அரிசியும் நாலு விறகும் எடுத்துக்கொண்டு வரிசை வரிசையாகக் கூட்டம் கூட்டமாகக் கிளம்பி விடுவார்கள். மாரியம்மன் கோயில் வாயிலில் இரத்த ஆறு ஓடும்.

ஒரு முள் குத்தப்பொறாத மக்கள் இந்தப் பயங்கரமான இரத்த வெள்ளத்தைச் செய்யத் தயங்கவில்லை. அறியாமையினால் ஆழ அமுக்கப்பட்டுக் கிடக்கும் அந்தப் பேதை மக்களுக்கு இது தெய்வப் பிரீதியென்னும் நம்பிக்கை வேரூன்றிப் போயிருக்கிறது. இது கூடாத காரியம். இதனால் ஒரு பயனுமில்லை. உள்ளதில் ஒன்றும் குறையாது. பலியிட வேண்டாம். இதிற் பைத்தியமும் வேண்டாமென்று எவ்வளவு தூரம் எடுத்துக் கூறினாலும் கூவினாலும் அவர்களுக்கு அந்த உண்மையை உணர்ந்து கொள்ளும் ஆற்றலில்லை. கிரகிக்கும் சக்தியுமில்லை. அந்த வழியில் அவர்களைத் திருப்ப முடியாது. பகிரங்கமாக உயிர் வதை செய்யக் கூடாதென்று அரசாங்கத்தாரின் கட்டளையிருந்தாலன்றி நிறுத்த முடியாது.

இருபது வருஷங்கட்கு முன் நமது சமூகமும் இந்தப் பலிப் பொங்கலில் மிக்க உறுதி யுள்ளவர்களாகவே யிருந்தது. கோயில் வாயிலில் ஒரு பலியும் அதற்கு முதல் நாள் அல்லது மறுநாள் வீட்டு வாயிலில் புள்ளிக்கு ஒரு கிடாயும் பலியிட்டு மாரியம்மனிடம் குற்றம் தீர்த்துக்கொண்டு வந்தார்கள். நரம்புச் சிலந்தி, அம்மை, பேதி முதலிய நோய்கள் வராமலும், வந்தாலும் மரணம் நேராமலும் பிரார்த்தித்துக்கொண்டு இந்தக் கொடுங் குற்றத்தைச் செய்து வந்தார்கள். அப்படிச் செய்து வந்தவர்களிடம் மாரியம்மன் ஆசை வைத்து அத்தகைய நோய்கள் வருஷந்தோறும் தவறாமல் அவர்களுக்கு வரும்படி செய்து கொண்டிருந்ததால் இந்தக் கொடுமையைப் பொறுக்காமல் சிவனடியார் திருக்கூட்டங்களும் ஜீவகாருண்ணியப் பிர

சாரமும் தொடர்ச்சியாக நடந்தன. அதன் பயனாக அங்குமிங்கும் கொஞ்சம் பலிப் பொங்கல் வழக்கம் நிறுத்தப்பட்டது.

நிறுத்தியவர்கள் அந்த வருஷ முழுதும் பயந்து கொண்டிருந்தார்கள்! ஏன்? மாரியம்மன் கோபித்துக் கொண்டு ஏதாவது துன்பம் செய்யப் போகிறாளோ வென்றே அஞ்சிக் கிடந்தனர்! ஆனால் அப்படியொன்றும் கோபத்துக்கிடமான காரியமில்லை யென்று அடுத்த வருஷம் பங்குனி மாதம்தான் சித்தம் தெளிந்தார்கள். வேறு ஒரு விசேடத்தையும் கூடக் கண்டார்கள்! அதாவது பலிப் பொங்கலை நிறுத்தியவர்களை விட்டு விட்டு நிறுத்ாதவர்களை அம்மை முதலிய தொத்து நோய்கள் தொடர்ந்து நிற்கக் கண்டார்கள்! தந்தவன் தரவில்லை யென்றால் வந்தவன் வழியைப் பார்க்க வேண்டுமென்பதும், ஓடுகிறவனைக் கண்டால் விரட்டுகிறவனுக்கு சுலபமென்பதும் மாரியாயிக்குத் தெரியாத பழமொழியல்ல. மாரியம்மன் அந்த உண்மையறிந்தே பலிப்பொங்கலை நிறுத்திய மக்களிடம் தலை நீட்டவில்லை போலும்! பிறகு அந்த நயத்தை ஆதாரமாகக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாக மற்றவர்களும் பலியிடுவதை நிறுத்திப் பாற் பொங்கலிடுகிறார்கள். ஆயினும் பலியிடுதல் இன்னும் அடியோடு ஒழியவில்லை. இன்னும் சில அந்தகாரங்கள் விடாமற் செய்கின்றன. அவைகளுக்கு நல்லது கெட்டது தெரியாது. உண்பதும் உறங்குவதுமன்றி ஏனைய உலக வியவகாரமே தெரியாது. கண்ணிருந்தும் குருடுகள். காதிருந்தும் செவிடுகள்; வாயிருந்தும், ஊமைகள் அவைகளுக்கு அறிவு காட்ட வழியேயில்லை. ஆதலால் அதிகார முறையில் கண்டிப்பான கட்டளைகளே வேண்

டும். எந்த சமூகத்திலும் பாமர மக்களுண்டு; பாமர மக்களெல்லாம் ஒரே ஜாதிதான். அந்தக் கூட்டத்துக்கு நல்ல வார்த்தை சொல்லி ஒரு திருத்தமும் செய்ய முடியாது. அதிகார முறையிற்றான் அடக்கவேண்டும். ஆதலால் ஜீவகாருண்யமுள்ள அங்கத்தினர்கள் சட்டசபையில் பலி நிறுத்தச் சட்டம் ஒன்று செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். சட்ட சம்மதமில்லாமல் இந்தக் கொடுஞ் செயலை அடியோடு ஒழிக்க முடியாது.

ஆயினும் சிவனடியார் திருக்கூட்டங்களும் ஜீவகாருண்யப் பிரசங்கங்களும் தொடர்ச்சியாக நடைபெறவேண்டும். விவேகமுள்ள மக்களுக்கு அவை அனுகூலமாகும்; பயன் படுதல் கூடும்.

22. காவடி யெடுத்தாடுதல்

இனி மறந்துவிடவேண்டிய காரியங்களில் மனிதன் காவடி யெடுத்தாடுதலும் ஒன்று. கைராட்டினத்தையும் மறந்துவிட்ட இந்திய மக்கள் காவடி யெடுத்தாடுதலை மறவாதிருப்பது உலக அதிசயங்களில் ஒன்றாக இருக்கிறது.

காவடி யெடுத்தாடுவதால் தெய்வங்கள் திருப்தியடைகின்றனவென்றும் அது ஒரு கடுமையான பிரார்த்தனையென்றும் சாமான்ய ஜனங்கள் நம்பிக்கிடக்கின்றனர். என்னே இந்த நம்பிக்கை! மனிதன் காவடியைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு அலங்கோலமாக ஆடுவதால் தெய்வங்கள் எப்படி திருப்திய

டைகின்றன வென்றும், அதனால் என்ன பயன் என்ன பக்தி உண்டாகின்றன வென்றும் யோசித்துப் பாருங்கள். கிராமாந்திரங்களில் சாமான்ய ஜனங்கள் நாகரீகமறியாமலும் கல்வியறிவில்லாமலும் மூடபக்தியினாலும் காவடி யெடுத்தாடுதல், மண்குதிரை செய்து வைத்தல், (புரவியெடுப்பு,) மஞ்சிவிரட்டுதல், தெருக்கூத்து வைத்தல் ஆகிய காரியங்களெல்லாம் தெய்வங்களுக்குத் திருப்தி யுண்டாக்குவனவாகக் கருதிச்செய்து வருகிறார்கள். உண்மையில் முன்காலத்தில் கிராமங்களில் வேறுவிதமான வேடிக்கை விளையாட்டுகள் உற்சவங்கள் இல்லை. அயலூர்கட்குப் போய்க் காணவும் வழியில்லை. பிறந்த ஊரிலேயே இருந்து இருந்த ஊரிலேயே மடிந்தார்கள். ஆதலால் வேளாண்மை செய்து மகசூலானவுடன் வேடிக்கை விளையாட்டுக்களுக்காகவே சோம்பேறிகளான கிராமாதிகாரிகளும் சூன்யர்களான ஜமீன்தார்களும் தங்கள் கண்கள் குளிரவும் காதுகளினிக்கவும் சிலரை ஆடச்செய்தும் சிலரைப் பாடச்செய்தும் மாடுகளுக்கு வேஷ்டி கட்டி ஓடச்செய்தும் திருவிழா நடத்தி அதை இந்திய மக்களின் பொல்லாத சனி பிடித்த வழக்கங்களைப்போல் தெய்வப் பிரீதி யென்று சமர்ப்பித்துவிட்டனர். அந்த நாகரீகமற்ற காரியங்களை இப்பொழுது நினைத்தவுடன் எங்கு வேண்டுமாயினும் சென்று எந்த அதிசயத்தை வேண்டுமாயினும் சுலபமாகக் கண்டு களிக்கத்தக்க இருபதாவது நூற்றாண்டிலும் பகுத்தறியாமல் கண்மூடித்தனமாக அனுஷ்டிப்பது விவேகமாகுமா? நிற்க,

காவடி எடுத்தாடும் அழகை அந்த ராக தாளத்திற்கிணங்க நானும் கொஞ்சம் பாடுகிறேன். கேளுங்கள்!

தனனதன தனனதன தனன—தனன
தனனதன தனனதன தனனதன தனஞ

1. காவடி யெடுத்தாடு மழகும் அதைக்
கண்டவர்கள் ஆட்டத்தைக் கொண்டாடு மழகும்

2. மேளத்தை யெடுத்தாடு மழகும்
அவர்கள் வெகுஜனக் கூட்டத்தில் நின்றாடுமழகும்

3. கால்மாறி கால்போட்டு நடிப்பர் மாதர்
நாணமென்று கழுதைபோல் தாவிக் குதிப்பர்

4. ஆட்டத்திற்கடுக்காத பாட்டு—சற்றும்
அர்த்தமேயில்லாத பலஜாதிப் பாட்டு

5. கேட்டவர்க்கு விளங்காத பாட்டு—அவர்கள்
கேலிக்கிடமென்று அறியாத பாட்டு

6. சப்தமிட்டுக் கத்துவா ரொருவர் அது
சரியில்லையெனத் திருத்திக் குத்துவாரொருவர்

7. எழுத்தெண்ணிப் படித்திடுவார் ஒருவர்
அதில் இல்லையெனக் கைமாறி மறுத்திடுவாரொருவர்

8. எச்சரிக்கை சொல்லுவா ரொருவர் அங்கு
எடுப்பாகக் கட்டியம் சொல்வா ரொருவர்

இந்தவிதமாகக் காவடி நாடகம் நடைபெறுகின்றது. என்ன அழகு! என்ன பக்தி! தெய்வங்களுக்கும் இதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?

இந்த நிலையில் காவடி யெடுத்தாடும் பக்தர் ஒருவர் மீது சுப்பிரமணிய பெருமான் அல்லது இடும்பன் கடம்பன் அகோர வீரபத்திரன் மயான உருத்திரன் இவர்களில் ஒருவர் பிரவேசித்துவிட்டதாக ஆனந்தமாக ஆடுகிறார். எல்லோரும் அவருக்கு இடம் ஒதுக்கி பய பக்தியோடு வணங்கிப் பிரார்த்தித்து இஷ்ட காம்யங்களைப் பெற்றுக்கொள்கின்றனர்! என்னே! திருவிளை

பாடல்! நாடுவிட்டுக் காட்டிற் புகுந்து சுகபோகங்களை
யெல்லாம் துறந்து ஆசையற்று ஐம்புலன்களையும்
அடக்கி பல்லாண்டு பல்லாண்டாகக் கடுந்தவமியற்றி
உடல் மெலிந்து எலும்பும் தோலுமாய் நின்று ஈசனைப்
பிரார்த்திக்கும் மெய்யன்பர்கட்கும் காணமுடியாத
பரம்பொருளைக் காவடியாட்டக்காரர்கள் க்ஷணநேரத்
தில் தருவித்துத் தம்மீது ஏற்றிவைத்துக்கொண்டு அடி
யார்களை இரக்ஷிக்கப் புகுந்துவிடுவது அதிசயமாகத்
தானிருக்கிறது! பகுத்தறிவில்லாமல் அதை மெய்
யென நம்பிக்கிடக்கும் ஏழைகளுக்காக நாம் பெரும்
வருத்தமடையவேண்டும்.

எனது பிரியமுள்ள இளைஞர்களே! நீங்கள் காவடி
யெடுத்தாடுத லென்னும் கண் கெட்ட காரியத்துக்கு
இனி உடன்படவேண்டாம். அதில் ஒரு பயனுமில்லை.
அதைக் கண்டு நாகரீகமுள்ள மனிதர்கள் நகைப்பது
போலத்தெய்வங்களும் நகைக்கின்றனவென்று தெரிந்து
கொள்ளுங்கள். அதிலும் சாமியாடுகிறவர்கள் சுத்தப்
பொய்யர்களென்று நீங்கள் திட்டமாகத் தெரிந்து
கொள்ளவேண்டும். சோதனை செய்யவேண்டுமாயின்
அவர்கள் சாமியாக நின்று ஆடும்போது அவர்கள்
தலையில் உறைக்க ஒரு குட்டுக் குட்டிப்பாருங்கள். அவர்
தன் செயலால் ஆடுகிறாரா அல்லது சுவாமி செயலாக
ஆடுகிறாரா வென்று உடனே தெரிந்துகொள்வீர்கள்!

இதினும் காவடியாட்டத்துக்குக் கொஞ்சம் மதிப்
பிருக்கிற இந்திய நாட்டைவிட்டு அதன் மகிமையறி
யாத அயல் நாடுகளிலும் போய்க் காவடி எடுத்தாடுவ
தென்றால் அது நியாயந்தானா? அயல் நாடுகளில் நம்ம
வர் தொழிற் செய்யச் சென்று நிலைக்குமுன் அங்கு

ஒரு கோயிலும் மடமும் கட்டி மகமையெழுத ஆரம்பித்துவிடுகிறார்கள். அந்தக் கோயிலுக்கு ஒரு உற்சவம் வேண்டுமே! அதுதான் காவடி யெடுப்பு. காவடியெடுப்பைத் தவிர வேறு உற்சவங்களில் நம்மவர் அநேகருக்குப் பிரியமில்லை. ஆகவே அயல்நாடுகளிலும் காவடியெடுப்புக்குக் குறைவில்லை. ஆனால் நமது கல்வியறிவுக்கும் நாகரீகத்துக்கும் உலகானுபவத்துக்கும் விவேகத்துக்கும் பெருங் குறையுண்டாகின்றது. அவைகளை யடையவேண்டிய மக்கள் இன்னும் நம்மில் ஏராளமாக இருக்கின்றனரென்பதைக் காவடியாட்டம் சாக்ஷி கூறுகிறது. இதைத் தவிர வேறு ஒரு பயனுமில்லை. ஆகவே காவடியாட்டம் நமது இளைஞர்களுக்கு வேண்டாம். இனி வேண்டாம்.

---

23. நால்வகை அசடுகள்

அர்த்தமில்லாமற் பேசுகிறவர்களையும் அர்த்தமில்லாத செயல்களைச் செய்கிறவர்களையும் சமயம் சந்தர்ப்பம் எதிரியின் நிலைமை நோக்கம் இவற்றை யறியாது, தன் காரியத்தை முடித்துக்கொள்ள விரும்புகிறவர்களையும் ஸ்திரமான ஒரு கொள்கையுமில்லாமல் எல்லாப் பேச்சுக்கும் ஆமாம் என்று தலையாட்டம் போட்டுப் பாகுபாடு தெரியாமல் பல்லைக் காட்டுகிறவர்களையும் விஷயம் தெரியாமல் விதண்டாவாதம் பேசுகிறவர்களையும் தன்னைத்தானே பெரிதாக நினைத்து இறுமாந்து கிடக்கும் ஏழைமக்களையும் பெரும்பாலும் அசடுகள் என்று கூறுவர். அத்தகைய அசடுகளை நான்கு வகுப்

பாகப் பிரித்து அவற்றின் விசேட இலக்கணங்களை இங்குக் கூறுகிறேன்:—

கால் அசடு

எப்போதும் தேர், திருவிழா, கூத்து, மஞ்சி விரட்டு என்று ஜனக்கும்பலிற் கலந்து திரிய அதிகப் பிரிய முடையதாயிருக்கும். தப்புக் கொட்டினாலும், கொம்பூதினாலும் வேறு சப்தங்கள் காதிற் பட்டாலும் ஓடோடியும் கண்டானந்திக்கும். விசேடங்களென்றால் அதற்காகத் தன்னை அலங்கரித்துக் கொள்ளும். இடுப்பு வேஷ்டியை முழங்கால் வரை தூக்கிக் கட்டிக்கொண்டு அங்கவஸ்திரத்தை இடுப்பிலிறுக்கி பட்டை பட்டையா கப் பூச்சுப்போட்டு கழுத்திற் கெவுடு, இடுப்பில் அரை ஞாண், கைகளிற் சங்கிலி, சட்டையின் மேற் சங்கிலி, கடிகாரச் சங்கிலி, ஏழு எட்டு மோதிரங்கள் எல்லாம் மாட்டிக்கொள்ளும். இவற்றுள் மூன்று உருத்திராக்ஷக் கெவுடுகளுமுண்டு. ஒவ்வொரு கைக்கு இரண்டிரண்டு சங்கிலிகளுமுண்டு.

அனுவசியமாகக் கையைக் குவித்தும் நிமிர்த்தும் அலைத்தும் ஆட்டியும் நெஞ்சில் வைத்தும் தலையில் வைத் தும் தன் மோதிரம் சங்கிலிகளைப் பிறர் அறியச் செய்யும். ஆனால் வீண்வம்பு, விதண்டா வாதம் பேசாது. கபடம், சூது, வஞ்சகம் தெரியாது. மெலிந்த எண்ணமும், கோழைப் புத்தியுமிருக்கும். நிர்வாகத் திறமையிராது. பழக்க வழக்கங்கட்குப் பெரிதும் கட்டுண்டு கிடக்கும். இந்த மனோபாவ முடைய மக்களையே கால் அசடுகள் என்று கூறுவோம்.

அரை அசடு

நடை யுடை பாவனை நன்றாக இருக்கும். மல் வேஷ்டி, பாம்புமடித் துப்பட்டா, அல்லது விசிறிமடி

துப்பட்டா, சில்க் சட்டை, கைக்குட்டை, வாசனைத் தண்ணீர்கள் இவைகளை அழகுபெற அணிந்து ஒரு சங்கிலி ஒரு மோதிரம் நாகரிகமாகக் கத்தரித்துத் தலையிரை அழகுபெறச் சீவி, வசீகரமாக இருக்கும். ஆனால் வேறு சரக்குகள் ஒன்றுமிரா. மோட்டார் சவாரி, தாசி வீடு, டிராமா, சினிமா இவற்றைத் தவிர மனதைக் கவரத்தக்க பொருள்கள்—ஒன்றும் இவ்வுலகத்திலில்லை. தங்கள் குடும்ப காரியங்களை நிர்வகிப்பதற்கும் கவனிப்பதற்கும் பிறருதவி வேண்டும். செலவு செய்வதற்கு முன்னோர்கள் தேடி வைத்திருக்க வேண்டும். அது தீர்ந்துவிட்டால் நிலைமை அபாயமான நிலைமைதான். புதிதாக ஒரு பைசாவும் சம்பாதிக்கத் தெரியாது. பேச்செல்லாம் மோட்டார்கார் விரைவாகச் சென்றதைப் பற்றியும், அது புறப்பட்ட நேரமும், போய்ச் சேர்ந்த நேரமும் காரின் தனித்தனி உறுப்புகளின் ஆங்கிலப் பெயரும் அதன் மகிமையும் டிராமா ஆக்டர்களின் பெருமையும் அவர்கள் பாடிய பாட்டுக்களின் அருமையும் அவருள்ளும் பெண் நடிகர்களின் மட்டில்லாப் புகழும் விலைமாதரின் வெற்றிகரமான கதைகளும் ஆனந்தமான அனுபவமும் தம்மை அவர்கள் காதலித்த மாதிரியும் தாம் அவரைக் காதலித்தமாதிரியும் நட்பின் உருசியும்............இத்தகைய ஆனந்த சாகர ஸ்நானமாகவேயிருக்கும். ஆனால் கவலையென்பது கனவிலுமில்லை. இந்த அதிர்ஷ்ட சாலிகளைத்தான் அரை அசடுகளென்று கூறுவோம்.

முக்கால் அசடு

நடை யுடை பாவனை யெல்லாம் மேல் நாட்டு திணுசு. பேச்சிற் பாதி இங்கிலீஷ் பாதி தமிழ். மணிப்

பிரவாள நடை. காற் சட்டை மேற் சட்டை டொப்பி டப்பி யெல்லாம் மாட்டிக்கொள்ளும். அவை பொருந்தாவிடில் குனிந்தும் நிமிர்ந்தும் சரிப்படுத்திக் கொள்ளும். தன்னை ஒரு துரை யென்றோ அல்லது இங்கிலீஷ் காரர் மாதிரி யென்றோ பிறர் நினைப்பதிலும் சொல்லுவதிலும் அதிகப் பிரியம். பசையற்ற எலும்புகளைப் போன்ற பட்டம் பதவிகளில் அதிக பிரேமை. ஒரு சின்ன பகதூர் கிடைப்பதாக இருந்தாலும் அதற்காகப் பெருஞ் செலவு செய்யும். ஒரு சிறு பதவி கிடைப்பதாக இருந்தாலும் அதற்காகப் பெருஞ் செலவும் சிபார்சும் செய்யும். ஆனால் நிர்வகிக்கத் தெரியாது. சட்ட திட்டங்களும் தெரியாது. மெம்பர் ஸ்தானங்கட்கும் நம்பர் ஸ்தானங்கட்கும் ஆசைப்படுவதன்றி அங்குப் போய்ச் செய்வதொன்றும் அறியாது. வீற்றிருந்து சோம்பலாற் கொட்டாவிவிடும். சில சமயம் தூங்கி விழும். டம்பத்துக்காக ஏதாவது தர்மம் செய்யும் அல்லது தேநீர் விருந்தளிக்கும். அன்றி நல்ல செலவு இராது. தேசத்துக்காவது, பாஷைக்காவது, ஜாதிக்காவது, அத்தகைய காரியங்களுக்குத் தொண்டு செய்யும் பத்திரிகைகட்காவது யாதொரு உதவியும் சகாயமும் கூட இல்லை. இந்தக் கூட்டத்தாருட் பலர் பத்திரிகைச் சந்தாக்கூட சரிவரக் கொடுப்பதில்லை. ஆனால், தற்கால ஒழுங்கு, மரியாதை, தாங்க்ஸ் (Thanks) சொல்லுதல், கடித மெழுதல், பதிலெழுதல், நேரப்படி வந்து சேருதல், தாமதியாமற் போய்வருதல் முதலிய காரியங்களிற் போதிய அனுபவம் பெற்

றிருக்கும். இவர்களையே முக்கால் அசடுகளென்று கூறுவோம்.

முழு அசடு

இவை தனங்காத்த பிசாசுக்கள். தானும் உண்ணு. பிறருக்கும் கொடா. நல்ல துணியில்லை. நல்ல உணவில்லை. நல்ல சுகமில்லை. விருந்து கிடையாது. வெற்றிலைச் செலவில்லை. மனைவியை நம்பாது. மக்களை நம்பாது. உற்றாரை நம்பாது, உறவினரை நம்பாது. எல்லாம் சந்தேகம். எல்லோரிடமும் அவநம்பிக்கை. எப்போதும் சலிப்பேயன்றி சந்தோஷமேயில்லை. நல்ல விஷயம் காதிலேறாது. ஓய்வு நேரம் ஒருபோதுமில்லை. வெறும் பேச்சுக்கு முப்பத்திரண்டு பற்களையும் காட்டும். காசென்றால் முகங்கறுத்துவிடும். ராஜபாளையம் குட்டிகளைப்போல் உறுமிவிழும். அரைக்காசுக்கு ஆற்றைக் கட்டியழும். பணத்துக்காக மானம் வெட்கம் மரியாதை எல்லாவற்றையும் தியாகஞ்செய்யும். பொய் புரட்டுக்கு அஞ்சாது. சூது, வஞ்சகம் அவற்றின் சொந்தப் பொருள்கள்.

வழக்குகளைப் பின்னிப்பின்னி அகப்பட்டதை விழுங்கப் பார்க்குமன்றி ஒன்றையும் ஒருபோதும் நியாயமாக வெட்டி விடாது. அகப்பட்டவனை அமுக்கிவிடும். உதைப்பவனைக் கண்டால் ஓடிப்போகும். இலந்தை மரங்களைப்போற் கல்லெறிக்கும் கம்படிக்கும் கொடுக்குமன்றி எறிப்பறிக்க முடியாது. மூட நம்பிக்கைகளும் மூடக் கொள்கைகளும் சூழ்ந்து கொள்ளப் பட்டுக் கிடக்கும். இழி தொழிலெல்லாம் செய்யும். சுயமரியாதை யென்பது எள்ளளவுமிராது. கல்வியறிவு ஞானம் இருக்குமிடமே தெரியாது. எல்லாம் பணம்.

எப்போதும் பணம். கனவிலும் பணம். நனவிலும் பணம். பெருக்கல் கூட்டல் கழித்தல்! மனதுக்கு வேறு வேலையேயில்லை. இருந்தாலும் துக்கம். இல்லாவிட்டாலும் துக்கம். இலாபம் வந்தாலும் துக்கம். நஷ்டம் வந்தாலும் துக்கம். துக்கப் பிண்டங்களேயன்றி சுகத்துக்கு சிறிதும் லாயக்கில்லாத ஜன்மங்கள். அசடு அசடு பரம அசடுகள். ஆனால் பணம் நன்றாகத் தேடும். தேடிக் காக்கும். நல்ல செலவும் செய்யாது, கெட்ட செலவும் செய்யாது. மண்ணை மண்ணிற் போகும் வரைக் கட்டிக்காக்கும். அது விசேஷந்தான். இந்தக் கூட்டத்தைத்தான் முழு அசடுகளென்று கூறுவோம்.

எனது பிரியமுள்ள இளைஞர்களே! மேற்கண்ட விஷயங்களைக் கொஞ்சம் கடினமான பாஷையில் எழுதியிருக்கிறேன். ஆனால் நல்ல நோக்கத்தோடு தான் அப்படி யெழுதியிருக்கிறேனென்று கூற விரும்புகிறேன். நமது சமூகம் அபிவிருத்தி யடையும் இந்த சமயத்தில் குறைபாடுகள் எல்லாம் நீங்கிவிட வேண்டும் என்பது எனது விருப்பம். அவற்றைச் சுட்டிக் காட்டினாலன்றி உத்தேச பலன் கைகூடாதன்றோ!

மேற்கூறிய நான்கு வகையாரிடமும் நான்கு வகை நல்ல குணங்களும் இருக்கின்றன. அவற்றை மட்டும் கிரகித்துக்கொண்டு மற்ற அசட்டுக் குணங்களை நீக்கிவிட்டால் உபயோகமாக இருக்கும். அவை யாவன:—முதல் வகையாரிடமிருந்து மனப் பரிசுத்தத்தையும், இரண்டாவது வகையாரிடமிருந்து நடையுடை பாவனைகளையும், மூன்றாவது வகையாரிடமிருந்து தற்கால நாகரிகத்தையும், நான்காவது வகையாரிடமிருந்து பொருளீட்டுதல் செட்டாக வாழுதல் முதலிய காரியங்

களையும் கற்றுக்கொள்ளலாம். அதற்கு மேல் கல்வியறிவும், உலக அறிவும், மனத்திடமும், நிலையான கொள்கையும், உறுதியான் செயலும், பகுத்துணர்ந்து உண்மை நிலை யறிதலும் வேண்டும்.

---

24. அதிர்ஷ்டம்

உலகத்தில் அதிகமாகப் பணம் சம்பாதித்தவர்களையும் முன்னோர்கள் சம்பாதித்த பொருளை வைத்துக் கொண்டிருப்பவர்களையும் அதிர்ஷ்டக்காரரென்று வழங்கப்படுகிறது. உண்மை அதுவல்ல. பணமிருந்தும் துரதிர்ஷ்டமுள்ளவர்கள் அனேகரிருக்கிறார்கள். அவர்களை முக்கியமாக ஏழுவகையாகப் பிரிக்கலாம்.

1. அடிமை வாழ்வு ஒரு துரதிஷ்டம்

ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுதும் சுதந்தரமும் சுவாதீனமும் சுயேச்சையு மில்லாதவனுய் எக்காலமும் ஒரு எஜமானன் கீழ் ஏவலாட் போல் வாழ்பவன் எவ்வளவு பெரும் பொருள் வைத்திருந்தாலும் அவன் துரதிஷ்ட முடையவனே.

2. மனைவி வாய்க்காதது ஒரு துரதிஷ்டம்

ஒரு மனிதன் பெருந்தனவந்தனுகவும் கீர்த்தியுடையவனுகவும் இருக்கலாம். ஆனல் அவன் மனைவி ஒரு பேய்ப்பிறப்பாகவும், ஞானசூன்யமாகவும், ஒரு வழியாலும் ஒத்துவராத கரடியாகவும், மானம் மரியாதை தெரியாதவளாகவும், புருஷனுக்கு நேர்மாறான அபிப்பிராயமுடையவளாகவும், நல்லொழுக்க மில்லாத

வளாகவும் நோயாளியாகவும், அற்பாயுசுக்காரிகளா கவும் இருக்கலாம். அப்படியிருந்தால் அவன் ஒரு பெரிய துரதிஷ்டமுடையவனென்பதிற் சந்தேகமில்லை. பெரும் பணக்காரர் ஒருவர் கல்யாணம் செய்வதும் மனைவி கர்ப்பமடைவதும் பிரஸவமாவதும் பிரஸவ வேதனையாற் சாவதும் மாறிக் கல்யாணஞ் செய்வதும் பின்னும் அப்படியே சாவதுமாக ஐந்து கல்யாணஞ் செய்தும் இப்போது பிரமச்சாரியாக இருக்கிறு ரென்றால் பணமிருந்தும் துரதிஷ்டமுடையவரென்ப திற் சந்தேகமென்ன?

3. மக்கள் வாய்க்காதது ஒரு துரதிஷ்டம்

ஒரு மனிதனுக்கு ஏராளமான செல்வமும் செல் வாக்குமிருக்கலாம். ஆனால் அவனுக்கு பரம துஷ்டர் களான பிள்ளைகள் ஆகாத பிள்ளைகள் அலக்கழிந்த பிள்ளைகள் ஒன்றுக்கும் உபயோகமில்லாத போக்கிரிப் பிள்ளைகள், பிறந்து விடிந்தெழுந்தால் அவர்கள் செய் யும் அக்கிரமச் செயல்களுக்கும் அநியாயமான காரி யங்களுக்கும் அயோக்கியத் தனத்துக்கும் வீண் செல வுக்கும் மனம் வருந்தி வருந்திப் புண்பட்டு என் இந்தப் பாழான பிள்ளைகளைப் பெற்றோம் என்று பரிதவிப்ப வன் துரதிஷ்ட முடையவனன்றோ!

4. நோய்வாய்ப்பட்டிருத்தல் ஒரு துரதிஷ்டம்

ஒரு மனிதனுக்கு நிறைந்த செல்வமும் அழகிய மாளிகையும் நல்ல மனைவியும் பிறவும் குறைவில்லாம லிருக்கலாம். ஆனால் ஊழ்வினை வலியாலோ அல்லது அபத்தியத்தாலோ நோய்வாய்ப்பட்டு சதா பாயும் படுக்கையும் போத்தலும் மருந்தும் மக்கலும் விக்கலும்

உருசியற்ற உணவுமாக இருந்தால் அவனைவிட துரதிஷ்டமுடையவன் யார்?

5. பேராசை ஒரு துரதிஷ்டம்

ஒரு மனிதனுக்கு எல்லாப் பொருளும் இருக்கலாம். ஊரார்க்கெல்லாம் அவன் ஒரு பணக்காரனாகத் தோற்றலாம். ஆனால் அவன் ஒரு பணப் பைத்தியங் கொண்ட பேயனாகவும் ஊரார் பொருளுக்குப் பேராசையுடையவனாகவும் வஞ்சனை, சூது, பொய், புரட்டு முதலியன செய்பவனாகவும் மன அமைதி, சமாதானம், சந்தோஷம் இல்லாதவனாகவும் பரம லோபியாகவும் முதலெடுப்பவனாகவும் கடைசிகாலம் வரையிலும் கணக்குக் கட்டுகளையும் காசுப் பையையும் காத்திருந்து மண்டையை மண்ணிற் போடுபவனாகவுமிருக்கலாம். அத்தகைய ஒருவன் துரதிஷ்ட முடையவனென்பதிற் சந்தேக முண்டா?

6. பெருணவு ஒரு துரதிஷ்டம்

பெருணவென்பது பெருந் தீனி அல்லது யானைச் சாப்பாடெனினும் பொருந்தும். ஒரு மனிதன் பணக்காரனாக இருக்கலாம். ஆனால் இரவும் பகலும் சாப்பாட்டிலேயே ஞாபகமுடையவனாகவும் கரியல், பொரியல், உருட்டல், துவட்டல், கோளா, குறுமா என்று எண்ணற்ற கறிவகைகளையும் குழம்பு வகைகளையும், பக்ஷணம், பாயசம், வடை, அப்பளம் என்று சிற்றுண்டிகளையும் வர்க்கான்னங்களையும் தள்ளுபடியில்லாமல் உள்ளே தள்ளிவிட்டு பால் சாப்பிட்டு அவை ஜீரணமாவதற்கு சோடா இஞ்சி வகையறுக்களையும் அதன்மேற் போட்டு ஏப்பமிட்டு எதிர்க்களித்து சுருட்டிப் பிடித்து ஓமத்திராவகம் பருகி உறக்கமில்லாமல் தடுமாறுகிற

வனைவிட இந்த உலகத்தில் துரதிஷ்டமுடையவன் யாருமில்லையன்றோ! ஊழ்வினை வலியால் வரும் பல கன்ம நோயாளிகளில் இந்தப் பெருந்தீனியும் ஒரு கன்ம வியாதியென்பது மிகையாமோ?

7. பொறாமை ஒரு துரதிஷ்டம்

ஒருவனுக்கு எல்லா நலனு மமைந்திருக்கலாம். ஆனால், மனம் மட்டும் பொறாமை குடிகொண்டதாக இருக்கும். ஊரில் ஒருவன் வெள்ளை வேஷ்டி கட்டினால் இவனுக்கு மனவருத்தம். ஊரில் ஒருவன் புதிதாகப் பணம் சம்பாதித்துவிட்டானென்றால் இவனுக்கு வருத்தம். ஊரில் ஒருத்தி ஆண் குழந்தை பெற்றாளென்றால் இவனுக்கு வருத்தம். ஒருவன் வீடு கட்டுகிறானென்றால் இவனுக்கு வருத்தம். ஊரில் ஒருவன் கல்யாணம் செய்கிறானென்றால் அவனுக்கு வருத்தம். ஒருவன் கெட்டானென்றால் மட்டும் சந்தோஷம். இப்படி பிறர்வாழ மனம் பொறாமல் அனாவசியமாக தானாகவே வருந்தி நொந்துகிடப்பான். அதனாலாகும்பலனென்ன வென்பதை அவன் சிந்திப்பதே இல்லை. ஆகவே அத்தகைய ஒருவனை துரதிஷ்ட வகுப்பிற் சேர்த்தெண்ணுவதற்கு யாருக்கும் ஆக்ஷேபனையுண்டா? இன்னும் பணமுள்ளார்க்குப் பல சில்லரைத் துரதிஷ்டங்களுமுண்டு. ஆனால் அவை அவ்வளவு முக்கியமானவையன்று. ஆகவே ஒருவன் அதிர்ஷ்டமுள்ளவனென்றால் அவனுக்குத் தேவையான அளவு பொருளும் யாருக்கும் அடிமையில்லாத அச்சமில்லாத சுதந்தர வாழ்வும் அன்பும் அமைதியும் விவேகமுமுள்ள மனைவியும் தன்னினும் சிறந்த அறிவுள்ள நல்ல மக்களும் நோயற்ற சரீரமும் ஒரு வரம்புக்குபட்ட ஆசையும் மிதமான (Simple)

ஆகாரமும் ஆகாரத்தைப்பற்றிக் கவலை இல்லாமையும் பொறுமையில்லாத மனமும் முக்கியமாக அமைந்திருக்கவேண்டும். இவற்றுள் ஒன்று குறைந்தாலும் அவன் அதிர்ஷ்டமுள்ளவனாக வாழமுடியாது. ஆகவே அதிர்ஷ்ட மென்பது பணத்தை மட்டும் பொறுத்த தன்று. மற்றும் பல நலன்களையும் பொறுத்திருக்கிறது.

---

25. இன்பக் கிணறு

மெய் வாய் கண் மூக்கு செவிகளாகிய ஐம்புலன்களையுடைய மனித சமூகத்துக்கு இன்ப மிருக்குமிடம் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமா மன்றோ!

ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியத்தை இன்ப மெனக் கருதுவதைச் சகஜமாகக் காண்கின்றோம். அவற்றுள் முக்கியமான சில காரியங்களை யிங்கு கூறுகிறேன்.

1. ஒரு சாரார் ஆகார நியமமின்றி நல்ல நித்திரையின்றி நல்ல சுகமின்றி சதா அலைந்து திரிந்து ஜீவகாருண்யம் தயை தாக்ஷண்யம் ஈகை இரக்கம் பாபம் புண்ணியம் நன்மை தீமை முதலியன ஒன்றுமில்லாமல் மனதுக்கும் ஓய்வில்லாமல் சரீரத்துக்கும் ஓய்வில்லாமல் படாதபாடு பட்டுப் பணம் சேகரிப்பதிலேயே இன்பமன்றி வேறு இன்பமென்பதேயில்லை யென்று கருதுகின்றனர்.

2. ஒரு சாரார் எது எக்கேடு கெட்டாலும் சரி, பணமெல்லாம் பாழானாலும் சரி, வீடு குட்டிச்சுவரானா லும் சரி, கொடுத்ததை வாங்காவிட்டாலும் சரி, வாங்கி னதைக் கொடுக்காவிட்டாலும் சரி, உடம்பெல்லாம் சொறிபிடித்து நோய்ப்பட்டு நைந்து நொந்து உருகி இரத்தப் பசையற்று எலும்பும் தோலுமாய்க் கிடந்தா லும் சரி அவற்றை யெல்லாம் பொருட்படுத்தாமல் மதுவுண்ட வண்டுகளைப் போல் மயங்கி,

"ஓகைமட வாரல்கு லேபரம பதமவர்கள்
உந்தியே வைகுந்தமேல்
ஓங்குமுலை யேகைலை யவர்குமுத வாயினிதழ்
ஊறலே யமுத மவர்தம்
பாகனைய மொழியே வேதவாக் கியமவர்கள்
பார்வையே கருணை நோக்கம்
பாங்கினவ ரோடுவிளை யாடவரு சுகமதே
பரம சுகமாகும்."

என்று மங்கையர் மையலிற் பட்டுக் கிடப்பதே இன்ப மென்கின்றனர்.

3. இன்னுமொரு சாரார் எப்போதும் வம்பு, வழக்கு, வியவகாரம், கக்ஷி, பிரதிகக்ஷி, அடிதடி, வெற்றி, தோல்வி, ஜயம், அபஜயம் என்று அந்த வகையிற் பெரி தும் ஈடுபட்டு எப்போதும் வழக்காளர்களாய் நியாய ஸ்தலங்களையும் வக்கீல் வீடுகளையும் வாச ஸ்தலங்களாக வும் விடுதி (Club) சாப்பாட்டையே பெரு விருந்தாக வும் கொண்டு எவ்வளவு பொருட் செலவானாலும் எவ் வளவு சிரமமானாலும் வெற்றியானாலும் தோல்வியானா லும் சலிக்காமல் வெறுக்காமல் அப்பீல் மேல் அப்பீல் போட்டு அதுதான் இன்பமென்கின்றனர்.

4. மற்றொரு சாரார் ஒரு வேலையுமில்லாமல் வயிறு நிறைய உண்பதும், இரவு பகலறியாமல் உறங்குவதும் மனிதன் பெறற்கரிய பெரும் பேறெனக் கருதி அதுவே இன்பமென்கின்றனர்.

5. பின்னும் ஒரு சாரார் சூதாட்டத்தைத் தவிர இன்ப மென்பதே வேறு கிடையாதென்று சத்தியஞ் செய்கின்றனர்.

6. வேறொரு சாரார் சீச்சீ! உலகத்தில் இன்ப மென்றொன்றிருக்குமானால் அது கட்குடியாகவே இருக்கவேண்டுமன்றி வேறு இன்ப முண்டா!! என்கின்றனர்.

இப்படி யானைகண்ட குருடர்களைப்போல் ஒவ்வோர் சாராரும் ஒவ்வொரு காரியத்தி லீடுபட்டு அதையதையே இன்பமெனக் கருதுகிறார்கள். அப்படியானால் உண்மையாக இன்பமிருக்கும் இடந்தா னெங்கே? இன்பமென்பதுதா னென்ன?

இன்பக் கிணறு ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. அதுதான் மனம். மனமே இன்பம் உற்பத்தியாகும் இடம். மனதுக்கு அன்னியமான பொருள்களெல்லாம் இன்பத்தைச் செலவிடும் இடங்களே யன்றி உற்பத்தியாகும் ஸ்தானங்களல்ல. குழந்தை சுவைத்தால் பால் ஊறுவதுபோல் நல்ல காரியங்கள் மனதைக் குளிரச் செய்து இன்பத்தை ஊறச் செய்கின்றன. ஆகவே இன்பமென்பது வேறாக இல்லை. மனத்திருப்தி அல்லது சிந்தையின் நிறைவே இன்பம் என்று கூறவேண்டியதில்லை. அப்படியானால் மேற் கூறிய ஆறுவகையாரும் அவ்வப்போது மனத்திருப்தி யடைகிறார்களே

17

அது இன்பமாகாதா எனின் இல்லை! அது மயக்கமே யன்றி இன்பமாகாது.

பணம் தேடுவதையே இன்பமெனக் கருதும் ஒருவன் எவ்வளவு பெரும் பணத்தைப் பெற்றாலும் திருப்தியடையப் போவதில்லை. திருப்தியடையாத பணக்காரனுக்கு இன்பமேது? "செல்வமென்பது சிந்தையின் நிறைவே" யன்றி ஆயிரம் பதினாயிரம் இலட்சம் கோடியென்று ஒரு எல்லை கிடையாது. எவ்வளவு பெரும் பொருளைப் பெற்றாலும் பின்னும் கொஞ்சம் அதிகமாகப் பெறுவதற்கே ஆசைப்படுகிறான். இலட்ச இலட்சமாகப் பணத்தைக் கொட்டி அதன் மேல் புரட்டிப் புரட்டி யெடுத்தாலும் அவன் ஆசை தீராது. ஆகவே அவனது கடைசி காலம் வரையிலும் ஆசை வாய்ப்பட்டுத் துன்புறுவதன்றி அவனுக்கு இன்பமேது?

மங்கையரின்பம் இன்னதென்றறியாமல் ஒருவரை ஒருவர் நம்பாமல் ஒருவரை யொருவர் சந்தேகித்து பரஸ்பரம் அன்பு அபிமானம் ஒத்த உணர்ச்சி காதல் இல்லாமல் பணத்துக்காக இருட்டறையிற் பிணத்தைக் கட்டியழுவதுபோல் ஒரு ஆணும் பெண்ணும் கூடுவது இன்பமா? உருவும் திருவும் பருவமும் குணமும் அன்பும் ஆகியவற்றால் தம்முள் ஒப்புமையுடையராய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவுமின்றிப் பால்வகையாற்றாமே எதிர்ப்பட்டுக் கூடுவதே மங்கையரின்பமாகும். இவ்வின்பம் பொருட்பெண்டிரிடத்தும் கட்டாயக் கல்யாணத்தாலும் பெறக்கூடுமா? ஒருபோதுமில்லை. அப்படியானால் அதில் மனத்திருப்தி யேது! இன்பமெங்கே!!

வர்களுக்கு எக்காலமும் இன்பமில்லை. மேலும் அவர்கள் எப்போதும் எந்த நேரத்திலும் ஆபத்துக்குத் தயாராக இருக்கவேண்டியவர்கள். சில சமயம் மரணத்துக்கும் தயாராக இருக்கவேண்டியவர்கள். யார் குடியைக் கெடுக்கலாம், எவர் பொருளை அபகரிக்கலாமென்னும் சிந்தனையே அவர்கள் மூளையைக் கலக்கிக்கொண்டிருக்கும். அத்தகையாருக்கு மனத் திருப்தியேது? இன்பமேது?

ஒரு வேலையுமில்லாமல் சாப்பிட்டுச் சாப்பிட்டு உறங்குகிறவர்களுக்கு இரத்த வோட்டம் குறைந்து மலச்சிக்கலும் புளிச்சேப்பமும் தலைவலியும் இடுப்புப் பிடியுமன்றி சுகமேது? இன்பமேது? அகால மரணந் தான் அதன் பலன்!

சூதாடுகிறவர்கட்கும் கட்குடியர்கட்கும் ஒரு சிறு போதும் மன அமைதியாவது இன்பமாவது இல்லையென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

எனது பிரியமுள்ள இளைஞர்களே! நீங்கள் மனத் திருப்தியடைய வேண்டுமானால், இன்பமடையவேண்டுமானால், கட்குடி, சூது, சோம்பல், கோழைத்தனம், ஏழைப்புத்தி, பொருட் பெண்டிர் பொய்ம்மை மயக்கம், காரியமும் அவசியமுமில்லாத வீண் வம்பு, வழக்கு, வியவகாரம், பேராசை, ஏக்கம், அதைர்யம் முதலிய கெட்ட காரியங்களை யெல்லாம் அறவே யொழித்துவிட்டுத் தளராத ஊக்கமும், சலியாத உழைப்பும் விடாத முயற்சியும் மேற் கொண்டு ஏதாவது ஒரு தொழில் அல்லது வியாபாரத்திலீடுபட்டு நியாயமான வழியிற் பொருளீட்டிக் கிடைத்ததற்குத்திருப்தியடைந்துகிடைக்காத பொருளுக்கு மனவருத்த மடையாமல் ஒழுங்கு,

மரியாதை, சொல்லுறுதி, நாணயம், நம்பிக்கை, கௌர வம், (சுயமரியாதை) முதலிய நன்னடத்தைகளை யுடைய வர்களாய்,

"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்"

என்று சுந்தர மூர்த்திகள் கூறியபடி இளமையும், யாக் கையும், செல்வமும், வாழ்வும் நிலையில்லாதனவென் னும் இரகசியத்தையும் உண்மையையும் உறுதியாக உணர்ந்து எப்போதும் எந்த ஸ்திதியிலும் (Stage) மனத்திருப்தியும், சந்தோஷமும், சிரித்தமுகமும், நல்ல வார்த்தையும், குளிர்ந்த எண்ணமும், மனமொத்த நண் பர்களின் கூட்டுறவும், தமாஷான சம்பாஷணைகளும் உடையவர்களாவீர்களானால் உங்கள் மனத்திலிருக்கும் இன்பக் கிணறு தாராளமாக ஊற ஆரம்பித்துவிடும். நிலையான பேரின்பத்துக்கும் அதுவே சிறந்த வழி யாகும்.

26. விலாசங்களை நீளமாக வைத்துக்கொள்ளுதல்

நம்மவர் செய்கிற அவசியமில்லாத காரியங்களில் விலாசங்களை நீளமாக வைத்துக்கொள்ளுதலும் ஒன்று. விலாசங்கள் எப்போதும் கூடியவரை சுருக்கமாக இருப்பதுதான் நல்லது. நீளமாக இருப்பதால் விசேட நன்மைகள் ஒன்றுமில்லாததோடு அசங்கியமாகவு மிருக்கிறது.

தொடர்ச்சியாக எழுதலை முறை ஐந்து தலைமுறைப் பெயர்களின் தலையெழுத்துக்களை அடுக்கி விலாசமாக

வைத்துக்கொண்டு எழுதவும்புரியாமல்ஞாபகத்தில்வைத்துக்கொள்ளவும் முடியாமல் ராக தாளத்தோடு படித்துக்கொண்டிருப்பதற்கு நம்மவர் நம்பிக்கிடக்கிற முக்கியமான காரணங்களிரண்டுதான். 1. ராசி, 2. கடன் படுதல்.

ராசி

குப்பாஞ் செட்டியார் கொஞ்சம் பணம் தேடியவராக இருக்கலாம். அவர் மகன் கருப்பஞ் செட்டியார் பிதாவின் வழிபற்றி அப்பணத்தைக் கட்டிக் காத்தவராக இருக்கலாம். அவர் மகன் குப்பாஞ் செட்டியார் குப. கரு. குப. விலாசம் வைத்து இருந்த பொருளை அபிவிருத்தி செய்திருக்கலாம். இம்மூவரும் அதிர்ஷ்டசாலிகளாகிவிட்டனர். மூன்று தலைமுறைப் பணக்காரராகிவிட்டனர். இனி இரண்டாவது குப்பாஞ் செட்டியாருக்கு மூன்று மக்களென்று வைத்துக்கொள்ளுவோம். அவர்களுள் மூத்தவர் ராமன் செட்டியார். அந்த ராமன் செட்டியார் குப. ராம. என்று விலாசம் வைத்துக் கொள்ளுவாரா? அப்படி வைத்துக் கொள்ளமாட்டார். ஏன்? பாட்டனும் பூட்டனும் அதிர்ஷ்டசாலிகளல்லவா? அவர்களை விட்டுவிடலாமா? ஆகவே குப. கரு. குப. ராம. என்று வைத்துக்கொள்ளுகிறார். அவர் தம்பி சுப்பையா செட்டியார் சும்மா விடுவாரா? அவர் குப. கரு. குப. சுப. என்று போட்டுக்கொள்ளுகிறார். அவர் தம்பி சோமசுந்தரம் செட்டியார் பைத்தியக்காரரா? இல்லை. அவரும் குப. கரு. குப. சோம. என்று மாட்டிக்கொள்ளுகிறார். இனி இம்மூவருக்கும் மக்கள் காலத்திலாவது சுருக்கிக்கொள்ள நினைக்க வேண்டாமா? குப. கரு. வை விட்டுவிடாமல் குப. கரு. குப.

ராம. குப. வரையும் . அதற்கு மேலும் கூட குப. கரு. குப. போவதில்லை. இதோடு கூட்டுக்கடைகள் ஏற்பட்டு இன்னுமொரு நீண்ட விலாசத்தார் சேர்ந்துக்கொண்டால் ஹரிச்சுவடி யெழுத்துக்களை யெல்லாம் அவ்விருவருமே எடுத்துக் கொண்டுவிடுவார்கள். இந்தத் தொடர்பு விலாசங்களைத்தான் ராசி என்று நம்புகிறார்கள். ஆனால் விலாசம் அப்படியேயிருக்கக் கடை இன்சால்வெண்டாகிவிடுகிறது!

ஆகவே விலாசத்துக்கும் அதிர்ஷ்டத்துக்கும் சம்பந்தமில்லையென்பதை நன்குணரவேண்டும். வறுமையும் செல்வமும் மாறிவரும் தன்மையுடையன வென்பதை நன்குணரவேண்டும் அனுபவிப்பவன். அதிர்ஷ்டசாலியாக இருக்கவேண்டுமன்றி விலாசம் அதிர்ஷ்டமுடையதாக இருக்கமுடியாது.

கடன் படுதல்

பழைய விலாசங்களைத் தொடர்ச்சியாக வைத்துக் கொண்டால் பாங்க் முதலிய கடன்படு மிடங்களில் கடன் படுவதற்கு அனுகூலமாக இருக்குமென்பதும் ஒரு காரணம். அ. ஆ. என்று ஒரு விலாசமிருந்து பெருங் கடன்வாங்கிப் பெருந் தொழிற்செய்து பேங்குகளிலும் பெருந் தனவந்தர்களிடமும் நாணயமாகக் கொடுக்கல் வாங்கல் செய்து நல்ல பெயர் பெற்றிருக்கலாம். அந்த அ. ஆ. விலாசத்திலிருந்து பிரிந்தவர்கள் தாங்களும் தாராளமாகக் கடன்படுவதற்காகவே அ. ஆ. வை விடாமல் ஐந்து தலைமுறை வரையிலும் தொடர்ந்து அ. ஆ. அ. ராம. மெ. ஆ. என்றும், அ. ஆ. அ. ராம. மெ. மெ. என்றும், அ. ஆ. அ. ராம. மெ. பழ. என்றும் வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள். அவர்

கள் முறையே மெ. ஆ. மெ; மெ. மெ. பழ. என்று வைத்துக்கொண்டு கிடைத்தவரையிற் கடன் பட்டாலென்ன? அதிகக் கடன் படுவதற்காக ஐந்தாறு தலைமுறையை இழுத்துக்கொண்டு நிற்கவேண்டுமா? அப்படி யிழுத்துக்கொண்டு நின்றாலும் அ. ஆ. வுக்குக் கிடைத்த கடன் கிடைக்கிறதா? என்னே! பைத்தியம்!!

பிதாவின் பெயரும் தன் பெயருமே விலாசத்துக்குரியன. அதற்குமேல் அவசியமேயில்லை. ஏற்கனவே தகப்பனார் பாட்டனார் அல்லது அவருக்கு முற்பட்டவர்களால் ஏதாவது கடைகளேற்பட்டு முன்னோர்கள் விலாசமிருந்தால் (அந்த விலாசம் நீளமாக இராது) அதை அப்படியே விட்டுவைக்கலாம். அந்தக் கடை பாகமாகும் போது பாகஞ்செய்து கொள்ளுகிறவர்கள் தன் பெயரையும் தன் பிதாவின் பெயரையும் அல்லது தன் பெயரையும் தன் மகன் பெயரையும் விலாசமாக்கிக்கொள்ளுதல் வேண்டும். தொடர்ச்சியாகக் கொடுக்காடு பிடித்தல் கூடாது. கூட்டுக் கடைகள் ஏற்படுத்துவதாயின் தன் பெயருக்கு ஒன்றிரண்டு எழுத்துக்களும் கூட்டுக்காரருக்கு ஒன்றிரண்டு எழுத்துக்களும் ஆக நான்கு எழுத்துக்களுக்கு அதிகமாகிவிடாமற் செய்ய வேண்டும். இருவருக்கும் அதிகமான கூட்டுக்காரர்களாயின் கட்டாயமாக ஆளுக்கு ஒரு எழுத்துத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும். அது அப்படியாக.

தனிப்பட்ட முறையில், அதாவது சொந்த ஊரிலிருந்து வேண்டியவர்களுக்குக் கடிதப் போக்குவரத்துச் செய்துகொள்ளவும் மற்ற சௌகரியங்கட்காகவும் பிதாவின் பெயரை விலாசமாகக் கொண்டு தன் முழுப்

பெயருமிருக்கவேண்டும். எப்படி யெனின் அழகப்ப செட்டியார் மகன் இராமனுதன் என்று வைத்துக் கொள்வோம். அவர் அ. இராமனுதன் செட்டியார் அல்லது அழ. இராமனுதன் செட்டியார் என்று கடிதப் போக்குவரத்துச் செய்து கொள்ளவேண்டும். அது தான் தற்கால நாகரீகமுமாகும்.

விலாசங்களைச் சுருக்கி வைத்துக்கொள்வதால் இன்னுமொரு நயமுமிருக்கிறது. அதாவது அனுவசியமான தந்திச் செலவு மிச்சமாகிறது. அ. இராமனுதன் செட்டியாருக்கு தந்தி சொல்வதானுல் பெயருக்கு இரண்டு வார்த்தைகள் தானுகின்றன. அதே இராமனுதன் செட்டியாருக்கு நீண்ட விலாசமாகவிருந்தால் சில சமயம் பெயருக்காக ஒன்பது வார்த்தைகளுக்குப் பணங்கொடுக்க வேண்டியதிருக்கும். உள்நாடாக இருந்தால் அதிகமாவது எட்டணுவாகும். அயல் நாடுகளாயின் ஐந்து, ஆறு ரூபாய் பெயருக்கு மட்டும் அதிகமாகிவிடும். இது அனுவசியமான நஷ்டந் தானே! ஆதலால்,

எனது பிரியமுள்ள இளைஞர்களே! நீங்கள் உங்கள் விலாசத்தை ஒரே எழுத்தில் வைத்துக்கொள்ளுங்கள். கடைகளானுல் இரண்டு எழுத்துக்கட் கதிகமில்லாமல் வைத்துக்கொள்ளுங்கள். பெரிய ஊராக இருந்து இனந் தெரியாதென்று நினைத்தால் கொஞ்ச நாளைக்கு வீட்டு நம்பர், வீதி அடையாளங்களைக் குறித்துக்கொள்ளுங்கள். பிறகு வேண்டியிராது. அல்லது தபாற் சேவகர்கட்குச் சொல்லிவையுங்கள். இதற்காக நீண்ட விலாசம் வேண்டியதில்லை.

27. கடிதப் போக்குவரத்துச் செய்தல்

ஒருவர்க்கொருவர் கடிதமெழுதிக் கொள்ளுதல் பற்றி இங்கு சில கூற விரும்புகிறேன் :—

வியாபாரம் தொழில்களுக்காயினும் சரி. ஏதோ ஒரு காரியத்துக்காயினும் சரி. ஸ்நேக முறையில் க்ஷேம லாபங்களைப் பற்றி விசாரித்துக்கொள்வதாயினும் சரி. ஒருவர் செய்த நல்ல காரியத்தைப் பாராட்டியாயினும் சரி. ஒருவர்க்கொருவர் கடிதமெழுதிக்கொள்வது சகஜம். அப்படி யெழுதும் கடிதங்களும் அவைகட்குப் பதிலெழுதவேண்டியதும் உரிய காலங்களில் உடனுக்குடன் செய்யவேண்டிய ஒரு முக்கியமான வேலையென்பதை நம்மவர் பலர் இன்னும் தெரிந்துகொள்ளாமலிருக்கிறார்களென்றால் அது ஒரு அதிசயமல்லவா?

சுமார் எண்பது வருஷங்கட்கு முன் நம்மவர் பாய்க்கப்பலேறி தூரதேசங்கட்குப் போய்வந்த காலத்தில் ஒருவர் பினாங்குக்குப் போவதானால் ஆறு மாதங்கட்கு முன்னரே பயணம் சொல்லுவாராம்! ஏற்கனவே பினாங்கு போயிருப்பவரின் தாயாதிகள் ஒவ்வொருவரும் அவர் வசம் கொடுத்தனுப்புவதற்கு (பனையோலை) ஓலை தயாரிப்பார்களாம். அந்த ஓலைகளை எழுதி முடிப்பதற்கு ஆங்காங்கு அபூர்வமாகச் சில நிபுணர்கள் தானுண்டாம். அவர்களிடம் பல நாள் அலைந்து அவர்களுடைய சாவகாசம் அறிந்து காத்திருந்து ஓலையெழுதவேண்டுமாம்! அப்போது உறவினர்களெல்லாம் வந்திருப்பார்களாம். நல்ல நாட்பார்த்து ஓலையெழுத ஆரம்பிப்பார்களாம். ஓலையின் ஆரம்பத்தில் தங்களுக்குள் ஒரு பெரியவரின் பெயரை வைத்து இன்னார் தம்பி

இன்னாருக்கு அநேக தெய்வங்களின் கிருபையினால் எல்லா நன்மையும் மென்மேலும் பெருக உண்டாவ தாகவும் இப்போது இப்பவும்:— என்று பீடிகைபோட்டு அதன்மேல் இங்கு வீட்டிலுள்ள ஆண்பிள்ளைகள் பெண் பிள்ளைகள், மக்கள், மருமக்கள், பிள்ளை குட்டிகள், பேரன் பேத்திகள், அடுத்தவர், சார்ந்தவர்களின் எல் லாப் பெயர்களையும் சரிவர விடாமல் எழுதி, இன்னும் நம்மிட பிள்ளைகள் யாவரும் சுக க்ஷேமமாக இருக்கி ரோம். என்று முற்றுப்புள்ளியிட்டு, அதன்மேல் அவ் விடத்தில் தானும் இன்னாரின்னாரும் இன்னும் நம் மிட பிள்ளைகள் யாவரும் சுகக்ஷேமங்களுக்கு எழுதி யனுப்பிக்கவும், என்று பரந்த நோக்கத்தோடு எழுதி முடிய நாலு ஏடுகள் (எட்டுப்புறம்) ஆகிவிடுமாம். அதன்மேல் இறந்தவர்களைப்பற்றி யெழுதிப் பிறகு புதி தாக கல்யாணம் புதுமை செய்த விபரங்களை யெழுதி விட்டால் ஓலை முடிந்துவிடுமாம். அதற்குமேல் அக் காலத்தில் வேறு தகவல் ஏது? இப்படி முடிந்த ஓலை களை ஒரு சுருளில் சுற்றிச் சுற்றி வைத்து அடக்கி அதற்குமேல் விலாசம் எழுதி அதைப் புறப்படுகிறவரி டம் ஒரு மாத முன்னரே கொடுத்து கண்ணீர் ததும்ப வாய்த் தாக்கலும் சொல்லிவிடுவார்களாம். அந்த ஓலை போய்ச் சேர்ந்து இதுபோல் அங்கிருந்து வருகிற ஒரு வரின் வசம் பதில் வரவேண்டும். அப்படி வருவதற்கு குறைந்தபக்ஷம் ஒரு வருஷம் செல்லுமாம்! அப்படி ஓலை வந்த தினம் ஒது புதுமை வீடாகவோ அல்லது துக்க வீடாகவோ இருக்குமாம்! தூர தேயம்சென்ற ஒருவர் இறந்து ஒரு வருஷம் சென்றுகூட தகவல் கிடைக்காதாம்! ஆனால் அந்த நாளில் தபால் வசதி,

தந்தி வசதிகளில்லை. நீராவிக் கப்பல்களில்லை. தகவல் தெரிந்துகொள்ள வேறு வழியுமில்லை. ஆகவே அது சரிதான்.

இப்போது இவ்வளவு நாகரீகமான காலத்தில் படிப்பும் அறிவும் ஏராளமாக அபிவிருத்தி யடைந்திருக்கும் காலத்தில் எல்லா வசதிகளும் தேவைக்கதிகமாக அமைந்து கிடக்கும் காலத்தில் உடனுக்குடன் தங்கு தடையின்றிக் கடிதப் போக்குவரத்துச் செய்துகொள்ளத் தெரியாத மக்களை என்னென்று கூறுவது?

ஒரு சிலர் அடிக்கடி மைக்கூடு பேனா கடிதம் இவற்றைக் கையிலெடுப்பதற்குக் கூடப் பிரியப்படுவதில்லை. ஒரு சிலர் அவற்றை யெடுப்பதற்கு ஒரு நல்ல நாட்பார்ப்பதுமுண்டு! இன்னும் சிலர் புதிதாகக் கடிதங்கள் எழுதவும் வந்த கடிதங்கட்குப் பதிலெழுதவும் சங்கடப்பட்டுக்கொண்டு பல நாட்களைத் தள்ளித் திருநாளைப் போவாராவதுமுண்டு! மற்றும் சிலருக்கு ஒரு ஆளுதவியில்லாமற் கடிதமெழுத முடியாது. இப்படி பலவிதமான இடையூறுகளுண்டு. இந்த ஆபத்துக்களை யெல்லாம் தாண்டிக் கடிதமெழுதப் புகுந்துவிட்டால் ஒவ்வொரு கடிதமும் பல பக்கங்களாகும்! என்? அநேகம் கடிதங்கள் வந்து சேர்ந்ததாக எழுத வேண்டும். அநேகந் தகவல்கட்கு மறுமொழி கூற வேண்டும். அநேகம் புதிய விஷயங்க ளெழுதவேண்டும். மறந்துபோன காரியங்களை யெல்லாம் நினைவுக்குக் கொண்டுவந்தாக வேண்டும். ஒவ்வொரு விஷயத்தையும் திருப்பித் திருப்பி யெழுதவேண்டும். ஆகவே பல பக்கங்கள் எழுதாமல் முடியாது.

சிலருக்கு ஒரு கடிதத்தை ஆரம்பித்தால் எழுதி முடியச் சில நாட்கள் வேண்டும். அடுத்த வெள்ளிக் கிழமை கப்பல் டயமாக இருந்தால் இந்த வெள்ளிக்கிழமைக்கே ஆரம்பித்துவிட்டாற்றான் நல்லது. இல்லாதிருந்தால் கப்பல் நங்கூரம் எடுத்தாகி விடுதலும் கூடும். அவ்வளவு பிரயாசைப்பட்டு எழுதும் கடிதங்களிற் பல சீக்கிரம் விளங்கிக் கொள்ள முடியாததாக இருக்கும். சில கடிதங்கள் முன்னுக்குப் பின் மாறுபட்ட தகவல்களைக் கொண்டதாகவும் இருக்கும். சில கடிதங்களில் எழுதியிருக்கும் தகவல்களைப்பற்றி யெழுதிய வரை நேரிற்கண்டு பேசினாற்றான் அர்த்தம் புரியும்! இப்படி நாகரிகமற்ற முறையில் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்வதால் தொழில் வியாபாரங்களுக்கு எவ்வளவு இடையூறுகளுண்டாகு மென்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள முடியவில்லை. மேலும் ஒருவர் ஒரு தகவலை யெழுதிக்கேட்டால் உரியகாலத்தில் சரியான மறுமொழி யெழுதாதவன் என்ன மனிதன்! சில வருஷங்கட்கு முன் வறுமை வயப்பட்ட ஒரு தமிழ் வித்துவான் ஒரு பிரபுவுக்குச் சரமகவி பாடியிருந்தார். அந்தப் பாட்டுகளில் ஒரு பாட்டின் ஒரு பகுதி மட்டும் எனக்கு ஞாபகமிருக்கிறது. அதாவது:—

"பாட்டெழுதினாலும் ஒருபதி லெழுதாப்
பாமரர்கள் பாரிலுண்டு"

என்று துக்கப்பட்டிருந்தார். அது முற்றிலும் உண்மைதான். அனேகம் மண்டைகளுக்குக் கடிதம் எழுதுவது ஒரு முக்கியமான வேலை யென்பது தெரியாது! அது போகட்டும்.

எனது பிரியமுள்ள இளைஞர்களே! நீங்கள் மற்ற காரியங்களைப் போலவே கடிதமெழுதும் வேலையிலும் சுறுசுறுப்பாக இருங்கள். ஒவ்வொரு நாளிலும் ஒரு பகுதி நேரத்தை அதற்காக ஒதுக்கிவைத்துக் கொள்ளுங்கள். வந்த கடிதங்களை உடனே கவனியுங்கள். அதில் அவசரமான காரியங்களிருந்தால் அவற்றை விரைந்து செய்யுங்கள். தாமதமில்லாமல் மறுமொழி சொல்லவேண்டியதானால் உடனே அடுத்த மெயிலில் எழுதிவிடுங்கள். தாமதித்து ஏதாவது ஒரு தகவலறிந்து அல்லது ஒன்றைச் செய்து மறுமொழி கூற வேண்டியவைகளானால் துரிதமாகச் செய்து எழுதுங்கள். தூரதேசங்களிலிருப்பவர்கட்கு உடனுக்குடன் தகவல்கள் எழுதிக்கொண்டிருக்கவேண்டும். ஒருவாரத்துக்கொருமுறை கப்பலானால் கப்பல் டயத்துக்கு எழுதவேண்டிய கடிதங்களைக் கண்டிப்பாகஎழுதிவிடவேண்டும். முதலாளி, கூட்டாளிகள் ஒவ்வொரு கப்பலுக்கும் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள வேண்டும். விசேஷ தகவல்களில்லாவிட்டாலும் சுருக்கமாகவாவது கடிதம் இருக்கத்தான் வேண்டும். அதுதான் சிறந்த முறையென்பதை இளைஞர்கட்கு வற்புறுத்துகிறேன்.

28. சோம்பலின் கேடு

தரித்திரத்தின் அறிகுறி சோம்பல். சோம்பலுடையவன் இந்த உலகத்தில் ஒரு காரியத்துக்கும் உபயோகமற்றவனாகிறான். ஒவ்வொருநாளும் தான் செய்ய

வேண்டிய காரியங்களைச் செய்து, பேசவேண்டிய பேச்சுக்களைப் பேசிப் போய்வரவேண்டிய இடங்கட்குப் போய்வந்து, தீர்த்துவைக்கவேண்டிய காரியங்களைத் தீர்த்துவைத்து, முடிக்கவேண்டிய காரியங்களை முடித்துக் கொள்ளாமல், விடிந்தெழுந்தால் திண்ணை தூங்குவதும், ஊர்க்கதைப் பேசுவதும், வாய்பார்த்து நிற்பதும், இந்தப் பொல்லாப் பொழுதை யெப்படிப் போக்குவது என்று ஊர்சுற்றி, எங்கே நாலு பேர் கூடுகிறார்களோ, எங்கே சீட்டாட்டம் நடக்கிறதோ, எங்கே சண்டை சச்சரவு வம்புப்பேச்சுகள் நடக்கிறதோ, அங்கு சென்று பொழுதைப் போக்கிவிட்டு, சாப்பாட்டுக்கு வருவதும், சுயமரியாதை யில்லாத சோம்பேறிகளின் செயலாகும். இத்தகைய சோம்பேறிகளால் ஒரு காரியமும் சாதிக்க முடிவதில்லை. வீணுகச் சோற்றுக்குக் கேடும் பூமிக்குப் பாரமுமாகவே இருக்கின்றனர். இவர்களுள்ளும் முதல் வகுப்புப் பேர்வழிகளுண்டு. அவர்கள் உண்ணவும் தின்னவும் மலஜலங் கழிக்கவுங்கூடச் சங்கடப்படுகிறவர்கள். அந்தக்காரியங்களைக்கூட தங்களுக்காக வேறு ஒருவர் செய்தால் அவர்களுக்கு சம்மதந்தான். அப்படியான ஆசாமிகளுமுண்டு. ஒரு சிலர், இருந்தால் எழுந்திருக்க மாட்டார்கள். எழுந்துவிட்டால் இருக்கவுமாட்டார்கள். சரேலென்று எழுந்திருக்கவும் இருக்கவும், நடக்கவும் அவர்களைப் பிடித்த சனியன் (சோம்பல்) விடுவதில்லை. இருக்கும்போது மூன்று நாலு ஷண்முகநாதன் போட்டு இருப்பதும், எழும்பும்போது பல தெய்வங்களைப் பிரார்த்தித்துக்கொண்டு எழும்புவதும், சோம்பலின் பெருமையேயாகும். சோம்பேறிகளிடத்

தில் ஒரு காரியத்தை முடித்துக்கொள்வதும் கஷ்டம். எவ்வளவு அவசரமான காரியமாக இருந்தாலும் தவணை தள்ளிப்போட்டுக் கொண்டிருப்பார்கள். கொடுக்க வேண்டியதைக் கொடுத்துத் தீர்க்கவுமாட்டார்கள். வாங்கவேண்டியதை வாங்கிக்கொள்ளவுமாட்டார்கள். நாணயமுமிராது. சண்டி யெருமையோடு சங்கடப் படுவது போலவே அவர்களோடு சங்கடப்படவேண் டியதாக இருக்கும். இத்தகைய சோம்பேறிக் கூட்டத்தை மூன்று பிரிவாகப் பிரித்துக் கூறுகி றேன்.

முதல் வகுப்பு

முதல் வகுப்பு ஆசாமிகளுக்கு எழுதப்படிக்க அதி கமாகத் தெரியாது. கொஞ்சம் தெரிந்திருந்தாலும் அதை விரும்பிப் பாராட்டுவதில்லை. ஏகதேசமாக எழுதப்படிக்க நேர்ந்துவிட்டால் காலணாவுக்கு மைக் கட்டி வாங்கி கரைத்து ஒரு பேனு சம்பாதித்து அடுத்த வீட்டிற் கடிதம் ஓசி வாங்கி இத்தனையும் சேகரித்து அந்தப் பெரிய காரியம் முடியவேண்டும். ஆனால் சொற்கேட்டான், சேலை, காய், கயிறு, சீட்டுக்கூட் டம் முதலியன நீட்டின கைக்குத் தயாராக இருக் கும். காலிக்கூட்டம் எப்போதுமிருக்கும். மஞ்சி விரட்டு, கூத்து முதலியன இருபது மைலுக்கு அப்பு றம் நடந்தாலும் சாயவேஷ்டி கட்டிச் சந்தனம் பூசி உரியகாலத்திற் கிளம்பிவிடுவார்கள். குடும்ப காரியங் கட்கும் செலவுக்கும் முன்னோர்கள் உயிருடன் இருக்க வேண்டும். அல்லது தேடி வைத்துவிட்டுப் போயிருக்க வேண்டும். இல்லாதிருந்தால் கூடியசீக்கிரம் எல்லாம் காலியாகி மனைவி மக்களும் தெருவில் நிற்கவேண்டி

யதுதான். இவர்கள் கவலையில்லாத முதல் வகுப்பு ஆசாமிகள்.

இரண்டாவது வகுப்பு

இவர்கள் பொருளீட்டு மிடங்கட்கும் போய்வருவார்கள். போனாற்போனதுதான். வந்தால் வந்தது தான். கடிதங்கள், தாக்கல், தகவல் எழுதுவதில்லை. எழுதுகிறவர்கட்குப் பதிலிறுப்பதுமில்லை. போனவிடங்களிற் செய்கிறதொழிலும் காரியமும் அப்படித்தான் இருக்கும். அங்கும் வயிற்றை நிரப்புவதும், உறங்குவதும் சீட்டாடுவதுந்தான் முக்கியமான காரியங்களாகும். உடனுக்குடன் எழுதவேண்டிய கணக்குகளைக் கூட எழுதுவதில்லை. கணக்குக்காரியங்கள் குப்பையாகக் கிடக்கும். திட்டம், அயன்தொகை தானகச் சரிப்படவேண்டுமன்றி அவற்றைச் சரிக்கட்ட அவர்களால் முடியாது. வசூலிப்பதற்கு வகை தேடுவதுமில்லை. கொடுக்கவேண்டியதைக் கொடுப்பது மில்லை. செத்த பிராணிகளைப்போல் அவர்கள் காலந்தள்ளுவர்.

மூன்றும் வகுப்பு

மூன்றும் வகுப்புச் சோம்பேறிகள் தங்கள் வீட்டுக்காரியங்களைச் சரிப்படுத்தி வைத்துக்கொள்ளாமல் ஊர்க்காரியங்கள் பார்க்கப் போய்விடுவார்கள். வீடு வீடாகப் போய்ப் புகுந்து அழையா விருந்தாகப் பஞ்சாயம் பேசுவர். வெற்றிலையும் புகையிலையும் கிடைத்தால் மாறி மாறி மென்று எச்சிலையுமிழ்ந்து தன்னைச் சுற்றி நாற வைத்துக்கொண்டு காலை முதல் மாலை வரை வீண்கதை பேசுவர். மற்றவரும் வேலை செய்யமுடியாதபடி ஊர்வம்பு பேசித் தொந்தரவு செய்வர். காரியமான வார்த்தையை அதிற் கண்டெடுக்கவும் முடியாது. எல்

லாம் வீண் கதை, வீண் பேச்சு. வெற்றொலி. காரியஸ் தனுக்கு அது அதிக உவட்டலையும் வெறுப்பையும் தருவதாகும். இத்தகைய சோம்பேறிகள் துரதிர்ஷ்டவசமாக நமது நாட்டிற்றான் அதிகமாகக் காணப்படுகின்றனர். நமது நாட்டில் நூற்றுக்கு எண்பது பேர் சோம்பேறிகள். இருபதுபேர்தான் காரியஸ்தர்களாக இருக்கலாம்.

மேல்நாட்டினரைப் பாருங்கள். அவர்கள் சோம்பலை ஒரு இழிவான குணமெனக் கருதுகின்றனர். சோம்பலுடையவன் புதை குழியிலிருப்பவனென்று கருதுகின்றனர். அவர்கள் ஒரு நிமிஷத்தையும் வீணாக்குவதில்லை. ஒவ்வொரு நாளும் செய்யவேண்டிய காரியத்தைச் செய்தே தீருவார்கள். அதன் பயனும் முடிவும் என்னவாயினும் தங்கள் கடமையைச் செய்து முடிப்பார்கள். ஒவ்வோர் நாளிலும் நேரத்தைப்பிரித்து அந்தந்த நேரத்தில் அந்தந்தக் காரியங்களைச் செய்து தீர்த்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். ஓய்வு நேரங்களில் வேடிக்கை விளையாட்டுகளுக்குப் போவார்கள். அவற்றையும் ஒரு கடமையாகவே கருதுகிறார்கள். அவர்கள் செய்யும் எந்த வேலையும் எந்தக் காரியமும் சுத்தமாக இருக்கும். தனக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களைக் கவனிக்கமாட்டார்கள். பேசமாட்டார்கள். ஒரு இடத்துக்குப் போவதானாற் குறித்த நேரத்துக்குப் போய் இருக்கவேண்டிய அல்லது செய்ய வேண்டிய நேரத்தில் இருந்து செய்து திரும்புவார்கள். தன் காலத்தையும் பிறர் காலத்தையும் வீணாக்கச் சம்மதிக்கமாட்டார்கள். நடப்பதுகூட சுறுசுறுப்பாக நடப்பார்கள். அயர்ந்து ஓய்ந்து நோயாளிகள்போல

நடக்க வெட்கப்படுவார்கள். வயோதிகர்களுங்கூட சுறுசுறுப்பாகத் திரிவார்கள். சுறுசுறுப்பாகப் பேசுவார்கள். சோம்பலென்பதே அவர்கட்குப் பிடிக்காத காரியமாகும்.

நம் நாட்டிற்றான் சோம்பலுக்கு அதிக மகிமையுண்டு. கிழவர் முதல் குமரர் வரையிலும் சோம்பற் சபை மெம்பர்களாகவே யிருக்கின்றனர். ஊர்கள் தோறும் சோம்பேறிகள் கூடுமிடமும் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் அங்கு கூடி ஊர்க்கதை, நாட்டுக்கதை, நகரக்கதை, கெட்டகதை, வாழ்ந்தகதை, போனகதை, பெற்றகதை, பிறந்தகதை, இப்படித் தங்களுக்குச் சம்பந்தமில்லாத பல கதைகளும் பேசித் தீர்த்துவிட்டுப் பொழுதைப் போக்குகின்றனர். ஆனால் தங்கள் கதை என்னவென்று அவர்கள் சிந்திப்பதேயில்லை! ஆதலால் எனது பிரியமுள்ள இளைஞர்களே! நீங்கள் எக்காலத்தும் சோம்பேறிக்கூட்டத்திற் சேரவேண்டாம். ஊர் வம்பு வீண்கதை பேசவேண்டாம். பந்தயம் வைத்தோ வைக்காமலோ, சீட்டு சொற்கேட்டான் ஆடவேண்டாம். திண்ணைக்குத் திண்ணை போயிருந்து வாய் பார்க்கவேண்டாம். கண்டவிடமெல்லாம் படுத்துறங்க வேண்டாம். நோயாளிகளைப் போல் அயர்ந்து ஓய்ந்து திரியவேண்டாம். எப்போதும் உங்கள் தொழிலை வேலையைக் காரியங்களைக் கவனித்துக்கொண்டு சுறுசுறுப்பாக இருங்கள். கடிதம் கணக்கு முதலிய காரியங்களை உடனுக்குடன் எழுதுங்கள். தொழிற் செய்யுமிடங்கட்குப் போனால் கண்ணுங் கருத்துமாகத் தொழிலைக் கவனியுங்கள். கொடுக்கல் வாங்கல்களை ஜாக்கிரதையாகவும் நாணயமாகவும் செய்யுங்கள். எதற்

கும் அனுவசியமாகத் தவணை தள்ளிப் போடாதீர்கள். ஒரு இடத்துக்குப் போவதானல் குறித்த நேரத்திற் போய்ச் சேருங்கள். ஒழிந்த நேரங்களில் வேடிக்கை விளையாட்டுகளைப் பாருங்கள். சந்தோஷமாகப் பொழுது போக்குங்கள். வீட்டிலிருந்தாலும் வீட்டுக் காரியங்களைப் பொறுப்பாகக் கவனியுங்கள். பெற்ருேரின் குடும்ப பாரத்தைக் குறைத்து நீங்கள் பொறுத்துக்கொள்ளுங்கள். மனைவி மக்களைக் கவனியுங்கள்! பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம், உடல், நலம், முதலிய காரியங்களைக் கவனியுங்கள்! காலை மாலைகளில் தோட்டங்களை மாடு கன்றுகளைக் கவனியுங்கள்! எல்லாக் காரியங்கட்கும் வேலைக்காரரின் உதவியை நாடாமல் உங்களால் இயன்ற வேலைகளை நீங்களே செய்யுங்கள். சரேலென்று எழுந்திருக்கவும் உட்காரவும் பழகிக் கொள்ளுங்கள். மூட்டை முடிச்சுகளானாலும் தூக்க எடுக்கக் கூசவேண்டாம். ஓட நடக்கவும் அஞ்சவேண்டாம். எப்போதும் பொருளீட்டுதல், அதைக் காப்பாற்றுதல், செலவு செய்தல் ஆகிய காரியங்களில் ஜாக்கிரதையாக இருங்கள். உங்கள் வாழ்நாளிற் சோம்பலுக்கிடமில்லாமல் செய்துகொள்ளுங்கள்.

---

29. பிடிவாதத்தின் கேடு

மனிதர்கட்குள்ள தீய குணங்களில் பிடிவாத குணமும் ஒன்று. பிடிவாதமுள்ள மனிதன் ஒரு காலமும் சுகமடைந்ததே இல்லை. பிடிவாதமுள்ள மனிதனிடத்து வேறு நற்குணங்களிருக்கலாம். இருந்தாலும் அவை

பிரகாசிப்பதுமில்லை; பயன் படுவதுமில்லை. பிடிவாத முள்ள மனிதன் கடைசியாக தானும் தன் பிடிவாத குணமுமின்றி வேறு துணைகளை யெல்லாமிழந்து, மனைவி மக்களின் துணையுங்கூட இல்லாதவனாய்த் துன்பப்படுகிறான். ஆகவே பிடிவாத குணத்தை விவேகிகள் விட்டுவிடவேண்டும்.

பிடிவாத குணம் பல திறப்படும். அவற்றுட் சிலவற்றை மட்டும் இங்கு கூறுகிறேன்.

ஒருவன் தன் கடன்காரன் கெட்டு மெலிந்து நஷ்டமடைந்து நியாயமான காரணத்தால் கடன் தொகையில் நூற்றுக்கு ஒன்றிரண்டு குறையத் தந்தாலும் வாங்கேனென்று பிடிவாதம் செய்வானாயின் அத்தகைய ஒருவன் கேடடைவதிற் சந்தேகமில்லை. வறுமையினால் மெலிந்துபோன ஒருவனிடத்து இரக்கங் காட்டாமல் தயை தாக்ஷண்யமின்றி வன்கண்மையாக வழக்காடி உப்புச்சட்டி, வரையோடு வரையில் ஏலங் கூறி மேலும் அவனைப்பிடித்து சிறைச்சாலைக்கனுப்பி அவமானப்படுத்தித் தானும் நஷ்டமடைந்து எதிரியையும் தலையெடுக்க விடாமல் ஒரே பிடிவாதமாக நின்று ஒரு குடியைக் கெடுப்பானாயின் அவன் தானும் கெடுவதற்கு விதை போடுகிறானென்பதுதான் அதன் கருத்தாகும். வேறு அவனடையும் நல்ல பலன் ஒன்றுமில்லை. நிலத் தகரார் இடத்தகரார் மரியாதைத் தகரார் கணக்குத் தகரார் என்று பல சாதாரண காரியங்களிற் கொஞ்சம் விட்டுக்கொடுத்துச் சமாதானமாகிவிடாமல் நான் பிடித்ததே முயலென்று வாதாடிப் பிடிவாதங்கொண்டு அந்த அற்பக் காரியத்துக்காக ஒன்றன்மே லொன்றாக் கடைசி நியாயத் தலம் வரையிற் சென்று கைப்பொரு

ளெல்லாம் தோற்று நாய்போ லலைந்து வெற்றினேன்; தோற்றேன் வெறுங்கையோ டயர்ந்தேனென்று வீழ்கின்றனரே! இத்தகைய பிடிவாத மக்களுக்குச் சிறிதாவது ஞானமிருக்கிறதா? ஒரு நிலத்தில் ஒரு இடத்தில் அல்லது ஒரு கணக்கில் எதிரி நியாயந்தவறிப் பேசினுலும் அல்லது விளங்காமல் வழக்குச் சொன்னுலும் சிறிது விட்டுக்கொடுத்து நேர் செய்து கொண்டால் அது எவ்வளவு சுலபமாக இருக்கும். அதைவிட்டு நான் சொன்னதையே செய்யவேண்டும். நான் சொன்னபடியே கேட்கவேண்டுமென்று பிடிவாதஞ் செய்தால் அது பெரிய விவகாரமாகி நியாயத் தலங்கட்குப்போய் வழக்கிட்டு சாக்ஷிகளைச் சேகரித்து ஆதாரவுகள் தேடி வக்கீல் வைத்து கண்ணை மூடிக்கொண்டு செலவுசெய்து காலமும் பொருளும் வீணுகி வெற்றிபெற்றுலும் தோல்வியடைந்தாலும் பலன் ஒன்றுமில்லாமற் போவதிற் சுகமென்ன? ஒரு காசு பெருத காரியத்துக்குப் பிடிவாத குணத்தால் முடிபட்டுப்போன கதைகள் பலவுண்டு. இதினிலும் கேடானது மரியாதைத் தகரார். மரியாதை யென்பது பிறரிடமிருந்து கண்ணியமாகப் பெறவேண்டிய ஒரு காரியமன்றி அடிதடி வம்பு வழக்கினுற் பெறுவதன்று. ஒருவன் தனக்கு மரியாதை செய்யவேண்டுமென்று கேட்பதும் அதற்காக வம்பு பேசுவதும் பிடிவாதஞ் செய்வதும் அழகான செயலாகுமா? ஒருவன் தன் முன்னோர்கட்கு செய்த மரியாதைகளைச் தனக்குச் செய்யவில்லையென்றல் அந்த மரியாதையைப் பெறத் தன்முன்னோர்கட்கிருந்த யோக்கியதை தனக்கில்லையென்று அவன் தெரிந்துகொள்வது நல்லது. அதைவிட்டு மரியாதை கெட்டு வழக்காடுகி

ஞர்களே! அது மரியாதைதானா? இந்த வீண் காரியம் ஒரு காசும் பெறாத காரியத்திற் பிடிவாதஞ்செய்து வழக்காடி எத்தனையோ பேர் எவ்வளவு கஷ்ட நஷ்டமடைந்து கிடக்கின்றனர்!

பிடிவாத குணத்தினால் ஒரு மனிதனுக்கு வியாபாரமும் தொழிலும் ஏனைய பல நன்மைகளும் பெரிதும் பாதகமடைந்துவிடுகின்றன. பிடிவாதக்காரனை யாரும் விரும்புவதில்லை. அவனை நட்புக்கொள்வதுமில்லை. அவனுடன் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ளவும் அஞ்சுவார்கள். அவனுக்குப் பக்கத்திற் குடியிருக்கவுங்கூட அஞ்சுவார்கள். என்றால் பிடிவாதத்தின் கேடு எவ்வளவு பெரிதாக இருக்கிறதென்பதைச் சொல்லவேண்டுமா? ஆதலால்,

எனது பிரியமுள்ள இளைஞர்களே! நீங்கள் எக்காலத்தும் எந்த சமயத்திலும் எந்தக் காரியத்திலும் பிடிவாதமுள்ளவர்களாக இருக்கவே கூடாது. சரளமாகவும் தயாளமாகவும் பெருந்தன்மையோடும் காரியங்களின் பலாபலனைச் செவ்வையாக ஆலோசித்தும் நியாயத்துக்கும் ஒழுங்குக்கும் கட்டுப்பட்டும் நடக்க வேண்டும். உங்களுடைய வாழ்நாளில் நீங்கள் பலவிதமான சுகதுக்கங்களையும் இலாப நஷ்டங்களையும் நன்மை தீமைகளையும் சந்திப்பீர்கள். அப்போது உங்களுக்கு அருமையான உதவிகளைச் செய்வது உங்களுடைய விவேகமும் தயாளகுணமும் விட்டுக்கொடுத்தலென்னும் பெருந்தன்மையும் தைர்யமுமேயாகும். அந்த உத்தம குணங்கள் செய்யக்கூடிய நன்மைகளை உங்களுக்கு யாராலும் செய்ய முடியாது. பிடிவாத முதலிய தீயகுணங்களை நீங்கள் வளர்த்துக்கொண்டு

விட்டால் பிறகு அவை உங்களை இல்குவாக விட்டு விலகாது. ஆகவே அவற்றாலுண்டாகும் துன்பங் கட்கு ஆளாகாமல் தீராது. ஆதலால் நீங்கள் பேச்சிலும் காரியத்திலும் சரளமானவர்களாகவும் விடக் கட்டத் தெரிந்த விவேகிகளாகவும் எப்போதுமிருக்க வேண்டும்.

---

30. அகங்காரமும், ஆபத்தும்

அகங்காரம் மனித சமூகத்துக்கு விரோதமான ஒரு பெரிய நோய். நிச்சயமாக ஆபத்திற் கொண்டு போய்விடும். அந்தப் பெருவியாதியை அறிஞர்கள் அடியோடு ஒழித்துவிட வேண்டும். பெருந்தன்மையற்ற மனப்போக்கிலும் அர்த்தமற்ற ஆடம்பரங்களினாலும் அது வியாபக மடைந்து கடைசியாக தீங்கான முடிவைச் செய்கிறது. ஒரு சிலருக்குப் பணச்சுமையினாலும் உணர்ச்சியற்ற படிப்பினாலும் உண்மையுணராத அவிவேகத்தாலும் பின்னும் சிலருக்கு காரணமில்லாத தடிப்புத்தியினாலும் உண்டாகின்ற நோயாக அது இருக்கிறது.

குங்குமம் சுமந்த பிராணிகளைப்போற் பணத்தின் உபயோகத்தையும் பிரயோஜனத்தையும் அறியாதவர்களும் தானு மனுபவிக்காமல் பிறருக்கும் உதவாமல் ஈயாத லோபிகளாகவும் எழுதி யெழுதி யேட்டில் வைத்து விட்டு சிவலோக பிராப்தி யடைகிறவர்களாகவுமுள்ள ஒரு சில பணக்காரருக்கு மற்ற பெருமையொன்றும் இல்லாதிருந்தாலும், தான் ஒரு பணக்காரன்

என்ற அகங்கார மட்டும் நிறைய இருக்கக் காண் கிறோம்.

கிராமபோன் பெட்டி மாதிரி பல புத்தகங்களை யெழுத்தெண்ணிப் படித்து விட்டு உபமானங்களெல் லாம் கவிகளாகவே சொல்லி அலங்காரமாகப் பேசு கிறார்கள். ஆனால் படிப்புக்குத் தக்க குணவிசேடங்க ளில்லாமல் அவர்களிடத்து அகங்காரம் மிஞ்சி நிற்கக் காண்கின்றோம்.

மனித வாழ்க்கையின் அநித்தியத் தன்மையை யுணராத சிலர் படித்திருந்தாலும் பணக்காரராக இருந்தாலும் அரசியல் ஞானம், சட்டதிட்டங்கள், மேல்நாட்டு நாகரீகம், கீழ்நாட்டு நாகரீகம் இவற்றை யறிந்திருந்தாலும் விவேகமற்ற முறையில் தற்பெரு மைகொண்டு அகங்கார முடையவர்களாகவே காணப் படுகிறார்கள்.

இம்மூன்று வகை மனிதர்களும் அகங்காரம் கொள்ளுவதற்காவது காரணமும் கொஞ்சம் அர்த்தமு முண்டு. ஒரு யோக்கியதையு மில்லாமலும் அருவருக் கத்தக்க செய்கைகளையுமுடைய சில தடிக்கழுதைகளும் எங்கோ காலியாகக் கிடக்கின்ற குரிச்சிகளில் ஒன்று அகப்படுவதையும் அங்கு மிங்கும் பேசும் கூட்டங்க ளில் கொஞ்சம் இடம் பெறுவதையும் கிடைத்தற் கரிய பெரும் பேறாக நினைத்துக்கொண்டு ஒழுங்கு மரி யாதை தன்னடக்கம் பெருந்தன்மை முதலிய நற் குணங்களையெல்லாம் துறந்து அகங்காரப் பிண்டங்க ளாகக் காண்கின்றோம்.

இந்த அகங்கார மென்னும் தீய நோய் முடிவில் என்ன பலனைச் செய்கிறது? இதுவரை யென்ன செய்

இருக்கிறது? என்று அனுபவ பூர்வமாகக் கூறுமிடத்து அவமானத்துக்குள்ளாக்கி ஆபத்திற்றான் கொண்டு போய் விடுகிறது. வரவேற்ற இடத்தில் வசவுமழை பெய்யச் செய்கிறது! மாலை போட்டுக்கொண்ட இடத்தில் மண்ணையள்ளிப் போடுகிறது! அருமையான மனிதன் என்ற வாயால் ஆகாத பயலென்று சொல்லச் செய்கிறது! ஐயோ, அம்மா, என்று சொன்னவாயினால் அசடு, கசடு என்று சொல்லச் செய்கிறது! அகங்காரிகளுக்கு முன்னணியிற் கொஞ்சம் சுறு சுறுப்பாக இருந்தாலும் அதன் முடிவு அவமானமும் ஆபத்துமென்பதில் சந்தேகமில்லை.

ஆதலால் எனது பிரியமுள்ள இளைஞர்களே! நீங்கள் எந்த நிலைமையிலும் எவ்வளவு மகோன்னத நிலைமையை யடைந்தாலும் அதற்காக கர்வங்கொள்ள வேண்டாம். உங்களுடைய அந்தஸ்து உயர உயர நீங்கள் மிக மிகச் சாதாரண மனிதர்களாக இருக்கவேண்டும். ஒழுங்கும் மரியாதையும் தன்னடக்கமும் பெருந்தன்மையும் உங்களிடம் குடிகொண்டிருக்கவேண்டும். யாரிடத்திலும் அன்பும் இனிமையும் நிறைந்த வார்த்தைகளையே நீங்கள் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆடம்பரங்களுக்கு நீங்கள் ஆசைப்பட வேண்டாம். தடபுடலான காரியங்களில் நீங்கள் தலையிட வேண்டாம். எது செய்தாலும் ஒரு பயனைக் கருதிச் செய்யுங்கள். வெற்றுவெலியும் வெளிவேஷமும் வேண்டவே வேண்டாம். அகங்காரமற்ற மனிதர்கள் தான் உலகத்திற் செயற்கரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அத்தகைய பெரியார்களிடத்திற்றான் நம்பிக்கைவைத்து உலகம் அவர்களைப் பின்பற்றுகிறது. உதாரணமாக

நமது பெரியார் காந்தியடிகளை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அளவற்ற பலமுடைய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பெருமூச்சுவிட்டுத் திணரச் செய்யும் வலிமையுடைய அவருக்கு எள்ளளவாவது கர்வமுண்டா? அகங்கார முண்டா? ஆடம்பரங்களுண்டா? சாந்த சீலரான அப்பெரியாருக்கு எந்த நேரமும் புன்முறுவலும் தமாஷ் பேச்சும் குளிர்ந்த மனமும் ஆடம்பரமற்ற வாழ்க்கையுமே அணிகலனுக இருக்கின்றன. உத்தமோத்தம புண்ணிய புருஷரான அப்பெரியாரைத் தியானித்துக் கொண்டு நீங்களும் அவருடைய வழிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

31. வரவேற்பளித்தல்

தகுதியுடையவர்க்கு வரவேற்பளித்தலும் உபசாரஞ் செய்தலும் அவர்களைப்பாராட்டுதலும் கொண்டாடுதலும் ஒரு சிறந்த காரியந்தான். ஆனல் வரவேற்கப்படுகிறவர் அதற்கு முற்றிலும் தகுதியுடையவராக இருக்கவேண்டியது முக்கியமான விஷயம்.

தூர தேசங்களில் வசிக்கும் நம்மவர் சில சமயம் தகுதியற்றவர்களையும் அழையாவிருந்தாகவும் சரியான காரணமில்லாமலும் கூட்டங்கூட்டமாகக் கப்பலுக்குப் போய் அல்லது இரயிலுக்குப்போய் வரவேற்கும் வழக்கம் வைத்திருக்கிருர்கள். அது ஒரு வகையிற் பெருந்தன்மையான செயலெனினும் பொருத்தமானதல்ல.

அத்தகைய வரவேற்பானது பொது ஜன ஊழியர்கட்கும் பொதுஜனங்களின் நன்மை தீமைகளில் ஈடு

பட்டவர்கட்கும் பொதுஜன தர்மிஷ்டர்களுக்கும் பொதுக்காரியமாக வருகிறவர்கட்கும் பேரறிவாளர்கட்கும் தியாகிகட்கும் வீர புருஷர்கட்கும் பொருந்துமன்றி கேவலம் பணக்காரர் என்ற காரணத்துக்காக மட்டும் பொருந்தாது.

ஒருவர் பணக்காரர் என்ற காரணத்துக்காக, அதுவும் அவருடைய விருப்பு வெறுப்பு, அவர் வருகிற காரியம் இவற்றை அறியாத நிலையில் யாதொரு முன்னறிவிப்பும் வேண்டுகோளுமின்றி திடும்பிரவேசமாக எதிர்கொண்டு மாலையிட்டு மணஞ்செய்து அணிவகுத்து நின்று வரவேற்பது கொஞ்சமும் பொருத்தமல்ல. மேலும் அத்தகைய வரவேற்பானது தற்கால நாகரீகத்துக்கும் சுயமரியாதைக்கும் ஒழுங்குக்கும் ஒத்ததல்ல.

ஒருவர் பணக்காரராக இருப்பதினால் மட்டும் அவர் பெருமையுடையவராகிவிடமாட்டார். பெருந்தன்மை ஜீவதயை உபகாரச்சிந்தை உதவியளிக்கும் குணம் பகுத்தறிவு முதலிய நற்குணங்களையுடையவராகவிருக்கவேண்டும். சிறப்பாக அவருடைய செல்வத்தின் ஒரு பகுதியாவது பொது ஜனங்கட்கு உபயோகமானதாகவுமிருக்கவேண்டும். அப்படியில்லாமற் கன்னெஞ்சரும் வன்னெஞ்சருமான ஒருவர் கோடீஸ்வரனாக இருந்தாலும் பொது மதிப்புக்குரியவரன்றென்றும், ஒரு சமான்ய மனிதரென்றும் பொதிசுமந்த பிராணியென்றும் மதிக்க வேண்டியதைத்தவிர வரவேற்பு மரியாதை உபசாரம் முதலியன பெறுவதற் கருகரல்லவென்று தெரிந்துகொள்ள வேண்டும். அந்தப் பாகுபாடில்லாமல் கூட்டங் கூட்டமாக வரவேற்கப் புகு

வதும் அவரைக் கண்டுகொள்ள ஆசைப்படுவதும் அறிமுகஞ் செய்துகொள்ள விரும்புவதும் அவசியமில்லாத காரியங்களாகும்.

அப்படி வரவேற்கப்படுவதிலும் சிலருக்கு விருப்பமிருக்கும் சிலருக்கு விருப்பமிராது. வரவேற்புக்காக சிபார்சு செய்து முன்னரே தயார்செய்து கொள்ளுகிற சமர்த்தர்களுமுண்டு. சிலருக்கு அதிற் பிரியமேயில்லாததோடு பலர் கூடி வரவேற்பதில் வெறுப்பு முண்டாகும். ஆகவே தனிப்பட்ட மனிதர்களைப் பணக்காரரென்ற காரணத்துக்காக வலிய வரவேற்பதும் உபசரிப்பதும் பொதுவாக ஒழுங்கான காரியமல்ல. ஒரு சமயம் அவர்கள் ஆடம்பரமான வரவேற்பை விரும்பினாலும் கூட்டங் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டாலும் வரவேற்பவர்கட்கும் அவருக்கும் முன் பின் ஏதாவது தொடர்பு, நட்பு, அபிமானம் அல்லது அறிமுகமாவது இருக்கவேண்டாமா? ஒன்றுமில்லாமல் "நானும் கூடப் பூசாரி எனக்குக் கொஞ்சம் பாற்சோறு" என்று கூட்டத்தோடு கூட்டமாகப் போய் நிற்பது சுயமரியாதையாகுமா? அவர் பணக்காரராக இருந்தால் மற்றவர்கட்கு என்ன பிரயோஜனம்? பணத்துக்காக அவரைக் கொண்டாட வேண்டுமென்ற தலைவிதி மற்றவர்கட்கு ஏற்பட்டதென்ன?

மேலும் அவர் வருகிற காரியம் பகிரங்கப்படுத்தக் கூடியதாக இல்லாமலிருக்கலாம். இரகசியமாகவுமிருக்கலாம். அந்த நிலைமையில் அவரைப் போய் வரவேற்பதும் மாலையிடுவதும் அவரைச் சூழ்ந்து நின்று ஆர்ப்பரிப்பதும் ஏன்? திண்ணையிற் கிடந்தவன் கிடு

கிட்டியடித்த கதைபோல் ஒரு சமயம் அவர் வந்த காரியத்துக்குப் பாதகமாதலுங் கூடுமன்றோ!

கொழும்பு வாசிகள் சமீபத்தில் ஒரு நல்ல கதை சொன்னார்கள். அதாவது:—கொழும்பில் ஒரு பணக்காரப் பையன் தன் சொந்த வேலையாக வந்திறங்கினாராம். அவர் அறிவிக்காமலும் விரும்பாமலும் யாரையும் வேண்டிக்கொள்ளாமலும் துறைமுகத்தில் பெருங் கூட்டமாகப் போய் நின்று வரவேற்பு மரியாதை செய்தார்களாம். அவர் ஆச்சரியமாக "நான் வருவது உங்களுக்கு எப்படித்தெரியும் நீங்களேன் வந்தீர்கள்?" என்று கேட்டாராம். இது உண்மையாக இருக்குமானால் இது ஒரு சரியான கேள்வியென்றும் மற்றவர்கட்கு நல்ல படிப்பினை யென்றும் தான் சொல்லுவேன்! அவர் பெருந்தன்மை யில்லாமலும் தம்மினத்தாரை மதியாமலும் தம் பணச் செருக்கினாலும் அகங்காரத்தினாலும் சிறுபிள்ளைத்தனமாகவும் இப்படிக் கேட்டாரென்பது ஒருபுறமிருக்கட்டும். காரணமில்லாமலும் காரியமில்லாமலும் அழையாவிருந்தாக அந்தப் பணக்காரக் குடுக்கையை யேன் தரிசிக்கப் போகிறார்களென்று கேட்கிறேன். அவர் பணத்தினாலும் மற்றவர்கட்கு ஆகக் கூடிய காரியமென்ன? அவர் போட்ட கேள்விக்கு என்ன மறுமொழி? ஒருவரை யொருவர் பார்த்து அவமானத்தால் மனம்வருந்தி முகஞ் சுளித்துக்கொள்வதைத் தவிர வேறு பதிலுண்டா?

மனித சமூகத்தினர் பரஸ்பரம் மரியாதையுடையவர்களாக இருக்கவேண்டியது நிரம்ப அவசியம். மனம் மொழி மெய்களால் மரியாதையுடையவர்கட்கு எப்

போதும் பெருமையுண்டு. நினைந்த காரியங்களை முடித்துக் கொள்ளவும் அவர்கட்கு சக்தி ஏற்படுகிறது.

எல்லார்க்கும் நன்றாம் பணிதலவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

என்று மெய்நூல் கூறுகிறது. ஆகவே மரியாதையின் பெருமை மிகவும் பெரிதுதான். ஆயினும் தன்னை மதியாதாரிடத்து மரியாதை காட்டுவது அவமானத்துக்குத் தானிடமாகும். ஆனால் அதற்காக ஒருவரிடத்து துவேஷங்கொள்ள வேண்டியதுமில்லை. அவர்களை மதிக்கவேண்டியதுமில்லை. மேல்நாட்டு நாகரீக முறைப்படி புதிய மனிதர் ஒருவரை அபிமானத்தால் மரியாதைக்காக அவருடைய ஜாகையில் போய்ப் பார்த்தால் அவர் பதில் மரியாதைக்கு வந்து பார்க்கக் கூடியவராக இருக்கவேண்டும். இல்லையேல் அது ஆண்டான் அடிமை முறையிற்றான் போய் முடியும்!

மேலும் நெடுநாட் பழகின மனிதராயினும் சரி சுற்றத்தாராயினும் சரி வேறு யாராயினும் சரி பேச விருப்பமில்லாதாரிடத்துப் பேசுவதும், பழக விருப்பமில்லாதாரிடத்துப் பழகுவதும், அபிமானமில்லாதாரை அபிமானிப்பதும், நம்பாதாரை நம்புவதும், மதியாதாரை மதிப்பதும், வேண்டாதாரை வேண்டுவதும் கனிக்காகக் காயைத்தின்றதுபோற் சுவையற்ற செய்கையாகவேயிருக்கும். ஆதலால் எனது பிரியமுள்ள இளைஞர்களே!

மேற் கூறிய நியாயங்களைக் கவனித்து நீங்கள் முற்றிலும் சுயமரியாதையுடையவர்களாக வாழவேண்டும். தேச நலம், பாஷை நலம், அறிவு நலம், வாழ்க்கை நலம் இவைகட்கு உதவுகின்றவர்களையும், அவைகட்காக

தன் னலங்களைத் தியாகஞ் செய்தவர்களையும் நமது ஆவுடையப்பரைப்போற் செயற்கரிய காரியங்களைச் செய்கின்ற வீரர்களையும் உயர்தரக் கல்வி கற்று சமூகத்தைப் பெருமைப் படுத்துகிறவர்களையும் நீங்கள் பாராட்டவேண்டும். அவர்களைக் கொண்டாடி மேலும் மேலும் உற்சாகப்படுத்தவேண்டும். அத்தகைய உபயோகமான மனிதர்களின் விஷயத்தில் நீங்கள் எந்த மரியாதையையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. அவை ஒன்றுமில்லாத மனிதர்கள் பொது மதிப்புக்குரியவர்களல்லவென்பதை நீங்கள் திட்டமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களிடம் உங்கள் மரியாதையை இம்மியும் விட்டுக்கொடுத்தல் கூடாது.

32. நல்லவார்த்தை பேசுதல்

நாம் எப்போதும் நல்ல வார்த்தைகளையே பேசிப் பழகுதல் வேண்டும். ஒரு மனிதனுக்குத் தற்காப்பு, பெருமை, கௌரவம், மனிதத் தன்மை முதலிய உயர் குணங்களை யுண்டாக்கக் கூடியன அவன் வாயிலிருந்து வரும் நல்ல வார்த்தைகளேயாகும். ஒரு மனிதன் தனக்கு நன்மை வந்தபோதும் தீமை வந்தபோதும், கோபம் வந்தபோதும், சந்தோஷம் வந்தபோதும், நஷ்டம் வந்தபோதும், சுகம் வந்தபோதும், புகழ்ச்சி வந்தபோதும், இகழ்ச்சி வந்தபோதும் நல்ல வார்த்தைகளையே பேசுதற்கு இடமுண்டு. நல்ல வார்த்தைகளினாலேயே எதிரிகளோடு வாதாடவும் வழக்குப்பேசவும் விவாதிக்கவும் விவகாரங்களை ஒத்துக்கொடுக்கவும்

இடமுண்டு. நல்ல வார்த்தைகளே வெற்றியின் ஒரு பாதிக்குக் காரணமாதலுங்கூடும். ஒரு காரியத்தை சாதித்துக் கொள்வதற்கு நல்ல வார்த்தைகளை விட்டுக் கெட்ட வார்த்தைகள், வசவு, திட்டு, வசை மொழிகளை உபயோகித்தல் நல்லதல்ல. அதனால் காரியமும் கைகூடாது. மேலும் மேலும் பகைமை முற்றிப் பெருங் கேடுகட் கிடமுண்டாகும். இதையே,

> "இனிய வுளவாக இன்னாத கூறல்
> கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்று திருக்குறள் கூறுகிறது.

படித்தவர்களாயினும் சரி, பணக்காரராயினும்சரி, பட்டம் பதவிகளைப் பெற்றவர்களாயினும் சரி, பத்திரிகாசிரியர் புத்தகாசிரியர்களாயினும் சரி, நல்ல வார்த்தை பேசத் தெரியாதவர்களாயின் அவற்றின் பயன்களையும் தங்கட்குரிய பெருமையையும் பெறாதவர்களாகவே போகின்றனர். மேலும் அவர்கள் கஷ்ட நஷ்டங்கட்கும் அவமானத்துக்கும் ஆளாகின்றனர். ஆகவே நல்ல வார்த்தைகள் ஒருவனுக்குச் சிறந்த ஆஸ்தியாக இருக்கின்றன.

மனித சமூகத்துக்குக் கோபம் ஒரு இயற்கையான குணம். தீக்குச்சி முனையிலிருக்கும் தீயைப் போன்றது. கோபமில்லாத மனிதர்களைக் காணமுடியாது. தன் மனதுக் கொவ்வாத காரியங்கள் நடந்தாலும் தன் மனதுக் கொவ்வாத பேச்சைக் கேட்டாலும் தன்னை யொருவன் நிந்தித்தாலும் பழித்தாலும் குறை குற்றங்களைக் கண்டு கூறினாலும் அப்படிக் கண்டுகூறும் குறை குற்றங்கள் உண்மையாக இருந்தாலும் தான் இச்சித்த எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகாத

விடத்தும் அவற்றைப் பிறர் தடை செய்ததாகக் கண்டாலும் தனக்குப் பொருள் நஷ்டத்தை ஒருவர் உண்டாக்கினாலும் மான நஷ்டத்தைச் செய்தாலும் மரியாதையில்லாமற் பேசினாலும் நெருப்புக்குச்சியை உரசியதுபோல் மனித சமூகத்துக்குத் திடீரென்று தாங்க முடியாத கோபம் மூண்டுவிடுகிறது. அப்படிக் கோபம் வந்த சமயத்தில் தான் பேசப்போவது இன்னதுதான் என்று அறியாமலும் முன்பின் யோஜிக்காமலும் வைக்கோற்போரிற் பற்றிய நெருப்புப்போல் அதன் முடிவும் பயனும் இன்னதென்றே சிந்திக்கச் சாவதானமில்லாமலும் தான் கற்ற கல்வியையும் பெற்ற அறிவையுமிழந்து வெறிகொண்டு கெட்ட வார்த்தைகளை மளமளவென்று சரமாரியாகப் பெய்து ஆடியும் பாடியும் ஓடி நிலையில்லாத ஒரு பைத்தியக்காரனைப்போல் செய்துவிடுவது கோபமேயாகும். இன்னும் அந்தக் கோபத்தின் காரணமாக அடிப்பிடி, கொலை, பழி பாவங்களும் உண்டாகிவிடுகின்றன. வியவகாரங்கள் முற்றிக் குடிகெட்டுப்போவது முண்டன்றோ!

ஆகவே கோபம் ஒரு வலிமை பொருந்திய குணம் தான். அந்தக் கோபத்தினின்றும் தன்னை மீட்டிக் கொள்ளுதல் சாமான்யமான காரியமல்ல. சுலபமான செயலுமன்று. ஆயினும் அத்தகைய கடினமான விரதத்தைத்தான் நாம் கைக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அறிவின் பயனை யடைந்ததாகும். கோபமில்லாதபோது எந்த மனிதனும் நல்ல வார்த்தைகளைத் தான் பேசுகிறான். ஆத்திரமடையாதபோது எந்த மனிதனும் கெட்ட வார்த்தைகளைப் பேசுவதில்லை. ஆதலால் கோபமே மனித சமூகத்தினிடத்துள்ள நல்ல குணங்

களையும் நல்ல செயல்களையும் நல்ல வார்த்தைகளையும் நாசஞ்செய்யும் கோடரியாக இருக்கின்றது! ஆதலால் பெருவலியுடைய கோபத்தை நாம் எப்படி யெதிர்த்து நிற்பது? எப்படித் தாங்கிக்கொள்வது? என்பவை முக்கியமான விஷயங்களாகின்றன!

எப்பொழுதும் பேராசையினாலும் மோகத்தினாலும் லோபத்தினாலும் கர்வத்தினாலும் வஞ்சகம், சூது, கபடம், ஏமாற்றுதல் முதலிய தீய எண்ணங்களாலும் நமது மனத்தை அசுத்தப்படுத்திக் கொண்டிருத்தல் கூடாது. ஏனெனின் அத்தகைய அசுத்தமான நெஞ்சிற்றான் சீக்கிரம் நெருப்பு மூண்டுவிடுகிறது! நெஞ்சுக்கு நெருப்பு மூட்டிவிட்டாற் பிறகு அணைக்க முடியாத பெருந்தீயாகி வியாபித்துக்கொண்டு, மெய், வாய், கண் மூக்குச், செவிகளையெல்லாம் கெடுத்து மனிதனைக் கூத்தாடச் செய்துவிடுகிறது.

ஆதலால் மனிதன் கனவிலும் நனவிலும் எக்காலத்தும் குளிர்ந்த எண்ணங்களையே மனத்தில் எண்ணுதல் வேண்டும். பிறருக்குத் தீங்கில்லாத காரியங்களையே சிந்தித்தல் வேண்டும். பிறருடைய வாழ்விற் பொறாமை கொள்ளுதல் கூடாது. பிறருடைய தாழ்வில் இரக்கங் கொள்ளுதல் வேண்டும். தன்னிலைமையில் எப்போதும் திருப்தியடையவேண்டும். வாழ்க்கையின் ஆதியந்தங்களை அடிக்கடி மனத்திற் கொள்ளுதல்வேண்டும். வம்பு வழக்கு வியவகாரங்களில் நின்றும் நெடுந்தூரம் ஒதுங்கிவிடுதல் வேண்டும். துஷ்டர்கள் யோக்கியமில்லாதவர்கள் புரட்டர்களின் உறவு கூடாது. இவையெல்லாம் நெஞ்சுக்கு நெருப்புண்டாக்காத காரியங்களாகும். எப்போதும் இத்தகைய நல்ல எண்ணங்களை

யெண்ணி யெண்ணிப் பழகிக்கொண்டால் மனம் குளிர்ச்சியடைந்து கோபம் என்னும் கொடிய நெருப்புக்கிடமில்லாமற் போய்விடும். தன் நெஞ்சிற் கோபமில்லாதவன் பேசும் வார்த்தைகள் சில சமயம் கண்டிப்பான வார்த்தைகளாக இருந்தாலும் நல்ல இடத்திலிருந்து வருவதால் பிறர் நெஞ்சிலும் கோபத்தீயை யுண்டாக்குவதில்லை. ஆதலால் விபரீதமில்லை. குளிர்ச்சியடைந்த மனத்திலிருந்து வருவதெல்லாம் குற்றமற்ற நல்ல வார்த்தைகளாகவே யிருக்கும். அந்த வார்த்தைகள் அதிகமான சக்தியை யுடையவைகளாகவு மிருக்கும். ஹாஸ்யச் சுவையுள்ளவைகளாகவு மிருக்கும். குளிர்ந்த ஹிருதய முடையவர்கள் தான் ஹாஸ்யச் சுவையோடு அர்த்தபுஷ்டியான வார்த்தைகளைப் பேசுந் திறமையுடையவர்களாக இருக்கின்றனர். அத்தகைய பெரியார்கட்கு இந்த உலகமும் வாழ்வும் பொருளும் போக போக்கியங்களும் அநித்தியமென்னும் நிச்சய புத்தியேற்பட்டு விடுகிறது. அநித்தியமென்னும் நிச்சய புத்தியில்லாத மக்கள் எவ்வளவு அதிகமாகப் படித்திருந்தாலும், எவ்வளவு பெரும பொருளுடையோராக இருந்தாலும், எவ்வளவு அதிகாரமும் செல்வாக்குமுடையோராக இருந்தாலும் சாமான்ய மக்களே யாவர். அவர்களுடைய பெருமையும் அநித்தியமானதேயாகும். ஒருவன் அறிவுள்ளவன், விவேகமுள்ளவன், ஞானமுள்ளவன் என்றால் அவன் குளிர்ந்த ஹிருதயமும் நியாய புத்தியும், நல்ல வார்த்தையு முடையவனாக இருக்கவேண்டும். நல்ல வார்த்தை பேசத் தெரியாதவனுக்கு ஞானமுண்டென்று சொல்லமுடியாது.

பகுத்தறிவுள்ள எந்த மனிதனும் நல்ல வார்த்தைக்குக் கட்டுப்படாமல் தப்பமுடியாதாதலின் பகை வெல்லுவதற்கும் எடுத்த காரியத்தை முடிப்பதற்கும் கெட்டவர்களை வழிவரச் செய்வதற்கும் நியாயமான கக்ஷிக்குப் பக்கபலம் தேடிக்கொள்வதற்கும் நல்லவார்த்தைகள்தான் மிக்க அனுகூலமாக இருக்கும். நல்ல வார்த்தை பேசத் தெரியாத ஒருவன் ஒரு இயக்கத்துக்கு அல்லது ஒரு கக்ஷிக்கு அல்லது ஒரு காரியத்துக்கு அல்லது ஒரு குடும்பத்துக்குத் தலைவனாக யோக்கியனல்ல வாதலால், எனது பிரியமுள்ள இளைஞர்களே!

நீங்கள் எப்போதும் குளிர்ந்த மனமும், கோபத்தையடக்கியாளும் குணமும், பகைவரோடும் நல்ல வார்த்தை பேசுமியல்பும் நெறி கடந்தோரின் குற்றத்தை மன்னிக்கும் பெருந்தன்மையும் விசால திருஷ்டியும் மனவலியும் உறுதியும் தைர்யமுமுள்ளவர்களாய் வாழ்தல் வேண்டும்.

---

33. சுத்தமாகப் பேசுதல்

நம் நாட்டில் பண்டிதர்முதற் பாமரர் வரையிலும், தாழ்ந்த ஜாதியென்று தங்களை நினைத்துக்கொண்டிருக்கிறவர்கள் முதல் உயர்ந்த ஜாதியென்று தங்களை நினைத்துக்கொண்டிருக்கிற மகான்கள் வரையிலும் தாய்ப்பாஷையைச் சுத்தமாகப் பேசத் தெரியாதவர்களாகவேயிருக்கின்றனர். ஐரோப்பிய பாஷைகளைப்போல் எழுத்து முறைப்படி இலக்கணத் தமிழ் பேச வேண்டு

மென்று நான் கூறவில்லை. சொல் வழக்கிலிருக்கும் தமிழை கிராமியச்சொற்கள் கலந்த தமிழைப் பேசினு லும் நீட்டியும், குறுக்கியும், அடைபோட்டும் ஆபாசப் படுத்தி விகாரமாகப் பேசுதல் கூடாதென்றே கூறுகி றேன்.

திருநெல்வேலி ஜில்லாத் தமிழ், மதுரை, இராமநா தபுரம் ஜில்லாத்தமிழ், சேலம் கோயம்புத்தூர் ஜில்லாத் தமிழ், சென்னைத் தமிழ் இப்படி நான்கு பெரும் பிரிவான தமிழுண்டு. நான்கு பிரிவுகட்கும் நான்கு விதமான இராக தாளங்களுமுண்டு! இந்நான்கினுள்ளும் சிறு சிறு பிரிவுகளுமுண்டு.

திருநெல்வேலித் தமிழைப் பிள்ளைத் தமிழ் என்று கூறலாம். அவர்கள் வாங்ஙேன், போங்ஙேன், முக்கு கேக்கான், அவுவ, இவுவ, சொன்னுவோ, கேட்டாவோ சொல்லவும் செஞ்சேன், கேக்கவும் செஞ்சான் என் றும் மனைவி மக்களை மூதியென்றும் பேசித் தமிழைப் பாழாக்குகின்றனர்.

மதுரை இராமனுதபுரம் தமிழை நடுத்தமிழ் என்று கூறலாம். தஞ்சாவூரையும் திருச்சிராப்பள்ளியையும் இதிற் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். தமிழ்ச் சங்க மிருந்த நாடாதலின் கூடியவரை இந்நான்கு ஜில்லாக் களிலும் தமிழ் நன்றாகப் பேசப்படுகிறது. ஆயினும் அடையும் கொச்சையும் இல்லாமலில்லை.

சேலம், கோயம்புத்தூர் தமிழைக் கவுண்டர் தமிழ் என்று சொல்லலாம். அவர்கள் என்னுங்க, ஏதுங்க, எம்பளத்தெட்டு, கொடுத்தேங்க, அல்லாரும் போயிட் டாங்க, எங்காவூட்டுக்கண்டை அவுங்கவூடுதா என்று நல்ல தமிழை நாசமாக்குகின்றனர்.

இனிச் சென்னைத் தமிழ். இராஜதானித் தமிழ். அதைக் கிழட்டுத் தமிழ் அல்லது ஓவாய்த் தமிழ் என்று கூறலாம். அவர்கள் அத்தை யெடுத்து இத்திலேப் போட்டு, இத்தை யெடுத்து அத்திலேப்போட்டு, தமிழையெடுத்து இங்கிலீஷிலே போட்டு, இங்கிலீஷை யெடுத்துத் தமிழிலேப் போட்டு, அல்லாரையும் ஒத்திக் கச் சொல்லித் தாங்களே தமிழைக்கெடுக்கச் சொந்தம் பாராட்டுகின்றனர்.

பிராம்மணத் தமிழ்:—அவர்கள் படித்தவர்கள். சாஸ்திரிகள். பண்டிதர்கள் புராணிகர்கள் இவர்கள் தமிழைக் கெடுக்கலாமா? நேக்கு, நோக்கு, நண்ணு, வெறுணே, ஆத்துக்காரி, ஆத்துக்காரர், வரணும், போகணும், சொல்ரேள் கேக்கணும் என்று அர்த்த மில்லாத வார்த்தைகளை அளந்து கொட்டுகின்றனர். நம்முடைய தமிழ் அதாவது நாட்டுக்கோட்டையார் தமிழ். அதற்கும் இராக தாளம் வேறுதான்.

நம்மிலும் மூன்று பிரிவுண்டு. தெற்குத் தமிழ், மேற்கு வட்டகைத் தமிழ், கிழக்கு வட்டகைத் தமிழ் என மூன்று வகையுண்டு. பெண்கள் பேசும் தெற்கு வட்டகைத் தமிழுக்குக் கொஞ்சம் வாலுண்டு. அவர் கள் சொல் முடிவிற் கொஞ்சம் இழுப்பார்கள். கிழக்கு வட்டகையார் சொல்லோடு ஒரு சிறு ராகமும் பாடு வார்கள். மேல வட்டகையார் கோடரிவெட்டுப்போற் பேசுவார்கள். ஆயினும் வாங்கிறேன் போங்கிறேன் இருங்கிறேன் அன்னாமுண்டி அம்மாமுண்டி அயித்தி யாண்டி என்று அர்த்தமில்லாத வார்த்தைகளையே ஏரா ளமாகக் கலந்து பேசுவதில் ஒற்றுமையுடையவர்களா கவே யிருக்கின்றனர். இவை யெல்லாங்கூட சகித்துப்

பொறுத்துக் கொள்ளக்கூடிய குற்றங்கள்தாம். இதனினும் விசேடமாகவும் சகிக்கக்கூடாததாகவும் சங்கடப்படுத்துவதாகவும் ஒரு கெட்ட வழக்கத்தை நம் தமிழ் நாட்டினர் பலர் கையாளுகின்றனர். அதாவது தொடர்ந்து பேசும் பேச்சுகட்கிடையிடையே அடைபோடுவதுதான் ஆபாசம். ஒரு சிலர் பேசும்போது நடுவில் நாலு வார்த்தைகட் கொருதரம் 'வந்து வந்து' என்று பாவத்தைப் பறிக்கின்றனர். இன்னும் சிலர் 'என்ன? என்ன?' என்று கேட்டுக்கொண்டே பேசுகின்றனர். இன்னும் சிலர் 'நான் சொல்லுகிறதென்ன?' நான் சொல்லுகிறதென்ன? வென்று போடுகின்றனர். இன்னும் சிலர் எது எது என்றுஅனத்துகின்றனர். சிலர் நான் சொல்லுறது எப்படி? எப்படி? என்று வதை செய்கின்றனர். சிலர் இப்படியும் அடைபோடத் தெரியாமல் பேசவும் வராமல் தலையையும் வயிற்றையும் தடவுகின்றனர். சிலர் தோளையும் தொடையையும் நெருடுவது முண்டு. இதென்ன கஷ்டகாலம்! தமிழைத் தமிழர்கள் பேசமாட்டாமல் இவ்வளவு கஷ்டப்படுவது எவ்வளவு பரிதாபமான காரியம்!!

சாதாரண ஜனங்கள்தான் இப்படிப் பேசுகிறார்களென்பதில்லை. சமஸ்தான வித்துவான் ஒருவரும் அடைமொழி போடுகிறார். அவர் பிரசங்கித்தாலும் சரி, பேசினாலும் சரி. அடிக்கடி தெரிஞ்சுதோ புரிகிறதோ? என்று கடாவுகிறார்! என்ன தெரியவேண்டியதிருக்கிற தென்பது நமக்குத் தெரியவில்லை. அவர் சொல்வது தெரியாத காரியமாகவுமில்லை!

இப்படிப் பண்டிதர்களும் தமிழைப் பாழாக்குகின்றனர். பாமரர்களும் பாழாக்குகின்றனர். சுத்தமாகப்

பேசவேண்டுமென்ற ஆசையுமில்லை, முயற்சியுமில்லை. சுத்தமாகப் பேசவேண்டுமென்று ஆசைப்பட்டால், முயன்றால் முடியாத காரியமல்ல. கூடியவரையில் எழுதும் முறைப்படி பேசப்பழகினால் நல்லது. அல்லது அடைமொழி நீக்கிச் சொல்வழக்கிலிருக்கிற தமிழையாவது பேசவேண்டும். அப்படியுமில்லாமல் அசடு வழிந்தொழுகத் தாய்ப் பாஷை பேசுவது வெட்கக் கேடான காரியமன்றோ! ஆதலால் எனது பிரியமுள்ள இளைஞர்களே!

நீங்கள் உங்கள் பாடப் புத்தகங்களிற் படித்தபடி கூடியவரையிற் பிழையில்லாமல் எழுதவும் பேசவும் முயற்சி செய்யுங்கள். நீட்டல் குறுக்கல் வேண்டாம். இராகமும் இழுப்பும் வேண்டாம். வந்து என்ன எப்படி எது நான் சொல்றது, நீ சொல்றது, சரி, ஆமா ஆகிய அடைமொழிகளை அடியோடு ஒழித்து மறந்துவிடவேண்டும். தலையைத் தடவுதல், வயிற்றைத் தடவுதல், நெருடுதல் வேண்டாம். வார்த்தைகளை மெதுவாகவும், சுத்தமாகவும், தனித்தனியேயும், சுருக்கமாகவும், விளக்கமாகவும், கொண்ட கருத்தைச் சந்தேக விபரீதமில்லாமற் காட்டக்கூடியதாகவும் பேசிப்பழக வேண்டும். அப்படியே யெழுதவும் வேண்டும். பார்ப்பனரைப் பார்த்து அவர்கள் ஏதோ சுத்தமாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு நன்னாயிருக்கு, வெரணையிரு, தேவிலை, அவா, இவா, வந்துட்டா, போய்ட்டா, என்று அர்த்தமில்லாத வார்த்தைகளைப் பேசக்கூடாது. முண்டி, ஆண்டி, வெண்டி முதலிய வார்த்தைகளை மறந்தும் உபயோகிக்கக்கூடாது.

34. வேலையாட்களை வைத்துக்கொள்ளுதல்

தற்காலத்து ஆண் மக்களும் பெண் மக்களும் கையில் பணமிருந்தால் வேலைசெய்ய மனமில்லாதவர்களாய் வேலை செய்தால் கௌரவக் குறைவென்னும் ஒரு கெட்ட மனோபாவமுடையவர்களா யிருக்கின்றனர். ஆகவே ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஏராளமான வேலையாட்களின் தேவை யேற்படுகிறது. பிள்ளை குட்டிகளில்லாமல் புருஷனும் மனைவியுமாக இருக்கிற குடும்பங்களிற் கூடப் பல வேலைக்காரர்கள் நடமாடிக்கொண்டிருக்கின்றனர்.

பணமிருக்கும்போது பல சௌகரியங்களையும் மனிதர் விரும்புவது இயற்கைதான். பல சௌகரியங்களுக்கு வேண்டிய எல்லா வேலைகளையும் அவரவரே செய்துகொள்ளுதலும் முடியாது. ஆயினும் உண்ணுவதும் உறங்குவதும் தவிர மற்ற வேலைகளையெல்லாம் வேலைக்காரர்களால் செய்துகொள்ள வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருப்பதுதான் அபாயம். இயன்றவரை தத்தம் கால் கைகளை உபயோகித்து தாங்கள் செய்யக்கூடிய வேலைகளைச் செய்து கொள்ளுதல் மிகவும் அவசியமான ஒரு கடமை யென்பதை அவர்கள் உணரவேண்டும். பணமில்லாத சாமான்ய ஜனங்கட்கு நாம் ஒரு ஆலோசனையும் சொல்ல வேண்டுவதில்லை. அவர்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துக் கொண்டு எளிய வாழ்க்கை வாழ்கிறார்களாயினும் சரீர சௌகரியமாக இருக்கிறார்கள். பணமுள்ளவர் பலருக்கு

சரீர சௌகரியமென்பது அபூர்வமாகத்தானிருக்கிறது. பெரும்பாலும் சோம்பேறிகளாய் வாயுவும், உஷ்ணமும் மாட்டிக்கொண்ட சரீரிகளாய், அவயவங்களும் ஒன்றோடொன்று பொருந்தாமல் ஏறி இறங்கி ஒற்றுமையற்றனவாய் எப்பொழுது பார்த்தாலும் மலச் சிக்கலும், புளியேப்பமும், சோம்பலும், அசதியும், கால் கைக்கடுப்பும், இடுப்புப் பிடியும் மருந்தும் கையுமாகத் துன்பப்படுகின்றனர். ஏன் இப்படி துன்பப் படுகிறோ மென்பதை மட்டும் அவர்கள் ஆராய்வதில்லை. நம்மினும் பெரிய தனவந்தர்களான கோடீஸ்வரர்கட்கும் ஏன் கால்களும் கைகளும் தனித்தனியே படைக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும் அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அப்படி நினைத்துப் பார்ப்பார்களானால் ஒவ்வொரு மனிதரும் வேலைசெய்துதான் உயிர்வாழவேண்டுமென்பதின் இரகசியத்தை உணர்ந்து கொள்ளுவார்கள். எடுத்துக் கையாடாத ஒரு ஆயுதம் துருப்பிடித்துப் போவதை அவர்கள் பாராமலில்லை. அதுபோல் வேலை செய்யாத அவயவங்களும் துருப் பிடித்து உபயோகமற்றுப் போய்விடுகின்றனவென் பதை அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஆண்களாயினும்சரி, பெண்களாயினும் சரி இயன்றவரை வீட்டு வேலைகளைச் செய்தும் தண்ணீரிறைத்தும் சுறுசுறுப்பாக எழுந்தும் இருந்தும் நடந்தும் செய்யவேண்டியவற்றைக் கூசாமற் செய்தும் பழக வேண்டும். நாலுமைல் இரண்டுமைல் நடப்பதை ஒரு பொருட்படுத்தக் கூடாது. காலை மாலை நேரங்களில் தோட்டத்தின் வேலைகளிலும் கலந்துகொள்ள வேண்டும். பெண்கள் சமையல் செய்கிற வழக்கத்தை விட்டு

விடக் கூடாது. இதில் கௌரவக் குறைவு ஒன்றும் வந்துவிடாது.

காரியஸ்தர்கள்.

இதற்கு மேல் வேலையிருந்தால் உதவிக்கு வேலைக்காரர்கள் வேண்டியதுதான். வேலைக்காரர்களைச் சிலர் வெகுதூரம் நம்பி மோசம் போகின்றனர். வீட்டு வேலைக்காரர்கள் எப்போதும் யோக்கியப் பொறுப்பும் நம்பிக்கையு முடையவர்களாக இருக்கவேண்டும். அப்படியிருந்தாலும் அவர்களை முற்றிலும் நம்பிக் கருவூலம் வரையிற் செல்லவிடுவது புத்திசாலித்தனமல்ல. அவர்கள் யோக்கியர்களாயினும் எளிய மனிதர்கள். ஆதலால் நகையைப் பணத்தைத் தொகுப்பாகக் கண்டால் உடனே புத்தி பேதலித்துவிடும் இயல்பு இயற்கையல்லவா? ஒரு இடத்தில் எவ்வளவு நாளிருந்து அபியானிக்கப்பட்டாலும் ஒரு சமயங்கிடைத்தால் அனேக வேலைக்காரர்கட்கு மனம் கெட்டுப்போய் விடுகிறதென்பதை அடிக்கடி காண்கின்றோம்! ஆகவே நகை நாணயம் ரொக்கம் சம்பந்தப்பட்ட காரியங்களை எவ்வளவு சிரமப்பட்டாயினும் அவரவரே நிர்வகித்துக்கொள்ளுதல்தான் நல்லது. பெருங் குடும்பங்களாக இருந்து அப்படி முடியாதென்று கண்டால் அதற்கு முற்றிலும் யோக்கியமான மனிதர்களைப் பொறுப்புடன் நியமித்துக்கொள்ளுதல் வேண்டுமென்றி சாதாரண வேலைக்காரரை யெல்லாம் நம்பி மோசம் போகக்கூடாது.

டிரைவர்கள்

மோட்டார்க்கார்கள் மலிந்துவிட்டன. வீட்டுக்கு ஒரு பிள்ளையார்கோவில் (Motor Shed) கட்டியாகிவிட்டது. டிரைவர்களும் கிளீனர்களும் மாயை வயிற்றி

உற்பத்தியாகி வருகின்றனர். டிரைவர்களிற் பெரும்பாலார் யோக்கியர்களாக இல்லை. டிரைவர்களை வைத்து நிர்வகிக்கவும் அநேக முதலாளிகட்குத் திறமையில்லை. சில டிரைவர்கள் முதலாளிக்குப் புத்திமதி சொல்லுகிற மந்திரிகளாகவு மிருக்கின்றனர். "விவசாயி ஏழையானால் எருது மைத்துனன் முறை கொண்டாடு" மென்பது ஒரு பழமொழி. அதுபோல் அம்மாஞ்சிகளான முதலாளிகளிடமிருக்கும் டிரைவர்கள் முதலாளியை ஒரு மனிதனுகக்கூட மதிப்பதில்லை. முதலாளியின் ஒழுக்கத்தையும் செயலையும் ஆழ நீளத்தையும் அறிந்து அந்தக் கதைகளை யெடுத்துக் கூறிப்பரிகசிக்கும் டிரைவர்களுமுண்டு. முதலாளியை முன்னுல் விட்டுப் பின்னுல் நாக்கை நீட்டுகிற டிரைவர்களுமுண்டு. இன்னுமிதை விவரிக்க நான் விரும்பவில்லை. கடிவாளம் பிடிக்கும் போதே குதிரைகள் எஜமானின் தன்மையறிந்து அச்சத்தோடு ஒழுங்காகச் செல்வதுபோல் டிரைவரை டிரைவர் ஸ்தானத்தில் வைத்துப் புத்திசாலித்தனமாகவும் கம்பீரமாகவும் நடந்துகொண்டால் எவ்வளவு அயோக்கியனுன டிரைவரையும் கிளீனரையும் சரியாக நடத்தமுடியும். அவர்களுடைய சம்பளம் முதலியவைகளைக் கிரமமாகக் கொடுத்து அபிமானத்தோடு நடத்த வேண்டும். ஆனுல் அவர்களுடைய எல்லையைத்தாண்டி ஒரு அடி வைக்கக் கண்டாலும் கொஞ்சமும் தாமதியாமல் உடனே தலையிற்குட்டி வெளியில் துரத்திவிட்டு மறுவேலை பார்க்கவேண்டும். அப்படிச் செய்யாமல் அவர்களை நாட்டியமாடவிட்டு வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் குதிரை குப்புறத்தள்ளிக் குழியும்

தோண்டிவிடு மென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

சமையற்காரர்கள்

சமையல் வேலை பெண்கள் பொறுப்பிலிருப்பதால் அந்த வேலையில் அவர்கட்கு உதவிக்காக வைக்கப்படும் வேலைக்காரர்கள் பெண்களாகவே இருக்கவேண்டும். அதுதான் ஒழுங்கும் முறையுமாகும். ஆனால் ஒரு பெருங் குடும்பத்துக்கு அல்லது அடிக்கடி விருந்தினர் வரும் குடும்பத்துக்குப் பெண்களாற் சமையல்செய்து முடியாது. அப்படியானால் சமையற்காரர்கள் வேண்டியதுதான். அத்தகைய சமையலாட்கள் உள்ளூர் அல்லது சமீபமான ஊர் ஆட்களாகவும் இனந் தெரிந்த ஆட்களாகவும் ஒழுங்கும் மரியாதையும் யோக்கியமுமுள்ள ஆட்களாகவும் வீட்டுப் பெண்களை எஜமானிகளென மதித்து நடக்கும் ஆட்களாகவும் நன்றாகத் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டுமென்றி, ஊர் சுற்றித்திரிகிற காலிகளையும் கண்ட கண்ட விடங்களிலகப்படுகிற போக்கிரிகளையும் முன் பின்னறியாத மலைத் தேசத்தாட்களையும் வைத்துக்கொள்ளுதல் கூடாது. அப்படி வைத்துக்கொண்டால் அவர்கள் எப்போதும் அபாயமான ஆட்களாகவே யிருப்பார்களென்பதை மறந்துவிடக்கூடாது.

குற்றேவற்காரர்கள் (Attendars)

டம்பப் பிரியர்கள் சிலர் தேவையில்லாமற் பல வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு கட்டியழுகிறார்கள். அடே! என்றால் அநேகம் பேர் வந்து கைகட்டி நிற்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதிலிருந்து அவருடைய அந்தஸ்தையும் ஆடம்பரத்தையும் அதி

காரத்தையும் செல்சொல்லையும் பிறாறியச் செய்ய வேண்டு மென்பதுதான் நோக்கம். என்னே! வைத்தியம்! நாடகமேடையா? நடித்துக் காட்டுகிறாரா? வேலையில்லாமல் வெறும்ஆட்கள் எதற்கு? நமது ஜமீன்தார்கள் பலர் கெட்டுமெலிந்து கடன் காரர்களானதேன் என்பது இவர்கட்குத் தெரியுமா? டம்பத்துக்கும் ஒரு மதிப்புண்டா? அனுவசியமாக ஒருவன் நம் முன் கைகட்டி நிற்பதும் வாய்பார்த்து நிற்பதும் ஆடுவதும் ஓடுவதும் எதற்கு? அதில் நமக்கென்ன லாபம்? அப்படிச் செலவிடும் பணத்தை ஒரு தர்ம காரியத்துக்குக் கொடுத்தால் அவர்கள் எதிர்பார்க்கிற எல்லாப் பெருமையும் புகழும் புண்ணியமும் வாராவா? ஆகவே அவசியமில்லாமல் ஒரு வேலைக்காரனும் இருக்கக் கூடாது.

எனது பிரியமுள்ள இளைஞர்களே!

எதிர்காலத்தில் உங்களுடைய வாழ்க்கையில் இத்தகைய குறைபாடுகள் நேராவண்ணம் நீங்கள் கவனித்துக்கொள்ளவேண்டும். நீங்கள் எந்த வேலைக்கும் அஞ்சாத திட சரீரிகளாக இருக்கவேண்டும். செய்யக் கூடிய வேலைகளை யெல்லாம் நீங்கள் செய்யவேண்டும். அவசியமான காரியங்களுக்கு மட்டும் வேலைக்காரர்களை வைத்துக்கொள்ளவேண்டும். எந்தெந்த வேலைக்காரரை எந்தெந்த ஸ்தானத்தில் வைத்து நடத்தவேண்டுமோ அப்படி நடத்தி உங்களுடைய கௌரவத்தையும் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அதுதான் சமூகத்தின் பெருமையையும் பாதுகாத்ததாகும்.

35. அற்பத்தனமான செட்டு

மனித சமூகம் செட்டாக வாழ்தல் தான் ஒழுங்கும் நியாயமுமாகும். தன்னுடைய வருவாயை அளவிட்டறிந்து அதற்குத் தக்கபடி செலவு நடைகளை வரம்பு கட்டிக்கொண்டு செய்யாமல் மனம்போனபடி ஆடம்பரங்கட்கும் வீண் பெருமைக்கும் டம்பத்துக்கும் சூதுக்கும் விபசாரத்துக்கும் வழக்கு வம்புகட்கும் ஆசைப்பட்டு அளவில்லாமற் செலவு செய்வானாயின் அவன் சீக்கிரம் வறுமை நிலைமையை யடைந்து மானமிழந்து மதிகெட்டுத் துன்பப்படுதல் நிச்சயம். இந்த உண்மையை திருவள்ளுவரும்,

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்

என்றார். இந்த உலகத்தில் ஒரு மனிதன் நாள் ஒன்றுக்கு ஆயிரமாயிரமாகச் செலவு செய்து வாழவும் இடமிருக்கிறது; அரை கால் செலவிட்டு வாழவும் இடமிருக்கிறது. அதுவுமில்லாமல் வாழவும் இடமிருக்கிறது. கோடீஸ்வரன் உண்ணுவதும் கூலிக்காரன் உண்ணுவதும் உணவு வேறாயினும் அளவு ஒன்றுதான். ஆயினும் வாழ்க்கையின் தாரதம்மியம் வேறுவேறாகவே இருக்கிறது. அதற்கென்ன செய்யலாம்? ஒருவன் தன்னினும் உயர்ந்த செல்வர்களை நினைப்பதிற் பயனில்லை. தன்னுடைய நிலையே தனக்குச் சரியென்று அதற்குத் தக்கபடி பொருத்திக் கொள்வதுதான் விவேகமும் பெருமையுமாகும். அதைவிட்டு எட்டாத கனிக்குக் கொட்டாவிவிட்டு எறுமயிலேறி விளையாட முற்பட்டாற் பற்களுக்குப் பழுதுபார்க்க வேண்டியதுதான்.

அது அப்படியிருக்க, பணமிருந்தும் சிலர் கௌரவமாக வாழத்தெரியாமல் மிகவும் அற்ப மனிதர்களாய்

உபயோகமற்ற மனிதர்களாய் ஜீவதயை ஈகை இரக்கம் கௌரவ மற்றவர்களாய் சுயமரியாதை யில்லாதவர்களாய் ஞானமில்லாதவர்களாய் கொஞ்சப் புத்தியும் அற்பத்தனமான செட்டும் வஞ்ச நெஞ்சும் கபடத்தன்மையும் அநீதியான செயலும் உடையவர்களாய் வாழ்க்கையின் ஆதியந்தம் தெரியாத ஏழை மக்களாக இருக்கின்றனர்.

அத்தகைய அற்ப மனிதர்களை அவர்களுடைய மனைவி, மக்கள் மருமக்கள் உற்றார் உறவினரும் மதிப்பதில்லை. ஊராரும் மதிப்பதில்லை. கருவேல் பழுத்தென்ன, நாய்ப்பால் சுரந்தென்ன, கானில் மழை பெய்துமென்ன? வென்று எல்லோராலும் அவமதிக்கப் படுகின்றனர். கடைசியாக பண மூட்டைகளை வைத்துவிட்டு வசை மூட்டைகளைத்தான் எடுத்துக்கொண்டு சிவலோக பிராப்தி யடைகின்றனர்.

நம்மிடம் பணமிருக்கும்போது ஜீவதயையும் நியாயபுத்தியும் பெருந்தன்மையும் அவசியமிருக்க வேண்டும். அவைகள் இல்லாவிட்டாற் பணத்துக்கு அழகே யில்லை. படிப்பிருந்தாலும் பணமிருந்தாலும் செல்வாக்கிருந்தாலும் பெருந்தன்மை யில்லாத மனிதன் பிரேத ரூபமாகவே காணப்படுகிறான். படிப்பும் பணமும் செல்வாக்கும் பெருந்தன்மை யென்னும் தேவபுருஷனுக்கு முறையே தலைக்குட்டையும் சொக்காயும் காற்செருப்பு மென்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுத் தடபுடலாகக் கல்யாண காரியங்களைச் செய்கிற மனிதன் சந்தைக்கடையில் ஒரு கத்திரிக்காய்க் காரியுடன் மடி

பிடியாக நின்றால் அவனுக்கு ஞானமிருக்கிறதா? டாம்பீகமான விருந்தொன்றுக்கு ஆயிர ரூபாய்களைச் செலவிடுகிற ஒரு பணக்காரன் கண்கெட்ட ஒரு வயோதிகனுக்கு ஒரு அணுக் கொடுக்கச் சம்மதிப்பதில்லையென்றால் அவனுக்கு ஞானமிருக்கிறதா? மோட்டார்காருக்கும் வயிரநகைக்கும் பத்தாயிரக்கணக்காகச் செலவிடுகிற மனிதன் ஒரு வேலைக்காரன் இரண்டொருநாள் வராததற்குச் சம்பளம் பிடிக்கத் தகராறு பேசிப் பஞ்சாயம் வைத்துக்கொண்டால் அவனுக்கு ஞானமிருக்கிறதா? வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை வருமான வரியாகச் செலுத்துகிற ஒரு மனிதன் காப்பி ஓட்டல்காரன் ஒருவனால் கழுத்தைப்பிடித்து தள்ளப்பட்டால் அவனுக்கு ஞானமிருக்கிறதா? கையிலுள்ள பணத்தை ஒருவரிடம் கொடுத்துவைக்கவும் பேங்குகளிற் போட்டு வைக்கவும் பயந்து பெட்டிக்குள் வைத்து அதன் மேற் படுத்து கொள்ளுகிற மனிதன் தோட்டத்தில் காய்க்கிற காய்கறிகட்கும் கீரைக்கும் கிராக்கியான விலைகூறி அவசரக்காரருக்கு விற்றுச் சந்தோஷமடைவானாயின் அவனுக்கு ஞானமிருக்கிறதா? தன்னிடத்து கடன்பட்ட ஒருவன் நஷ்டமடைந்து கெட்டு மெலிந்து கஷ்டப்பட்டாலும் கொஞ்சமும் இரக்கங்காட்டாமல் வன்கண்மையாக அவனது ஆடுமாடு கோழி குஞ்சு வரை ஏலங்கூறி ஒரு காசும் குறையாமல் வசூலிக்க நினைப்பவனிடம் பெருந்தன்மையுண்டா? இன்னுமிதைப்போல் எத்தனையோ பல காரியங்களிற் கொஞ்சமும் பெருந்தன்மை யென்பதில்லாமல் அற்பத்தனமாக நடந்து கொள்ளுகிற மனிதரிடம் பொருளிருந்தும் பயனென்ன? பணத்தைப் பார்க்கிலும் மரியாதையும்

கௌரவமும் பெரிதென்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளாத வரையில் அவர்கள் ஞானசூன்யர்களே! மேலும் அற்பத்தனமான செட்டு எப்போதும் ஆபத்தான காரியமாகவேயிருக்கும். பெரிய மனிதர்களிடம் எப்படிப் பழகினாலும் எப்படி நடந்துகொண்டாலும் அதனால் தீங்கு நேராது. சின்ன மனிதர்களிடம் எப்போதும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். தலையிற் குட்டினாலும், முதுகில் அடித்தாலும், கன்னத்தில் அறைந்தாலும் அவர்கள் பொறுத்துக் கொள்ளுவார்கள்; ஆனால் வயிற்றில் அடித்தால் மட்டும் கொஞ்சமும் பொறுக்கமாட்டார்கள். அப்போது அவர்கள் உருமாறி ஆபத்தான மனிதர்களாகிவிடுவார்கள். அற்பத்தனமான செட்டு தலையிற் குட்டாது, முதுகில் அடிக்காது, கன்னத்தில் அறையாது, நேரே வயிற்றிற்றான் அடிக்கும். அப்போது ஆபத்தும் அவமானமுந்தான் உண்டாகும். இந்த உண்மையை முதலில் லோபிகள் தெரிந்துகொள்வதில்லை. நேர்ந்துவிட்ட பிறகு வருத்தப்படுகிறார்கள். அற்பத்தனமாகச் செட்டுச் செய்கிற லோபிகளின் பணம் பெரும்பாலும் ஆங்கில வைத்தியர்கட்கும் வக்கீல்களுக்கும் கோர்ட்டுச் செலவுகட்கும் போய்ச் சேருகிறது. மீதமிருப்பதற்கு மைனர்கள் தோன்றிவிடுகின்றனர். அவர்கள் சூதுக்கும் குடிக்கும் விபசாரத்துக்கும் அள்ளிக் கொடுத்து ஆண்டியாகிவிடுகின்றனர். இதுதான் அவர்களின் வாழ்க்கையின் ஆதியந்தம்.

எனது பிரியமுள்ள இளைஞர்களே! உங்கள் வாழ்நாட்களில் நீங்கள் எந்த நிலைமையிலும் கௌரவமுள்ள மனிதர்களாக இருக்கவேண்டும். அற்பப் புத்தியும் அற்

பச் செட்டும் உங்களிடத்தில் நெருங்கிவரவும் விடக் கூடாது. யாருக்கும் ஆசை வார்த்தை சொல்லி ஏமாற் றக்கூடாது. அடுத்தவர், சார்ந்தவர்கட்கு உங்களா லான உதவி உபகாரத்தை நீங்கள் மனதோடு தாராள மாகச் செய்தல் வேண்டும். சின்ன மனிதர்களிடம் உறவாடுவதும் பகைத்து நிற்பதும் உதவாது. ஒருவரி டம் இல்லாத குணத்தைப் புகழ்ந்து கூறி ஒரு காரியத் தைச் சாதித்துக்கொள்ள நினைத்தல் கூடாது. எந்தச் சமயத்திலும் யாரிடத்திலும் உள்ளதை உள்ளவாறு பேசவேண்டும். அப்படிப் பேசுவதால் ஏதாவது தீங் குண்டாகுமெனின் மௌனமே நல்லது. நிதானமில் லாத மனிதரின் கூட்டுறவும் நட்பும் அறவே நீக்கப்பட வேண்டும். பெரும் பணம் வேண்டுமென்ற ஆசையும் பெரும் பணத்தில் ஒரு பிரேமையும் இருக்கவே கூடாது. நம்முடைய காரியத்திற்கு ஒருவரைக் கெஞ் சிக் கேளாமல் ஒருவர் தயவை எதிர்பாராமலிருந்தால் அந்த நிலைமையையே ஒரு கோடீஸ்வரனின் நிலைமை யாகக் கருதிக்கொள்ளலாம். அதற்குமேல் மனிதன் நினைப்பதும் வேண்டுவதும் வீண் சுமையேயாகும். எப்போதும் சிறு செலவுகளைத் தாராளமாகச் செய்தல் வேண்டும். பெருஞ் செலவுகளை நிதானித்து அடக்க மாகச் செய்தல்வேண்டும். அப்படிச்செய்தால் அற்பச் செட்டென்பது மனித சமூகத்தை விட்டு அகன்று விடும்.

36. மலிந்துவரும் தொழில்கள்

உலகத்தில் எல்லாத் தொழில்களும் எல்லா வியாபாரங்களும் ஸ்தம்பித்துப் போய்விட்டன. ஏற்றுமதியும் இறக்குமதியும் குறைந்துவிட்டன. தான்யங்களுக்கும் ஏனைய விளைபொருள்கட்கும் விலையில்லை. மிராசுதார்கள் குடியானவர்கள் வரிக்கட்ட முடியாதவர்களாய் கடனில் மூழ்கிக் கிடக்கிறார்கள். ஏழை மக்களுக்குக் கூலியகப்படவில்லை. தங்கமும் வெள்ளியும் நாடு கடத்தப்படுகின்றன. நாளுக்கு நாள் பணக் கஷ்டம் ஒருபுறம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இன்னும் எதிர்காலம் எப்படியாகுமோ தெரியவில்லை.

இந்த நிலைமையில் சில நிபுணர்கள் மனிதனை மனிதன் ஏமாற்றுவதை சரியான தொழிலென்றும் அதுதான் நிச்சயமாக இலாபம் தரக்கூடிய தொழிலென்றும் கண்டுபிடித்து விட்டார்கள்.

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள்

உயிர் இன்ஷ்யூரன்ஸ், உடல் இன்ஷ்யூரன்ஸ், படிப்பு இன்ஷ்யூரன்ஸ், கல்யாண இன்ஷ்யூரன்ஸ், பிள்ளை பெறுவதற்கு இன்ஷ்யூரன்ஸ் இன்னும் மனித வாழ்க்கையிலேற்படுகிற எல்லா சம்பவங்களுக்கும் இன்ஷ்யூரன்ஸ் என்று இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் நாளுக்கு நாள் உற்பத்தியாகிக் கொண்டேயிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஆசை வார்த்தைகளை அளந்தளந்து கொட்டுகின்றன. அவை யெவ்வளவு தான் கற்புகழ்ச்சி செய்துகொண்டாலும், இந்த நேரத்தில் கம்பெனிகள் ஆரம்பிப்பதின் நோக்கமும் அதன்

காரியங்களும் அறிந்துகொள்ள முடியாதனவன்று. ஆயினும் அங்டப் புரட்டர்களான ஏஜண்டுகளின் சாமர்த்தியத்தினாலும் உபத்திரவத்தினாலும் அந்த வலையிற் சிக்கிக்கொள்ளுகிற சாமான்ய ஜனங்கள் அதிகமாகவே யிருக்கின்றார்கள். தாக்ஷண்யத்துக்கு உட்படுகிறவர்களும் இல்லாமலில்லை. கொள்முதலில்லாத தொழில் ஆதலாற் கிடைத்தவரையிலும் நல்லதுதான்; ஆகவே மலிந்துவருவதில் அதிசயமில்லை. லிமிடெட் கம்பெனிகளாதலால் எதிர்காலத்திலும் சிரமமில்லை. மாதாவுக்குச் சுகமிருந்தால் சிசுவுக்கும் ஆயுள்பலமுண்டு. ஆதலால் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளைப் புதிது புதிதாக ஆரம்பிப்பவர்கள் இலாபத்தை மட்டும் கருதிவிடாமல் ஜீவகாருண்யத்தையும் சேர்த்துக் கருதிச் செய்யவேண்டும். இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்ளுகிறவர்களும் வெளுத்ததெல்லாம் பால் என்று கருதிவிடாமல் கம்பெனியைப்பற்றியும் கொஞ்சம் தெரிந்துகொண்டு செய்வது நல்லது. இரண்டாவது,

டிராமாக்கள்

எங்கு பார்த்தாலும் டிராமாக்கள் மலிந்துவிட்டன. கிராமங்கள் தோறும் டிராமாக் கொட்டகைகள் கட்டப்படுகின்றன. மாணவர்களெல்லாம் நடிகர்களாகக் கிளம்பிவிட்டனர். ஆபீசர்களும் அதிகமாக கிளம்பிவிட்டனர். எல்லோரும் வருவாயை ஒரு தர்மத்துக்குபயோகிப்பதென்றே சொல்லிக்கொள்ளுகிறார்கள். பரம்பரை டிராமாக்களும் அதிகமாகவே காணப்படுகின்றன. டிக்கட்டுகள் கட்டாயவரியாக விற்கப்படுகின்றன. அதுவும் ஐந்து ரூபாய், மூன்று ரூபாய், இரண்டு ரூபாய் என்று முரட்டுவரியாக இருக்கிறது. அம்மட்

டில் நின்றுவிடுமா? பெட்ரோல் வேண்டாமா? சிகரெட் வேண்டாமா? மனது ரஸிக்கவேண்டாமா? வருவாயில்லாத நேரத்தில் என் இந்தக் கேடென்று கேட்கிறேன்? அந்த நாடகக் கதைகளும், அதிற் பாடப்படுகிற பாட்டுகளும் சங்கீதத் திறமையும் சொல்ல வேண்டியதில்லை. இதிலும் பெண் நடிகர்களுக்குக் கொஞ்சம் கிராக்கியுண்டு. அதிற் பெரும்பாலும் எருமைகளே! பையன்களை பரலோகத்துக் கனுப்புவதற்கு தேவ பூதங்களன்றி நாடகம் நடத்துவதற்கு யோக்கியதையுடையனவன்று. காலம் போன கடைசியில் எவை யெவை மலியவேண்டுமோ அவையவை மலிந்து வருகின்றன போலும்! இனி மூன்றாவது,

விகடப் பத்திரிகைகள்

விகடப் பத்திரிகைகள் இப்போது ஏராளமாகக் கிளம்பிவிட்டன. வேலையில்லாத காலத்தில் விகடப்பத்திரிகை நடத்துவது நல்லதுதான். அவற்றுள்ளும் அரை குறையான பாஷையிலும் ஆபாசமான தமிழிலும் அர்த்தமில்லாத சொற்களாலும் அலங்கரிக்கப் பெற்றுவரும் பத்திரிகைகளே அதிகமாகக் காணப்படுகின்றன. ஹாஸ்ய முறையில் விஷயங்களை யெடுத்துக் கூறுவது ஒரு பெரிய சாமர்த்தியமென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. அப்படிக் கூறுவதை ஒரு இனிப்பான சுவையோடு பொது ஜனங்கள் படித்தறிந்து கொள்ளுவார்களென்பதிலும் சந்தேகமில்லை. ஆயினும் அர்த்தபுஷ்டியுடன் சுத்தமான தமிழ் நடையில் உபயோகமான விஷயங்களாகவும் இருக்கவேண்டும். அதனால் பாஷைக்கும் ஒரு அபிவிருத்தி ஏற்படவேண்டும். கேவலம் கிராமியச் சொற்களை மலியவிட்டு சாரமற்ற

சம்பாஷணைகளையும் எழுதித் தள்ளுவதிற் பயனில்லை. கல்வியறிவுள்ள பத்திராதிபர்கள் இதைக் கவனிக்க வேண்டுகிறேன். நான்காவது

போட்டிப்பந்தயங்கள்

சில பத்திரிகைகள் எழுத்துப்போட்டி கணக்குப் போட்டிப் பந்தயங்கள், அவற்றிற்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களை பரிசு என்று கொட்டை யெழுத்துகளில் விளம்பரம் செய்து வால் நோட்டீஸ்களும் ஒட்டி ஊர்களைக் கலக்குகின்றன. இந்தப் போட்டிக்கும் சில ஏமாந்த சோணகிரிகள் அகப்படுகின்றனர். வாதியும் ஜட்ஜும் ஒருவராக இருந்தால் தீர்ப்பு என்னவாகும் என்பதை யறிந்துகொள்ள வேண்டாமா? விலைப்போகாத பத்திரிகைகளை விற்றுமுதல் செய்யவும் சந்தாச் சேர்க்கவும் இது ஒரு வழியென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? சுயமரியாதை யில்லாத நாட்டில் பணங்கிடைத்தாற் போதுமென்பது தான் சித்தாந்தம் போலும்.

எனது பிரியமுள்ள இளைஞர்களே! வஞ்சகச் செயல்களுக்கு நீங்கள் ஆளாகவேண்டாம். நெருங்கி வந்தாலும் காலால் உதைத்துத் தள்ளிவிடுங்கள்.

---

37. ஊளையிடும் நாய்கள்

இப்போது பட்டினங்களிலும் கிராமங்களிலும் ஊர்ஊராகத் தெருத்தெருவாக காப்பிக்கடை இட்டலிக் கடை தோசைக்கடை மிட்டாய்க்கடை ஷாப்புக்கடை மருந்துக்கடை சின்னக்கடை பெரியகடை எங்குபார்த்

தாலும் நாய்கள் ஊளையிடுவதுபோல் கிராமோபோன்கள் கதறிக்கொண்டேயிருக்கின்றன. கூட்டத்தைப் பெருக்குவதற்கும் விலை போகாத பண்டங்களை விற்று முதலாக்குவதற்கும் இதை உபயோகிக்கிருர்கள் போலும்! கிராமபோன்களில் உருப்படியான பாட்டுகள் இப்போது அதிகமாக வருவதில்லை. பெரும்பாலும் ஆபாசமானதும் அர்த்தமில்லாததும் மாடு மேய்ச்சிகளும் விரும்பாத தெம்மாங்குப் பாட்டுகளும் தில்லாலப் பாட்டுகளுமே மலிந்துகிடக்கின்றன. டாணு டூணு டாவன்ணு என்பதும் ட்ரியோ டிரியோ! என்பதுங் கூட ஒரு பாட்டுத்தாணு!! இதற்குமொரு சங்கீதமா!!! ஐயோ இத்தகைய பாட்டுக்களைப் பாடவும் வெட்கமாக இருக்காதா? கல்வியறிவில்லாத மக்களாற் பாடப்படும் பாட்டுகட்கு கிராமபோனையும் டிராமாக்களையும் தவிர வேறு கதியேது? அன்னியாயமாக சங்கீதமும் சாகித்யமும் இலக்கணமும் இலக்கியமும் இந்தக் கேடு கெட்ட கிராமப்போனில் பாழாகின்றன. இந்த விளம்பரத்தை சுதேசமித்திரன் போன்ற பெரிய பத்திரிகைகளும் மிக மிக அலங்காரமாகப் பிரசுரிப்பதும் ஒரு அதிசயந்தான்!

நம் முன்னேர்கள் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து தித்திக்கும் சுவையோடு ஊன்கலந்து உயிர்கலந்து, உவட்டாமல் இனிக்கப்பாடி ஏராளமாகக் குவித்துக் கிடக்கும் அருளும் அன்பும் இன்பமும் ததும்பும் அருமையான பாக்களைப்பாடி இந்திய சங்கீதத்துக்கு ஒரு பெருமையை உண்டாக்காமல் உலக்கைத் தடிகளைப்போன்ற அசடு வழிந்தொழுகும் பாட்டுக்களைப்பாடி என் பாழாக்குகின்றனர்? பாடு

கிறவர்கள்தான் பிழைப்புக்கு வேறு வழியில்லாமற் பாடுகிருர்கள். அவற்றை வாங்குகிறவர்கட்கும் வைத்துக் கேட்பவர்கட்கும் ஞானமிருக்கிறதா? திறந்த வாயை மூடாமல் இளித்த பல்லை மறைக்காமல் விழித்த கண்ணைச் சிமிட்டாமல் மெய் மறந்து அனுபவிக்கின்றனரே! என்னே! இந்திய மக்களின் பரிதாப நிலைமை!

போகட்டும், சொல் நயமுமில்லாமற் பொருள் நயமுமில்லாமல் அசடு வழிந்தொழுகும் பாட்டுக்களைப் பாடும் தோசைக் கற்களை வாங்காமல் கொஞ்சமாவது அர்த்த புஷ்டியுள்ள, இலக்கிய இலக்கணச் சுவையுள்ள பாட்டுகளைப் பாடும் (Plates) தட்டுக்களை வாங்கியாவது அனுபவித்தால் உசிதயாக இருக்கும்.

---

38. தலைமுழுகுதல்

முழுகியதால் லாபமென்ன?

புருஷர்கள் தூரதேசங்களிற் கொடுத்த கடனை வசூலிக்கமுடியாமற் படாதபாடு படுகின்றனர். இங்கு நமது பெண்மணிகள் ஊர் ஊராகச்சென்று தலை முழுகி வருகின்றனர். இதற்கு முன் தலைமுழுகித் தலைமுழுகிக் கிடைத்த பலன் என்ன? ஜலதோஷமும், குளிரும், ஜுரமும், சளிக்கட்டும், இருமலும், புகைச்சலுமன்றி வேறு பலன் ஒன்றும் கண்டதில்லை. அம்மட்டில் நின்றுவிட்டாலும் குற்றமில்லை. இப்போது தொடர்ச்சியாக மாமாங்கமாடி, மதுரைக்கடலாடி, சீரங்கமாடி

திருப்பாற் கடல் (திருக்கோஷ்டியூரில்) ஆடி இன்னும் ஆடுவதற்குச் சாக்கடைகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆள் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய்க்கு ஆடிவிட்டார்கள். மாங்கல்யப் பெண்கள் ஆறுயிரமும், விதவைப் பெண்கள் நாலாயிரமும் ஆக பத்தாயிரம் பெண்கள் ஐந்துலட்ச ரூபாய்க்குத் தலைமுழுகி யிருக்கிறார்கள்! ஊருக்கு வந்த பணமெல்லாம் தலைமுழுகியாகிவிட்டன. வராத பணமெல்லாம் அங்கு ஏடுகளிற்றூணிருக்கின்றன. கொடுத்த கடனைக் கேட்டால் ஊரை விட்டுத் துரத்துகிறார்கள். இந்த நிலைமையில் இனித் தலைமுழுகுவதற்கு என்ன இருக்கிறது? உலக நிலையும் பணக்கஷ்டமும் நீங்களறியவில்லையே என்றால் எங்கள் மீது என்ன குற்றம்? (ஏன் படிக்கவைக்கவில்லை) என்பார்கள். முழுகினதெல்லாம் போதும், இனி முழுகவேண்டாமென்றால் அநேகமாக ஆயிற்று, கடை முழுக்குத்தான் முழுகிவிடுகிறோமென்கின்றனராம்.

மனைவி:—மாமாங்க மாடப்போகிறேன்.

புருஷன்:—அதிலென்ன பலன்? வீண் செலவு. வீண் அலைச்சல். நீ போகவேண்டாம்.

மனைவி:—அடடா! அப்படிச் சொல்லாதேயுங்கள், மோக்ஷம்!!

புருஷன்:—மோக்ஷமா? செத்தாலன்றோ மோக்ஷம்! நீ சாகப்போகிறாயா?

மனைவி:—நான் ஏன் சாகிறேன் நீங்கள்....

புருஷன்:—அட அசடே! நான் செத்தால் மோக்ஷம் எனக்கல்லவோ வந்துவிடும்?

மனைவி:—வந்தால் நீங்களே பிள்ளை குட்டிகளைப் பெற்றுக் கொண்டிருங்கள்.

புருஷன்:—பிள்ளை குட்டிகட்கும் மோக்ஷத்துக்கும் வெகுதூரமாச்சே!

மனைவி:—எவ்வளவு தூரமானாலும் சரி! காரும் இரயிலுமிருக்கிறது. மாமாங்கத்துக்குப் போகாமலிருக்கமுடியாது.

புருஷன்:—ஞான சூன்யமே! போய்வா. இந்தா ஐம்பது ரூபாய். பல சாக்கடைகளில் முழுகி வைத்தியத்துக்கு வேறே தண்டம் வைத்துவிடாமல் மாமாங்கச், சாக்கடையில் மட்டும் முழுகிவிட்டு வந்துவிடு.

மனைவி:—ஐம்பது தானா! சரி. தலையை முழுகிவிட்டு வந்து சேருகிறேன். இதுதான் நமது தலை முழுகும் பெண்களின் நிலைமை.

---

39. மாமாங்கப் பாட்டு

போகாதீர் போகாதீர் புத்தியுள்ள மாசனங்காள்!
மாமாங்கம் மாமாங்கம் மதிகெட்ட மாமாங்கம்!
வேலையற்ற மாசனங்கள் விரும்புகிற மாமாங்கம்!
புத்திகெட்ட மாசனங்கள் போற்றுகிற மாமாங்கம்!
அம்மைபிறந்த அனியாய மாமாங்கம்!
படுக்க இடமில்லாமற் பரிதவிக்கும் மாமாங்கம்!
நிற்க இடமில்லாமல் நிலைகலங்கும் மாமாங்கம்!
மூச்சுவிடக்கூட முடியாத மாமாங்கம்!—இந்த
மாமாங்கம் பார்க்க வருவதெல்லாம் பேய்க்கூட்டம்.
நல்ல ஜனங்கள் அந்த நகரைவிட்டுப் போனார்கள்!
உள்ளூரா ரெல்லாரும் ஊரைவிட்டுப் போனார்கள்!
ஆடுகளா மாடுகளா அறிவுள்ள மாசனங்கள்

மாடுகளா ஆடுகளா மதியுள்ள மாசனங்கள்
ஒதுங்க இடமுண்டா உட்கார நீதியுண்டா?
மறைய இடமுண்டா மலங்கழிக்க நீதியுண்டா?
குளிக்க வசதியுண்டா குடி தண்ணீர் நல்லதுண்டா?
சற்றே களைப்பாறத் தனியே குடிசையுண்டா?
என்ன பலனை யிதுவரையிற் கண்டார்கள்!
மாமாங்கமாடி வந்த பலன் ஏதுமுண்டா!
உற்றூர் வருவார் உறவினர்கள் தாம்வருவார்.
பெரியவரும் சின்னவரும் பெருவாரிப் பேர்வருவார்.
கூடவருவார்கள் கூட்டாஞ்சோ றுக்கிடுவார்.
பேதியென்று சொன்னால் பிடுங்கிடுவார் கூடாரம்!
புரளியென்று சொன்னாற் போதுமந்த வேளையிலே.
சொல்லாமற் போய்விடுவர் துணைவந்த மாசனங்கள் !
தேடுவாரில்லாமல் தெருவிலே போட்டுவிட்டு.
ஏனென்று கேளாமல் எல்லோரும் போய்விடுவர்!
இந்தவிதிக்கு என்வந்தோ மென்று சொல்லி
வருந்தித்துடித்து மாண்டவர்கள் எத்தனை பேர்!
தூக்குவோரில்லாமல் துணைவந்தோர் பாராமல்
மாண்டுமடிந்த மாசனங்கள் மெத்த வுண்டு.
ஒருசுகமு மில்லாமல் ஒரு பலனுமில்லாமல்
காசுபணம் கிட்டாமல் கவலைவந்த வேளையிலே,
பணங்காசு கிட்டாமல் பாடுவந்த வேளையிலே,
காசைக்கரியாக்கிக் கார்களுக்குத் தான்கொடுத்து,
இடியும் மிதியும் எனக்குனக்கு என்று சொல்லி,
போகாதீர் போகாதீர் புத்தியுள்ள மாசனங்காள்—அந்த
ஆகாத கூட்டத்தில் அலக்கழியப் போகாதீர்.

40. மாதர் மறுமணம்

நமது சமூகம் விவாஹ விஷயத்தில் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து நேரான பாதையிற் செல்லாமற் பல கரடுமுரடான பாதைகளில் நடந்து இப்போது அண்டுவதற்கும் ஒண்டுவதற்கும் நிழலில்லாத பாலைவனத்தில் வந்து நிற்கின்றது. இன்னும் பல மலைகளும் மடுக்களும் காறாறுகளும் எதிரில் இருக்கின்றன. அவற்றைக் கடப்பதற்குரிய சாதனங்கள் ஒன்றும் கைவசமில்லை. பக்கத்தேயுள்ள ஒரு சிறுவேலியை (பழைய வழக்கம்) த்தாண்டி, நவீன முறையில, இயந்திரங்களின் உதவியால் மிகவும் அழகாகவும் ஒழுங்காகவும் செய்யப்பெற்றிருப்பதும் பாலைவனம், மலை, மடு, ஆறு இவற்றைக் கடப்பதற்குரிய சாதனங்கள் அமைந்திருப்பதும் தாகவிடாய், பசி, அயர்வு, சோர்வில்லாமல் வழிகொள்ளக் கூடியதும், தங்குமிடங்களுள்ளதும், திருடர் பயமற்றதுமான நல்ல பாதை (Main Road) யைவிட்டு என் சிரமப்படவேண்டும்? உடற் பயிற்சி பெற்ற திடசரீரிகள் (பெருந்தனவந்தர்) சிலர் நாளைவரும் தளர்ச்சியை நினையாமல் பாதையற்ற பாதையிற் சென்றால் அவர்களை எல்லோரும் பின்பற்றவேண்டுமா? ஒரு பெரிய சமூகத்தில், மூத்தோர், இளையோர், நோயுற்றோர், அங்கவினர், பேதையர் பலரும் கலந்திருப்பது சகஜமன்றோ! அவர்களெல்லோரும் தங்கு தடையில்லாமல் இந்தப் பாழான பாதையில் திடசரீரிகளைப் பின்பற்ற முடியுமா? அவர்களைப் பின்பற்றி ஓடும்படி பிடர் பிடித்துத் தள்ளிவந்த நமது பெண்மக்கள் கண்காணச் சிலர் கீழே விழுந்து மண்டையுடைந்தும், சிலருக்கு

இடுப்பு முறிந்தும் சிலருக்குக் காலோய்ந்தும், சிலருக்கு தாகமெடுத்தும் தத்தளித்துத் தடுமாறி நிற்கும் இந்தக் கஷ்டமான சமயத்திலாவது நமது நிலைமையை நாம் ஆராய்ந்தறிய வேண்டுமன்றோ?

இந்தியாவிற் பணமுள்ள கூட்டத்தாரில் நம்மவரைப் பார்க்கிலும் நடப்பிற் செட்டாகச் செலவுசெய்து வாழ்பவர்யாருமில்லை யென்று கூறுவது மிகையாகாது. அவ்வளவு செட்டாக வாழ்ந்து வருகிற நமது சமூகத்துக்கு அளவில்லாத பணத்தேவையும் ஒரு சுகமுமில்லாமற் கஷ்டப்பட்டுத் தேடித்தேடி வைத்த பொருள் ஓடி ஓடிப் போவதும் மாறாத பணக்கவலையும் ஏக்கமும் ஏன் வரவேண்டும்? சாதாரணமான ஒருகுடும்பத்துக்கு வருஷம் ஒன்றுக்கு குறைந்தது ஐநூறு ரூபாயும் அதிகமானால் இரண்டாயிர ரூபாய் வரையிலும் செலவாகலாம். நியாயமான செலவு அதற்கு மேலாகாது. எவலாட்கள் வண்டி வாகனம் அடிக்கடி பிரயாணம் முதலிய சற்று உயர்ந்த வாழ்க்கைக்குத் தான் வருஷம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் வரையிற் செல்லும். மற்றப்படி சாதாரண முறையில் சௌக்கியமாக வாழ்வதற்கு வருஷம் ஒன்றுக்கு ஐநூறு ரூபாய்க்குமேற் செலவாகாது. இந்த ஐநூறு ரூபாய்க்கு மூலதனம் ஐயாயிரம் ரூபாயும் இரண்டாயிரம் ரூபாய்க்கு மூலதனம் இருபத்தையாயிர ரூபாயும் போதுமானதாகும். ஐயாயிர ரூபாயை வைத்துக்கொண்டு வருஷம் ஒன்றுக்கு ஐநூறு ரூபாய் தேடுவதும் இருபத்தையாயிர ரூபாயை வைத்துக்கொண்டு வருஷம் ஒன்றுக்கு இரண்டாயிர ரூபாய் சம்பாதிப்பதும் வட்டித்தொழிலிற் பழகியிருக்கிற நமது சமூகத்துக்குச் சிரமமாக இருக்காது. ஆனால் அவ்வ

ளவு கிடைத்ததும் போதுமானதென்று கையைக் கட்டிக்கொண்டு சோம்பேறிகளாக இருந்துவிட வேண்டுமென்று நான் சொல்லவரவில்லை. அதற்கு மேலும் கடன்படாமல் கவலைப்படாமல் வஞ்சனை, சூது, பொய், புரட்டு முதலிய பாப காரியங்களைச் செய்யாமல் பிறர் பொருளுக்கு ஆசை வைக்காமல் நம்பிக்கை நாணயத்துடன் நல்லவழியில் தொடர்ந்து தொழிற்செய்து கிடைத்ததற்கு திருப்தியடைந்து சக்திக்கேற்றவாறு தான தருமங்களைச் செய்து வாழலாம். மனிதனுக்கு எப்போதும் முயற்சியும் சுறுசுறுப்பும் வேலையும் தளராத ஊக்கமும் வேண்டும். ஆனால் எந்த நிலைமையிலும் மனத் திருப்தியும் சந்தோஷமும் வேண்டும். அதுதான் நமது சமூகத்துக்கு இல்லை. எவ்வளவிருந்தாலும் மனத்திருப்தியும் சந்தோஷமும் ஏற்படுவதற்கு வழியில்லை. அதற்கென்ன காரணமென்பதைத்தான் நாமிப்போது ஆராயவேண்டும். நம்மிற் கல்யாண விஷயம் முழு மோசமாக இருக்கிறது. அளவில்லாத பணத்தேவையையுடையதாக இருக்கிறது. பெருவயிறு படைத்த பூதமாக இருக்கிறது. சாமான்யமான ஜனங்கள் அதை (கல்யாணத்தை) நெருங்கிவிட்டால் முன்னுள்ளது பின்வருவது வீடு வாயில் காணி பூமி முன்பின் பெற்ற பிள்ளைகள் இவ்வெல்லாவற்றையும் பற்றி சிந்திக்க வேண்டியவர்களாகிவிடுகிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள்! உலகத்தில் பிறந்த மக்களும் ஏனைய ஊர்வன நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன முதலிய சகல பிராணிகளும் ஆணுடன் பெண்ணும் பெண்ணுடன் ஆணும் கூடி வாழ்வது இயற்கை. மனித வாழ்க்கையில் இவ்வியற்கை பேரறிவோடு அழகுபெறத் திகழ

வேண்டுமன்றி வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கலாமா? அப்படி இடையூறாக இருக்கும் ஒரு விஷயத்தை சீர்திருத்தி நாமும் உலகத்தோடொட்டி நல் வாழ்வு வாழ முயற்சிக்க வேண்டுமன்றோ?

விவாஹ விஷயமென்னும் அஸ்திவாரத்திலிருந்து தான் நம்மவர்க்குப் பணத்தேவை யென்னும் முடிவு பெறாத கஷ்டம் எழும்புகிறது! தகுதிக்கேற்ப சம்பந்தம் வரவேண்டுமென்றாலும் சரி. பெண்களைச் சும்மா செய்தாலும் சரி. பிள்ளைகளுக்குக் கொடுத்துக் கொண்டாலும் சரி. சஷ்டியப்தபூர்த்தி சாந்தியாயினும் சரி. ஸ்வீகாரம் செய்துகொள்வதாயினும் சரி. ஏனைய சிறு விசேடங்களாயினும் சரி. ஒன்றும் சுலபமாக முடியக்கூடியதில்லை. எல்லாம் பெருஞ் செலவினங்களாகவே இருக்கின்றன. ஆகவே பணத்தேவையில் வித்தியாசமில்லை. பணத்தேவையோடு அதற்கு மேலும் பணக்காரன் என்று பெயர் பெறவேண்டியதிருக்கிறது. அந்த ஆசையின் காரணமாக தேவையில்லாத பெரிய பெரிய வீடுகள் தேவைக்கதிகமான ஆடையாபரணங்கள், சக்திக்கதிகமான ஆடம்பரங்கள், ஆர்ப்பாட்டங்கள் முதலிய செலவினங்கள் ஏற்படுகின்றன. அப்போது பெரும் பொருளீட்டுதற்கு வாழ்நாட்களை யெல்லாம் தியாகம் செய்தும் பெருங் கடன் படவேண்டியதாகிறது. பெருங் கடன் துன்பத்தை உண்டாக்குகிறது. துன்பம் வாழ்க்கையையே நாசஞ் செய்துவிடுகிறது.

பேதைமை சார்வாச் செய்கையாகும்
செய்கை சார்வா வுணர்ச்சியாகும்
உணர்ச்சி சார்வா வருவுருவாகும்

அருவுருச் சார்வா வாயிலாகும்
வாயில் சார்வா வூறுகும்மே,
ஊறு சார்ந்து நுகர்ச்சியாகும்
நுகர்ச்சி சார்ந்து வேட்கையாகும்.
வேட்கை சார்ந்து பற்றுகும்மே.
பற்றிற் ரேன்றுங் கருமத்தொகுதி
கருமத்தொகுதி காரணமாக
வருமே யேனை வழிமுறைத் தோற்றம்
தோற்றம் சார்பின் மூப்புப்பிணி சாக்கா
டவலமாற்று கவலைகை யாறெனத்
தவலி றுன்பம் தலைவரு மென்ப
ஊழின் மண்டிலமாச் சூழுமிந் நுகர்ச்சி

—மணிமேகலை.

என்று பௌத்த தரும நூல்களிற் கூறுகிறபடி பேதைமையிலிருந்து செய்கையும், செய்கைகளிலிருந்து உணர்வும், உணர்விலிருந்து நாம ரூபங்களும், நாம ரூபங்களிலிருந்து வாயில்களும், வாயில்களிலிருந்து ஸ்பரிசமும், ஸ்பரிசத்திலிருந்து வேட்கையும், வேட்கையிலிருந்து பற்றும், பற்றிலிருந்து கருமக்கூட்டமும் அதனுல் பிறப்பும் பிறப்பிலிருந்து மூப்பு, மரணம், நோய், அழுகை, துன்பம், கவலை, ஏக்கம் ஆகிய வினைப் பயன்களும் தொடர்ச்சியாக உண்டாவனபோல நமது சமூகத்திற்கு சீர்குலைந்து ஒருவழிப்படாத விவாஹ விஷயத்திலிருந்து மேற்கூறியப்படி தொடர்ச்சியாக சமூக வாழ்வை நாசஞ் செய்கிறவரை துன்பமும் கஷ்டமும் நஷ்டமும் உண்டாகின்றன. இத்துன்பத்தை நீக்குதற்கு மூல காரணமாகிய விவாஹ விஷயத்திலுள்ள சீர்கேட்டையும் அதனுலேற்படும் பெருஞ் செலவுகளையும் மாற்றினுலன்றி எந்த வகையிலும் நமது சமூகம்

மனத்திருப்தியும் ஆறுதலுமடைய வழியில்லை. நம்மவர் தொழில் செய்யுமிடங்களாகிய இலங்கை, பர்மா, மலாயா, என்னும் முதலிய அயல் நாடுகளும் உள்நாடுகளும் சுபிக்ஷமாக இருக்கும் காலத்திற்கூட நம்மவரின் கலியாண காரியத்துக்குப் பெருந்தடையும் பணத்தேவையும் சிரமமும் கவலையும் நிவர்த்தியானதில்லை. இப்போது உலக முழுதுமே செல்வநிலை சீர்கேடுற்று நம்பிக்கையும் நாணயமு மில்லாமல் தடுமாறுகின்றன. ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், ஹங்கேரி, முதலிய பெரிய தேசங்களுங்கூட தாங்கள் செலுத்தவேண்டிய கடன்களைச் செலுத்தக் கூடாமலிருக்கின்றன. இந்த நிலைமையில் நம்மவர் இனிப் பெரும்பொருள் தேடுவதும் பெருஞ் செலவு செய்வதும் எப்படி முடியும்? இனி ஒரு காலம் நல்லதாக வந்தாலும் அது நிலையானதென்று எப்படி நம்புவது? மேடுகண்டபின் பள்ளமும் பள்ளங் கண்டபின் மேடும் காண்பது இயற்கை. உலக நிலை ஒருபடியாக இராது. மாறி மாறித்தான் வரும். அந்த மாறுதல் நம்மைப் பாதிக்காமல் நாம் நம்முடைய வாழ்க்கை முறைகளைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டுமன்றோ! அப்படிச் சரிப்படுத்திக் கொள்வது சிலருக்குத் தேவை யென்றும் சிலருக்குத் தேவையில்லாத விஷயமென்றும் சொல்லமுடியாது. நமது சமூகத்துக்கே முக்கியமான காரியமாக இருக்கிறது. விவாஹ விஷயத்தை ஒழுங்கு படுத்திக்கொள்வதும் அதனால் ஏற்படும் அனாவசியமான பணத்தேவைகட்கும் கஷ்ட நஷ்டங்கட்கும் கவலைக்கும் துக்கத்துக்கும் ஆளாகாமல் தப்பித்துக் கொள்வதும் நமது சமூகத்துக்கு எதிரிலுள்ள ஒரு முக்கியமான வேலையாகும். அந்த முக்கிய

மான வேலையைத் திருப்தியாக முடிக்கவேண்டுமானால் சமூகத்துக்குள் மாப்பிள்ளைகட்குப் பெண்களும் பெண்கட்கு மாப்பிள்ளைகளும் சுலபமாகக் கிடைக்கும்படிக்கும் சொற்பச் செலவில் சுலபமாக விவாகம் முதலிய விசேடங்கள் நடைபெறும்படியும் ஏற்பாடு செய்தல் வேண்டும். கல்யாண வீட்டில் அடுக்கடுக்காகச்சாமான் வைப்பதென்ற கெட்ட வழக்கமும் பின் தொடர்ச்சியாக சீர்முறை கொடுப்பதென்ற அனுவசியமான காரியமும் ஒழியவேண்டும். கல்யாண முதலிய விசேட நாட்கள் குறைவுபடவேண்டும். கல்யாண காரியம் ஒரு பெரு மலையாகத் தோற்றுவதும் இந்தப் பெரிய காரியத்தை யெப்படி முடிக்கப் போகிறோமென்ற ஏக்கமும் கவலையும் இல்லாமல் தீரவேண்டும். இன்னும் இந்தச் சிக்கலான காரியத்தாலேற்படுகிற பல கஷ்டங்கட்கும் சமாதானம் வேண்டும். இப்போதுள்ள நிலையில் துருப்பிடித்துப்போன பழைய பழக்க வழக்கங்களை அப்படி அப்படியே வைத்துக்கொண்டு இந்த நன்மைகளை யெப்படிச் செய்துகொள்ள முடியும்? செய்து கொள்ள முயன்று நாமும் உலகத்தோ டொட்டிய புதிய வழிகளிற் சென்றாலன்றி முடியக்கூடியதில்லை. பெண்களுக்கு கிராக்கியில்லாமற் செய்தாலன்றி விவாக விஷயத்தாலேற்படும் சிக்கல் ஒழியாது.

ஆகவே புருஷர்களைப்போற் பெண்களிலும் விருப்பமுள்ளவர்கள் மறுமணம் செய்துகொள்வதை சமூகம் அங்கீகரிக்கவேண்டும். ஆனால் புருஷரை இழந்த பெண்களெல்லாம் மறுமணம் செய்துகொண்டுதா னாகவேண்டுமென்ற கட்டாயமில்லை. இஷ்டமில்லாதவர்கள் தங்கள் வைதவ்யத்தைக் காப்பாற்றிக்கொள்ளலாம். இஷ்ட

முள்ளவர் கட்டாயத்துக்காக அப்படியிருக்கவேண்டியதில்லை. அவர்கள் தங்கள் இஷ்டப்படி மறுமணம் செய்து கொள்ளும் உரிமையுடையவர்களாக இருக்க வேண்டும். அதிலிருந்து பல கஷ்டங்களும் தனித் தனியே விடைபெற்றுக்கொள்ள ஆரம்பித்து விடும். மனைவியை இழந்த புருஷர்கள் புருஷனை இழந்த பெண்களை மணம்செய்து கொள்ளலாம். பெண் கொள்ளக் கிடைக்காத சாமான்ய ஜனங்களும் புருஷனை இழந்து ஆதரவற்று வேறு வழியின்றி நிற்கும் பெண்களை மணந்து கொள்ளலாம். இளம் பிராயத்தில் ஒன்றையும் அனுபவிக்காமல் வீண் தண்டத்துக்கு வாழ்விழந்து நிற்கும் சிறு பெண்கள் அவர்கள் விருப்பம்போல் வாழ்க்கைப்பட்டுக் கவலை நீங்கலாம்.

பெண்களுக்கு மறுமணம் செய்யும் ஏற்பாடிருந்தால் முதலாவது பெண்ணுக்குப் பணம் கொடுத்த லென்னும் அபாயமான பெரிய தேவை ஒழியும்; எல்லோரும் மங்களமாக வாழ்வார்கள். சாமான்ய குடும்பங்களுக்குக் கல்யாணத்தைப்பற்றிய அச்சம் தீரும். சாமான் சேகரித்தல், சாமான் வைத்தல், அதைக் கண்டு மகிழ்தல் என்னும் வேலையற்ற வேலை ஒழியும். அந்த ஆகாத சாமான்களுக்கு அடுக்கடுக்காக அறை வீடுகளும் அதன் அங்கங்களாக மச்சு மாளிகைகளும் வேண்டாம். டம்பச் செலவுகளுக்கு அவசியமிராது. அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கவேண்டாம். கல்யாணத்தைத் தொடர்ந்து செய்யப்படும் சீர் முறைகளுக்கெல்லாம் வால் நீளாது. நிடசரீரிகளான சந்ததி உண்டாகும். அலங்கோலமான யாத்திரை, அநாகரீகமான சஞ்சாரம், அசட்டுத்தனமான சச்சரவுகள் ஒழி

யும். "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப் பதுபோலும் பிறப்பு" என்ற முதுமொழிப்படி பிறந்த பொழுதே இறப்பது நிச்சயம். நிச்சயமாயினும் அந் தச்சாவு அகாலத்தில் நேர்ந்தால் அது துக்கந்தான். ஆயினும் அந்தத் துக்கம் ஒரு சில நாட்களில் அல்லது மாதங்களில் அல்லது வருஷங்களில் மறைந்து விடுகி றது. மனம் ஆறுதலடைந்து சமாதானமுமாகி விடு கிறது. ஒன்றுமறியாத சிறு பெண்களுக்குக் (கல்யா ணம்) களியாட்டுச்செய்து ஆடையாபரணங்கள் அணி வதில் தங்கள் கைவரிசையைக் காட்டித் தடபுடலாகத் திரிந்துவிட்டு தங்கள் கடன் தீர்ந்துவிட்டதாக அகம கிழ்ந்த பெற்றோர்கள், அந்த மறுமகனுக்கு அற்பாயு சாக மரணம் சம்பவித்துவிட்டால் அந்த இயற்கையான துக்கம் ஒருபுறமிருக்க, தாங்களாக வருவித்துக்கொள் ளுகிற துக்கம் பெரிதாகி சிறு பொழுது மணையிலிருந்த தண்டத்துக்காக அப்பெண்ணை அலங்கோலப்படுத்தி அதன் உயிரை வாங்குவதுபோல் ஆடையாபரணங் களை யெல்லாம் வாங்கி அழுகை பழக்கி சிந்தியமூக்கும் சிவந்த கண்ணுமாய் முக்காடிட்டு மூலையில் வைத்து அந்த துரதிஷ்டமுள்ள பெண் ஒப்புச்சொல்லி அழத் தாங்களும் அழுது விடிந்தெழுந்தால் அப்பெண் ணைப் பார்த்துப் பார்த்து மாறாக் கவலையடைகிறார்கள். மறுமணம் செய்வதென்ற ஏற்பாடிருந்தால் இந்த அனு வசியமான துக்கத்துக்கும் கவலைக்கும் துரதிஷ்டத்துக் கும் இடமிருக்குமா?

உலகத்தின் பல பாகங்களிலும் இருநூறு கோடி ஜனங்களிருக்கிறார்கள். அவர்களில் இந்தியாவைத் தவிர ஏனைய தேயத்துப் பெண்கள் மறுமணம் செய்துகொள்

வதில் ஒரு தடையுமில்லை. இந்தியாவிலுள்ள முப்பத்தைந்து கோடி ஜனங்களிலும் மகம்மதியர், கிரிஸ்துவர், சீக்கியர், பார்சிகள் மூன்றில் ஒரு பாகத்தினராக இருக்கிறார்கள். அவர்களுள்ளும் பெண்களின் மறுமணத்துக்குத் தடைகளில்லை. எஞ்சிய இரண்டு பாகத்தினரான சுமார் இருபத்திரண்டு கோடி ஹிந்துக்களில் இருபது கோடி ஹிந்துக்கள் ஆண்களும் பெண்களும் மறுமணம் செய்துகொள்ளும் வழக்கமுடையோராக இருக்கின்றனர். இனி மீதமிருப்பது இரண்டு கோடிதான். இந்த இரண்டு கோடி மக்களிலும் ஒரு கோடியான ஆண் மக்கள் மறுமணம் மூன்றும் மணம் நான்காம் மணம் என்று மணம் மணமாகச் செய்து கொள்வதில் தடைகளில்லை. ஆகவே உலகின் ஜனத்தொகையில் இருநூற்றில் ஒரு பாகந்தான் துரதிஷ்டமுள்ள பாகமாக இருக்கிறது. அந்தத் துரதிஷ்டமுள்ள குறுகிய மைனாரிட்டியில் நமது சமூகமும் ஒன்றாக இருக்கிறது. பெண்கள் மறுமணம் செய்து கொள்ளுவதால் பெருந்தீமைகளுண்டாகி விடுமென்று அஞ்சுகிறவர்கள் மேற்கூறிய நூற்றுத் தொண்ணூற்றொன்பது கோடி ஜனங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அந்த சமூகமெல்லாம் கெட்டுப்போய் விட்டனவா. இல்லையே. நம்மினும் சிறப்பாக வாழ்கின்றனவே. "உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றும் கல்லாரறிவிலாதார்" என்ற திருக்குறட் செய்யுளுக்குப் பரிமேலழகர் உரையின் விளக்கத்தில் "அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன ஒழித்து சொல்லாதனவற்றுள் ஏற்பனகொண்டு வருதலான் அவையுமடங்க உலகத்தோடொட்ட வென்றும்" என்று கூறியிருப்பது

பெரிதும் போற்றத்தக்கது. காலதேசவர்த்தமானங்களை அனுசரித்து ஜனசமூகத்துக்கு எவை எவை நல்லனவாக இருக்கின்றனவோ அவைகளைக் கைக்கொள்ளுதல் தான் விவேகமாகும். இரண்டாயிரம் வருடங்கட்கு முன்பிருந்த பழக்க வழக்கங்கள் இப்போது பொருந்துமா? இரண்டாயிர வருடங்கட்கு முன் நம்மவர் தூரதேயங்கட்குக் கப்பல் யாத்திரை செய்து அங்கு வட்டிக்கடை வைத்துத் தொழிற் செய்ததுண்டா? சட்டை தொப்பிகள் அணிந்ததுண்டா? மோட்டார்க் காரில் ஏறியது உண்டா? ஆகாயத்திற் பறந்ததுண்டா? இங்கிப் புட்டியும் பேனாவும் வைத்துக்கொண்டு கடிதமெழுதியது உண்டா? பெங்களூர்ப் புடவைகளுண்டா? வயிர நகைகளுண்டா? வெள்ளிப் பாத்திரங்களுண்டா? கல்யாண முதலிய விசேடங்களில் சமையற் செட்டுண்டா? கூடை கூடையாசப் பழங்கள் வந்ததுண்டா? யானை குதிரை முதலிய எடுபிடிகளுண்டா? மங்கு, மரவை, பீங்கான், ஜாடிகளுண்டா? வீடு நிறையச் சாமான்கள் வைத்ததுண்டா? பெரிய பெரிய வீடுகளுண்டா? அதில் இத்தாலி, பிரான்சு, இங்கிலாண்டு, ஜர்மனி, ஜப்பான் முதலிய தேயங்களின் தளக்கற்கள் பதித்ததுண்டா? மின்சார விளக்குகள் தண்ணீர்க் குழாய்களுண்டா? இன்னும் இவைபோல் எத்தனையோ புதிய சௌகரியங்கள் ஏற்பட்டு அவற்றை நாமும் அனுபவித்து வருகிறோமன்றோ! அவையெல்லாம் பழைய முறைகளல்லவென்று தள்ளி விட்டோமா? புதிய முறைகளென்றாலும் ஜன சமூகத்துக்கு நல்லவை யென்றுதானே ஒப்புக்கொண்டிருக்கிறோம். அதுபோல் இன்னும் நல்லதென்றிருப்பதை யேன் அங்கீகரிக்கக்கூடாது? பெண்

களுக்கு மறுமணம் செய்வது நிலைமையென்று ஒருவரும் நிரூபிக்க முடியாது. வழக்கமில்லாத காரியமென்று தான் சொல்லமுடியும். வழக்கமில்லாத காரியமாயினும் அனுபவத்தில் நல்லதாயின் அதை மாற்றிக்கொள்வதாற் குற்றமொன்றுமில்லை. புதிய வழக்கங்கள் முதலெடுப்பில் நெடுநாட் பழகிய மனத்தின் தன்மையால் அநுசிதமான காரியமாகத்தான் தோற்றும். காலாகவாக அத்தோற்றம் மாறிவிடும். பிறகு அதன் பலனும் நன்மையும் ஒரு சிறைக்கூடத்திலிருந்து விடுபட்டது போல் இருக்கும். இது உலகானுபவத்தில் நாம் காணக்கிடக்கும் உண்மையாம்! ஒரு காலத்தில் ஹிந்துக்களில் ஒரு வகுப்பார் புருஷனையிழந்த பெண்களை உடன்கட்டையேற்றிச் சுட்டுவந்ததாகவும் நூறு வருஷங்கட்கு முன் அவ்வழக்கம் சட்டபூர்வமாகத் தடுக்கப்பட்டதாகவும் நாம் அறிகிறோம். அத்தகைய பெண்கள் இப்போது பழிக்கப்படவில்லை. நம்முன்னரும் சுமார் முப்பது வருஷங்கட்கு முன் புருஷனை யிழந்த பெண்கள் கழுத்தில் சரடு என்னும் ஒரு தங்க வளையத்தையும் பிறகு உருத்திராக்ஷத்தையும் அணிந்திருந்தார்கள். இப்போது நல்ல நல்ல நைசான சங்கிலிகள் மோதிரங்கள் அணிந்து கொள்ளுகிறார்கள். இதுவும் பழிக்கப்படவில்லை. ஆதலால் பெண்களுக்கு மறுமணம் செய்வதால் யாதொரு தோஷமும் விபரீதமும் குற்றமும் ஏற்பட்டுவிடாது. நமது சமூகத்தில் விவாக விஷயத்தாலேற்படும் சீர்கேட்டினாலும் பெருஞ் செலவினாலும் பல குடும்பங்கள் சகிக்கமுடியாத கஷ்ட நஷ்டங்களை யடைந்துவருகின்றன வென்று பொதுவாகச் சொல்லுவதைப் பார்க்கிலும் சில குடும்பங்களின் சரித்திரங்களை மாதிரிக்

கொன்றாக இங்கு எடுத்துக்கூறுதல் பயன்படுமெனக் கருதி சில நிகழ்ச்சிகளை மட்டும் உதாரணமாகக் கூறுகிறேன்.

முதற்கதை

நாற்பது வயதுவரை ஒருவர் நல்ல கடைகளுக்கு ஏஜண்டாகப் போய்வந்து சம்பளமும் சாமான் (கமிஷன்) தொகையும் பெற்றும் தனதிற் சில கூட்டுத்தொழில்கள் செய்தும் ஒன்றரை லட்ச ரூபாய் பணமுள்ளவரென்று மதிக்கப்பட்டிருந்தார். அப்போது அவருக்கு நான்கு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்திருந்தனர். மூத்தமகனுக்கு வயது பதினெட்டு. அவனும் கெட்டிக்காரன். ஆனால் காது மட்டும் கொஞ்சம் மந்தம். மனைவி ஒரு துஷ்ட தேவதை. மகனுக்குப் பெண் சும்மா வருமென்று எதிர்பார்த்தார். வரவில்லை. சும்மா வராததற்கு நல்ல வீடில்லாமையே காரணமென்று தீர்மானித்துக்கொண்டார். உடனே வீடு கட்ட ஆரம்பித்து எண்பதாயிர ரூபாய் செலவிட்டு ஒரு வீடும் கட்டிமுடிந்தது. பெண் சும்மா வருவதாக இல்லை. மனைவி பொல்லாதவளாகவும் மகனுக்குக் காது மந்தமாகவும் இருப்பதுதான் உண்மையான காரணமென்று தெரிந்துகொண்டார். மகனுக்கு வயது இருபத்தொன்றாகிவிட்டது. இனி சும்மா இருக்கப்படாதென்று கொடுத்துக்கொள்ள நினைத்தார். அதுபோல் ஏழு வராகன் கொடுத்து கல்யாணம் முடிந்தது. கல்யாணம் முடிந்த ஒரு வருஷத்தில் அப்பெண் பிரசவத்தில் இறந்துபோனாள். கையில் மிதப்பாக இருந்த பணமெல்லாம் தீர்ந்துவிட்டது. கஷ்டகாலம் ஆரம்பித்துவிட்டது. கைக்குதவியாக இருக்கிற மூத்த மகனுக்கு

மறுமணம் செய்யாமல் மற்ற பிள்ளைகளைப்பற்றிச் சிந்திக்க அவர் மனம் செல்லவில்லை. பின்னும் பத்து வராகன் கொடுத்துப் பெரு முயற்சியும் செய்து மூத்த மகனுக்கு மறுமணம் செய்துவைத்தார். மற்ற பிள்ளைகளும் ஒருவர் பின் ஒருவராகக் கல்யாண வயது வந்தவர்களாகி விட்டனர். கையிற் பணமில்லை. கடனும் கொஞ்சமிருந்தது. ரகசியமாக வீட்டை ஈடுவைத்து ஏழு வராகன் கொடுத்து இரண்டாவது மகனுக்குக் கல்யாணம் செய்து முடித்தார். மூன்றாவது பையனும் பெரியவனாகிவிட்டான். வேறு வழி ஒன்றுமில்லாததினால் நான்காவது பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொடுத்தும் போதாமல் கொஞ்சம் கடனும் வாங்கி மூன்றுவது கல்யாணத்தை முடித்தார். கடன் அதிகமாயிற்று. கடன் நிர்ப்பந்தமும் ஆரம்பித்து விட்டது. உடல் நிலையும் தளர்ந்துவிட்டது. முன்போற் சம்பாத்தியத்துக்கும் இடமில்லை. ஆகவே கடன் தீரவும் குடும்ப காலக்ஷேபத்துக்கும் வேறுவழி யொன்றுமில்லாமல் நான்கு ஆண் குழந்தைகளுக்கும் பிறகு தேடித் தவமியற்றிப் பெற்று அருமையாக வளர்த்து அள்ளி அள்ளிக் கொடுத்துச் செய்வதாக வைத்திருந்த பெண்ணைப் பெருந்தொகை வாங்கிக்கொண்டு எங்காவது ஒரு படுகுழியிற் றள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. ஞானசூன்யமான பணக்காரர் ஒருவர் சஷ்டியப்தபூர்த்திக்குப் பெண் வேண்டியவராயும் முன் இரண்டு தாரங்களைத் தின்றவராயும் மாமனாருக்கு நான்கு வருஷங்கட்கு மூப்புடையவராயும் ஸ்வீகார தந்தங்களையுடையவராயும் யௌவனத்தையும் அழகையும் பறிமுதல் செய்யப்பட்டவராயும் மூளை நரம்புகளில் ஈரப்பசையற்றவ

ராயும் ஒரு மாப்பிள்ளை பிணம் வந்துசேர்ந்தது. பெண்ணைப் பார்த்தது. பிரியங்கொண்டது. அந்தரங்கமாகவும் பகிரங்கமாகவும் ஐம்பதாயிர ரூபாய்களைக் கொடுத்தது. மாப்பிள்ளைக் கோலங் கொண்டது. மணையிலிருந்தது. குதிரையேறிக் குடியுமழைத்துக்கொண்டது. கல்யாணம் முடிந்தது. மறுவழி வந்தபெண் மாறி அந்த வழி போவதில்லை. சதா அழுகையும் ஆத்திரமும் துக்கமும் துயரமுமாக இருந்தது. அடுத்த வருஷம் தாயும் தந்தையும் செய்த பிரார்த்தனைக்காக சஷ்டியப்தபூர்த்திக் கல்யாணத்துக்கு ஒரு முறை மணையிற் கண்ணீர் பெருக அழுதுகொண்டிருந்து அந்தக்கடனைக் கழித்துத் தாய்வீடு சேர்ந்தது. கிழப் பிணம் வெறும் வாயை மென்று வீணாக அலைந்து மனம் சோர்ந்து இனி இந்த உலகத்தில் ஞானமில்லாத தனக்கு யாதொரு ஜோலியுமில்லையெனக் கண்டு சுகனமார்க்கமாகச் செல்வதென்று நிச்சயித்துக் கண்களை மூடிக்கொண்டது. தகனக் கிரியைகள் சிறப்பாக நிறைவேறின. (சமூக வழக்கம் என்னும்) வாரண்டின் பேரில் பெண்ணை (Arrest) அரெஸ்டு செய்து கொண்டுபோய் ஆயுள் பரியந்தம் சிறைவாசம் செய்யும்படி தீர்ப்பாகிவிட்டது. ஆடையாபரணங்களெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன. ஏன்? குற்றம்பெரிதல்லவா! கொலை, களவு, கொடுந் துன்பங்கட்கெல்லாம் இது மேலான பெரிய குற்றமன்றோ?

இவ்வளவும் பத்துவருஷங்கட்குள் ஒரு நல்ல குடும்பத்துக்கு நேர்ந்த அனர்த்தங்களாகும். ஒரு மனிதன் தன் வாழ்நாளில் தன்னுடைய சொந்தப் பிரயாசையால் நாற்பது வயதுக்குள் ஒன்றரை லட்ச ரூபாய் சம்பா

திப்பது இலகுவான காரியமல்ல. எழுவாய் பயனிலையில்லாத இந்த சமூகத்திற் பிறவாமல் அந்தமனிதன் வேறு சமூகத்திற் பிறந்தவராக இருந்தால் அவர் தேடிய பொருள் பின்னும் விருத்தியாகி அவரும் நிரம்ப மனத்திருப்தியோடு மிகமிகச் சுகமாக வாழ்ந்திருப்பார். நான்கு மக்களுக்கும் பெண் வரவேண்டியது கருதியே பெரும்பொருள் செலவிட்டு வீடுகட்டினர். இல்லாதிருந்தால் அந்த வீட்டுக்குப் பெரும்பணம் வீணாகியிராது. ஒவ்வொரு மகளுக்கும் முப்பது முப்பத்தையாயிரம் செலவுசெய்து கல்யாணஞ் செய்வதென்றால் எங்கிருந்து பணம் வரும்? எப்படித்தான் சம்பாதிப்பது! இவர் விஷயத்தில் அப்படி சேர்ந்ததற்குக் காரணம் அவருடைய பொல்லாத மனைவிதானென்றால் எந்த வீட்டில் நல்ல குணமுள்ள மனைவி யிருக்கிறாள்! நூற்றுக்கு நூற்றி ஒன்று படிப்பில்லாதவர்களும் படிப்பில்லாக் குறையினால் நூற்றுக்கு எழுபத்தைந்து நற்குணமில்லாதவர்களுமாக இருக்கிறார்கள். இந்த நிலைமையில் பொல்லாத மனைவியின் பேரில் குற்றமென்ன? இதிற் செட்டியார் தவறு செய்து விட்டார்; அதனாற்றான் இத்துன்பங்களெல்லாம் உண்டாயிற்றென்று சொல்லுவதற் கிடமுண்டா? சிறிதுமில்லை. அவர் சரியாகவே நடந்துகொண்டார். வேறு காரணமென்ன? கெடுகெட்ட சமூக வாழ்க்கைதான் இந்தத் துன்பங்கட் கெல்லாம் காரணமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? கல்யாண காரியம் சுலபமாக இருந்தால் வீட்டுக்குப் பெரும் பொருள் தேவையில்லை; காசு மந்தமாக இருந்தாலும் கல்யாணத்துக்குப் பஞ்சம் வந்துவிடாது. முதல் தாரம் போனால் மறுதாரத்துக்கு மறுமணப்

பெண்கள் வந்துவிடுவர். மற்ற கல்யாணங்களும் தங்கு தடையின்றி முடிந்திருக்கும். பணத்தேவையே யேற்பட்டிராது! கிளியை வளர்த்து அந்தப் பாழான கிழத்துக்குக் கொடுத்திருக்க வேண்டாம். அந்தக் கிழமும் ஒரு பெண்ணை விலைத்திருக்காது! விலைத்திருந்தாலும் கல்யாணம் முடியாது!! கல்யாணம் முடிந்திருந்தாலும் கவலைவராது!!! என்ன செய்யலாம்? இந்த அபாயமானதும் மனித சமூகத்துக்கு அனர்த்தமானதும் கஷ்டமே யன்றி சுக மில்லாததும் துன்பத்துக்கு ஒப்பந்தம் போலிருப்பதுமான நமது சமூக விஷயத்தின் சீர்கேட்டை யென்னென்று கூறுகிறது!

ஒன்றரை லட்ச ரூபாய் பணமுள்ள மனிதன் நான்கு மக்களுக்குக் கல்யாணஞ் செய்துவைக்க முடியாமல் ஒரு பிள்ளையையும் ஒரு பெண்ணையும் விற்றுத் திணறித் திண்டாடித் தப்பிப் பிழைத்தது தம்பிரான் புண்ணியம் என்றாகி விட்டதென்றால் மற்ற சாமான்ய குடும்பங்களின் கதி யென்னவாகுமென்பதை யெப்படி வருணிப்பது! ஒரு (Principle) நியமமுமில்லாத நமது சமூகத்தின் பழக்க வழக்கங்களை எப்படிப் புகழ்ந்து கூறுவது!

இரண்டாங்கதை

இன்னும் ஒரு திசையில் இன்னும் ஒரு குடும்பத்தின் சரித்திரத்தைக் கேளுங்கள்! ஒருவருக்கு ஐந்து பெண் குழந்தைகள். ஆண் குழந்தையில்லை. செட்டியார் மற்றவர்களைப்போல் தூரதேசங்கட்குப் போய் வருபவரல்லர். ஊரில் குடியானவர்களிடம் ஆடிக்குத் தை பத்து மாதம் என்று கணக்கிட்டு வட்டிக்கு

வட்டி சேர்த்து அந்த வட்டிக்கு வட்டி சேர்த்து நன்செய் புன்செய் ஆடு மாடு இவைகளைக் கைப் பற்றிக்கொண்டிருப்பவர். பரமலோபி. ஆனால் இந்த உத்தம புருஷருக்கு பூர்வ புண்ணிய வசத்தால்மனைவி மிகவும் நல்லவர். பெண்கள் பெரிய பிள்ளைகளாகிவிட்டனர். பெண் கேட்கப் பலரும் வந்தனர். ஒரு பெண்ணுக்கு இருபத்தையாயிரத்துக்குக் குறையப் பேசவில்லையென்று செட்டியார் தீர்மானமாகக் கூறிவிட்டார். ஆனால் மாப்பிள்ளைகளைப் பற்றியாவது சம்பந்திகளைப் பற்றியாவது இடந் தலம் வீடு வாசல்களைப்பற்றியாவது தெரிந்துகொள்ள வேண்டிய பொறுப்புகள் யாவும் மனைவி மக்களைச் சேர்ந்தது. பணத்தைப் பற்றிய விஷயம் ஒன்றுதான் அவருடையது. அதுபோல் ஒன்றன்பின் ஒன்றாக நான்கு பெண்களுக்குக் கல்யாணமாயிற்று. சொறி பிடித்தவனும், கூனை வயிற்றனும், ஓட்டை வாயனும், ஒடுக்கு மூஞ்சியுமாக அலைக் கழிந்த மாப்பிள்ளைகள் நால்வர் வந்து மாமனார் வீட்டை அலங்கரித்துக்கொண் டிருந்தனர். ஆனால் மாமனார் அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படுவதில்லை. கப்பலேறாமல் கஷ்டப்படாமல் கொள்முதல் செய்யாமல் கொண்டு விற்காமல் கணக்கெழுதாமல் கவலைப் படாமல் செலவு நீக்கி ஐம்பது அறுபதாயிர ரூபாய் ரொக்கமாகத் தேடிக்கொண்ட தனது சாமர்த்தியத்தை நினைந்து நினைந்து சந்தோஷிப்பர். தம்மைத் தாமே புகழ்ந்துகொள்ளுவர். சில சமயங்களில் தூர தேயங்கட்குப் போய் நயமில்லாமல் திரும்பி வருகிறவர்களைப் பற்றி ஏளனமும் செய்து மகிழ்வர். வெட்கம் ரோஷம் மானம் மரியாதை ஒன்றுமில்லாதவரும், அறிவும் புத்தி

யும் அறவே இல்லாதவருமான பிதாவின் செய்கையால் நான்கு பெண்களும் வாழ் விழந்தவர்களைப் போல் சதா துக்கமுற்றவர்களாய் மனஞ் சலித்துத் தங்கள் கணவர்களை, கணவர்களென்று சொல்லிக்கொள்ளவும் வெட்கப்பட்டவர்களாய் அவமே காலங்கழித்து வரலாயினர். நிற்க,

செட்டியார் தமக்கும் மனைவிக்கும் கொள்ளி வைக்கவும் தங்களுக்குப் பின் தம் மக்களுக்கு முறை செய்யவும் பொங்கற்பானை கொடுத்து வரவும் மாமச் சடங்கு செய்து வரவும் பிள்ளை வேண்டுமே! இல்லாதிருந்தால் உற்றார் உறவினர் பழிப்பதோடு புத் என்னும் நரகத்தையு மன்றோ அனுபவிக்க வேண்டும்!! ஆதலாற் பிள்ளை கூட்டுவது அவசியமென்று கருதினர். பிள்ளை கூட்டிக் கல்யாணம் செய்வதை உத்தேசித்தே கடைசிப் பெண்ணைக் கலியாணஞ் செய்யாமல் இருபத்தையாயிர ரூபாய்களை தியாகஞ் செய்துவிட்டுப் பெண்ணை வைத்திருந்தார். பாபம்! அந்தப் பெண் ஆயுள்பலமில்லாமல் காலமாகிவிட்டாள்! சனிதிசை ஆரம்பித்து விட்டது!! ஆயினு மென்ன? கையிற் பணமிருக்கிறது. பிள்ளை கூட்டாமல் விடுவதா? கல்யாணம் செய்யாமல் விடுவதா? அந்த விஷயத்தில் செட்டியாருக்கு ரோஷமிருந்தது. பிள்ளை தேடினர். அவரதிஷ்டம் பருத்தி புடவையைக் காய்த்துவிட்டதுபோல் பிள்ளை பிள்ளையாக இல்லாமல பெரிய ஆளாகவே ஒருவன் வந்து அகப்பட்டான். செட்டியார் பார்த்தார். சிறுபையன்களாகக் கூட்டினல் உண்ணக் கொடுத்து தின்னக் கொடுத்து உடுத்தக்கொடுத்து வளர்த்துப் படிக்கவைத்து வீணாகப் பல செலவுகளும் செய்து ஆளாகும் வரை செலவாகும்

பணத்தையும் கணக்கிட்டார். தமக்கும் தம் மனைவிக்கும் அதிக வயதாகிவிட்டதையும் நினைத்துக் கொண்டார். பின்னும் பல சௌகரியங்களையும் கருதி தீர்க்காலோசனை செய்ததன்மேல் (Ready Made) தயாரான பிள்ளைதான் சரியென்று தீர்மானித்தார். பையனுடைய பிதா மாதாக்களுக்குக் கொஞ்சம் பணம்கொடுத்து அந்த முரட்டுப் பையனைக் கைப்பற்றிக்கொண்டார். ஆனால் கொஞ்சமும் தாமதமில்லாமல் கல்யாணம் செய்துவிட வேண்டிய அவசியம் நேர்ந்து விட்டது. ஏன்? "செம்மையி லறஞ்செய்யாதார் திரவியம் சிதறவேண்டி நம்மையும், கள்ளும், சூதும் நான்முகன் படைத்தவாறு" என்று கூறிய ஒரு விலைமாதின் கூற்றுப் போல் பையன் ஸ்வீகாரமாக வந்தவுடன் தனது பூர்வாசிரமத்தில் உண்ணவும் உடுத்தவும் பட்ட சிரமங்களை யெல்லாம் மறந்துவிட்டான். கல்யாணவீடு, புதுமைவீடு, துக்க வீடுகளிலெல்லாம் அழையா விருந்தாக வலியப்புகுந்து அவர்களிட்ட வேலைகளையெல்லாம் தலையாற்செய்து முன்னேடும் பிள்ளையாக இருந்து இரவு பகலாக உழைத்து வயிறு வளர்த்த தெல்லாம் மறந்துவிட்டான். பணக்காரப் பையன்களுக்கு கையாளாகவும் தூதுவனகவுமிருந்து ஏவல் வேலை செய்து இரண்டொரு ரூபாய் கிடைப்பதைப் பெரிய வருவாயாகக் கருதி மகிழ்ந்ததை யெல்லாம் மறந்துவிட்டான். இப்படிப் பூர்வாசிரமத்திலிருந்த தன்னிலைமைகளை யெல்லாம் மறந்து, தன்னையொரு பெரிய பணக்காரனுக அவன் நினைத்துக் கொண்டதில் அதிசயமில்லையன்றே! ஏற்கனவே கொஞ்சம் குடிக்கப் பழகியிருந்தான். சூதாடவும் தெரியாதவனல்ல. தாசிவீடுகளைப்பற்றியும் தெரி

யும். ஆயினும் கையிற் பணமில்லாததினுல் அந்தக் காரியங்களைச் சிறப்பாக நடத்தமுடியாதவனுக இருந்தானன்றி விஷயம் தெரியாமலிருக்கவில்லை. இப்போது செலவுக்கு முடையில்லை. ஆகவே சிறிது சிறிதாக ஆரம்பித்துவிட்டான். நாளாஞல் நடத்தைகள் வெளியாகிவிடுமென்றும் பலரும் கூறினர். செட்டியார் ஓடி அலைந்து அவசரம் அவசரமாகப் பெண் பேசிஞர். இவர் வீட்டில் பெண் கொடுப்பதற்கு முப்பத்தையாயிரத்துக்குக் குறையப் பேச்சு இல்லையென்று மற்றவர்கள் தீர்மானமாகக் கூறிவிட்டனர். என் செய்வார் பாபம்! அழுதார்; மயங்கிஞர்; கைக்கெட்டிய பணம் வாய்க்கெட்டவில்லை யென்று கலங்கிஞர். என்ன செய்வது? அந்தப் பொல்லாத பணம்தான் வந்தவழிபார்த்து ஓடிப்போவதற்கு ஒற்றைக் கால்மேல் நின்றது. பையனுக்குக் கல்யாணமும் முடிந்தது. பணமிருந்த கடைகளில் பற்றுவரவும் நோயிற்று. அதற்குமேற் பையனுக்கு வேண்டிய செலவு நடைகளுக்கு முன் ஆடிக்குத் தைபத்துமாக்கி ஏழை எளியவர்களை ஏமாற்றிப் பிடுங்கிய காணி பூமிகளும் குடியிருந்த வீடும் அதற்கடுத்தக் குட்டிச் சுவர்களுங்கூடத் தீர்ந்துவிட்டன. கெட்டியாகப் பிழைத்த செட்டியாரவர்கட்கு என்ன கிடைத்திருக்குமென்பதை நமது வாசகர்களே ஊகித்துக்கொள்ளட்டும். அவர் கதை அப்படியிருக்க, இந்த நிகழ்ச்சியின் விசேடத்தை இங்கு கவனிப்போம். சமூகத்தில் கல்யாண காரியம் நேர்மையாகவும் சுலபமாகவு மிருந்தால் நான்கு பெண்களின் வாழ்வு பாழாகுமா? அந்நான்கு பெண்களுக்கும் வாங்கிய ஒரு லட்ச ரூபாய் இருந்தவிடம் தெரியாமற் போகுமா? நான்கு பெண்களைவிற்று

ஒரு பிள்ளை கூட்டி கல்யாணம் செய்யக்கூடாத் திண்டாட்டமாகுமா? எல்லாம் சமூகத்தின் சீர்கேடான பழக்க வழக்கங்களா லுண்டாகும் கஷ்ட நஷ்டங்களன்றோ!

இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் நேர்ந்த கஷ்ட நஷ்டங்கள் யாவும் அதிகமான பிள்ளைகளைப் பெற்றதனாலும் ஆண்மகவில்லாக் குறையினாலும் நேர்ந்தன வென்று வைத்துக்கொள்வோம். அப்படி யில்லாமல் ஒரே மகனும் போதுமான பொருளும் மற்ற சௌகரியங்களும் இருந்தும் விவாக விஷயத்திலுள்ள சீர்கேட்டினால் நேர்ந்த கஷ்டங்களைப்பற்றிக் கூறுகிறேன்.

மூன்றாங் கதை.

ஒரு குடும்பத்தில் தாய் தந்தையர் தேடி தபசிருந்து நெடுநாட்சென்று பெற்ற ஒரே மகன். வேறு பிள்ளைகளேயில்லை. ஆகவே அருமையாக வளர்த்திருப்பார்களென்று சொல்லவேண்டியதில்லை. அருமையாக வளர்த்த பிள்ளைகள் வாத்தியாரைப் பயமுறுத்திப் படித்த பிள்ளைகளாகவும் அநேகமாக காரியத்துக் குதவாத பிள்ளைகளாகவும் விளையாட்டுப் பிள்ளைகளாகவும் கடைசிவரையி லிருந்துவிடுவது சகஜம். அத்தகைய பிள்ளைகளைத்தான் இக்காலத்தில் (Minors) மைனர்களென்று கூறுகிறார்கள். அதாவது வயது வந்தும் புத்தி வராத பிள்ளைகளென்ற காரணம்பற்றிக் கூறுகிறார்கள். அவர்கள் இந்த உலகத்தில் அறிந்திருப்பது மூன்று நான்கு விஷயங்கள்தான். 1. தாசி வீடு, 2. சூதாட்டம், 3. மதுபானம், 4. மோட்டார் கார்ச் சவாரி. இவற்றுடன் சில மைனர்கள், காற்சட்டை

மேற்சட்டைகள், ஹட்ஸ், (Hats) பூட்ஸ் (Boots) இவற்றிலும் அதிக பிரமையுடையவர்களாய் விளங்குகின்றனர். எழுதுவதும் எழுதியதைப் படிப்பதும் அவர்கட்குப் பிடிக்காத காரியங்கள். முன்னோர்கள் தேடி வைத்த பொருளை அழிக்கப் பிறந்த அல்லது அப்படிச் செய்ய ஸ்வீகாரமாக வந்தவர்களன்றி அவற்றைப் பாதுகாக்கவாவது அபிவிருத்தி செய்யவாவது அவர்களுக்குத் தெரியாது. உண்ணுவதும் உறங்குவதுமான குடும்ப காரியங்களைக் கவனிப்பதற்குக்கூட அய்யராவது அய்யங்காராவது அவசியம் வேண்டும். அப்படியொரு காரியஸ்தரில்லாமல் அவர்களால் ஒரு சில நாட்களுக்குக்கூட நிர்வகிக்க முடியாது. வழியும் தெரியாது. ஆனால் நான் மேற்கூறிய பிள்ளை அப்படியில்லை. அதிகப் படிப்பில்லாவிட்டாலும் தூர தேயங்கட்குப் போய் தொழில் துறையில் ஈடுபடாவிட்டாலும் வீண் காரியம் வீண் செலவு செய்து கெட்ட பேர் எடுத்துக்கொள்ளவில்லை. நல்ல பிள்ளையாகவே இருந்தார். இளம் பிராயத்தில் நல்ல இடத்தில் கல்யாணம் செய்யப்பெற்றார். ஒரு பெண் குழந்தைமட்டும் பிறந்திருந்தது. தாய் தந்தையரிருவரும் காலஞ் சென்றுவிட்டனர். வயது முப்பது ஆயிற்று. தந்தையார் தேடி வைத்துவிட்டுப் போன பணம் அறுபதாயிரம் ரூபாய் ரொக்கமாக இருந்தது. பெண் பெரியவளாகிவிட்டாள். நல்ல சம்பந்தம் தேடினார். அப்படியே கிடைத்ததென்றாலும், இருபத்தையாயிர ரூபாய் செலவிட்டுச் செய்யவேண்டியதாயிற்று. மகளுக்குக் கல்யாணம் முடிந்ததும் துரதிஷ்டவசமாக மனைவி நோய் வாய்ப்பட்டு மரணமடைந்தாள். ஆகவே

அவர் மறுமணம் செய்துகொள்ளவேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது. மறுமணம் பணமில்லாமல் முடியக் கூடியதாக இல்லை. ஆகவே பாக்கியிருந்த எல்லாப் பணங்களையும் வழித்துத் துடைத்துக் கொடுத்துவிட்டு ஒரு பெண்ணைக் கொண்டார். அந்தப் பெண்ணும் புருஷனுடைய அருமை பெருமை யறியாத இளம் பெண்ணாக இருந்தது. முப்பது வயதுவரை யாதொரு கவலையுமில்லாமல் நிரம்ப சந்தோஷமாக வண்டி வாகனங்களும் ஏவலாட்களும் நல்ல உணவும் நல்ல சௌகர்யமாகவுமிருந்தவ ராதலால், வறுமையும் துன்பமும் அவரை வாட்டிவிட்டன. மனம் வருந்தி உடல் மெலிந்து மறுமணம் செய்துகொண்ட சில மாதங்களில் அவரும் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்துவிட்டார். இந்தக் கதையினால் நம்மவரின் விவாஹ விஷயம் எவ்வளவு அபாயகரமானதாக இருக்கிறதென்பதும் பெரும் பணம் எவ்வளவு சீக்கிரமாக அழிந்து பாழாகிவிடுகின்றன வென்பதும் அதனாலேற்படும் கவலையும் துன்பமும் அகாலத்தில் மரணப் படுக்கையில் கிடத்திவிடுகின்றன வென்பதும் நாம் அறிந்துகொள்ளக்கூடிய புத்திமதிகளாக இருக்கின்றன.

அறுபதாயிர ரூபாய் பணமுள்ள ஒருவர் இருபத்தையாயிர ரூபாய் செலவிட்டு ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் செய்யவேண்டிய நிர்ப்பந்த மேற்படுவது நியாயமாகுமா? இல்லாதிருந்தால் நல்ல இடம் நல்ல மாப்பிள்ளை நல்ல சம்பந்தம் அமைவதாக இல்லையாம். ஏதோ கொஞ்சம் முன்பின்னாக இருந்தாலும் குற்றமில்லை என்று செய்துவிடலா மென்றால் ஒரே பெண்ணைப் பெற்று ஓவியமாக வளர்த்து ஊராரையெல்லாம் பழித்து

உத்தண்டமாகத் திரிந்த மனைவி சம்மதிக்கவில்லையாம். தன் னிலைமை யறியாத அவள் பெரிய இடந் தேடிப் பெண் கொடுக்க விரும்புவதும் இதுவரையில் ஒருவரும் வைக்காதமாதிரி சாமான் வைக்கவும் இதுவரை ஒருவரும் செய்யாதமாதிரி கல்யாணம் செய்யவும் ஆர்வங் கொள்வது சகஜமன்றோ! அதுதான் இருபத்தையாயிர ரூபாய்களைச் செலவுசெய்வதற்குக் காரணமாயிற்று. புருஷன் டம்பத்துக்கு ஆசைப்படவில்லை. பெருஞ் செலவுசெய்ய விரும்பவில்லை. தன் நிலைமையை உணராமலில்லை. ஆனால் சமூகத்தின் போக்கும், விபரீதமான பழக்க வழக்கங்களும், மனைவியின் அறியாமையால் உண்டான நிர்ப்பந்தமும் அவரைக் குனியவைத்துவிட்டன. கல்வி யறிவில்லாதவர்களும் கிணற்றுத் தவளைகளைப்போல் குறுகிய திருஷ்டியுள்ளவர்களும் மூடநம்பிக்கையுள்ளவர்களு[illegible]ான பெண்களின் புத்தியும் போக்கும் செயலும் பல சமயங்களில் நல்லனவாக முடிவதில்லை. அதுதான் போகட்டும். அந்த ஆடம்பரப் பிரியமுள்ள மனைவி போய்விட்டாளே, தாரமிழந்த அவர் ஒரு புருஷனை இழந்த பெண்ணை மணந்துகொள்ளக் கூடுமானால் அது எவ்வளவு சுலபமான காரியமாக இருக்கும். அப்படி வழக்கமுள்ள சமூகமாக இருந்தால் அவர் நிச்சயமாக அப்படியே செய்துகொண்டிருப்பார். கையிலுள்ளவை மடியிலுள்ளவை யெல்லாம் ஒரு பெண்ணுக்காக அதுவும் அருமையறியாத சிறு பெண்ணுக்காக இழந்து வருந்தமாட்டார். சமூகம் அந்த ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுப்பதால் வீட்டைத் துடைத்துக்கொடுத்து தலையை முழுகிவிட்டு ஒரு வழியுமில்லாமல் வெறும் ஆளாக மனம் நொந்து

மாண்டுபோனார்! அவர்தான் மாண்டுபோனாரென்றால் அவர் பெயரால் ஒரு இளம் பெண் ஆயுள் பரியந்தம் சிறைத் தண்டனை யடைந்து வருந்துவதா! இதுதான் நமது சமூகக் கட்டுப்பாட்டின் சிறப்பு! இதைத்தான் நம்மவர் பல்லைக் கடித்துக்கொண்டு பாதுகாத்து வருகின்றனர்! இதிற்றான் ஜாதி மரியாதைகள் யாவும் புதைந்துகிடக்கின்றன வென்கின்றனர். பெருஞ் சூதாக்களத்திற்கூட இரண்டு ஆட்டத்தில் அறுபதாயிர ரூபாய் நஷ்டம் வராது. தீவர்த்திக் கொள்ளைக்காரர்கூட ஒரு வீட்டிலுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் கொண்டு போவதில்லை. இவ்விரண்டு பெரிய அபாயங்களிலும் பெரிய அபாயமான காரியமாக நம்மவர் விவாஹ விஷயமிருக்கிறது! இம்மூன்றும் பணமிருந்தும் பாடுபட்டவர்களின் கதைகளாகும். நான்காவதாக இந்தப் பாழான பழக்க வழக்கங்களையுடைய சமூகத்திற் படித்திருந்தும் பாடுபட்டவர்களின் கதையைக் கேளுங்கள்.

நான்காம் கதை.

சாதாரண குடும்பஸ்தர் ஒருவர் நெடுநாள் தூர தேசங்களிலிருந்து சேவகாவிருத்தி செய்தும் அதிக வருவாயில்லாதவராய் பழைய கூரைவீட்டை விட்டு ஒரு சிறு வீடு கட்டிக்கொள்ளவும் தன் குடும்பச் செலவுக்கும் மற்றவர்களைப்போல் உண்டு உடுத்திவாழவும் கடன்படாமல் ஒவ்வொரு கணக்கிலும் கிடைத்த பொருளைச் செலவுசெய்து 'மரியாதையாகக் காலங்கழித்துவந்தார். ஆனால் அவர் தம் மக்களுக்காக ஒரு சிறு தொகையும் சேர்த்துவைக்க முடியாதவராகவே இருந்தார். அவருக்கு இரண்டு ஆண் குழந்தைகள் மட்டுமிருந்தனர். அவ்விருவரையும் பர்மாவுக்குக் கொண்டு

போய் அங்கு படிக்கவைத்தார். செட்டியார் பணமில்லாதவராயினும் கொஞ்சம் விவேகமுள்ளவர். தம் மக்களுக்குப் பொருள் தேடிவைக்காவிட்டாலும் நன்றாகப் படிக்க வைத்துவிட்டாற் பிழைத்துக் கொள்வார்களென்று உறுதிகொண்டு பிள்ளைகளின்படிப்பிற் சிரத்தை கொண்டிருந்தார். அவ்வாறே இரண்டு பிள்ளைகளும் தமிழும் ஆங்கிலமும் கற்றுப் புத்திசாலிகளாகவும் யோக்கியர்களாகவும் நல்ல பிள்ளைகளாகவும் ஆயினர். மூத்த மகனுக்கு வயது பத்தொன்பது. இளைய மகனுக்கு வயது பதினைந்து. கல்யாணம் செய்ய வேண்டுமே! பெண்ணுக்குப் பெருந்தொகை கொடுக்க வேண்டுமே!! என்ன செய்வது? கையிற் பணமில்லை. அவ்வளவு பெருந்தொகை கடன் வாங்கிக்கொடுக்கவும் முடியாது. வேறு வழி ஒன்றுமில்லை. பெருங் கவலையடைந்தார். இளைய மகனை ஸ்வீகாரஞ்செய்து கொடுத்தாவது மூத்த மகனுக்குக் கல்யாணம் செய்விக்கலாமென்று கருதினர். அவர்கள் கோயிலிற் பிள்ளைகளுக்குப் பெருந்தொகை கொடுத்துக் கூட்டுவாரில்லை. இந்த நிலைமையில் நோயுற்று மரணமடைந்து விட்டார்.

மூத்தமகன் நல்ல புத்திசாலி. பரம யோக்கியன். அடக்கமும் மரியாதையுமுள்ளவன். ஆயினும் அவையெல்லாம் நமது சமூகத்துக்கு வேண்டிய காரியங்களா! அவற்றையொரு பொருட்டா மதிக்கக்கூடிய சமூகமா? படிப்பையும் அறிவையும் யோக்கியதையையும்பற்றிக் கேட்பவர் யார்? பணமன்றோ வேண்டும்! அந்தப்பாழான பணத்துக்கன்றோ மதிப்பிருக்கின்றது!! பணமுள்ள குடும்பத்தின் பிள்ளைகள் பரமமூடர்களாயிருந்தா

னும் ஒன்றுமறியாதவர்களாய் எழுதப்படிக்கக்கூட நன்ருயறியாதவர்களாய் சூது, குடி, விபசாரம், அயோக்கியத்தனம் முதலிய தீய ஒழுக்கங்களை யுடையவர்களாயிருந்தாலும் பகுத்தறிவில்லாத பழக்க வழக்கங்களைத் தலையணியாகத் தாங்கிநிற்கும் நமது சமூகத்திற் கல்யாணத்துக்குப் பஞ்சமில்லையன்ருே! பத்துவயதுப் பையனுக்கு இருபது வயதுப் பெண் வந்து நிற்பாள்! ஒரு இட்டலி தின்னமுடியாத பையனுக்கு ஒன்பது இட்டலி தின்னுகிற பெண் மனைவியாக வருவாள்!! பஞ்சாணு துண்டு உடுத்தத் தெரியாத பையனுக்குப் பதினுறு முழச்சேலை கட்டிய பெண் மனைவியாக வருவாள்!!! ஆனுல் சாமான்ய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு அப்படி வருமா? அவர்களுக்குக் கலியாணமென்பது ஒரு கண்டமல்லவா? அந்தப் பெரிய கண்டத்துக்குத் தப்பினுலன்ருே அவன் தனவணிக சமூகத்தில் ஒரு மனிதனுக முடியும்.

ஆகவே புத்திசாலிகளான இரண்டு பையன்களும் தங்கள் கலியாண விஷயமாக மனச்சோர்வுற்றுப் பல வழிகளையும் எண்ணினுர்கள். ஆனுல் சமூகம் பழிக்கும் என்ற அச்சங் காரணமாக அவர்கள் வேறு வழிகளிற் செல்ல முடியாதவர்களாய்த் தவித்தனர். இந்த சமூகத்தில் ஏன் பிறந்தோம்? என்று பலகாலும் சிந்தித்து வருத்தமடைந்தனர். இப்போது மூத்த பையனுக்கு வயது இருபத்தைந்து ஆகிவிட்டது. இந்த சமயம் கொஞ்சம் பணமுள்ள ஒருவர் பெண்ணுக்குப் பணமில்லாமலும் சொற்பச் சீதனத்துடனும் கொஞ்சம் நகைகளுடனும் தம் பெண்ணை மூத்த பையனுக்குக் கொடுப்பதாகத் தெரிவித்தார். நல்லதுதான். ஆனுல் அப்

பெண் (ஊமை) வாய்பேசாத பெண்ணுக இருந்தாள். இருந்தாலும் (Valuable) விலேயேறப்பெற்ற தனவை சிய சமூகத்திற் பிறந்த பெண் அன்றே! ஆதலாற் பையன் வேறு வழியின்றி சொல்லவொண்ணுத மன வருத்தத்தோடும் நாணத்தோடும் துக்கத்தோடும் தன் தலைவிதி என்று சமாதானஞ் செய்துகொண்டு அப் பெண்ணே மணந்து கொண்டாள். படியாத பெண்கள் நிறைந்த நமது சமூகத்தில் வாய்பேசுகிற பெண்களே மணந்து இவர்களைச் சரிக்கட்டிக்கொண்டு குடும்பவாழ்க் கை நடத்துவதே கரடிக்கூத்தாக இருக்கும்போது வாய் பேசாத பெண்ணை மணந்து அந்தக் கஷ்டத்தை யனுப விப்பது எவ்வளவு சிரமமாக இருக்குமென்பதைச்சொல் லவேண்டுமா? மூத்த பையன் கல்யாணம் இங்ஙனமாக இளைய பையன் கல்யாணத்தைப்பற்றிக் கேளுங்கள். பர்மாவில் ஒரு கடைக்கு அடுத்தாளாக இளையவன் நான்கு வருஷம் போயிருந்து நாலாயிர ரூபாயும் மூத்த வன் ஒரு கடைக்கு ஏஜண்டாக மூன்றுவருஷம் போயி ருந்து ஆருயிர ரூபாயும் சம்பளம் பெற்றுத் திரும்பிவந் தனர். அதில் நடப்புச் செலவுகள் நீக்கி ஏழாயிரம் ரூபாய்தான் மீதமிருந்தது. இளையவனுக்கும் வயது இருபத்தைந்துக்கு மேலாகிவிட்டது. கல்யாணம் செய் யவேண்டுமே; என்ன செய்வது? வேறு சமூகமாக இருந்தால் அவர்களுடைய அறிவுக்கும் புத்திக்கும் சாமர்த்தியத்திற்கும் கல்யாணம் மட்டுமா! ஏழாயிர ரூபாய் பெரும் மூலதனமாகவும் இருக்கும். அந்த மூலதனத்தைக்கொண்டு அவர்கள் வெகுதூரம் விருத்தி செய்து மிகமிகச் சுகமாக வாழ்ந்திருப்பார்கள். நமது சமூகத்தில் கல்யாணம் என்பது சாமான்ய குடும்பங்

கட்கு ஒரு நாச காரியமாக இருக்கும்போது அப்படி வாழ இடமுண்டா? நமது கல்யாணப் பூதத்துக்கு ஏழாயிர ரூபாய் எம்மாத்திரம்? அது ஒரு ஆமைவடை தானே! ஆகவே அவ்விரு சகோதரர்களும் மனமுடைந்தவர்களாய், பெண் கிடைக்காத கவலையே பெருங் கவலையாய் வருந்தி நின்றனர். இந்த நிலைமையில் தாகவிடாய் கொண்டவனுக்குக் கடல் தண்ணீரைக் கொடுத்தது போல் ஒருவர் பெண் கொடுக்க முன்வந்தார். அந்தப்பெண்ணோ பீரங்கி முழக்கமுங்கேளாத பெருஞ் செவிடு. அப்படியிருந்தாலும் கல்யாணச் செலவுக்குப் பணம் கொடுக்காமல் முடியவில்லை. என் செய்வார் பாபம்! ஏதோ கொடுத்து இளையவன் கல்யாணமும் முடிந்தது. ஏற்கனவே ஊமையின் உபத்திரவம் பெரிதாக இருந்தது. அதோடு பலமான ஒரு செவிடும் சேர்ந்தால் அந்தக் குடும்ப வாழ்க்கையின் அழகையும் குணத்தையும் யாரே வர்ணிக்கக்கூடும்!

இக்கதையில் நாம் ஆராய்ந் தறியவேண்டிய விஷயங்களைப்பற்றிச் சிறிது கூறுகிறேன். படிப்புக்கு மதிப்பு வைக்கும் சமூகமாக இருந்தால் இவ்விரு சகோதரர்கட்கும் கல்யாண விஷயத்திற் சிறிதும் கஷ்டமே ஏற்பட்டிராது. படிப்பிருந்தால் கஷ்டம் நேராது என்ற நம்பிக்கையிருந்தால், நம்மில் எல்லோரும் படிக்க முந்துவார்கள். அப்படியில்லாமல் பணத்துக்குமட்டும் மதிப்பிருப்பதால் படிப்பிற் கவலையுமில்லை சிரத்தையுமில்லை. கல்வி புறக்கணிக்கப்படுகிற தென்றே சொல்லவேண்டியதிருக்கிறது. அது இருக்கட்டும். நமது பெண்களும் புனர் விவாஹம் செய்து கொள்ளுவதென்ற ஏற்பாடிருந்தால் கல்வியறிவுள்ள இரண்டு சகோதரர்கட்கு அநி

யாயமாக ஊமையும் செவிடும் வந்துசேருமா? என்னே! சமூகமிருக்கும் நிலைமை!! இனி ஐந்தாவதாக நம்மவர் விவாஹ விஷயத்திலுள்ள சீர்கேட்டினுல் உண்டான ஒரு பரிதாபமான சம்பவத்தைப்பற்றிக் கூறுகிறேன்,

ஐந்தாங்கதை.

ஒரு சாமான்யமான குடும்பத்தில் புருஷனும் மனைவியும் மிகவும் நல்லவர்கள். மிகவும் ஒற்றுமையுடையவர்கள். சுகதுக்கங்களை வேற்றுமை யில்லாமற் பகிர்ந்தனுபவிப்பவர்கள். புருஷனுல் மனைவிக்கும் மனைவியாற் புருஷனுக்கும் சிறிதும் துன்பமேற்படவில்லை. செட்டியார் பணக்காரரல்லவாயினும், நல்ல முயற்சியுடையவர். தொடர்ச்சியாகத் தொழிலில் ஈடுபட்டவர். சிறுபிராய முதற்கொண்டு கப்பலேறிப் பலதடவை தூரதேயங்கட்குப் போய்வந்தவர். அடுத்தாளாகவும் மேலாளாகவுமிருந்து அனுபவம் பெற்றவர். ஆயினுமென்ன? பணம் சேரவில்லை. சாண் ஏறினல் முழம் சறுக்குவது அவருடைய அதிர்ஷ்டமாகஇருந்தது. பாடு அதிகமேயன்றி பலன் ஒன்றுமில்லை. வட்டித்தொழிலுக்கு அதிகப்படிப்பு வேண்டியதில்லையென்று சித்தாந்தமாகி இருக்கிறதென்ருலும் ஹரிச்சுவடியும் எண்சுவடியுமாவது படித்திருக்கத்தான்வேண்டும். சிலர் அவைகளிலும் தேர்ச்சிபெருதவர்களாய், தம் பெயரைக்கூட சரியாக எழுதத் தெரியாதவர்களாய் எழுதிய கடிதத்தைப் படிக்கத் தெரியாதவர்களாய், கணக்கெழுதும் வழியும் வகையும் தெரியாதவர்களாய் சீட்டுக் கூட்டுக்கு முன்னுற்பற்றெழுதிப் பின்னுல் வரவுவைத்து அதையே பேரேடு குறிப்பாக வைத்துக் கொண்டுவிற்று வருபவர்

களாய், சிங்களம், பர்மா, மலாய், அன்னும் முதலிய பாஷைகளில் அறுபது பர்செண்ட் வீதம் தமிழைக் கலந்து மணிப்பிரவாள நடையில் அன்னிய பாஷை பேசுகிறவர்களாய், அதுவும் தெரியாதவர்களாய்க்கூட இருந்து பணம் சம்பாதித்து விடுகிறார்கள். அதற்கு அவர்களுடைய அதிஷ்டந்தான் காரணமாம். சிலருக்கு நல்ல திறமையும் புத்திசாலித்தனமும் முயற்சியும் சாமர்த்தியமும் நிறைய இருக்கும்; கடைசி நாள் வரை தரித்திரம் நீங்குவதில்லை; தொட்டதெல்லாம் நஷ்டமாவதும், நல்லதெல்லாம் கெட்டதாவதும், பொன்னைத் தொட்டாலும் மண்ணாகிவிடுவதும், காசைத் தொட்டாலும் கரியாகிவிடுவதும் சகஜமாகஇருக்கிறது! இதற்கென்ன காரணம்? துரதிஷ்டம்தான் காரணமாக வேண்டும். நமது கதாநாயகர் துரதிஷ்டமுள்ள வகுப்பிற் சேர்ந்தவராகவே இருந்தார். இவருக்கு ஒரு பெண்ணும் ஒரு பிள்ளையுமிருந்தனர். இரண்டு பிள்ளைகளையும் நன்றாகப் படிக்க வைத்திருந்தார். பிள்ளையைப் பார்க்கிலும் பெண் நல்ல புத்திசாலி. நல்ல அழகு. நல்ல குணம். நல்ல வசீகரம். சிறு பிராய முதலாக மற்ற பெண்களைப்போல் அசட்டுத் தனமான புத்தியும் செயலும் அவளுக்கில்லை. செல்வர்களல்லவாயினும் தாயும், தந்தையும் பிள்ளைகளை மிகவும் நன்றாக வளர்த்து வந்தனர். பிள்ளைகள் இருவருக்கும் கல்யாண வயது வந்து விட்டது. தாம் எவ்வளவு கஷ்டமான நிலைமையிலிருந்தாலும் தம் பெண்ணுக்குப் பணம் வாங்குவதில்லை யென்பது செட்டியாரின் நீண்ட நாள் விரதமாக இருந்தது. ஆயினும் பிள்ளைக்குக் கல்யாணமாக வேண்டுமே! என் செய்வது? அவர் பணந்

தேடப் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் பெரிய கஷ்டமாகப் பிள்ளைகளின் விவாஹவிஷயம் நேர்ந்துவிட்டது. ஒற்றுமையுள்ள புருஷனும் மனைவியும் ஒருவரை யொருவர் நொந்துகொள்ளாமல் ஒருவரை யொருவர் துன்பப்படுத்தாமல் பலவாறு நினைந்து நினைந்து வருத்தமடைந்தனர். கடைசியாக வேறுவழி யொன்றுமில்லாமல் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் மாறுதலாகச் செய்வதென்ற முடிவுக்கு வந்தார்கள். அதற்காக நல்ல மாப்பிள்ளையும் நல்ல பெண்ணுமுள்ள பல இடங்களையும் கவனித்தார்கள். கவனித்து என்ன செய்வது? சமூகத்தின் பாழான பழக்க வழக்கங்களால் மாற்றிச் செய்வதற்கும் குறைந்தபக்ஷம் பத்தாயிரம் ரூபாய் வேண்டுமே! இல்லாதவனுக்கு அது பெருந்தொகை யன்றோ! செட்டியாரிடம் அந்தச் செலவுக்கும் பணமில்லை. ஆகவே கல்யாணச் செலவுக்கும் மேல் பணம் தந்து மாறுதலாகச் செய்யவேண்டிய இனம் தேடவேண்டியதாக இருந்தது. அப்படி பார்க்கும் போது ஒரு இனந்தான் கிடைத்தது. அவர்கள் மாற்றிக் கட்டிக்கொள்ளவும் பத்தாயிர ரூபாய் அதிகமாகத் தரவும் இசைந்தார்கள். ஆனால் அந்த மாப்பிள்ளையையும் பெண்ணையும் பற்றி என்ன சொல்வது? மாப்பிள்ளை மிகவும் பயங்கரமான உருவத்தை யுடையவன். அவனுடைய சுருட்டை மயிரும் அகன்ற முகமும் கோரப் பற்களும் நீண்ட நாசியும் கறுத்த நிறமும் ஆறடிக்கு மேற்பட்ட உயரமும் கண்டோர் திடுக்கிடக் கூடியனவாக இருந்தன. அவன் தங்கையும் அப்படியே யிருந்தாள். உருவம் ஒருபுறம் இருக்கட்டும். மாப்பிள்ளையின் ஒழுக்கங்களையும் குண விசேடத்தையும் என்

னென்று கூறுவது? நல்ல குடியன்! கள்ளு, சாராயம் பிராண்டி முதலியவற்றை தண்ணீரருந்துவது போல் நிறையக்குடித்து சில சமயம் சாக்கடைகளிற்கூட விழ்ந்து கிடப்பான். இரவு பகலாக சூது ஆடுவான்; திருடுவான்; தாசி வீடுகளெல்லாம் அவன் சொந்த வீடுகள் தான். இத்தகைய தீய ஒழுக்கங்களெல்லாம் அவனுடைய சிறு பிராய முதற்கொண்டே அவனுக்கு சகஜமாகிவிட்டன. ஆனால் அவனைப்பற்றி இத்தனை விசேடமும் எல்லோருக்கும் தெரியாது. சிலருக்குத் தெரிந்திருந்தாலும் கட்டுகிற கொள்ளுகிற பிள்ளைகளைப் பற்றி நம்மவர் தோஷங்கூறுவது வழக்கமில்லை யன்றோ! நமது செட்டியாரின் விசாரணையில் மாப்பிள்ளையின் ஒழுக்கங்களைப்பற்றி ஒன்றும் வெளியாகவில்லை யாயினும் மாப்பிள்ளை அதிகக் கெட்டிக்காரனில்லை யென்றும், பெருவழகு (அழகில்லாதவன்) தானென்றும் மட்டும் தெரிந்து கொண்டார். ஆயினும் பெண்ணுக்குப் பெண் தந்து பத்தாயிர ரூபாயும் தரக்கூடிய இனம் வேறு வரவேயில்லை. பல மாதங்கள் தயங்கி மயங்கிப் பார்த்தும் நமது துருப்பிடித்த பழக்க வழக்கங்களினால் வேறு வழியிற் செல்ல முடியவில்லை. ஆகவே கல்யாணங்களிரண்டும் நல்ல சுப முகூர்த்தத்தில் முடிந்து விட்டன. கல்யாணம் முடிந்த மறுநாள் முதலாகவே பெண் தன் கணவனைப்பற்றிக் கவலைப்பட ஆரம்பித்து விட்டாள். தனக்கு மணம் முடிந்தபின் கணவனுடன் கூடி தன் வாழ்க்கையை மிக்கச்சிறப்பாக நடத்தவேண்டுமென்று அவள் நினைந்திருந்த எண்ணங்களும் போட்டிருந்த திட்டங்களும் பகற்கனவாகி விட்டன. முதலில் தன் கணவனின் பயங்கரமான உருவமும்

பிறகு ஒவ்வொன்ருக அவனது தீய ஒழுக்கங்களும், அவளை மனங்கலங்கச் செய்து விட்டன. சொர்ண விக்கிரகம் போலிருந்த அவள் ஒரு சில நாளில் வாடி மெலிந்து ஒருநோயாளிபோலாகி விட்டாள். உண்ணு வதும் உறங்குவதும் அவளுக்கு வெறுப்பாயின. ஆடைகளும் அணிகளும் அவளுக்கு நஞ்சுபோலாகி விட்டன. உற்ருர் உறவினரைக் காணவும் பேசவும் நாணமுற்ருள். "பூமிக்குச் சுமையாக நான் ஏன் அலைந்துகொண்டிருக்க வேண்டு" மென்று பலகாலும் சிந்தித்தாள். நொந்து நொந்து மனமுருகினுள். புரு ஷன் பலநாள் வீட்டுக்கு வருவதில்லை. சில சமயம் வரும்போது நிறையக்குடித்து வெறித்துத் தலைவிரி கோலமாக வந்து மனைவியை வாயில் வந்தபடி பேசி யேசி மயிரைப்பிடித்து இழுத்து அடித்து உதைத்து மிதித்து திருவிழா நடத்துவான். இந்த அவமானமும் துன்பமும் பொறுக்க முடியாமல் அந்த உத்தமமான பெண் தன் தாய் தந்தையருக்குத் தன்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாமென்று ஒரு கடிதமெழுதிவைத்து விட்டு குறுக்கு வழியாக சிவலோகப் பிராப்தியடை ந்துவிட்டாள். இந்தப் பேரிடி போன்ற துக்கத்தைக் கேட்டு சகித்திருக்க முடியாமல் பிதாவும் அகால மரண மடைந்தார். அதே நோயாகப் படுத்த படுக்கையிற் கிடந்து அந்த உத்தமமான தாயும் சில நாளில் மரண மடைந்தாள். இப்படி சமூக வாழ்க்கையின் சீர்கேட் டினுல் ஒரு குடும்பம் நாசமாகிவிட்டது. நம்மவரின் கல்யாணச் செலவு ஒழுங்கானதாக இருந்தால் இரண்டு கல்யாணத்துக்குப் ப்த்தாயிரம் வேண்டுமா? பத்தாயிரம் வேண்டியதாக இல்லையானுல் இந்த உத்தமியின் வாழ்

நாள் இப்படி முடியுமா? பெண்கள் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கமிருந்தால் மாறுதலுக்குப் போகாமல் மகனுக்கு அப்படி ஒரு பெண்ணைத் தேடிவைத்து விட்டு மகளை அவள் அறிவுக்கும் புத்திக்கும் ஏற்ப ஒரு நல்ல வரன் தேடிக் கொடுத்திருப்பாரன்றோ! என்னே பாழான வழக்கம்! இனி ஆறுவதாக ஒரு அநியாயத்தைக் கேளுங்கள்.

ஆறுங்கதை.

ஊர் கொஞ்சம் பெரியவூர். அந்த ஊரிற் பணக்காரரென்று ஒருவரிருந்தார். அவருக்குப் பத்து லக்ஷ ரூபாய் பணமிருப்பதாக மதிக்கப் பட்டிருந்தது. அதற்கேற்ற விதமாக ஆடம்பரங்களும் இருந்தன. பணக்காரரென்பவர்களில் இரண்டு விதமுண்டு. கடனில்லாத பணக்காரர் ஒருவகை; கடன் வாங்குதற்கு ஒரு எல்லைகூடக் கட்டிக்கொள்ளாத பணக்காரர் ஒரு வகை. கடனில்லாத பணக்காரர் பெரும் பணம் வைத்திருந்தாலும் சிறு தொகையாக வைத்திருந்தாலும் அவர்கள் பணக்காரர் தான்; அதிற் சந்தேகமில்லை. தொழில் முறையிற் சிறிது கடன் வாங்குவதும் கொடுப்பதும் கட்டாயமாக இருந்தாலும் அதற்கும் ஒரு வரம்பு வேண்டும். வரம்பில்லாமல் இயன்றவரையிற் கடன் வாங்கி எட்டின வரையிற் கடைகளை வைத்து முடிந்த வரையிற் செலவு செய்து முடியாதபோது வருத்தப் படுவது விவேகமான காரியமன்று. உதாரணமாகப் பத்து லட்ச ரூபாய்ப் பணக்காரர் ஒருவர் எட்டு ஊரிற் கடைகளை வைத்து ஒரு ஊருக்கு நாலைந்து லட்சம் தொழில் செய்வநானல் இருபத்தைந்து முப்பது லட்சம் கடன் படாமல் எப்படி முடியும்? இருபத்தைந்து

முப்பது லட்சம் கடனிருக்கும்போது சொந்தமுதல் எப்படி ருஜுவாக இருக்கமுடியும்? எட்டு ஊரிற் கடைகடப்பதையும் நாற்பது லட்ச ரூபாய் வரவு செலவாவதையும் சாசுவதமாக நினைத்துக் கொண்டு ஆடம்பரமாகப் பல செலவுகளையும் செய்ய முற்பட்டு வருஷந்தோறும் லட்ச லட்சமாகத் தருவித்து டம்பச் செலவுகளைச் செய்து கொண்டிருந்தால் எவ்வளவு நாட் காலந் தள்ள முடியும்? தொழில் முறையில் லாபத்தைப்போல் நஷ்டம் வருவதும் சகஜமன்றோ! பணமில்லாத நிலைமையிற் சிறிது கடன்வாங்கிக் கொடுத்துச் செய்தாலும் பணம் வந்த பிறகு கடன் படுவதைக் கூடியவரை நிறுத்திவிட வேண்டும். அப்படி வாங்கினாலும் தம்முடைய முதலிற் பாதி அல்லது தம்முடைய முதலின் அளவுக்குமேற் கடன் படுதல் கூடாது. அப்படிச் செய்தால் எக்காலத்தும் கஷ்டத்துக் காளாக நேராது; கடைகளும் அதிகமாதல் கூடாது. (தற்கால நிலைமையைப் போல்) நிரம்ப அசௌகரியமான காலத்தும் தம் முதலின் அளவு கடன்பட்டவர்களுக்குக் கஷ்டம் வரக் காரணமில்லை. வந்தாலும் பாதிக்கமாட்டாது. நமது செட்டியார் இரண்டாவது வகையைச் சார்ந்த கடன்காரப் பணக்காரராகவேயிருந்தார். அவருக்கு ஒரே பெண் குழந்தை. அப்பெண்ணுக்கு ஒன்பது வயது தானுயிற்று. ஏழு வயது முதற்கொண்டே கல்யாண விஷயத்தில் அப்பெண்ணின் தாயார் துடி துடித்துக் கொண்டிருந்தாள். தாயார் அந்த ஊருக்கு ஒரு அதிகப் பிரசங்கி. ஆடம்பரத்தில் அதிக விருப்பங் கொண்டவள். பெரிய வாயாடி. எதையும் மதிக்காமற் பேசுபவள். அந்த ஊரில் யார் எந்த விசேடத்தைச் செய்

தாலும் எவ்வளவு செலவிட்டுச் செய்தாலும் அதை யொரு பொருட்டாக மதியாமற்பேசுவது அவளுடைய சுபாவம். தன் புருஷர் பெருந் தனவந்தரானதற்குத் தானே காரணமென்றும் தான் வாழ்க்கைப்பட்டு வந்த பிறகு தான் எல்லாச் செல்வமும் வந்ததென்றும் அடிக் கடி பெருமை பேசிக் கொண்டிருப்பவள். இத்தகைய சுபாவமுள்ள தாயார் தன் பெண்ணுக்கு இதுவரை கல்யாணம் செய்து கண்ணுற் பாராமலிருந்ததே ஆச் சரியமன்றோ! அந்தப் பெண் பிறந்த நாள் தொடங்கி அதற்காக அவள் சேகரித்து வைத்திருந்த சாமான் களுக்கு ஒரு எல்லையில்லை. இரண்டு வருஷமாகவே தன் கைவரிசையைக் காட்ட அவள் அவசரப்பட்டுக் கொண்டிருந்தாள். அவள் குறிப்பிட்டிருந்த மாப் பிள்ளை இன்னும் பால்குடி மறக்க வில்லையாதலால் புருஷன் இணங்காமலிருந்தார். பெண்ணுக்கு வயது ஒன்பதாயிற்று.

மெய்த்தவம் பயின்றுபெற்று வேந்தர்க்கும்
 கொடாமல் முக்கண்
அத்தனுக் கென்றுவாளா அரசன்வைத்
 திருந்த பாவை
மத்தளிகன் பின்போனுள் மகள்தனே
 அந்தோ ஆண்டு
பத்தின்மேல் வைத்திருத்தல் பாவமென்
 றிகழ்ந்தார் கண்டோர்.

என்று அவசரப்பட்ட நூலாசிரியர்கள் கூற்றை அறிந் தோ அறியாமலோ இவளும் அவசரப்பட்டாள். மாப் பிள்ளை வீட்டாரும் அந்த ஊரில் ஒரு பெரும் பணக் காரர். மாப்பிள்ளையின் தாயார் ஒரு பேராசைக்

காரி. மாப்பிள்ளைக்கு அப்போதுதான் வயது ஏழாயிற்று. சம்பந்திகள் ஒருவரையொருவர் கலந்து கொண்டார்கள். எல்லாப் பேச்சுக்களும் முடிந்தன. கல்யாணமும் நிச்சயமாயிற்று. எல்லாப் பொருத்தங்களினும் மாங்கல்யப் பொருத்தம் மிகவும் நன்றாகப் பொருந்தியிருக்கிறதென்று ஒருநாள் முழுதும் பரிசீலனைசெய்து சாஸ்திரியார் தீர்மானமாக் கூறிவிட்டார். அன்று அவருக்கு ஒரு மூட்டை பருப்பும் ஒரு மூட்டை வெங்காயமும் ஒரு மூட்டை மிளகாய்ப் பொடியும் சன்மானம் செய்யப்பட்டன. முகூர்த்த நாளும் நிச்சயமாயிற்று. பெண்ணின் தாயார் இங்கொரு காலும் அங்கொரு காலுமாக சாமான் வைக்க ஆரம்பித்து விட்டாள். வெள்ளி அடுக்கு இருபத்தொன்று. வெண்கல அடுக்கு நூற்றிருபத்தொன்று. அம்மி அறுபத்தொன்று. அகப்பை ஆயிரத்தொன்று. மங்குப் பாத்திரப்பெட்டி பத்து. மரவைப் பெட்டி பதினொன்று. பச்சரிசிமூட்டை அறுபது. பலசரக்குக்கடை ஒன்று. குப்பைத்தொட்டி ஒன்று. கூட்டுமாறு நூற்றி ஒன்று. இப்படி வைத்து மாப்பிள்ளை வீட்டின் இரண்டாங்கட்டு, மூன்றாங்கட்டு, முதற்கட்டு, முகப்பு எல்லாம் நிரப்பி ஒரு கண்காட்சி (Exhibition) சாலையாக்கிவிட்டாள். யானை குதிரை முதலிய எடுபிடிகளெல்லாம் வந்து குவிந்துவிட்டன. பெண்ணின் தாயாரும் மாப்பிள்ளையின் தாயாரும் போட்டிபோட்டுப் புதுப்புது மாதிரியாக உடுத்திக்காட்டினர். எல்லாம் சிறப்பாக நடந்தன. கல்யாணமும் முடிந்தது. எல்லாக் கணக்குகளையும் செட்டியார் எழுதிப்பார்த்தபோது ஒருலட்ச ரூபாய் செலவாயிற்று. ஊராரைப் பழித்த உத்தண்டக்காரி ஒரு லட்ச ரூபாயை

ஊதிப்பறக்கச் செய்து விட்டாள். இந்தவிதமாகக் கல்யாணம் முடிந்தது. அப்போது அடுத்த கிராமங்களில் ஏற்கனவே கொஞ்சம் வைசூரி பரவியிருந்தது. கல்யாணத் திருவிழா பெரிய விழாவாக இருந்ததனால் யானை, குதிரை முதலிய அலங்காரங்களையும் ஊர்வலம் முதலிய வேடிக்கைகளையும் வாணக்காட்சியையும் காணும் பொருட்டு பக்கத்தூர் ஜனங்கள் கூட்டங் கூட்டமாக வந்து போய்க்கொண் டிருந்தனர். ஆதலின் அந்தத் தொத்துநோய் அந்தஊரிலும் கொஞ்சம் தலைகாட்டிற்று. கல்யாணம் முடிந்து ஒருவாரந்தான். மாப்பிள்ளைப் பையனுக்குக் கொஞ்சம் காய்ச்சலடித்தது. மூன்றாம்நாள் ஆறு மூக்குப்போல் அம்மை தோன்றிற்று. பிறகு எள்ளிடக்கூட இடமில்லாமல் நிறைந்து விட்டது. எல்லோரும் திடுக்கிட்டுப் போயினர். எத்தனையோ பிரார்த்தனைகள் செய்து கொள்ளப்பட்டன. ஆயிரமாயிரமாக ஆடு கோழிகள் பிரார்த்தனை செய்துகொள்ளப்பட்டன. ஒரு டசன் பேரிருந்து மாரியம்மன் தாலாட்டுப் படித்தனர். என்ன பயன்! இரண்டு வாரம்வரை பிள்ளை படாத பாடுபட்டு மரணமடைந்து விட்டான்.

> மணமகனே பிணமகனாய் மணப்பறையே
> பிணப் பறையாய்
> அணியிழையார் வாழ்த்தொலிபோய் அழுகையொலி
> யாய்க் கழிய
> கணமதனிற் பிறந்திறுமிந் நாயத்தின்
> வரும் பயனை
> உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க்
> கொன்று மிலை.

என்றபடி கல்யாணவீடு பெருந் துக்க வீடாக மாறிவிட்

டது. பாபம்! ஒன்றுமறியாத அந்த இளம் பெண்ணின் களங்கமற்ற முகத்தைப் பார்த்துப் பார்த்து,

கையோ செழுங்கமலம் முகமோ நிறைந்தமதி
காலோ இளஞ்சினை வரால்
மெய்யோ கலாபமயில் இடையோ நுடங்குகொடி
விழியோ கடைந்த வடிவேல்
மையோ சுருண்ட குழல்...........
வனிதைக் கெனப் புகலுவார்
ஐயோ! இவட்குவிதி சிறையோ வெனக்கதறி
யழுவார் அறைந்து விழுவார்.

இப்படி அழவேண்டிய நாள்வரை யழுதுவிட்டுப் பந்தற் போட்டு தாலியையும் வாங்கி விட்டனர். யாதொரு விமோசனமுமில்லையென்று தீர்ந்துவிட்டது. இதுதான் பாழான ஜாதி வழக்கம். இந்தப் பெண்ணுக்கு மறுமணம் செய்ய என்னதடை? என்ன ஆக்ஷேபம்? இந்த ஒரு பாபத்தையுமறியாத ஒன்பது வயதுப்பெண் துருப்பிடித்துப்போன ஜாதி வழக்கத்துக்காக ஆயுள்பரியந்தம் சிறைத்தண்டனை அனுபவிப்பதா? இதைப் பார்க்கிலும் அக்கிரமும் அநியாயமும் என்ன வேண்டும்? இன்னும் ஒரு அக்கிரமத்தைக் கேளுங்கள்.

ஏழாங்கதை.

தொழில் செய்வதிற் சற்று திறமையுள்ள கெட்டிக்காரர் ஒருவரிருந்தார். உலகத்தில் கெட்டிக்காரர்கள் என்பவரில் இரண்டுவிதமுண்டு. பகுத்தறிவில்லாமற் பணம் தேடுகிறமட்டிற் கெட்டிக்காரர் ஒருவகை. பணந் தேடுவதோடு பகுத்தறிவுமுள்ள கெட்டிக்காரர் ஒருவகை. பகுத்தறிவில்லாமற் பணந்தேடுகிற கெட்

டிக்காரர்களுக்கு வயது நூறுஞ்ஞூறஞ்சரி அதற்குமேலா றுஞூறஞ்சரி. ஆசையும், ஆத்திரமும், லோபமும், கோபமும், மோகமும், வஞ்சகமும், பொறாமையும், துவேஷமும் மாறுவதேயில்லை. அநித்தியமான இந்த வாழ்க்கையையே சதமென்று நம்பி அதில் மயங்கிக் கிடந்து ஒரு சிறிதும் ஞானோதய மில்லாதவர்களாய்ப் பணத்தையே தெய்வமெனக் கொண்டு வழிபட்டுக் கிடந்து ஏக்கமுற்று தூக்கமற்றவர்களாய்ப் பிறந்தபடி யேயிருந்து இருந்தபடியே வாழ்ந்து வாழ்ந்தபடியே மடிந்து பாழாகின்றனர். பணம் தேடுவதோடு பகுத்த றிவுமுள்ள கெட்டிக்காரர்கள் தங்களுடைய பருவங் கட்குத் தக்கபடி ஆடிப்பாடி உண்டுடுத்தி சந்தோஷமாக வாழ்ந்து காலஞ் செல்லச் செல்ல மனித வாழ்க்கையின் பலாபலனைப் பகுத்துணர்ந்து இளமை செல்வம் யாக்கை முதலியவற்றின் அநித்தியத்தன்மையையுணர்ந்து வயது முதிரமுதிரக்கொஞ்சம்கொஞ்சமாக ஆசைகளை யொழித் துத் தம் பொறுப்புகளைத் தம் மக்கட்கு விட்டுச் சாந்தி யடைந்து (அறுபதாவது வயதில்) நிம்மதியாக காமக் குரோத லோபம் முதலிய தீய எண்ணங்களை மறந்து நிர்மலமான மனதோடு பரிசுத்தமான விஷயங்களைக் கேட்டுணர்ந்து ஒரு துறவியைப் போற் காலங்கழித்து விட்டு மன அமைதியோடு சரீரத்தை விட்டுவிடுவர். இவைதாம் இரண்டுவிதமான கெட்டிக்காரர்கட்கும் வித்தியாசங்களாம்.

நமது கதாநாயகர் முதல் வகுப்பைச் சேர்ந்த கெட்டிக்காரர். சிறு பிராய முதற்கொண்டு தூரதேசங்களிற் போயிருந்து தொழில் முறையில் அனுபவம் பெற்றவர். நல்லவயதில் நல்லகடை ஒன்றுக்கு ஏஜண்

டாக அமர்ந்தார். அப்போது தொழில் அனுகூலமாக இருந்து அதிகமான இலாபம் வரப்பெற்றமையால் முதலாளியின் அபிமானத்தைப் பெரிதும் பெற்றுவிட்டார். முதலாளி ஒரு தனவந்தர். அவருக்கு இவர் முதன் மந்திரி (Prime Minister) யாகிவிட்டார். ஆயினும் தம்மட்டில் அமைதியில்லாதவராகவும் ஆடம்பரப் பிரியராகவும் வீண் கூட்டமும் வீண் காரியங்களும் வீண் செலவும் செய்து தன்னை யெப்படி யெப்படியோ பெரிதாக ஊரார் நினைத்துக்கொள்ள வேண்டுமென்ற வைத்தியம் பிடித்தவர். இவருக்கு சிறுபிராயத்திற் கல்யாணம் முடிந்திருந்தது. ஆனால் அந்தப் பெண் இவருடைய தடபுடலுக்கு ஏற்றவளல்ல. மேனிமினுக்கியல்ல. பட்டு ரவிக்கையும் புட்டாமாவும் அணிந்து கொள்பவளல்ல. சேலை தோய்க்கவும் மிளகாய் அரைக்கவும் தண்ணீரெடுக்கவும் சமையல் செய்யவும் வேலையாள் வைத்துக்கொள்பவளல்ல. அதிகப் பேச்சுக்காரியல்ல. வீச்சுக்காரியல்ல. அரிச்சந்திர நாடகம் பார்ப்பதற்குச் சந்திரமதி வேஷம்போட்டுக் கிளம்புபவளல்ல. வாசனைத் திரவியங்களைப்பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாது.

நான மென்பது மணங்கமழ் பொருளது
நாவிலுண்பது வோசொல்
ஊனுணங்குவேய் மடந்தைய ரணிவதாம்
உயர்தலை முலைக்கோட்டில்
ஆனதங்கது பூசினல் வீங்கின தமையுமோ
வெனக் கேட்ட

கான வேட்டுவரின் தன்மையைப் பெற்றவள். சாதாரணமான ஒரு குடித்தனக்காரி. அடக்கமும் மரி

யாதையும் நல்லொழுக்கமு முடையவள். ஆகவே அப்பெண்ணின் நடைகளும் உடைகளும் குண விசேடங்களும் மானம் மரியாதைகளும் நமது கதாநாயகரான தடபுடல் ஆசாமிக்குப் பிடிக்கவில்லை. கையிற் கொஞ்சம் பணமும் முதலாளியின் ஆதரவும் இருந்தன. ஆதலால் சீச்சீ இந்த அசடு நம்முடைய கௌரவத்துக்கும் அந்தஸ்த்துக்கும் பொருத்தமுள்ள தல்லவென்று கருதி அவளைத்தள்ளிவிட்டு மறுமணம் செய்துகொள்ள முயன்றார். அந்த விருப்பத்தைத் தன் முதலாளிக்கும் தெரிவித்தார். அவரும் அனுமதி கொடுத்தார். பெண் தேடினார்கள். சிவந்த மேனியும் நிமிர்ந்த நடையும் சிரித்த வாயும் பொரித்த பேச்சுமுள்ள ஒரு மினுக்குப் பெண்ணகப்பட்டாள். அவள்தான் தனக்குச் சரியான ஜோடியென்று அகமகிழ்ந்தார். முப்பதாயிர ரூபாய் கொடுத்து அந்த அழகை வாங்கினார். கல்யாணம் முடிந்தது. அந்த அழகை அழகு செய்வதற்குப் பத்தாயிர ரூபாய்க்கு வைர நகைகள் செய்து அலங்கரித்தாயிற்று. அதன் மேல் (Lady and Gentleman) இருவரும் சவாரிசெய்ய வேண்டுமே! ஒரு மோட்டார்கார் ரூபாய் ஐயாயிரத்துக்கு வாங்கியாயிற்று. ஐந்தாறுபேர் வேலைக்காரர்கள். இவ்விதமாக ஆடம்பரங்கள் அதிகமாயின. அதுவரையில் தேடியபணத்துக்கும் அம்மட்டில் அழிவு வந்துவிட்டது. பழைய கணக்காளுக்கும் வருஷம்மூன்றாகிவிட்டது. செட்டியார் புறப்பட்டுப் போய்விட்டார். போய்ச்சேர்ந்து சிலமாதங்களாகும் முன்னரே தம்மிரண்டாது மனைவியாரைப்பற்றி பலவிதமான விசேட சமாசாரங்கள் வர ஆரம்பித்து விட்டன. "இருமுகிற கிழவியைவிட்டுக் கனைக்கிற கிழவியை வாங்கியது

போல்" புதிய மனைவியின் சமாச்சாரங்கள் வந்துகொண்டிருந்தன. ஆயினும் மனைவியின் பால்வைத்த அன்பினால் பொறுமை மேற்கொண்டிருந்தார். பின்னும் பின்னும் தொடர்ச்சியாகவும் விகாரமாகவும் (Complaint) பிராதுகள் வந்துகொண்டிருந்தன. வருஷமும் இரண்டாயிற்று. கணக்கு முடியவில்லை. ஆயினும் முதலாளியின் அனுமதிபெற்று ஊர் வந்து சேர்ந்தார். விசாரித்தார். எல்லாம் வெளிச்சமாயிற்று. சீச்சீ இந்த (Rascal) போக்கிரி உதவாது. இன்றொன்று பார்க்கிறேன் என்று சபதமிட்டார். முதலாளிக்குத் தகவல் கொடுத்தார். அவரும் உடனே அனுமதியும் கொடுத்துப் பணத்துக்கும் ஆர்டர் கொடுத்தார். மூன்றாவது பெண் தேடினார்கள். அதற்கும் ஒன்று கிடைத்தது. ஐம்பதாயிர ரூபாய் செலவாயிற்று. மூன்றாவது திருக்கல்யாணமும் முடிந்தது. திரும்பிப்போனார். ஆறுமாதமாயிற்று. பதிலாள் வரும் சமயமாயிற்று. ஊர் (தொழிலும் வியாபாரமும்) வீழ்ந்துவிட்டது. பெருங்கடன் வாங்கிப் பெருந்தொழில் செய்திருந்த படியால் அகப்பட்டுக் கொண்டார்.

"என் அப்படிச்செய்தாய்!" என்றார் முதலாளி.

"எப்போதும்போற செய்தே"னென்றார் கூட்டாளி.

நஷ்டத்துக்குக் காரணம் கேட்டார் முதலாளி.

"நாடுகளெல்லாம் வீழ்ந்தன" வென்றார் கூட்டாளி.

"அப்படிச் செய்தது தப்பிதம்" என்றார் முதலாளி.

"யாரென் செய்வது? அதிர்ஷ்ட" மென்றார் கூட்டாளி.

இவ்விதமாக முதலாளியும் கூட்டாளியும் போராடி எட்டுப்பாக்கி எழுபதாயிரம், நஷ்டத்துக்கு (Damage)

நாற்பதாயிரம் வரவேண்டுமென்று (Suit) வியாஜ்யம் தொடரப் பெற்றார். எட்டுப் பாக்கி எழுபதாயிரத்துக்கு (Decree) டிக்கிரியாயிற்று. முதன் மந்திரி மீது உடன் ஜப்தியும் வாரண்டும் பிறந்துவிட்டன. ஆடினார் ஓடினார், பணம் அகப்படவில்லை. எல்லாவற்றையு மிழந்து (Insolvent) இன்சால்வெண்டாகி எங்கேயோ அடங்கி விட்டார்.

வாசகர்களே! இந்த நிகழ்ச்சியை ஆராய்ந்துபாருங்கள். ஆடம்பரம் எவ்வளவு அனர்த்தத்தில் வந்து முடிந்ததென்பதைக் காண்பீர்கள்! அது ஒருபுறமிருக்கட்டும். ஒரு புருஷன் ஒன்றன் பின் ஒன்றாகப் பல மணங்களை அக்கிரமமாகச் செய்துகொள்வதை அங்கீகரிக்கும் சமூகம் ஒரு பெண் தன் புருஷனை இழந்தபின் நியாயமாக மறுமணம் செய்து கொள்ளுவதை ஏன் அங்கீகரிப்பதில்லை? இது என்ன தர்மம்? இது என்ன வழக்கம்? இந்த அர்த்தமில்லாத வழக்கத்தை ஏன் மாற்றக் கூடாது? இதுதான் நமது சமூகத்துக்கு இப்போது முக்கியமான விஷயமாக இருக்கிறது.

இதுவரையில் ஏழு கதைகள் ஏழு மாதிரியில் எடுத்துக் கூறினேன். இன்னும் எண்ணற்ற நிகழ்ச்சிகள் எடுத்துக் கூறக்கிடக்கின்றன வாயினும் கதைகள் இம்மட்டிற் போதுமென நினைக்கிறேன். இனி எனது அபிமானமுள்ள இளைஞர்கள் அனுஷ்டிக்க வேண்டிய சில விதிவிலக்குகளை எடுத்துக் கூறுகிறேன். நம்மவரின் விவாக விஷயம் எவ்வளவு சீர்கேடுற்றுக் கிடக்கிறதென்பதையும் அதனாலேற்படும் கஷ்ட நஷ்டங்கள் எவ்வளவு பெரிதாகவும் ஆபத்தாகவும் இருக்கின்றன வென்பதை

யும் அறிந்தீர்கள். இன்னும் கல்யாணத்தைப்பற்றி மனத்தினுலும் நினைக்கமுடியாத குடும்பங்கள் பல இருக்கின்றன. அவற்றைப்பற்றி ஒன்றும் சொல்லுவதற்கில்லை. அவர்கட்குஇப்போதுள்ள நிலைமையில் யாதொரு கதிமோக்ஷமுமில்லை. ஆகவே நாம் செய்யவேண்டிய காரியம் என்ன?

பெண்ணுக்குப் பணம் வாங்குதல்

நம்மவர் விவாக விஷயத்தில் பெண்ணுக்குப் பணம் வாங்குத லென்னும் கெட்டவழக்கம் ஒழிய வேண்டும். எல்லோருக்கும் சுலபமாகக் கல்யாணம் நடக்கவேண்டும். ஆனுல் பெண்ணுக்குப் பணம் வாங்குதல் ஒரு கெட்ட வழக்கமென்பதையும் அது ஒழிய வேண்டுமென்பதையும் நம்மில் எல்லோரும் அங்கீகரிக்கின்றனர். பெண்ணுக்குப் பணம் வாங்குகிறவர்களுங் கூட அங்கீகரிக்கின்றனர். அப்படியானுல் ஏன் ஒழியவில்லை? அதற்கு இப்போதுள்ள நிலைமைதான் இடந்தரவில்லை. அனுவசியமாக விவாக விஷயத்தில் ஏற்படும் வீண் செலவுகளும் சீர்வரிசைகளும் ஆடையாபரணங்களும் அடக்கப்படாமற் போய்விட்டன. மயிலைக் கண்டு வான்கோழி ஆடுவதுபோல் பணக்காரரையும் அவர்கள் சும்மா (பெண்ணுக்கு சீர்வரிசை கொடுத்து) செய்கிற கல்யாணத்தையும் பார்த்துச் சாமான்ய ஜனங்களும் ஏராளமான சாமான்களை வாங்கிவைத்து ஆடிப் பாடி அதிகச் செலவு செய்கிருர்கள். அப்படிச் செலவிடாமற் கல்யாணஞ் செய்ய முடியாதென்றுங் கருதுகிருர்கள். ஆகவே பெண்ணுக்குப் பணம் வாங்கக் கூடாதென்ருல் அதற்கு முன் கல்யாணச் செலவுகள் அடங்குவதற்கு வழிதேடவேண்டும். சாதாரணமாக

ஒரு பெண் கலியாணத்துக்கு ஐயாயிர ரூபாய்க்குக் குறைய இப்போது செலவு செய்யமுடியாது. அதற்கு மேலும் தொடர்ச்சியாகச் சீர்முறை கொடுத்து வர வேண்டும். கையிற் பணமில்லாதவர்கள் இந்த விதிக்கு என்ன செய்வார்கள்? வாங்க ஆரம்பிக்கிறார்கள்.

அப்போது ஒருகாதறுந்தாலும் இரண்டுகாதுகளு மறுந்தாலும் மூளி மூளிதானென்று கொஞ்சம் கொஞ்சம் சேர்த்துச் சேர்த்துப் பழைய கடன் புதுக்கடன் கள் தீரவும் அரை குறையான வேலைகளை முடிக்கவும் ரிப்பேர் செய்யவும் இன்னும் பல பின் தேவைகளையும் கணக்கிட்டு அந்தப் பெண் தலையில் வைத்துப் பெருந் தொகை கேட்கிறார்கள். மாப்பிள்ளை வேறுவகையின்றி இரத்தத்தையும் பிழிந்து கேட்டபடி கொடுத்துக்கொள் ளுகிறார்கள். இந்தக் கேசில் யார்மீது குற்றமென்று நம்மாற் சொல்லமுடியவில்லை. பெண்ணுக்குப் பணம் வாங்குகிறவர்கள்மீது குற்றமா? அவர்கள் என்னசெய் வார்கள்? ஏற்கனவே கையிற் பணமில்லாதவர்களாகவோ அல்லது தொழில் வியாபாரம் செய்து நஷ்டமடைந்த வர்களாகவோ அல்லது சூது விபசாரம் முதலிய தீய செய்கைகளால் பொருளை இழந்தவர்களாகவோ வறு மையடைந்து கடன்பட்டுக் கஷ்டமடைந்து கொண்டி ருக்கிறார்கள். அப்படி யிருக்கும்போது அவர்களைச் சீர் வரிசை கொடுத்துப் பெண்ணைச் சும்மா செய்யவில்லை யென்று குறைகூறுவதும், திட்டுவதும், தூஷிப்பதும் நியாயமாகுமா? கடைத் தேங்காயை யெடுத்து வழிப் பிள்ளையாருக் குடைப்பது சுலபமாகத்தா னிருக்கும். அவர்கள் நிலையிலிருந்து யோஜித்துப் பார்த்தால் அந்த சிரமம் எப்படியிருக்கிற தென்பது தெரியும். ஆனால்,

தேவைக்கதிகமாக வாங்குகிறார்களே என்றால் வாங்குகிற வழக்கமிருப்பதால் அதை நம்பிச் சிலர் சோம்பேறிகளாகவும் இருந்துவிடுகின்றனர். ஆகவே அதற்கு மூலமாக இருக்கிற காரணத்தைக் கண்டு பரிகாரஞ் செய்தாலன்றி அந்த நோய் தீராது. இனி மாப்பிள்ளை வீட்டாரை யேன் கொடுத்துக் கொள்ளுகிறீர்களென்று குற்றங் கூறலாமா? அவர்கள் "சத்தியமாக நாங்கள் கொடுத்துக்கொள்ள ஆசைப்படவில்லை; சும்மா பெண் கிடைக்கும்படி நீங்கள் செய்யவேண்டும்; உங்களுக்குக் கோடிகோடி புண்ணியமுண்டு" என்று சுருக்கமான பாதையில் வந்துவிடுவார்கள். ஆகவே பெண்ணுக்குப் பணம் வாங்குவதற்கும் கொடுப்பதற்கும் சமூகமிருக்கும் சீர்கேடான நிலைமையே காரணமன்றி அவர்கள் மீது குற்றமில்லை.

சாமான் வைத்தல்.

இசை குடிமானத்தை மேற்பாடமாகக் கருதுகிறார்களேயன்றி அதிற் கூறுகிற சீர்வரிசைகள் ஒரு காலத்தில் நம்மவர் கட்டுப்பாடாகச் செய்துவந்த முறையென்று நம்புகிறார்களில்லை. அந்த முறைப்படி இப்போது செய்தாற் பெண்ணுக்குப் பணம் வாங்கவேண்டிய அவசியமே யிராது. பல்லைக் கடித்துக்கொண்டு பழைய வழக்கங்களைப் பாதுகாக்க விரும்புகிறவர்கள் என் அப்படிச் செய்வதில்லை யென்று கேட்கிறேன். வெள்ளி, வெண்கலம், இரும்பு, மங்கு, மரம், ஜாடி, மூடி, பாய், தடுக்கு, மெத்தை, தலையணை இன்னும் என்னென்னவோ குப்பைகளை யெல்லாம் கூட்டிச் சேர்த்து சாமான் வைக்கிறார்களே இது அவசியந் தானா? அப்படி வைக்கப்படுகிற சாமான்களை இது

வரையில் யாராவது விற்று முதலாக்கிய துண்டா? இறந்துபோனவர்களின் சாமான்களெல்லாம் எங்கே போய் விட்டன? அவற்றை வைத்துக்கொண்டு அவர்களின் சந்ததியார் உபயோகிக்கக்கூடாதா? மாறி மாறி புதிது புதிதாக வாங்கிக்கட்டுகிறார்களே. இது விவேகமான காரியமா? கல்யாணமென்றால் அதன் முதல் அங்கம் சாமான் வைத்தலென்ற வழக்கமிருக்கும்வரை பெண்ணுக்குப் பணம் வாங்குதல் எப்படி ஒழியும்?

அலர்மேலு என்பவள் ஒரு பணக்காரப் பாட்டி. அவளுக்கு மூன்று பெண் மக்கள் இருந்தனர். தனக்குப் பிறகு தன்னுடைய மூன்று மக்களும் சரியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்து ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு பண்டமும் ஒரே மாதிரியாக மூன்று உருப்படிகள் வாங்கினாள். வங்காளம் அண்டா என்றால் அதில் ஒரே எடை ஒரே மாதிரியில் மூன்று. கும்பகோணம் அடுக்கென்றால் அதில் ஒரே எடை ஒரே மாதிரியில் மூன்றடுக்கு. கடைத்தெரு அடுக்கென்றால் அதில் ஒரே எடை ஒரே மாதிரியில் மூன்றடுக்கு. காது வைத்த அண்டா வென்றால் அதில் ஒரே மாதிரி ஒரே எடையில் மூன்று. மூளி அண்டா வென்றாலும் அதிலும் மூன்று. இப்படிச் சேகரித்திருந்தாள். அவை அப்படியிருக்க, மூன்று மக்களுக்கும் கல்யாணம் செய்யும்போது ஏராளமான பாத்திர பண்டங்கள் வாங்கி வழக்கம்போல் வைத்துச் செய்திருந்தாள். மூன்று மக்களில் ஒருத்தி இறந்து போனாள். ஒருத்தி புருஷனையிழந்து தாய்வீடு சேர்ந்து விட்டாள். அவ்விருவருக்கும் சந்ததிகளில்லை. மூத்த மகள் கண்ணம்மைக்குத்தான் இரண்டு ஆண் குழந்தைகளும் கல்யாணி யென்று ஒரு பெண்ணுமிருந்தனர்.

அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் செய்தார்கள். அங்கும் நாத்தனுள் இல்லை. அலர்மேலுப்பாட்டி சேகரித்து வைத்த மூன்று பங்குச் சாமான்களும் சிறிய தாய்மார்களிருவரின் தனிச் சாமான்களும் தன் தாயின் சாமான்களும் தன் மாமி வீட்டுச் சாமான்களும் ஆக ஏழு வகை சாமான்கள் பாத்திரங்கள் பண்டங்கள் எல்லாம் அவளுக்கு வரவிருக்கின்றன. அவை சுமார் நாற்பது அல்லது நாற்பத்திரண்டு வண்டிப் பாரமிருக்கலாம். அப்படியிருக்க கண்ணம்மை மகள் கல்யாணிக்குப் புதுச்சாமான்கள் வாங்கிவைத்துக்கல்யாணம்செய்வதென்றால்என்ன கொடுமை! இப்படியே ஒவ்வொரு குடும்பத்தின் காரியமுமிருக்கிறது. கல்யாணத்துக்குப் பழைய சாமான்கள் உதவாதாம். பத்து வீட்டுச் சாமான்கள் ஒரு பெண்ணுக்கு வருவதானாலும் அந்தக் கல்யாணத்துக்கு வைப்பது புதுச் சாமான்களே. இதைவிட அர்த்தமில்லாததும் வீணானதுமான காரியம் இந்த ஐந்து கண்டங்களிலும் காணமுடியாது. இதுவரையில் இருந்து இறந்துபோன புள்ளிகளும் இப்போ திருக்கிற புள்ளிகளும் தனித்தனி ஒரு பெருந் தொகை மதிப்புள்ள சாமான்களை வைத்துக்கொண்டிருக்கும்போது இன்னமும் வருகிற புள்ளிகளுக்குச் சாமான் வாங்கிக் குவிப்பதென்றால் அதன் முடிவென்ன? ஆகவே இந்தப் பைத்தியம் ஒழிய வேண்டும். இப்போது நமது சமூகத்துள் மூன்றுகோடி ரூபாய்கட்குக் குறையாத பித்தளைப் பாத்திரங்கள் வேலையற்றுப்போய் அறைவீடுகளில் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றன வென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதேபோல் ஏனைய மங்கு மரவை ஜாடி மூடி பாத்திரங்கள் கூட்டங்கள் வேறு மூன்று கோடி

ரூபாய்களை மென்று தின்றுவிட்டுப் பாய் தலையணைகூட இல்லாமற் படுத்துறங்குகின்றன வென்பதையும் மறந்துவிடக்கூடாது. கல்யாண வீட்டில் பெண்ணுக்கு வைக்கிற சாமான்களை யெல்லாம் எந்தக்காரணத்தைக்கொண்டும் பெண் வீட்டார் திருப்பி எடுத்துக்கொள்வதில்லை யென்றும் மாப்பிள்ளைக்கே சொந்தமானதென்றும் வழக்கமிருந்திருந்தால் சாமான் வைக்கிற வேலை இவ்வளவு பெரிதாகி யிராது. பெண்ணுக்குப் பணம் வாங்கிக்கொண்டு செய்கிற கல்யாணத்திலுங்கூட அப்பெண் இறந்துபோனால் சாமான்களைத் திருப்பி யெடுத்துக் கொள்ளுகிற வழக்கம் மிகவும் அக்கிரமமான வழக்கமன்றோ! அவன் (மாப்பிள்ளை) பணத்தையு மிழந்து மனைவியையும் இழந்து அதோடு ஸ்ரீதனம் சீராட்டு வைத்த சாமான்களையும் பறிகொடுப்பதென்றால் எவ்வளவு பரிதாபமான காரியம்! இதிப்படியாக, கல்யாண வீட்டில் பட்டு கண்டாங்கி வைக்கிறார்களே அதையும் சற்று கவனிப்போம். ஒரு பெண்ணுக்கு சேலை ரவிக்கைகள் தினுசுக் கொன்றாக முப்பத்தொன்று முதல் நூற்றி ஒன்றுவரை வைக்கப்படுகின்றன. அவை பட்டு நூல் அல்லது பருத்தி நூலாற் செய்யப்பட்டவைகளேயன்றி செப்புத்தகடு அல்லது இரும்புத் தகடுகளாற் செய்யப்பட்டனவல்ல. ஆகவே இரண்டு மூன்று வருஷங்களுக்குமேல் அவை க்ஷீணமடைய ஆரம்பித்து விடுகின்றன வென்பது ஒருபுற மிருக்கட்டும். இந்த வருஷம் வந்த மாதிரிக்கு நல்ல மாதிரியாக அடுத்த வருஷம் வந்துவிடுகின்றன. புதிதாக வந்த சேலையைப் பார்த்துவிட்டுப் பழைய உருப்படியைப் பார்த்தால் மனத்துக்குப் பிடிக்காத மாமியாளைப் பார்த்தமாதிரி யிருக்கும்.

அப்போது புதிதாக வந்த உருப்படிகளில் நான்கு, ஆறு, பத்து என்று வாங்குகிறார்கள். அடுத்த வருஷம் வேறு கலர், வேறு வங்கி, வேறு நினுசுகள் வந்துவிடுகின்றன. அதில் நான்கு பத்து வாங்கப்படுகின்றன. இப்படி வாங்கி வாங்கி அடுக்கி விடுகிறார்கள். ஏற்கனவே கல்யாண வீட்டில் வைத்தவை உடுத்தி முடியாமலிருக்கின்றன. எப்படி உடுத்தி முடியும்? ஒரு பெண் மூன்று மாதங்கட்கு ஒன்றாக உடுத்தி வேணுமென்றே கிழித்தெறிந்தாலும் பன்னிரண்டு வருஷங்கட்கு நாற்பத்தெட்டு உருப்படிகளைத்தானே உடுத்திக் கிழிக்க முடியும். அதற்குமேலிருப்பவைகளை யென்னசெய்கிறது! இந்த வகையில் எவ்வளவு பணம் வீணாகின்றன! இதைப்பற்றி யாராவது சிந்திக்கிறார்களா? கல்யாண வீட்டில் நாலாறு மட்டும் வைத்துப் பிறகு வருஷந்தோறும் புதிதுபுதிதாக இரண்டு நாலு வாங்கிக்கொண்டாலென்ன? இப்படி அனுவசியமாகக் கல்யாணச் செலவு செய்துகொண்டிருக்கும்வரை பெண்ணுக்குப் பணம் வாங்குவது எப்படி ஒழியும்? கல்யாணங்கள் எப்படிச் சுலபமாக நடக்கும்? இந்தக் கல்யாணப் பாதை மிகவும் சீர்கேடான பாதை யென்பதிற் சந்தேகமுண்டா? ஆகவே ஒரு பெண் கல்யாணத்துக்குக் கண்டாங்கி பட்டு நாலாறு வைத்துக் கொடுப்பதோடு நடப்பில் உபயோகிக்கப் போதியதான கட்டில், மெத்தை, தலையணை, சில வெள்ளி, வெண்கலச் சாமான்கள் ஆகியவைகளை மட்டும் கொடுத்து மற்றபடி கல்யாணத்துக்குச் சாமான் வைப்பதை அடியோடு நிறுத்திவிட வேண்டும். அப்படியானால் விசேடங்கட்கு என்ன செய்வது என்று கேட்கலாம். விசேடங்களிற் பெரியவீட்டுச் (தாய் தகப்பன் வைத்திருக்கும்) சாமான்

களை எல்லாப் பிள்ளைகளும் எடுத்து உபயோகித்துக் கொள்ளும்படி செய்யவேண்டும். அதாவது ஒருவருக்குப் பத்துப் பிள்ளைகளிருந்தாலும் ஒரு பிள்ளை வீட்டில் கல்யாணம் புதுமை நடக்கும்போது மற்றொரு பிள்ளை வீட்டில் நடப்பதில்லை. ஆதலால் ஒவ்வொரு பிள்ளையும் பெரிய வீட்டுச் சாமான்களை யெடுத்து உபயோகித்துக் கொள்வதில் தடையேற்படாது. பத்து மருமக்களும் பத்து (Set) செட்டு வைத்துக் கொள்ளாமல் பொதுவாக ஒரு செட்டு இருந்தாற் போதும். பிறகு பத்துப் பிள்ளைகளும் தனித் தனியே பிரியும்போது தேவையிருந்தால் (நூறு வருஷங்கட் கிடையில் தேவை இருந்தாது.) வேண்டியதை வாங்கி ஒரு பொதுக்குடும்பத்துக்கு ஒரு செட்டு வைத்துக்கொள்ளலாம். இப்படிச் செய்வதற்கு சாமான்ய ஜனங்கள் உடன்பட்டாலும் பணக்காரர் உடன்படுவார்களா? அவர்கள் தங்கள் பெண்ணுக்கு அதிகமாகக்கொடுக்க நினைத்தால் ரொக்கமாகக் கொடுத்துவிடக்கூடாதா? பணத்தை வைத்துக் கொண்டால் வேண்டியவற்றை வேண்டிய போது வாங்கக் கிடைக்காதா?

பின்முறை

இது இப்படியாக, கல்யாணத்தைத் தொடர்ந்து பேரன் பேத்தி பிறக்கும்வரையிலும் அதற்குமேலும் தொடர்ச்சியாக ஆடி வேவு, கார்த்திகை வேவு, பொங்கல் வேவு, பிள்ளையார் நோன்பு வேவு, சித்திரை வேவு, வைகாசி வேவு, திர்த்தம் சாப்பிட்ட வேவு, பிள்ளைபிறந்த வேவு, புதுமை வேவு என்று எண்ணமுடியாத வேவு எழுதமுடியாத வேவுகள் ஒன்றன் பின்னொன்றாக வந்து

கொண்டேயிருக்கும். அதற்கிடையிற் பழம் தேங்காய் வேறு, தேங்காய் பழம் வேறு வந்துவிடும். இத்தகைய பின் முறைகளுக்கு இரண்டாயிரம் ரூபாய் முதல் ஐயாயிரமும் அதற்கதிகமாகவும் செலவு செல்லும். பணமுள்ளவர்கட்கு (பணமிருக்கும்போது) சுலபமாக இருக்கலாம். இல்லாதவர்கள் இதற்கென்ன செய்வது? அவர்களைப் பெண்ணுக்குப் பணம் வாங்கவேண்டாமென்றால் இந்தச் செலவுக்கு யார் கொடுப்பார்கள்? நகரப்பொதுவில் ஏதாவது (Fund) மூலதன மிருக்கிறதா? ஆகவே பணக்காரராயினும்சரி, பணமில்லாதவர்களாயினும்சரி பின்முறை கொடுக்கும் வழக்கம் அடியோடு ஒழிய வேண்டும். மகளும் மாப்பிள்ளையும் வந்தால் அவர்களுக்கு நல்ல உணவளித்து உபசரித்து அனுப்பிவைக்க வேண்டியதைத்தவிர ஒரு ரூபாய்கூடக் கையிற்கொடுத்தனுப்பக்கூடாது. பணமுள்ளவர்கள் தம் மக்களுக்குக் கொடுக்க மனமுள்ளவர்கள் விசேட காலங்களை உபயோகிக்காமல் இலட்ச லட்சமாகக் கொடுக்கட்டும். அதை மற்றவர்கள் பின்பற்ற வேண்டிய அவசியமிராது.

விசேட நாட்கள்.

இப்போது கல்யாணம் புதுமை முதலிய விசேடங்கட்கு ஆறு நாளும் பெண்ணழைத்த வீட்டில் மூன்று நாளும் கூடியிருந்து வருகிறோம். இது மிகவும் அதிகம். இதனால் வீட்டுக்காரருக்கும் சுகமில்லை. விருந்தினருக்கும் சுகமில்லை. மேலும் நாகரிகமான இக்காலத்தில் ஒரு மனிதன் யாதொரு வேலையுமில்லாமல் ஆறு நாள் இருபத்துநான்கு வேளை இலைமாற்றி இலைபோட்டுக் கையலம்பிக்கொண்டிருப்பது வெட்கமில்லையா? இக்காலத்

துப் பிள்ளைகளும் பெண்களும் மிக மிகச் சுத்தமான ஆகாரங்களையே விரும்புகின்றனர். கல்யாணம் புதுமை முதலிய விசேடங்களிற் சுத்தமான ஆகாரத்தை நினைத்துக்கொண்டால் உபவாச மிருக்கவேண்டியதைத் தவிர வேறு வழியிராது. சமையற் செட்டு (ஒரு ஆபாசமான கூட்டம்) இல்லாமல் இக்காலத்தில் ஒரு விசேடம் நடக்க முடியாது. அந்தக் கூட்டம் அசுத்தமாக இல்லாமல் எப்படி இருக்கமுடியும்? இயற்கையாகவே அவர்களின் உடை உணவு சுத்தமாக இருப்பதில்லை. அதோடு சமையற்செட்டிற்புகுந்து அடுப்படியிலிருந்து பலநாட்கள் வரை இரவு பகலாக மாறுமற் சமையல் செய்வதும் பரிமாறுவதும் வெந்நீர் வைப்பதும் தண்ணீரெடுப்பதுமாக இருந்தால் எப்படி அவர்கள் அசுத்தமில்லாமலிருக்க முடியும்? பத்து மணிவரை பல் விளக்காமலும் உள்ள நாள்வரை உடைமாற்றுமலும் ஒரு வாரம்வரை உடம்பை நனைக்காமலும் இருந்தால் அவர்கள் செய்யும் உணவின் தன்மையைப்பற்றிக் கூறவேண்டுமா? ஆகவே அவர்களையும் சிரமப்படுத்தாமல் நாமும் சிரமமடையாமல் பணமும் பண்டங்களும் வீணுக அழியாமற் செய்யவேண்டுமானுல் விசேட நாட்களைக் குறைக்கவேண்டும். கல்யாணத்துக்கு மூன்று நாட்களும் ஏனைய விசேடங்கட்கு ஒவ்வொரு நாளும் போதுமானது. அப்படிச் செய்தால் அனுவசியமாக உண்பது பாதி, குப்பையிற் கொட்டுவது பாதியாகப் போகாமலும் விசேடச் செலவுகள் ஆயிரக்கணக்காக ஆகாமலும் நூற்றுக்கணக்கில் நின்றுவிடும். சுப விசேடங்கள் இப்படியாக, துக்கவீடுகளைப்பற்றிக் கவனிப்போம். அது பதினறு நாள் உத்சவமாக இருக்கிறது. அறுபத்

துநான்கு வேளை விருந்து நடக்கிறது. என்ன அநியாயம் பாருங்கள்! ஒருவர் இறந்துபோனால் உற்றார் உறவினர் வந்து துக்கம் விசாரித்துத் தேறுதல் சொல்லிப் போகவேண்டியது அவசியந்தான். ஆனால் பதினாறு நாளிருக்க வேண்டுமா? அதற்காக இரண்டாயிரம் மூவாயிரம் செலவாக வேண்டுமா? இதெல்லாம் என்ன வழக்கம்? கையிற் பணமில்லாதவர்கள் என்ன செய்வது? கடன்படவேண்டும். கடனை யெப்படித் தீர்ப்பது? பெண்ணிருந்தால் பெண்ணுக்குப் பணம் வாங்க வேண்டும். பிள்ளை யிருந்தால் ஸ்வீகாரம் விட்டு ஆக வேண்டும். வேறு வழியுண்டா?

ஆடம்பரங்கள்.

கல்யாண முதலிய விசேட காலங்களில் ஆடம்பரங்களுக்கு ஆசைப்பட்டு அதற்காகப் பெருஞ் செலவு செய்கிறார்கள். பரமலோபிகளுங்கூட அதிற் பின்வாங்குவதில்லை. ஆகவே அந்தப் பைத்தியமும் ஒழியவேண்டும். யானை குதிரை எடுபிடிகளெல்லாம் மனித சமூகத்துக்கு வேண்டியவைதானா? ஊர்வலம், இரதத்தில் எழுந்தருளல், வாணக்காட்சி, மத்தாப்பு வெளிச்சம் முதலிய அலங்காரங்களெல்லாம் மனித சமூகத்துக்குவேண்டியவைதானா? இதென்ன பைத்தியம்! பொட்டுக்காரன் பூச்சுக்காரன் வேலைகளை யெல்லாம் நாமே செய்து கொள்ளப்படாதா? அதிற் சிரமமொன்று மில்லையே. மங்கல வாத்தியமாக நாகஸ்வரம் ஒன்றுமட்டும் போதாதா? பயங்கரமான, திடுக்கிடக்கூடிய மேல்நாட்டு யுத்த பேரிகைகள் எதற்காக? கதை கச்சேரிகள் கேட்கத் தக்கனவாயினும் அதன் விலை மதிப்பு நூறு ரூபாய்

கட்கு அதிகமாதல் கூடாது. அதுவும் ஒரு கதை அல்லது ஒரு கச்சேரிதா னிருக்கவேண்டும். விசேடங்களிற் பணமெழுதுவதையும் சட்டிபெட்டி பாக்கு பணம் கொடுப்பதுகளையும் நிறுத்திவிட வேண்டும். இப்படி ஆடம்பரங்களை யெல்லாம் ஒழித்துவிட்டு அடக்கமாகவும், நீண்டு நடைபெறக்கூடிய மாதிரியிற் செட்டாகவும் எக்காலமும் ஒரே தன்மையாகவும், எல்லோரும் செய்வார்களா?

முடிவுரை

இந்தவிதமாக இப்போதுள்ள பழக்க வழக்கங்கட்கு மூக்குச்சரடு போட்டு இழுத்துப்பிடித்துத் திருத்துவதானல் சமூகநிலையை ஒருவாறு சீர்ப்படுத்தக்கூடும். இந்தக் கட்டுபாடுகட்கு சாமான்ய ஜனங்கள் வறுமையினல் கஷ்டத்தையுணர்ந்து இணங்கினலும் கையிற் பணமுள்ளவர்கள் கட்டுப்பட்டு நடப்பார்களா? நடப்பார்களென்று நான் நினைக்கவில்லை. அதற்காகச்செய்த முயற்சிகளும் கூடிய கூட்டங்களும் எப்படி வீணயின வென்பதை யாவரும் அறிந்திருக்கிறர்கள். பணக்காரர் கட்டுப்பட்டு நடந்துகாட்டாவிட்டால் தங்கள் நிலையை யுணர்ந்து தாங்கள் வேறுமாதிரியாக நடந்துகொள்ளக் கூடியவர்களாக நமது சாமான்ய ஜனங்களிருக்கவில்லை. அந்தப் பள்ளிக்கூடம் இன்னும் நம் நாட்டில் ஏற்படவில்லை. தெய்வானுகூலத்தால் அப்படியே எல்லோரும் ஒற்றுமையாக இருந்து நடந்துகொள்ளுவதாகவே வைத்துக் கொள்ளுவோம். அப்போதும் விவாக சம்பந்தமான இரண்டு பெருங் குறைகள் தீராமலிருக்கின்றன. பத்தாயிர ரூபாய்க்குக் குறைந்த ஐவேஜ் உள்ளவர்கட்கும், புருஷனை யிழந்த பெண்களுக்கும்

கதிமோட்ச மில்லாமலிருக்கிறது. அவர்களுடைய நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கதாக இருக்கிறது. புருஷனை யிழந்த பெண்கள் மறுமணம் செய்துகொள்ள வேண்டிய அவசியம் பணமுள்ளவர்கட்கும் சாமான்ய ஜனங்கட்கும் பொதுவான தர்மமாக இருக்கிறது ஆகவே மாதர் மறுமணத்தை நமது சமூகம் கையாளுமானுல் புருஷனை யிழந்த பெண்களுக்குக் கதிமோட்சமுண்டாவதோடு ஆயிர ரூபாய் ஜவேஜ உள்ளவர்கட்கும் தங்குதடை யில்லாமற் கல்யாணம் முடியும். ஆனுல் பெண்கள் மறுமணம் செய்துகொள்ளுவதிற் சில சங்கடங்களும் சிக்கலான சில விஷயங்களும் இருக்கின்றன வென்பதை மற்றவர்களைப் பார்க்கிலும் நான் அதிகமாக உணர்ந்திருக்கிறேன். பல வருஷங்களாக நடுநிலையோடு சிந்தித் திருக்கிறேன். ஆயினும் அதனுலேற்படும் நன்மைகளைப்பார்க்கினும் தீமைகள் மிகமிகக் குறைவாகவே இருக்கின்றன. ஆனுல் புருஷனை இழந்த பெண்கள் யாவரும் மறுமண செய்துகொண்டுதா னகவேண்டுமென்பதில்லை. அப்படி ஒரு ஏற்பாடு உலகத்தில் எங்குமில்லை. விருப்பமுள்ளவர்கள் மட்டும் தடையில்லாமற் செய்துகொள்ள அனுமதித்தாற் போதும். அம்மட்டில் விவாக சம்பந்தமான எல்லாத் துன்பங்களும் தனித்தனியே விடைபெற்றுக்கொள்ளுமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. சமூகம் பலவாறு சிதறுண்டு போகாமற் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானுற் கொஞ்சமும் தயங்காமல் மாதர் மறுமண விஷயம் கையாளப்படவேண்டும்.

பெண்களுக்கு மறுமணஞ் செய்துகொள்ளும் ஏற்பாடிருந்தால்,

(1) அவசரப்பட்டுத் தம்மக்கட்குச் சிறுவயதிற் கல்யாணம் செய்துவிடுவதாற்கூடக் குற்றமில்லை.

(2) பணக்காரரைச் செலவு விஷயத்திற் கட்டுப் படுத்தவேண்டாம்.

(3) பெண்ணுக்குப் பணம் கொடுக்க வேண்டா மென்று பிரசாரஞ் செய்யவேண்டாம்.

(4) ஆயுட் காலமெல்லாம் தூர தேயங்களிலி ருந்து பணந் தேடிக்கொண்டிருக்க வேண்டாம்.

(5) எல்லாச்செலவு நடைகளும் தானேகுறைந்து ஒழுங்குக்கு வந்துவிடும்.

(6) சிறு பெண்கள் வாழ்விழந்து வருந்தியழு அதனைப் பார்த்துச் சுற்றத்தார் அழவேண்டிய அவசிய மிராது.

ஆதலால் நம்மவர் விவாக விஷயத்திலுள்ள கஷ் டங்களையும் நஷ்டங்களையும் துன்பங்களையும் துயரங் களையும் பழிபாவங்களையும் ஒரேயடியாகப் போக்குவ தற்குப் புருஷர்களைப்போற் பெண்களிலும் இஷ்டமுள் வர்கள் தடையில்லாமல் மறுமணஞ் செய்துகொண்டு வாழ்வதுதான் நேரான வழி.



மாதர் மறுமணப் பாட்டு

1. மாதர் மறுமணஞ் செய்தல்—உலக
வாழ்க்கைக் கநுகூல மான வழக்கம்.

2. ஏதும் குறையதி லில்லை—குற்றம்
என்று சொல்வோர்க்குப் பகுத்தறி வில்லை

3. ஆணென்றும் பெண்ணென்றும் காண—சில
அங்க அடையாளம் உண்டென்ப துண்மை

4. அடையாளம் வேற்றுமை யன்றி—பொல்லா
ஆசைக்கு வேற்றுமை யங்குண்டோ சொல்வீர்

5. வாழ்க்கைத் துணை நலம் வேண்டும்—இன்றி
வாழ்வ துலகில் மகத்தான குற்றம்

6. பக்ஷி பறவைகள் தாமும்—ஒரு
பர்த்தா வுடன்கூடி வாழ்வதைக் காணீர்

7. ஆசைக் கடலைக் கடந்து—பூணும்
ஆடையணிகளைத் தானே துறந்து

8. வாழ்கின்ற மாந்தரு முண்டோ—வீணில்
வம்புக்கு அஞ்சி மடிகின்றா ரன்றோ!

9. பேச்சுச் சுதந்தர மின்றி—வாய்
பேசாதிருக்கின்றார் பெண்மக்க ளன்றோ!

10. இன்ப மறந்தவரில்லை—உலகின்
இனிய நல்லாசை துறந்தவரில்லை

11. புருஷனிழந்தது குற்றம்—ஆனால்
பெண்டீ ரிழந்தது குற்றமா காதே

12. புருஷரை மணஞ்செய்ய விட்டு—அந்தப்
பெண்ணிடம் தாலி பிடுங்குவ தேனோ?

13. பெண்கட்கு முக்காடு போட்டு—அங்கு
பேய்போ லொருத்தி பிடித்தே யமுக்கி

14. வாய்பேசா வண்ணம் மிதித்து—தாலி
வாங்குவதேன் அது வம்பன்றோ சொல்வீர்

15. பந்தற்கால் ஆண்களுக்கிலையோ—பாவம்
பறிமுதல் செய்வதும் ஆண்களுக் கிலையோ

16. ஆண்களைப் பந்தலில் வைத்து—ஒரு நாள்
அவமானம்செய்தாற்பொறுப்பாரு முண்டோ

17. ஆணுக் கொருநீதி யாமோ?—உண்மை
அறியாத பெண்கட் கொருநீதி யாமோ?

18. நீதி யில்லாத வழக்கம்—இனிமேல்
நிலையாது அநியாய மான வழக்கம்

19. போனநாட் போகட்டும் மக்காள்—இனிப்
பொல்லா வழக்கத்தைப் போக்கிடுவீரே
மாதர் மறுமணஞ் செய்தல்—உலக
வாழ்க்கைக் கனுகூல மான வழக்கம்
ஏதும் குறையதி லில்லை—குற்றம்
என்று சொல்வோர்க்குப் பகுத்தறிவில்லை

குமரன் பவர் பிரஸ்,
காரைக்குடி.